# மாய நதிகள்



ஸ்டெல்லா புருஸ்

894.811.3 ஸ்டெ
CPL522199

1
237/2001
41
522199
894.8113
STE

Rs 75

MAYA NADHIKAL
by
STELLA BRUCE

First Edition 2000

Published by
KALAIGNAAN PATHIPAGAM
10 Kannadhasan Salai
T. Nagar Chennai - 600 017

Printed at
Kanna Palani Achagam
11 Dr. Natesan Road Ist Lane
Chennai - 600 005

O_, 3N5, M
P0
CONNEMARA PUBLIC LIBRARY
19 JAN 2001
MADRAS-600 008.

# முன்னுரை

'மாய நதிகள்' என்னுடைய பத்தாவது நாவல். ஆனால் பத்தோடு ஒன்று என்கிற மாதிரி எளிதாகச் சொல்லிவிட முடியாது இந்த நாவலை. என் முந்தைய நாவல்கள் எல்லாவற்றைக் காட்டிலும் மாய நதிகள் அடைந்திருக்கும் மிகப் பெரிய வெற்றி அதன் சிறப்பை நிச்சயப்படுத்துவதாகத்தான் நான் கருதுகிறேன்.

ஆனால் வாசித்தவர்களின் மத்தியில் பெரிய வெற்றியைப் பெற்றதாலேயே ஒருபடைப்பு சிறப்புகளை உள்ளடக்கியது என்று சொல்லிவிட முடியாது. சொல்லிக் கொள்ளவும் கூடாது. வெற்றிக்கும் சிறப்புக்கும் தொடர்பு சில சமயங்களில் இருக்கவும் செய்யலாம்; இல்லாமலும் போகலாம். இங்கே மற்றொரு விதமாகச் சொல்வதாக இருந்தால் - சிறந்த நேர்த்தியாகவும்; ஆழமான செறிவோடும் சொல்லப்பட்டிருப்பதாலேதான் மாய நதிகள் நாவல் இத்தனை பெரிய வெற்றி

யையும் பாராட்டையும் பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்நாவலின் கதை மாந்தர்களின் நிஜமான மனோபாவங்களும்; அந்த மனோபாவங்களின் அடிப்படைகளில் அவர்கள் நடந்து கொள்கிற அக புற நடைமுறைகளும் துல்லியமான நம்பகத் தன்மையோடு உருவாக்கப் பட்டிருப்பதால் இதை வாசிப்பவர்களின் வாசகத் தன்மையில் அழுத்தமான கதாவடிவம் பெற்று நீண்ட நாட்களுக்கு நினைவில் இருக்கும் நவீனமாக மாய நதிகள் ஓங்கி நிற்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

அதுவும் ஆழமான வலி மிகுந்த தனி மனித மனப்பின்னல்களில் இந்த மொத்த நாவலும் பின்னப் பட்டிருப்பது மனோதத்துவ நவீனப் படைப்பு வரிசையில் ஒரு வேகமான யதார்த்தனமான முயற்சி யென்றும் மாய நதிகள் பற்றிச் சொல்லிக் கொள்வதில் எனக்குத் தயக்கம்கூட இல்லை. மாய நதிகள் நாவல் எனக்குப் பெரிய சந்தோஷத்தையும் மிகுந்த மன நிறைவையும் தந்திருக்கிறது. இந்த சந்தோஷமும் மன நிறைவும் இதை வாசித்தவர்களுக்கும் கிடைத்திருக்கிறது. ஒரு படைப்பாளிக்கு இதைக் காட்டிலும் பெரிய மகிழ்ச்சி எதுவும் இருந்துவிட முடியுமா?

-ஸ்டெல்லா புருஸ்

# மாய நதிகள்

## 1

கால உத்தேசப்படி சூரியன் உச்சி வானில்தான் இருக்க வேண்டும். ஆனால் அது எங்கே இருக்கிறது என்பதை ஊகிக்க முடியாமல் கரும் மேகக்கூட்டம் அடர்த்தியாக ஆகாயம் பூராவும் அடைந்துக் கொண்டிருந்தது. வழக்கமாக இன்னும் முக்கால் மணி நேரம் கழித்தே புறப்படும் உலகநாதன் மழை விழுவதற்குள் போய்விடலாம் என்ற எண்ணத்தில் நடவு நடந்து கொண்டிருந்த வயலில் இருந்து வீட்டுக்குக் கிளம்பி விட்டார்.

விவசாயத்தை பூர்வீக தொழிலாகக் கொண்டிருப்பவர் என்ற முறையில் உலகநாதனுக்கு மழை சந்தோஷமானதுதான். ஆனால் எதிர்பாராமல் எங்கேயாவது மழையில் நனைய வேண்டிய கட்டாயம் வரும் வேளைகளில் மழை அவருக்கு வேப்ப எண்ணைய். திருநெல்வேலியோ கல்லிடை குறிச்சியோ போயிருக்கும்போது பெரிய மழையில் மாட்டிக் கொண்டு விட்டால் மழைக்கு உலகநாதன் கொடுத்திருக்கும் நெல்லை மாவட்ட வசவு

களுக்கு அகராதியில்கூட அர்த்தம் பா டியாது. வார்த்தைகள் அப்படி வந்து எச்சில் மாதிரி க்கும்.

ஆனால் அதே உலகநாதன் வீட்டுத் திண் யில் உட்கார்ந்து கொண்டு சென்னையிலும் தஞ்சாவூ பெய்த கன மழையின் கடும் சேதாரங்களைப் ப தகவல்களை செய்திப் பேப்பரில் சுவாரஸ்ய வாசித்துக் கொண்டிருப்பார். ஆர்வத்தோடு அதை பற்றி பேசியும் கொண்டிருப்பார்.

—அப்பேற்பட்ட சுபாவம் கொண்ட உலகநாதன் நொடிக்கொரு தடவை வீடு போய் சேர்வதற்குள் மழை விழுந்து விடக்கூடாதே என்ற நினைப்பில் மேகக் கூட்டத்தை நிமிர்ந்து பார்த்துக் கொண்டே வாய்க்கால் கரையில் வேகமாக நடந்து சாலை மேட்டில் ஏறி விட்டார். தூரத்து வேத பாடசாலையில் ஒலிக்கும் வேதபாராயண ஒலி பொதிகை மலைக் காற்றில் கலந்து வந்து கொண்டிருந்தது. பல வருட வழக்கப்படி சாலை யின் நெடிய செண்பகமர வரிசையை மனசுக்குள் எண்ணிக் கொண்டே உலகநாதன் நல யை துரிதமாக எட்டிப் போட்டார்.

முரட்டு கதர் வேட்டியை தூக்கி டப்பா கட்டு கட்டி யிருந்ததில் அவரின் இரண்டு முழங்கால்களும் கொழுத்த சதைப்பிடிப்ப கரும் பச்சை நிறத்தில் மின்னின. உலகநாதன் அப்போதுதான் கவனித்தார். அவர் அணிந்திருந்த வெள்ளை நிற சட்டையின் வலது தோள் பக்கத்தில் காக்கை எச்சமிட்டிருந்தது. அதைப் பார்க்கவே அவருக்கு அருவருப்பாக இருந்தது.

சின்ன வயசில் இருந்தே உலகநாதனுக் க்கை களைக் கண்டாலே பிடிக்காது. அவரின் பள்ளிப் பருவத்தில் கிணற்றடியில் உட்கார்ந்து முறுக்கோ வடையோ தின்று கொண்டிருந்தால் முதல் விருந்தாளி யாக எதிரில் வந்து உட்காரும் ஒரே பறவை காககை



தான். வேளையில் அதே கிணற்று மேடை யில் உட் து வறட் வறட்டென்று கத்துகிற பறவை கதான்.

கைகளை விரட்டுவதற்கென்றே இன்றும் உலக வீட்டில் நீளமான குச்சிகள் வைத்திருக்கிறார். லும் என்ன? விரட்டும்போதுதான் காக்கைகளும் லும் பேய் கத்தல் கத்தும். எத்தனையோ தடவை கநாதன் காக்கைகளின் இறக்கைகளால் தலை லும் காது நுனியிலும் அடி வாங்கியிருக்கிறார். அத னால் தெருவில் போகிறபோது ஏதாவது ஒரு காக்கை தாழ்வாகப் பறந்து வந்தால் உடனே உலகநாதன் தோளில் கிடக்கும் துண்டை எடுத்து தலையில் போட்டுக் கொள்வார்.

சில காக்கைகளுக்கு அவரை அடையாளமே தெரியும். அதனால் அவரைப் பார்த்தாலே கூச்சல் போட ஆரம்பித்துவிடும். இப்போதுகூட ஒரு காக்கை ரொம்பத் பறந்து வந்து கொண்டிருந்தது. அதற்கு உ ன அடையாளம் தெரியாததால் 'கத்தாமல் கொள்ளாமல்' பறந்து போனது. 'குருட்டுச் சவம்போல இருக்கு' என்று நினைத்துக் கொண்டே உலகநாதன் நடந்தார்.

பொதிகை மலை அடிவாரத்தில் அமைந்திருக்கும் கேசவபெருமாள் கோயிலின் கோபுரத்தை நோக்கி உலகநாதன் கன்னத்தில் போட்டுக் கொண்டார். அவர் தீவிரமான பெருமாள் பக்தர். அவரின் பருத்த நெற்றி மேட்டில் சன்னமான ஒற்றை நாமம் எப்போதும் துலங்கிக் கொண்டிருக்கும்.

உலகநர்தன் பெருமாளை வழிபடுகிற வைஷ்ணவ குலத்தில் பிறந்தவர் இல்லை. ஆனால் வைஷ்ணவன் போல் தெரிய வேண்டும் என்ற ஆசை அவருடைய மனதில் இருந்தது. சின்ன வயசில் அப்பாவுடன் கேசவ

பெருமாள் கோயிலுக்குப் போ... ...ாதெல்லாம் அங்கு விநியோகம் செய்யப்பட்ட ... ...ன் ருசி அவரை காந்தம் போல இழுத்தன.

காலையில் போனால் தோசை ... பொங்கல். மத்யானத்தில் புளியோத... சுண்டல். ராத்திரியில் அப்படி ஒரு தயிர் ... இடத்துப்பிள்ளை என்பதால் எல்லா பி... உலகநாதனுக்கு ஜாஸ்தியாகவே தரப்படும். ம... கோயில்களில் விதவிதமான பிரசாதங்கள் கி... என்பதால் சின்ன வயசின் இயல்புப்படி உலக... பெருமாள் கோயிலோடு கோந்து போட்டு ஒட்டி... மாதிரி ஒட்டிக் கொண்டு விட்டார்.

அந்தச் சின்ன வயதில்தான் உலகநாதனின் மனசில் கோடு ஒன்று இழுக்கப்பட்டது. ஒருநாள் கோயில் பட்டாச்சாரியார் குட்டி உலகநாதனின் நெற்றியில் நாமம் ஒன்றைப் போட்டு விட்டார். "அம்பி ஒலக நாதா! இப்போ யார் பார்த்தாலும் உன்னை ஒரு பிராமணாளாத்துப் பிள்ளைன்னுதான் ...ச்சுப்பா" நாமம் இட்டுவிட்ட பட்டாச்சாரியார் இப்படி சொன்ன போது உலகநாதனுக்கு ஏனோ பெருமையாகக்கூட இருந்தது.

சின்ன வயசில் பிராமணாள் வீட்டுப் பிள்ளை; பிராமணாள் அல்லாத வீட்டுப் பிள்ளை என்ற அர்த்தங்களோ வித்தியாசங்களோ உலகநாதனுக்குத் தெரியாத விஷயங்கள். கொஞ்சம் வயசாகி வித்தியாசங்கள் தெரிய ஆரம்பித்தபோது அவரின் மனதில் விசித்திரமான எண்ணம் ஒன்று யாருக்கும் தெரியாமல் வந்து ஒட்டிக் கொண்டது.

பிராமணர் அல்லாத உலகநாதனுக்கு தான் ... பிராமணனாகப் பிறக்காமல் போய்விட்டோமே ... ரொம்ப ரகசியமான ஆதங்கம் அவரின் அடிமன...



ஏற்பட்டுவிட்ட... இன்றும் இது ஒரு விசனம்தான் அவருக்கு. ...ம் என்ன பண்ண முடியும்? அடுத்த ஜென்மத்திலாவது தான் பிராமணனாக பிறக்க ... என்று உலகநாதன் பெருமாளை அவ்வப் ...க்கொள்வார்.

... காலத்தில் பெருமாள் பக்தியாக இட்டுக் ...ட்ட நாமம் பிற்பாடு பிராமண அதுவும் ...வ அடையாளமாக போட்டுக் கொள்ளப் ...ற்று. நெற்றியில் நேர்த்தியாக துலங்கும் நாம ...துகளில் மின்னும் வைரக் கடுக்கன்களும் மீசை ...லும் ஆர்மிக்காரன்போல வெட்டப்பட்ட தலை முடியிலும் பாதிக்குப் பாதி கலந்துவிட்ட நரையும் உலகநாதனை இந்த ஐம்பத்தைந்தாவது வயதிலும் சுந்தர புருஷனாகவே காட்டின.

ஆனால் நகர வாசிகளின் நாகரீகங்களை வைத்துப் பார்க்கும்போது உலகநாதன் வெறும் பட்டிக்காட்டு சுந்தரபுருஷன்! இத்தனைக்கும் அவருடைய ஆசை— அவரைப் பார்த்தால் பட்டிக்காட்டு ஆள் மாதிரி தெரியக்கூடாது என்பதுதான். ஆனால் இதில் இருக்கும் கஷ்டம்—உலகநாதனைப் பார்த்த உடனே அவர் ஒரு கிராமத்து ஆள் என்பது நகர வாசிகளுக்குத் தெரிந்து விடுவதுதான். இதெல்லாம்கூட உலகநாதனுக்கு மனப் பிரச்னைகள்தான்.

ஆனால் ஒன்று; நகரத்துக்காரர்களுக்குத்தான் அவர் கிராமத்து ஆள் மாதிரி தெரிந்தாரே தவிர அவர் பிறந்து வளர்ந்து இன்றுவரை வாழ்ந்து வருகிற செந்துறை என்ற கிராமத்து ஜனங்களின் கண்களுக்கு உலகநாதன் நாகரீகமான நகர புருஷர் மாதிரிதான் தெரிந்தார்! அதில் அவருக்கு திருப்தியும்கூட.

அந்தத் திருப்தியே ஒரு கம்பீரத்தையும் தந்திருந்...ு என்று சொன்னால் அது மிகையே இல்லை. - இப்

போதும் அந்த கம்பீரத்தை நடையில் காட்டியவாறு வீட்டை நோக்கி உலகநாதன் விரைந்து கொண்டிருந்தார்.

உலகநாதன் அவருடைய நெடிய தெருவில் பிரவேசித்துவிட்டார். மழை மட்டும் இன்னும் விழ ஆரம்பிக்கவில்லை. தெரு முனையில் இருந்தே உலகநாதன் பார்த்துவிட்டார். அழகர்சாமியின் மகள் சிவமதி அவள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து அடுத்த வீட்டுப் பெண்ணுக்கு தலை சீவி ஜடை போட்டுக் கொண்டிருந்தாள். சிவமதியும் உலகநாதன் தூரத்தில் வரும்போதே கருட பார்வை பார்த்து விட்டாள். தூரப் பார்வையிலேயே அவர்கள் இருவரின் பார்வையும் தயக்கத்துடன் கலந்து கொண்டன.

ஊரார் யாருடைய கவனத்திலும் சிக்காத மர்மமான பார்வைக் கலவை இது. சிவமதியின் வீட்டைத் தாண்டுகிறபோது நடையின் வேகத்தைச் சிறிது குறைத்துக் கொண்ட உலகநாதன் இந்த ஒரு சில வருட வழக்கப்படி தூக்கி 'டப்பா' கட்டுக் கட்டியிருந்த வேட்டியை மெதுவாக கீழே இறக்கிவிட்டுக் கொண்டார். -இது அவர் சிவமதிக்குக் காட்டும் சின்ன மரியாதை. அதுவும் ரகசிய மரியாதை. இந்த ரகசிய மரியாதை ஏற்பட்டிருப்பதெல்லாம் கடந்த சில வருடங்களாகத்தான்.

ஐந்து வருடங்களுக்கு முன்னால் உலகநாதனின் மனைவி காந்திமதி மஞ்சள் காமாலையில் இறந்து போனாள். ஆனால் அழகர்சாமியின் மகள் சிவமதி விதவைப் பெண்ணாகி ஏழெட்டு வருஷங்களாகிவிட்டன. இருபதாவது வயதில் அதுவும் கல்யாணமான இரண்டு வருடங்களில் சிவமதியின் புருஷன் செத்துப் போனது ஊர்க்காரர்கள் எல்லாருக்கும் போல உலகநாதனுக்கும் அதிர்ச்சியான வேதனையான செய்திதான்.



அழகர்சாமி உலகநாதனுக்கு ரொம்ப வேண்டப்பட்டவன். அவனுக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் தான். சிவமதியின் பதினெட்டாவது வயதில் கோவில்பட்டிக்குப் பக்கத்தில் இருக்கும் கழுகுமலையில் நல்ல இடமாகப் பார்த்துத்தான் அவளை கல்யாணம் பண்ணிக் கொடுத்திருந்தது.

அப்போதெல்லாம் சின்ன வயசுப் பெண்ணான சிவமதி உலகநாதனின் எந்த மாதிரியான கவனத்திலும் இடம் பெற்றதில்லை. கவனித்துப் பார்க்கும் முகாந்திரமும் உலகநாதனுக்கு இல்லை. அவருடைய உலகமும் வேறு. சிவமதியின் உலகமும் வேறு. கல்யாணமான இரண்டாம் வருடம் சிவமதியின் புருஷன் செத்துப் போனது தெரிந்ததும் உலகநாதனும்தான் அடுத்த நிமிஷமே அழகர்சாமியின் குடும்பத்தாருடன் கழுகுமலைக்கு ஓடினார்.

சூறைக் காற்றில் சாய்ந்துபோன இளம் வாழைக்கன்றுபோல கிடந்தாள் சிவமதி. அழகர்சாமியை அரவணைத்தபடி ஆயிரம் தடவை ஆறுதல் வார்த்தை சொல்லித் தேற்றிவிட்டுத்தான் உலகநாதன் செந்துறை திரும்பினார். அப்புறம் காரியங்கள் முடிந்து சிவமதியையும் கழுகுமலையில் இருந்து அழைத்து வந்து விட்டார்கள்.

பல மாதங்களுக்கு சிவமதி வாசலுக்குக்கூட வராமல் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடந்தாள். யாராவது அவளுடைய வீட்டிற்குப் போனால்கூட அவர்களின் கண்ணில் படாமல் ஒளிந்து கொள்வாள். ரொம்ப நாள் கழித்து அவ்வப்போது கொஞ்சமாகத் திறந்திருந்த வாசல் கதவின் குறுகலான இடைவெளியில் ஒரிரு நிமிடங்கள் அவளின் உருவம் தென்படலாயிற்று. அப்புறம் கொஞ்ச நாள் கழித்து சிவமதி வீட்டுத் திண்ணையில் நிற்பதைப் பார்க்க முடிந்தது.

அப்போதெல்லாம் 'பாவம் அழகர்சாமி மவ...' என்ற அனுதாபத்திற்கு மேல் உலகநாதனின் மனதில் வேற எண்ணம் எதுவும் வந்ததில்லை. ஆனால் அவருடைய மனைவி காந்திமதி இறந்து போன பிறகு ஒரு சமயம் சிவமதியை அவளுடைய வீட்டு வாசலில் பார்த்தபோது 'இவளுக்கு புருஷன் கிடையாது, எனக்குப் பெண்டாட்டி கிடையாது' என்ற சின்ன ஒப்பீட்டு எண்ணம் தரையை நோக்கிப் பாய்கிற காக்கையைப் போல ஒரு பாய்ச்சல் பாய்ந்தது!

முதலில் உலகநாதனுக்கே இந்த எண்ணப் பாய்ச்சல் திகைப்பானதாகவும் சோகமானதாகவும் இருந்தது. பிறகு இந்தத் திகைப்பையும் சோகத்தையும் சிவமதியும் உணர்ந்து கொள்ளும்படி தன் கண்களில் காட்டியவாறு அவள் எதிரில் உலகநாதன் நடக்க ஆரம்பித்தார். அவரின் இந்த நடை ஒருநாள் சிவமதியின் கண்களில் பட்டு விட்டது.

முதலில் அவள் தயங்கி தயங்கித்தான் உலகநாதனின் நடையைப் பார்த்தாள். அப்புறம்தான் அவளுடைய மனசிலும் ஒருவித மலைப்பு முட்டைக்குள் இருந்து பொரிக்கும் குஞ்சுபோல ரொம்ப ரொம்ப ரகசியமாகப் பொரித்தது. குஞ்சு பொரித்தது உலகநாதனின் கழுகுப் பார்வைக்கு புலப்பட்டுவிட்டது. இதற்குப் பிறகுதான் சிவமதி அவருடைய கண்களில் வெறும் அழகர்சாமியின் மகளாகத் தெரியாமல் சின்ன வயசு விதவைப் பெண்ணாகத் தெரிய ஆரம்பித்தாள். அவளுடைய உடல் வனப்பும் அன்றிலிருந்து உலகநாதனின் கண்களுக்குக் குறிப்பாக தெரியத் தொடங்கியது. அதன் பின்தான் வனப்பு உள்ள இளம் வயசுப் பெண்ணைப் பார்க்கிற ஆண்பிள்ளையாக உலகநாதன் சிவமதியை ஒரு கவனிப்புடன் கள்ளப் பார்வை பார்க்க ஆரம்பித்தார். நாளடைவில் இதே கள்ளப் பார்வை கவனிப்பு சிவமதியிடமும் ஏற்பட்டுவிட்டது.



அதுவரை செந்துறை கிராமத்தின் நல்ல வசதியான ஏழெட்டு நில உடமைக்காரர்களில் கொஞ்சம் அழுத்தக்கார மனிதராகவும் குடும்பத்துக்கு வேண்டிய மனுசராகவும் மட்டும் அவளால் பார்க்கப்பட்டுக் கொண்டிருந்த உலகநாதன் பெண்டாட்டியை இழந்த கம்பீர வயதான ஆணாக சிவமதிக்குத் தெரிய ஆரம்பித்துவிட்டார். அவளின் இந்தப் பார்வை மாற்றத்தை உலகநாதனின் மேட்டு விழிகள் உடனே கவனித்து விட்டன.

மழையின் ஆரம்பத் துளிகள் முகத்தில் தெறிக்கும்போது ஏற்படுகின்ற இன்பச் சிலிர்ப்பு அவர்களுக்குள் அரும்புவதற்கு இந்தப் பார்வை மாற்றங்களே போதுமானதாக இருந்தது. மழையின் இந்த ஆரம்பத் தூறல்கள் சிறிது காலமாக யாருடைய கண்களுக்கும் புலப்படாமல் தூறி தெறித்துக் கொண்டிருந்தன. ஆனால் எத்தனை நாளைக்கு இப்படி ஆரம்ப தூறலாகவே தூறிக் கொண்டிருப்பது... பெரிய மழையாக கொட்டித் தள்ள வேண்டாமா? தள்ளலாம்தான். ஆனால் அதில் பிரச்னை வர வழி இருக்கிறது. பெரிய மழை கொஞ்சம் ஆபத்தானது. வெள்ளம் கிளம்பிவிடும்! வெள்ளம் கண்டிப்பாக சேதாரங்களை ஏற்படுத்திவிடும்!

செந்துறை ரொம்பவும் சின்ன கிராமம். ஊர் கட்டுப்பாடு என்ற கரைகளால் சுற்றிக் கட்டப்பட்ட கிராமம். அந்தக் கிராமத்தில் போய் உலகநாதனுக்கும் சிவமதிக்கும் இடையே வெள்ளம் ஏற்படுகிற மாதிரி உறவு மழை பெய்தால் அவசர அபாய நடவடிக்கைகளுக்கு இருவருமே ஆளாக வேண்டி வரும். அதற்கெல்லாம் தயாரில்லை இருவரும்.

அதனால் வெள்ளம் வருகிற அளவிற்கு மழையை பெய்வித்துக் கொள்ளாமல் குற்றாலத்துச் சாரலாகவே இரண்டு பேரும் தூறிக் கொண்டிருந்தார்கள். யாருக்கும்

புலப்படாத அடிமணல் நீரோட்டமாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் உலகநாதனின் மனதில் ஒருநாள் ஒரு கேள்வி வந்தது. இப்படி சின்ன மழைத் தூறலாகவே இருந்து கொண்டிருந்தால் போதுமா? யோசித்துப் பார்த்துவிட்டு அவரின் திருட்டுப் புத்தி 'போதாது' என்று முணங்கியது! சில நிமிடங்கள உலகநாதனின் உணர்வுகளில் சின்ன வன்முறை சின்ன பலூன் போல உப்பியது. என்ன வெள்ளம் வந்தாலும் மேடான இடத்திற்குப் பெயர்ந்து விட்டால் தப்பி விடலாம்!

ஆனால் என்ன... அந்த மாதிரியான இடப் பெயர்ச்சிக்கு வேறொரு இளமை வேண்டும். உலகநாதனிடம் இருக்கிறதா அது? யோசிக்கவே வேண்டாம் — உலகநாதனிடம் கிடையாது அது! வேறு வழியில்லை. தூறலே போதும்!

உலகநாதன் சிவமதியின் பார்வைத் தூறலில் நனைந்து கொண்டே, அவரின் பார்வைச் சாரலில் அவளையும் நனைத்துக் கொண்டே - அவருடைய வீட்டுப் படியேறி திண்ணையில் களைப்புடன் கொஞ்சம் மூச்சு வாங்க நின்றார்.

செந்துறைத் தெருக்களில்தான் இன்னும் தூறல் கூட விழவில்லையே தவிர தூரத்தில் படித்துறைக்கு அப்பால் பனிமூட்டம் போல வெண்மையாக மழை இறங்கியிருந்தது. துண்டால் பிடரி வியர்வையைத் துடைத்துக் கொண்டே உலகநாதன் முணங்கினார் ''சவத்துக்குப் பெறந்த மழை - எவன் ஊர்லேயோலா பேயுது...!''

# 2

திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு போகிற பெருந்துத் தடத்தில் பாதி தூரத்தில் இருந்தே விலகிப் போய் விடுகிற வண்டிப் பாதையின் இரண்டாவது மைல் முடிவில் அமைந்திருக்கும் கிராமம் செந்துறை. நீர் மணக்கும் வயல்களும் வெயில் தெரியாத தோப்புகளும் புராதன கோயில்களுமாய் மலைச் சரிவுகளை ஒட்டி அமைந்திருக்கும் கிராமம் அது!

கூத்தன் கோயிலுக்குக் கீழ்க்கோடியில் வலமாக சுழித்தோடும் பொருனை ஆற்றின் கரையில் ஆங்காங்கே குறும்பலா மரங்கள் நிறைமாத கர்ப்பிணியின் பெரும் வயிறு போன்ற பழங்களை தாங்கியவாறு ஓங்கி நின்றன. பொதுவாக பாவநாச படி அழகு என்பார்கள். செந்துறைகாரர்கள் இதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள் - செந்துறை படித்துறையின் அழகே அழகு என்பார்கள். அந்தப் படித்துறையை கண்களைச் சுருக்கி உலகநாதன் திண்ணையில் நின்றபடியே பார்த்துக் கொண்டிருக்க அடுத்த சில நிமிடங்களில் ஒன்று ஒன்றாக தூறல் விழ ஆரம்பித்தது.

உலகநாதன் வேகமாக கிணற்றடிக்குப் போனார். அங்கு செம்பருத்தியும் நந்தியாவட்டையும் கவனிக்க ஆள் இல்லாத நிலைமையிலும் பூத்துச் சொரிந்தன.

உலகநாதன் கொடியில் காய்ந்து கொண்டிருந்த அவருடைய துணிகளை அவசரமாக எடுத்தார். ஐந்து வருஷங்களுக்கு முன்பு அவரின் மனைவி காந்திமதியின் பட்டுச் சேலைகளும் ரவிக்கைகளும் பற்பல வண்ணங்களில் இந்தக் கொடியில்தான் காயும்......

''சாப்பிட வரலாமா நெல்லையப்பன்?'' - உலகநாதன் கூடத்தில் நின்று கொண்டே சமையல் அறைப் பக்கமாக பார்த்துக் கேட்டார். தேவையில்லாத பெரிய குரலில். அவரிடம் சம்பளம் வாங்கும் பணியாட்களிடம் பேசும்போது மட்டும் உலகநாதனின் குரல் உயர்ந்து ஈரம் குறைந்துவிடும்!

''வரலாமுங்க அய்யா'' நெல்லையப்பன் கூடத்திற்கு வந்து சொன்னார்.

சமையல் அறையில் இருந்தே சொல்லக் கூடாது. அது உலகநாதனுக்கு மரியாதை குறைச்சலான விஷயம்!

உலகநாதன் பெரிய பெருமூச்சுடன் சாப்பாட்டு அறைக்குப் போனார். சமையல்காரர் நெல்லையப்பன் மணையைப் போட்டு நுனி வாழை இலையை விரித்து வைத்திருந்தார்.

''பெருமாளே'' என்றபடி மணையில் உட்கார்ந்து கொண்ட உலகநாதன் பாத்திரங்களைப் பார்த்தார். கடைந்த பருப்புக் கீரை, தக்காளி ரசம், சிறு கிழங்குப் பொரியல், பீர்க்கங்காய் கூட்டு, மாம்பழ பச்சடி... எல்லாம் காலையில் வயலுக்குக் கிளம்பிப் போனபோது உலகநாதன் சொல்லிய சமையல் குறிப்புகள் தான்.

இது இன்று நேற்று ஏற்பட்ட வழக்கமில்லை. முப்பது வருஷத்துக்கும் மேலாக ஒவ்வொரு நாளும் உலகநாதன் பின்பற்றி வரும் சாப்பாட்டு வழக்கம் இது. மத்யானம் என்னென்ன சமைக்க வேண்டும் என்பதை காலைப் பலகாரம் சாப்பிட்ட வாயோடு சொல்லி விட்டுத்தான் வயலுக்கோ தோப்புக்கோ கிளம்புவார். ஒவ்வொரு வேளை சாப்பாடும் அத்தனை முக்கியம் உலகநாதனுக்கு.



ஆனால் கல்யாணத்திற்கு முந்தி இந்தக் கறி வை அந்தக் குழம்பு வை என்று அவரால் அம்மாவை அதிகாரம் பண்ண முடியவில்லை. மகனுக்கு வாய்க்கு ருசியாக சமைத்துப் போட உலகநாதனின் அம்மா தயார் தான்.

ஆனால் மகன் சொல்கிற குழம்பையும் கறியையும் சதா சமைத்துப்போட அவள் தயார் இல்லை. அதனால் உலகநாதன் தனக்குக் கல்யாணமாகி பெண்டாட்டி வரட்டும்; விதவிதமாக அவர் இஷ்டப்படுவதையெல்லாம் அவளைச் சமைத்துப் போடச் சொல்லி ஆசைதீர சாப்பிட்டுத் தள்ளலாம் என்ற எண்ணத்தில் உலகநாதன் அவரின் கல்யாணத்திற்காகக் காத்திருந்தார்.

உலகநாதனின் இரண்டாவது தங்கச்சிக்குக் கல்யாணத்தை முடித்த கையோடு அவரின் அம்மா அவருக்கு பெண் பார்க்க ஆரம்பித்தபோது பாலுணர்வுப் பிரக்ஞையைவிட உலகநாதனின் சாப்பாட்டுப் பிரக்ஞை தான் நங்கூரம் விலகினாற்போல குலுங்கியது. கல்யாண பெண் சீவலப்பேரி பொட்டல் காட்டில் கிடைத்தாள். குடிக்க ஒருவாய் தண்ணீர் கிடைக்காத ஊர் அது. செக்கடிக்க பெண் கொடுத்தாலும் சீவலப்பேரியில் பெண் கொடுக்கக் கூடாது என்பார்கள். ஆனால் தாராளமாக பெண் எடுக்கலாம்!

பெண்ணின் பெயர் காந்திமதி. கல்யாணமான முதல் மாதத்தில் செந்துறை உலகநாதனின் சாப்பாட்டு பித்தத்தைப் பார்த்து சீவலப்பேரி காந்திமதி பித்துப் பிடித்தவள் போல ஆகிவிட்டாள். திடீரென்று சாயந்தர பலகாரமாக பால்போளி செய்யச் சொல்வார். அல்லது அடை அவியல் பண்ணேன் என்பார். நினைப்பு வந்து விட்டால் இடியாப்பம் சொதி. இதில் மத்யானம் செய்த குழம்பையோ கறியையோ ராத்திரியில் உலகநாதன் தொட்டுக்கூட பார்க்க மாட்டார்.

மறுபடியும் புதுசாக பொரித்த குழம்பும் உருளைக் கிழங்கு வறுவலும் வேண்டும். அதற்கும்மேல் ஒரு தேங்காய் துவையல். சீனி அவரைக்காய் வத்தல்... கூடவே கொஞ்சம் இஞ்சித் துவையலும் அரைத்து வைத்துவிட்டால் சந்தோஷம்! பாவம் காந்திமதி. கண்ணைக் கட்டி சமையல் அறைக்குள்விட்ட மாதிரி இருக்கும்! இன்னென்ன குழம்புதான் பண்ண வேண்டும் இன்னென்ன காய்தான் பண்ண வேண்டும் என்ற உலகநாதனின் சாப்பாட்டு அதிகாரம் காந்திமதியைப் போட்டு பாடாய் படுத்தியது.

காலையில் இட்லி அவித்தால் தொட்டுக் கொள்ள தக்காளி சட்னியா தேங்காய் சட்னியா என்பதைக்கூட உலகநாதன் இரண்டொரு நிமிஷம் யோசனை செய்து பார்த்துவிட்டுத்தான் சொல்வார்.

''இதுலேயும் யோசிக்கறதுக்கு என்னதான் இருக்குமோ?'' என்று ஒருநாள் காந்திமதி அலுப்போடு கேட்டதற்கு பதில் சூடான இட்லிபோல் வந்தது!

''பத்துப் பன்னிரெண்டு இட்லி திங்கலாம் என்கிற மாதிரி வயிறு இருந்தா தக்காளி சட்னி. சும்மா ஏழெட்டு இட்லி திங்கலாம்னு மட்டும் இருந்தா தேங்கா சட்னி!''

உலகநாதனின் இந்த விளக்கத்தைக் கேட்டதும் 'போதும்டா சாமி' என்று சீவலப்பேரியை நோக்கி ஒரு ஓட்டம் விடலாம் போல இருந்தது காந்திமதிக்கு! அதற்காக அப்படியெல்லாம் ஓடிவிடவா முடியும்? நாணம் மடம் பயிர்ப்பு—என்றும் குடும்பப் பெருமை என்றும் கனம் கனமாக சங்கிலிகள் கழுத்தைச் சுற்றிப் பின்னிப் பிணைந்து கிடக்கின்றனவே... அந்தச் சங்கிலிகளை காந்திமதியால் உடைக்க முடியவில்லை. புருஷனின் சாப்பாட்டு கெடுபிடிகளுக்கு அடங்கிப்போய் விட்டாள்.



போகிறார்கள்? அடுத்த பயம் — மிச்சமுள்ள வாழ்க்கையில் தனியாகக் கிடந்து என்ன பண்ணுவது? உலகநாதன் அவரின் இரண்டு மகள்களின் கைகளையும் பிடித்துக் கொண்டு வெதும்பினார்.

இருபத்தியெட்டு வருஷ தாம்பத்ய வாழ்க்கை பூராவும் கனவாகத் தோன்றியது.

''இனிமே எங்ககூட வந்து இருங்கப்பா'' என்று உலகநாதனின் கல்யாணமான இரண்டு மகள்களுமே அவரைக் கூப்பிட்டார்கள். மூத்த மகள் கலைச்செல்வி புருஷனோடும் இரண்டு குழந்தைகளோடும் புதுடெல்லியில் இருந்தாள்.

இரண்டாவது மகள் செல்வராணி புருஷனோடும் ஒரு மகளோடும் பம்பாயில் இருந்தாள். இரண்டு மூன்று தடவை உலகநாதன் காந்திமதியோடு பம்பாய் டெல்லி எல்லாம் போய் இருந்துவிட்டு வந்தவர்தான். ஆனால் அதெல்லாம் விடுமுறைக்குப் போய்வந்த மாதிரி. காந்திமதி இல்லாமல் போவது விதியற்றுப் போவது மாதிரி! அதற்கு உலகநாதனின் அகங்காரம் முதலில் இடம் கொடுக்காது! அதுவும் இல்லாமல் விடுமுறை போல போனபோதே பம்பாயும் டெல்லியும் சரிப்பட்டதில்லை அவருக்கு.

அங்கு மகள்கள் வாழும் அடுக்கு மாடி வாழ்க்கை முறையெல்லாம் தோதுப்பட்டு வருமா உலகநாதனுக்கு? செந்துறையில் கடற்கரை மாதிரியான வீட்டில் நினைவு தெரிந்த வயதில் இருந்தே புழங்கிப் பழகியவர் அவர். அவருக்கு எப்படி நானூறு சதுர அடிக் கூண்டு போன்ற மாடிப் பகுதிகள் சரிப்பட்டு வரும்?

குளிப்பதற்குக் கஷ்டம். கக்கூஸ் போவது அதை விடக் கஷ்டம். மூன்று வேளை சமாச்சாரமான சாப்பாட்டு விஷயம் டெல்லியிலும் பம்பாயிலும் உலகநாத

னுக்கு ரொம்ப ரொம்ப கஷ்டம். ரொட்டிகளைத் தின்று விட்டு குழந்தைகளும் மருமகன்களும் ஸ்கூலுக்கும் ஆபிசுக்கும் ஓடுவார்கள். காந்திமதியும் உலகநாதனும் இல்லாவிட்டால் மகள்களுக்கு மத்தியான உணவு தயாரிக்கிற வேலையே கிடையாது. எதையாவது தின்று விட்டு சும்மா இருப்பார்கள்.

ஆனால் உலகநாதனிடம் "உங்களுக்கு பிடிச்சதை சொல்லுங்கப்பா. செஞ்சி தரேன்..." என்று மகள்கள் கேட்கத்தான் செய்வார்கள். அதற்காக வாழைக்காய் பொரியல் நல்ல தேங்காய் எண்ணெய்யில் மொறு மொறுன்னு செஞ்சி தா..." என்று உலகநாதனால் கேட்டு விடவா முடியும்?

கேட்ட உடனே செய்து கொடுக்க நல்ல வாழைக்காய் அங்கேயெல்லாம் கிடைக்குமோ கிடைக்காதோ? உலகநாதன் அவர் பாட்டுக்குக் கேட்டுவைக்க "இங்க நல்ல வாழைக்காய்யெல்லாம் கெடைக்காதே" என்று மகள்கள் சொல்லிவிட்டால்— போச்சு... "பெறகு எண்ணத்துக்கு வந்து கேட்ட நீ...?" என்று உலகநாதன் பெண்களை திருப்பிக் கேட்பார். அவரின் கொள்கை இது—கேட்டது கிடைத்துவிட வேண்டும் அவருக்கு!

இதில் ஒரு சதவிகித சந்தேகம் இருந்தால்கூட வாயைத் திறக்காமல் இருந்து விடுவார். வாயை அவர் திறக்காமல் இருக்கிறார் என்றால் திறக்கப் பிடிக்காத கடுப்பில் இருக்கிறார் என்று அர்த்தம்.

எப்போதாவது அத்தி பூத்த மாதிரி செந்துறையில் காந்திமதியிடம் அவர் "ஒனக்கு பிரியப்பட்ட கொழம்பு வை. போதும்" என்பார். காந்திமதிக்கு புருஷன் ஏதோ கடுப்பில் இருக்கிறார் என்பது புரியும். பேசாமல் அவருக்குப் பிரியமான குழம்பையே வைப்பாள்! வந்த இடத்திலும் மனிதர் மனதுள் கடுப்படித்துக் கொண்டு



இருந்தால் ஆசையாக மகள்கள் வீட்டிற்கு வந்த காந்திமதிக்கு எப்படி இருக்கும்? ஏண்டா வந்தோம் என்று தான் இருக்கும் அவளுக்கும்.

காந்திமதி இருந்தபோதே இந்த அழகு... அவளும் இல்லாமல் பம்பாயும் டெல்லியும் போனால் தாக்குப் பிடிக்க முடியுமா உலகநாதனால்? இருந்தாலும் காந்திமதி இறந்த பதினேழாம் நாள் உலகநாதன் மகள்களோடு கிளம்ப வேண்டியிருந்தது. ஒரு மரபுக்குக் கட்டுப்பட்டவர் மாதிரி டெல்லி மகள் வீட்டில் பதினேழு நாட்களும் பம்பாய் மகள் வீட்டில் பதினெட்டு நாட்களும் இருந்தார். பெண்டாட்டி செத்துப் போய் விட்டாள் என்ற ஒரே காரணத்திற்காக மகள்களோடு போய் நிரந்தரமாக தங்க அவருடைய ஆண்மை சம்மதிக்கவில்லை.

வாழ்க்கை என்பது மனைவியோடு வாழ்கிற நிலை மட்டும்தானா என்ற ரகசிய கோபம்கூட உலகநாதனின் மனஆழத்தில் எழுந்தது. அதே நேரம் இன்னொரு மன ஆழத்தில் மனைவியை இழந்ததில் வாழ்வின் மிக முக்கிய பிடிமானம் ஒன்றைப் பறிகொடுத்துவிட்ட வெறுமை உணர்வும் நடுநிசித் தெரு விளக்குப் போல எரிந்து கொண்டிருந்தது.

இரண்டு மகள்கள் வீட்டிலும் இருந்துவிட்டு சரியாக முப்பத்தி ஆறாவது நாள் உலகநாதன் திருநெல்வேலிக்கு ரயில் ஏறிவிட்டார். புறப்படுவதற்கு ரயில் ஒரு குலுங்கல் குலுங்கியபோது உலகநாதனின் மனசும் குலுங்கி அதிர்ந்தது. தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தை காந்திமதி இல்லாமல் தனியாகத் தொடர்கிறார். வாழ்க்கையிலேயே உலகநாதன் மிக வெறுத்த ரயில் பயணம் அதுதான்......

# 3

அந்த நீண்ட ரயில் பயணம் உலகநாதனின் மனதில் பெரிய பாதுகாப்பின்மையை ஏற்படுத்தியிருந்தது. அந்தப் பாதுகாப்பின்மை உணர்வுடனேயே செந்துறை வந்துசேர்ந்தார். முப்பத்தெட்டு நாட்கள் கழித்து செந்துறை மண்ணை வந்து மிதித்தபோது உலகநாதன் உணர்ச்சிவசப்பட்டார். பெரிய பூட்டுப் போட்டு பூட்டிக் கிடந்த அவருடைய அத்தனை பெரிய வீட்டைத் திறந்தபோது இன்னும் அதிகமாக உணர்ச்சிவசப் பட்டார்.

காந்திமதி இல்லாத வெற்று கூடத்தையும் தூசி படிந்து கிடந்த சமையல் அறையையும் பார்த்ததும் தோளில் கிடந்த துண்டை எடுத்து வாயைப் பொத்திக் கொண்டார். எந்தத் தாட்சண்யமும் இல்லாமல் மரணம் வந்து போயிருந்த அவரின் வீட்டைப் பார்க்க உலகநாதனுக்கே தாங்கவில்லை. வீட்டின் ஒவ்வொரு இடமும் காந்திமதியைப் பற்றிய ஒவ்வொரு நினைவுகளை ஞாபகப்படுத்தின.

தனியாக வீட்டில் தன்னால் இருக்க முடியாதோ யென்று கொஞ்சம் பயந்தார் உலகநாதன். எப்போதும் அவருக்குள் ஒரு அகங்காரம் தலை நிமிர்ந்தபடி நிற்கும். அந்த அகங்காரத்தை காந்திமதியின் மரணம் நீயா நானாயென்று இரண்டில் ஒன்று கேட்டுவிட்டது! அதற்குப் பதில் சொல்ல முடியாத ஆற்றாமையில் உலகநாதன் அடங்கி அமிழ்ந்து போய்விட்டார்.

வெளியூர்களில் இருந்து அவருடைய மதினிகள் சித்திகள் அத்தைகள் என்று ஆள் ஆளுக்கு வந்து இரண்டொரு நாள் இருந்து அவருக்கு சமைத்துப்



போட்டிருந்துவிட்டுப் போய் கொண்டிருந்தார்கள். நடைமுறையில் அதற்கு மேல் யாராலும் உலகநாதனோடு இருந்து சமைத்துப் போட்டுக்கொண்டிருக்க முடியவில்லை. உலகநாதனும் அதை விரும்பவில்லை.

சம்பளத்துக்கு சமைத்துப் போட நல்ல சமையல்காரனாக தேட ஆரம்பித்தார். அவருக்கே சமையல் தெரியும். ஆனால் ஒரு அவசரத்துக்கு ஒருநாள் இரண்டு நாள் சமைக்க முடியுமே தவிர சமையலை பிழைப்பாக வைத்துக்கொள்ள அவருக்குக் கட்டுப்படியாகாது! செந்துறை ரொம்ப குட்டி கிராமம், அங்கு சமையல் வேலைக்கெல்லாம் ஆள் கிடையாது. அதனால் வெளியூரிலிருந்து ஒரு சமையல்காரனை வரவழைத்தார்.

முதலில் வந்தவன் பெயர் மாணிக்கம். கல்லிடைக் குறிச்சிக்காரன். ஆனால் அவன் வேலைக்கு வந்த முதல் மாதமே சம்பளத்தைத் தீர்த்து அனுப்பி வைத்து விட்டார் உலகநாதன். அந்த மாணிக்கம் வாரத்திற்கு ஒரே ஒரு நாள்தான் குளித்தான். அது சரிப்படவில்லை உலகநாதனுக்கு. அவரும் சரி; காந்திமதியும் சரி - தினசரி இரண்டு வேளை குளியல் போடுகிறவர்கள். அதுவும் காந்திமதி காலையில் குளித்து விட்டுத்தான் அடுப்பையே தொடுவாள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்நான பொடியைப் போட்டுத் தேய்த்துத் தேய்த்து குளித்து அவளுடைய உடம்பே துலக்கிய செப்புப் பாத்திரமாக மினுமினுக்கும். ஆற்றுத் தண்ணீருக்கு ஒரு வாசனை; கிணற்றுத் தண்ணீருக்கு ஒரு வாசனையென்று இருப்பதுபோல காந்திமதியின் உடம்புக்கென்றே ஒரு தனி வாசனை இருக்கும்.

அந்த வாசனையை நுகர்ந்து நுகர்ந்து பழகிப் போயிருந்த உலகநாதனுக்கு அழுக்கு வாசனை தூக்கலாக இருக்கிற மாணிக்கம் போன்ற சமையல்காரனை எப்படி சகித்துக் கொள்ள முடியும்......

அடுத்த ஆளை கொஞ்சம் யோசனை செய்து பார்த்த பின்தான் முடிவு செய்தார். 'தினசரி குளிப்பாயா?' யென்று முதலிலேயே கேட்டுத் தெரிந்து வைத்துக் கொண்டார்! ஆனால் அதைக் கேட்டு வைத்து என்ன செய்ய? இரண்டாவதாக வந்த சமையல்காரன் வைரச்சின்னத்திற்கு வாரத்திற்கு ஒருநாள் உடம்புக்கு ஏதாவது வந்துவிடும். ஒருநாள் தலைவலி, இன்னொரு நாள் வயிற்று வலி, மற்றொரு நாளோ பேசக்கூட முடியாமல் பல்வலி!

''உனக்கு வால் இல்லை. இருந்திருந்தால் வாலிலும் ஏதாவது வலி வந்திருக்கும்!'' என்று எரிச்சல் தாங்காமல் ஒருநாள் உலகநாதன் சொன்னாரோ இல்லையோ - அந்த வைரச்சின்னம் அவனுடைய பெயர் எழுதிய பச்சைக் கலர் டிரங்க் பெட்டியை தூக்கி தலையில் வைத்துக்கொண்டு அவன் பாட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டான்! வேலையை ராஜிநாமா செய்துவிட்டதாக அவன் சொன்னதுகூட பக்கத்து வீட்டுக்காரரிடம் தானே தவிர உலகநாதனிடம் இல்லை.

கவலையே படவில்லை உலகநாதன். அவரைப் பொறுத்தவரையில் கூரைமேல் இரையைப் போட்டால் ஆயிரம் காக்கா. ஒரு வைரச்சின்னம் போனால் இன்னொரு வெள்ளிச்சின்னம்! ஆனால் என்ன ஒரு இழவு - இன்னொரு வெள்ளிச்சின்னம் வந்து சேரும் வரை கரண்டி மறுபடியும் உலகநாதனின் கையில்! இந்த மாதிரியான நேரத்தில் அவருக்குத் திடீரென்று காந்திமதியின் மேலும் கோவம் வரும். 'இப்படி கரண்டியை கையில் கொடுத்து விட்டுப் போய்விட்டாளே பாதகத்தி...!'

ஆனால் இந்த மாதிரி நேரங்களில் செந்துறை ஜனங்களின் அபிப்பிராயம் கொஞ்சம் வேற மாதிரி! ''ஒலகநாத அண்ணாச்சிக்கு இந்தப் பாடெல்லாம் தேவைதானா? அழகா மகளுங்க கூடப் போயி இருக்கலாம்...''



திருப்பித் திருப்பி செந்துறை ஜனம் இந்த மாதிரி அபிப்பிராயம் சொல்லிக் கொண்டிருந்தபோது உலகநாதனுக்கு அதெல்லாம் சுத்த விபரம் கெட்ட பேச்சு என்ற கோபம் மூக்குக்கு மேல் வந்துவிட்டது. ஐம்பது வருஷமாக அவர் உருண்டு புரண்டிருக்கும் மண் இது. இந்த ஊரின் ஆற்றங்கரையில் இருந்துதான் உலகநாதன் கட்டையில் வைகுண்டம் போவார்! வேண்டுமானால் அவருடைய மகள்கள் யாராவது செந்துறை வந்து அவருடன் அவருடைய ஆயுசுவரை இருக்கட்டும்! இதை அவர் நூறாவது தடவை அடித்துச் சொன்ன பிறகுதான் செந்துறை ஜனம் வாயை மூடியது. அதற்கு மேல் வாயைத் திறந்தால் ஆபத்து...!

இரண்டாவதாக வந்த சமையல்காரன் வைரச்சின்னம் வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போன பின் உடனடியாக அடுத்த சமையல்காரன் யாரையும் ஏற்பாடு செய்யப் பிடிக்காமல் கொஞ்ச நாள் உலகநாதன் கடுப்புடன் கரண்டியை கையில் அவரே வைத்திருந்தார்! அவரைப் பொறுத்த வரையில் முதலில் சமையலுக்கு வந்த குரங்கு அழுக்குப் பிடித்த குரங்கு! இரண்டாவதாக வந்த குரங்கு ஒரே சீக்குப் பிடித்த குரங்கு! மூன்றாவது குரங்கு எப்படி இருக்குமோ ஏது பண்ணுமோ......!

ஆனால் உலகநாதன் பயந்த மாதிரி மூன்றாவது குரங்கு மோசமாக இல்லை! குரங்கு நீட்டாக இருந்தது. குரங்கின் பெயர் நெல்லையப்பன். நாற்பது வயசு. ஊர் ஆலங்குளம். நெல்லையப்பனை நேரில் பார்த்ததும் உலகநாதனுக்குத் தெரிந்துவிட்டது - நெல்லையப்பனை குரங்குன்னு சொல்லக்கூடாது!

நெல்லையப்பன் ஆலங்குளத்தில் சின்னதாக சொந்த ஓட்டல் நடத்தி எப்படியோ எதனாலோ

நொடித்துப் போனவர். அவரின் இரண்டு மகன்கள் ஆலங்குளத்திலேயே மெஸ் ஒன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நெல்லையப்பனின் மனைவிக்கு எப்போது பார்த்தாலும் உடம்புக்கு ஏதாவது வந்து விடும்... அப்படி ஒரு 'நோக்காட்டுக்காரி.' இதை நெல்லையப்பன் சொன்னபோது 'போச்சிலே' என்றிருந்தது உலகநாதனுக்கு.

பெண்டாட்டிக்கு உடம்பு சரியில்லையென்று நெல்லையப்பன் சும்மா சும்மா ஆலங்குளம் கிளம்பிப் போனால் என்ன செய்வது? அப்புறம் தோன்றி விட்டது. இருக்கும்வரை லாபம்! இல்லாதபோது கரண்டியை எடுக்க வேண்டியதுதான்! அதற்கு மேல் என்ன செய்ய...

நெல்லையப்பனை 'வேலையை பார்' என்று சொல்லிவிட்டு உலகநாதன் துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டார். அவரைப் பொறுத்த வரை - காந்திமதி போய் சேர்ந்த பிறகு எவன் பெண்டாட்டி உடம்புக்கு எது வந்தாலும் அதைப்பற்றி அவருக்குக் கவலை கிடையாது! எவன் பெண்டாட்டியும் மண்டையைப் போட்டாலும் அக்கறை கிடையாது!

எது எப்படி இருந்தால் என்ன? நெல்லையப்பன் வந்த நேரம் நல்ல நேரமோ என்னவோ உலகநாதனுக்கும் அவருக்கும் கொஞ்சம் ஒத்துப் போய்பிட்டது. நாட்கள் என்னமோ நத்தையாக ஊர்ந்தாலும் சமையல் ஆளாக நெல்லையப்பன் வந்து சேர்ந்து நான்கு வருஷங்கள் ஓடிப் போய்விட்டன ஓடி!

மேலோட்டமாக பார்த்தால் உலகநாதனுக்கும் நெல்லையப்பனுக்கும் வாழ்க்கை ரொம்ப சலனம் இல்லாமல் ஓடிக் கொண்டிருப்பதைப் போலத்தான் இருந்தது. ஆனால் அடிமட்டத்தில் பார்த்தால் அவர்கள் இரண்டு பேருக்குமே வாழ்க்கை சஞ்சலமும்



தனிமையும் கவிந்த இறுக்கமான நிலைமையில்தான் இருந்தது. அவை அத்தனையையும் சொல்லலாம்தான். இருந்தாலும் அவசியமில்லை.

அதுவும் நெல்லையப்பனைப் பற்றி சொல்வதெல்லாம் அனாவசியம். சாதாரண சமையல்காரர் அவர்! ரொம்ப சாமானியன்! அவரைப் பற்றி விலாவரியாக சொல்லி ஒருத்தருக்கும் ஒரு பிரயோஜனமும் கிடையாது. ஆனால் உலகநாதனைப் பற்றி கொஞ்சமாவது பதிவு செய்தே ஆக வேண்டும்! பணக்காரர் அவர்! குறிப்பிடும்படியான நிலப்பிரபு! நிலப்பிரபுவைப் பற்றிப் பதிவு செய்யாமல் வேறு யாரைப் பற்றி பதிவு செய்ய?! பிரபுவைப் பற்றிய ஊறுகாய் மாதிரி கொஞ்சப் பதிவுகள் கீழே...

மனைவி காந்திமதி இறந்த பிறகு உலகநாதனின் தன்மையில் சுய இரக்கம் பெரியதாக வந்து ஒட்டிக் கொண்டது. 'இப்படிப் போயி மதினியை வாரிக் குடுத்துட்டு நிக்கிறியளே அண்ணாச்சி' என்று ஆள் ஆளுக்கு சொல்லி உலகநாதனை மதினியை வாரிக்குடுத்துட்டு நிக்கிற அண்ணாச்சியாகவே உருமாற்றி விட்டார்கள். சும்மாவே மனைவி செத்ததும் மனசில் பத்து வயசு கூடினவராக ஆகிவிட்டவராகி விட்டவரை இப்படி வேறு சொல்லிச் சொல்லி இன்னும் வயசு ஜாஸ்தியாகி விட்டவராய் நினைக்கும்படி ஏழு கோலம் பண்ணி விட்டார்கள்.

காந்திமதி இருந்த வரைக்கும் வயதாகிக் கொண்டிருக்கிறது என்ற பிரக்ஞை உலகநாதனுக்குள் ஒருநாள் வந்தது கிடையாது. காந்திமதி போய் சேர்ந்த பிறகு அந்த பிரக்ஞை வராத நாள் ஒன்றுகூடக் கிடையாது.

யார் வீட்டிலாவது கல்யாணம் காட்சியென்று பத்திரிகை வைக்க வந்தால் நமக்கு எதுக்குங்க கல்யாணமும் காட்சியும்... அவளே போயாச்சி..." என்று

உலகநாதன் முக்குவார் அல்லது முனகுவார்! அதைக் கேட்டு இரண்டு பேரோ அல்லது நான்கு பேரோ "பாவம் அண்ணாச்சி. அவுங்களுக்கு என்ன இருந்து என்ன செய்ய...? மதினி போனாங்க. அண்ணாச்சிக்கு நிம்மதி போச்சி" என்று பாவப்பட்டுச் சொல்லும்போது உலகநாதனுக்குள் பீறிடும் சுய இரக்கம் அவருடைய மனசுக்கு ரொம்ப இதமாக இருக்கும்.

எங்கெல்லாம் சுய இரக்கத்திற்கு இடம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் போய் அதன் சுகத்தை அனுபவித்துவிட்டு வர உலகநாதன் தயாராக இருந்தார்.

அதற்காக அவர் கிளம்பிப் போன ஊர்கள் நிறைய. சித்தி மகளைப் பார்க்க தென்காசி. மாமாவைப் பார்க்க தூத்துக்குடி. ஒரு மதினியைப் பார்க்க சங்கரன் கோவில். இந்த மாதிரி துன்பச் சுற்றுலா வந்து கொண்டிருந்த உலகநாதன் கல்லிடைக்குறிச்சிக்கு மட்டும் அடிக்கடி போய் வந்து விடுவார்.

பாளையங்கோட்டையில் கூடப் படித்த கிருஷ்ண ஐயங்கார் கல்லிடைக்குறிச்சியில் இருந்தார். அவர் பிராமணர், அதுவும் வைஷ்ணவர் என்பதற்காக அவரின் நட்பை உலகநாதன் கெட்டியாகப் பிடித்து வைத்திருந்தார். கல்லிடைக்குறிச்சியை மொத்தத்திலேயே அவருக்குப் பிடித்ததற்குக் காரணங்கள் இருந்தன. அங்கு பிராமணர்கள் ஜாஸ்தியாக இருந்தார்கள் என்பது ஒரு காரணம்! இது ஒரு பெரிய காரணமாயென்று கொஞ்சம் பேர் முகத்தை சுளித்துக் கொண்டது உண்டு. அதற்கு ஒன்றும் பண்ண முடியாது. உலகநாதன் என்ற தனி மனித விஷயம் அது. சமூக விஷயம் கிடையாது!

கல்லிடைக்குறிச்சியில் உலகநாதனுக்குப் பிடித்த மற்றொரு விஷயம்— தாம்பிரவருணி ஆறு. மற்ற எந்த ஊரிலும் தாம்பிரவருணிக்கு இல்லாத அழகு கல்லிடைக்



குறிச்சியில் இருக்கும். கல்லிடைக்குறிச்சியை எப்போதும் ஞாபகத்தில் அவர் வைத்திருக்க பெரிதாக இன்னொரு காரணமும் இருக்கிறது. சாப்பாட்டு விஷயம் அது! ஒரு தடவை கல்லிடைக்குறிச்சி அப்பளத்தைச் சாப்பிட்டுப் பார்த்தவன் வேற ஊர் அப்பளத்தைத் தொட்டுக்கூட பார்க்கமாட்டான் என்பது அந்த ஊர்க்காரர்களின் அபிப்பிராயம். உலகநாதனின் அபிப்பிராயமும் அதுவே!

கல்லிடைக்குறிச்சி போய் வரும் போதெல்லாம் அவர் பஸ்ஸில் டிக்கெட் வாங்க மறந்தாலும் மறப்பாரே தவிர அப்பளம் வாங்கி வர மட்டும் மறக்கவே மாட்டார்! எண்ணெய் மிதக்கும் வெந்தய குழம்பில் பொரித்த அப்பளங்களை போட்டு; குடமிளகாய் உப்பேரியும் செய்து ஒரு பிடி பிடித்தால் தாராளமாக ஒரு வண்டிச் சோறு உள்ளே போகும்! அப்படியொரு ருசி உண்டு வெந்தயக் குழம்பில் போடப்படுகிற அப்பளத்திற்கு.

அதுவும் கல்லிடைக்குறிச்சி அப்பளம் என்றால் கேட்கவே வேண்டாம்! அந்த ஊர் அப்பளத்திற்கு அப்படி ஒரு ருசி இருப்பதற்குக் காரணம்—தாம்பிரவருணி தண்ணீர்தான். மானசீகமாக உலகநாதன் கருடாழ்வார் மாதிரி மண்டியிட்டு கைகளை உயர்த்தி தாம்பிரவருணி நோக்கி மனம் நெகிழ்ந்து தொழுததே உண்டு என்றால்—அதற்கு மேல் என்ன சொல்ல தாம்பிரவருணி ஆற்றுத் தண்ணீர் பற்றி...

இப்படி எல்லா காரணங்களும் சேர்ந்தே உலகநாதன் கல்லிடைக்குறிச்சிக்கு மாத்திரம் அடிக்கடி போய் வந்து கொண்டிருந்தார். என்ன வித்தியாசம்—முன்பு காந்திமதியையும் எங்கே போனாலும் அழைத்து கொண்டு போய் வந்தார். இப்போது தனியாக போய் வருகிறார். அலசிப் பார்த்தால் — உலகநாதனின் வாழ்க்கையை காந்திமதியின் மரணத்திற்கு முன்; காந்தி

மதியின் மரணத்திற்குப் பின் என இரண்டாகப் பிரிக்கலாம்.

காந்திமதி இருந்தவரை உடம்புக்கு என்ன வந்தாலும் கலங்கமாட்டார். படுக்கையிலும் சாய்ந்திருக்கமாட்டார். போர்த்திக் கொண்டாவது வயலுக்கும் தோட்டத்திற்கும் ஒரு நடை போய்விட்டு வருவார்' இப்போது அரை டிகிரி காய்ச்சல் வந்து விட்டால்கூட இழுத்துப் போர்த்திப் படுத்து விடுகிறார். சீரியஸாக ஏதாவது வந்து விடுமோயென்று நடுங்கி விடுகிறார்.

செந்துறைக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை வந்து போகிற டாக்டர் "பயப்பட ஒண்ணுமே இல்ல" என்று எவ்வளவு தைரியம் சொன்னாலும் உலகநாதனுக்கு தைரியம் வரவே செய்யாது. டாக்டர் எதையோ மறைக்கிறார் என்று தோன்றும். "நெசத்தை சொல்லிருங்க டாக்டர்—பெண்டாட்டிய தூக்கிக் குடுத்துட்டு ஒத்தையில கெடக்கற ஆள் நான்" என்று டாக்டரை சில நேரங்களில் உலகநாதன் கெஞ்சோ கெஞ்சென்று கெஞ்சக்கூட செய்வார். இப்படி சந்தேகப்படவும் பயந்து சாகவும் காரணமும் உண்டு.

காந்திமதி இறந்த பிறகு மூன்று மாதங்கள் கழித்து தலை சுற்றி விழப்போவது மாதிரி இருந்து உலகநாதன் டாக்டரிடம் ஓடினார். எப்போதும் இருந்திராத அளவு ரத்தக் கொதிப்பு உயர்ந்து போயிருப்பது அப்போது தான் தெரிந்தது. நடுங்கிப் போனார் உலகநாதன். மனசுக்குள் மாரடைப்பு பக்கவாதம் என்ற பயங்கள் மேகக் கூட்டம் போல சரசரவென்று வந்து குவிந்து விட்டன. பயமழை கொட்டியது. அதனால் பயவெள்ளமும் கரை புரண்டோடியது! வெள்ளத்தில் இருந்து கரை ஏறத்தானே பார்க்க வேண்டும்... உலகநாதன் அதைச் செய்யவில்லை. பயவெள்ளத்தில் விழுந்து புரண்டு தன்பாட்டுக்கு நீச்சல் அடித்துக் கொண்டிருந்தார்!



—இப்படிப் பயப்படலாமாயென்று யாராவது கேட்டால் சொல்வதற்கோ காரணம் இருக்கவே இருக்கிறது—"பெண்டாட்டிய வாரிக் குடுத்திட்டு நிக்குற மனுசன் பயப்படாம என்ன செய்வான்..." என்ற சோகப்பாட்டு!

இப்படி ஓடிக் கொண்டிருக்கிறது காலம் — உலகநாதனுக்கும்...

# 4

சமையல்காரர் நெல்லையப்பன் சமைத்துப் போட்ட மத்தியான சாப்பாட்டை மனநிறைவுடன் சாப்பிட்டுவிட்டு உலகநாதன் எழுந்து கொள்ளாமல் மனையிலேயே உட்கார்ந்திருந்தார். பருப்பு உருண்டை குழம்பு, மைசூர் ரசம், முட்டைகோஸ் பொரியல், சேப்பங்கிழங்கு வதக்கல்... எல்லாம் கலந்த அறுசுவை உணவு அவரின் வயிற்றுக்குள் செரிமான திரவங்களை தினற வைத்துக் கொண்டிருந்தன!

உலகநாதன் குறிப்புடன் நெல்லையப்பனை நிமிர்ந்து பார்த்தார். அதன் அர்த்தம் - இரவுச் சாப்பாட்டுக்கான உணவுக் குறிப்பை நெல்லையப்பனுக்கு சொல்லிவிட்டு அவர் எழுந்து கொள்ளப் போகிறார்!

"நெல்லை"

"சொல்லுங்க அண்ணாச்சி..."

"ராத்திரிக்கு தாளிச்ச மோரும் கத்தரிக்கா கொத்சும் செய்திடு."

"தொவையல் அண்ணாச்சி...?"

''பெரண்டை தொவையல் போதும்.''

பெருமாளின் ஏழெட்டு நாமங்களை சொல்லிக் கொண்டே உலகநாதன் மணையை விட்டு சிறிது சிரமப்பட்டுக் கொண்டே எழுந்தார். வரவர கீழே உட்கார்ந்து எழுந்து கொள்வதெல்லாம் கூட கஷ்டமாக இருக்கிறது. எல்லாமே காந்திமதியோடு போய் விட்டதே...!

கூடத்தில் மையமாக தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சலில் போய் உட்கார்ந்தார் உலகநாதன். வாசலில் செந்துறை ஆட்கள் நான்கு பேர் படியேறி வந்து கொண்டிருந்தார்கள். மணிவாசகம்; முருகபூபதி; சோலையப்பன்; அழகுமலை என்ற அந்த நான்கு பேரும் உலகநாதனைவிட வயதிலும் பணவசதியிலும் குறைந்தவர்கள்.

''வாரும்வே சோலை... மழை கிழை வருதா பாரு வெளியில'' என்றார் உலகநாதன். அந்த சோலை என்ற சோலையப்பனுக்கு அவ்வளவாக போதாது! ஒரு தரம் வெளியில் திரும்பிப் பார்த்துவிட்டு ''இல்லீங்களே அண்ணாச்சி'' என்றார்.

''நல்லா பாத்த வாசலை! வீட்டுப் பக்கம் நீ வந்து மாசக்கணக்கா ஆகுதேன்னு கேட்டா...... சரி; சாப்பாடெல்லாம் ஆச்சா?''

''ஆச்சுங்க அண்ணாச்சி...''

''அண்ணாச்சி சாப்பிட்டாச்சா?''

''ஏதோ சாப்பிட்டாச்சி... இருக்கிற வரைக்கும் எதையாவது சாப்பிட்டுத்தானே ஆவணும்...''

சமையல் அறைக்குள் சாப்பிட உட்கார்ந்த நெல்லையப்பனின் காதுகளில் உலகநாதனின் இந்தப் பதில் விழுந்து கொண்டுதான் இருந்தது. எதையாவது சாப்பிடுகிற மனுசனைப் பார்க்க வேண்டுமே...!



''முக்கியமான ஜோலியா அண்ணாச்சிய பாக்க வந்திருக்கோம்.''

''தெரியுதே சேந்து வரும்போதே.''

''நேத்து நாங்க மந்திரியைப் பாக்கறதுக்கு தின்னவேலி போயிருந்தோம்...''

''எந்த மந்திரி?''

''நம்ம மந்திரி அடைக்கலராசு...''

''அவனை மந்திரின்னு நீங்கள்ளாம்தான் மெச்சிக்கணும்...''

''ஒங்க மேல அவருக்கு ரொம்ப நல்ல அபிப்பிராயம் அண்ணாச்சி.''

''எதையாவது சொல்லிட கில்லிட போறான் பூபதி! ஒன் மதினி செத்தப்ப என் கைப்பட அந்தப் பயலுக்கு கடுதாசி எழுதிப் போட்டேன்வே. ஒத்த வரி 'மெசேஜ்' எனக்கு வரலை அவன்கிட்ட இருந்து... அந்த அளவுக்கு வேலை பாத்துக் கிழிகிழின்னு கிழிக்கிறானே மெட்ராஸ்ல...! எனக்குத் தெரிஞ்சி சோத்துக்கு வழி இல்லாம சீனிக் கெழங்க அவிச்சித் தின்னுட்டு இருந்த பய!''

வந்தவர்கள் மௌனமாக இருந்தார்கள். உலகநாதனுக்கு இது கூடப் பிறந்த குணம். யாரையாவது திட்ட வேண்டியிருந்தால் ''திங்கட்கெழமை குத்தின கம்மங்கஞ்சியை புதன்கிழமை வரைக்கும் வச்சிருந்து சாப்பிடறவன் அவன்... வெறும் காணப்பருப்புத் தொவையலுக்குக்கூட வக்கத்தவன்! ஊளை மோரை ஊத்தி ஊத்தி குடிக்கிறவன்...!'' என்று சாப்பாட்டுடன் சார்புப் படுத்தியேதான் திட்ட வரும் அவருக்கு.

''சரி. ஏதோ ஜோலியா வந்ததா சொன்னீங்களே...'' உலகநாதன் மூக்குப் பொடியை எடுதது மூக்கில் வைத்துத் தேய்த்தவாறே கேட்டார்.

''வரப் போற தேர்தல்ல ஒங்களைத்தான் அண்ணாச்சி நம்ம தொகுதியில நிக்க வைக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கோம்...''

''எப்படி எப்படி...'' ஒரு நிமிஷம் உலகநாதனின் அந்த மேட்டு விழிகள் ஆச்சர்ய பாவத்துடன் உள்ளங்கை அளவுக்கு விரிந்தன.

''மந்திரி அடைக்கலராசுகிட்டேயும் ரொம்பச் சொன்னோம். அவுங்களுக்கும் சம்மதந்தான். நீங்க சரின்னு சொல்லிட்டிங்கன்னா வேலைய ஆரம்பிச்சிரலாம்.''

''திடுதிப்னு வந்து என்னவே இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுறிய...''

''ஒங்களை கேட்டுட்டு போன் பண்ணச் சொல்லியிருக்காரு அடைக்கலராசு.''

''என் பேரு எப்படி ஞாபகம் வந்திச்சின்னுதான் தெரியாம முழிக்கிறேன் நான்!''

''முருகபூபதி - நீ சொல்லு'' மணிவாசகம் சொன்னார்.

''ஏன் - நீ சொன்னா வேண்டாங்குதா?''

''அது ஒண்ணுல்ல அண்ணாச்சி. மதினி காலமாகி ஏழெட்டு வருசம் ஆயிருக்குமா?''

''ஆவணி வந்தா அஞ்சி வருசம் முடியுது.''

''மதினி இருந்தப்பல்லாம் நீங்க இப்படியா அண்ணாச்சி இருப்பீங்க... எங்கே போனாலும் சபைக்கு அலங்காரமா அவுங்களையும் கூட்டிக்கிட்டேதானே போவீங்க வருவீங்க... அவுங்ககூட ஒக்காந்து இங்க பேசி சிரிச்சிங்கன்னா ஒங்க சிரிப்புச் சத்தம் படித்துறை வரைக்கும் கேக்குமே...''



''இப்ப ஒங்களப் பாத்தா அதெல்லாம் நீங்கதானான்னு இருக்குங்க அண்ணாச்சி.''

''எப்பவும் ஒத்தையிலேயே போறீங்க வர்ரீங்க... ஒத்தையிலேயே வேற இருக்கீங்க...''

''அன்னைக்கிப் பாக்குறோம் - படித்துறையில ஒத்தையா நின்னு வானத்தையே வெறிச்சிப் பாத்திட்டு இருக்கீங்க...''

உலகநாதனுக்கு எரிச்சல் வந்தது. ரொம்பவும் அவர் மேல் யாரும் இரக்கம் காட்டி விடக்கூடாது! அது அவருக்கு பிடிக்காத சாப்பாட்டை சாப்பிடுவதுபோல இருக்கும்! வந்திருப்பவர்கள் ஏதோ பிடிக்காத சாப்பாட்டை அவருக்குப் பரிமாற வந்திருக்கிறார்கள்! குறிப்பாக இப்போது யார் அதை பரிமாறப் போகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை! உலகநாதன் முகவாயைத் தடவியவாறு காத்துக் கொண்டிருக்க சோலைமலைதான் மோசமான பத்திய சாப்பாட்டை தயக்கத்துடன் பரிமாறினார்! பத்திய சாப்பாடு உலகநாதனின் தொண்டைக் குழியிலேயே நின்றுவிட்டது மாத்திரமில்லை; அவரின் மனசையும் அது புண்ணாக்கி விட்டது. கோபத்தையும் ஏற்படுத்தி விட்டது. -விஷயம் இதுதான்.

உலகநாதனின் மனைவிக்கு போய் சேர்கிற வயசே இல்லைதான்! ஆனாலும் போய் சேர்ந்து விட்டார்கள். அதுதான் கடவுளின் விருப்பம் என்றால் மனிதன் என்ன செய்துவிட முடியும்... எத்தனை நாளைக்குத்தான் உலகநாதன் இப்படி தனியாக நின்று வானத்தையும் வாழை மரத்தையும் பார்த்தபடி இருப்பார்... அவருக்கோ பிக்கல் பிடுங்கல் கிடையாது. பணமோ வண்டி வண்டியாக இருக்கிறது. ஆயுசும் தீர்க்காயுசு அவருக்கு!

(இந்த இடத்தில் உலகநாதன் யாருக்குமே தெரியாமல் ஒரு திருட்டு முழி முழித்தார்! முதலில் அவரை இன்னொரு கல்யாணம் செய்து கொள்ள சொல்லப் போகிறார்கள் என்று நினைத்து ஏராளமான சாப்பாட்டு வரிசையைப் பார்க்கப் போகிற கடோத்கஜன் மாதிரி தயாராகக் காத்திருந்தார்) அதனால் உலகநாதன் அவரின் மிஞ்சிய காலத்தை ஊருக்கு நான்கு நல்ல காரியம் செய்துகொண்டு அவரும் சந்தோஷமாக இருக்க வேண்டும். ஊருக்காகவும் அவருடைய சந்தோஷத்திற்காகவும் உலகநாதன் கட்டாயம் வருகிற தேர்தலில் நின்று ஜெயித்துக் காட்ட வேண்டும். அதற்காக அவர்கள் எல்லோரும் எந்த ஒத்தாசை செய்யவும் முதல் ஆளாக இருக்கிறார்கள்... அதனால் இப்படி பித்துப் பிடித்தவர் மாதிரி இருப்பதை விட்டுவிட்டு தேர்தல் என்ற கோதாவில் குதிக்க வேண்டும் அவர்! நம்பிக்கையோடு வந்திருக்கிறார்கள் அவர்கள்! உலகநாதன் நல்ல பதிலாக சொல்ல வேண்டும்...!

ஆஹா! இனிப்பான நெய் மணக்கும் திருநெல்வேலி அல்வாவை வாயில் போடப் போகிறார்கள் என்ற நினைப்பில் வாயைத் திறந்தபடி உட்கார்ந்திருந்த உலகநாதன் ஊளை மோரை ஊற்றியதும் தூவென்று வந்தவர்கள் மேலேயே துப்பி விட்டார்;

"எந்த ஊரு பயலுக்கோ நாலு காரியம் செய்யறதுக்காக நான் வந்து தேர்தல்ல நிக்க முடியாதுவே..." படபடப்போடு சொல்லிக்கொண்டே உலகநாதன் ஊஞ்சலில் இருந்து குதித்தார். அவருடைய முகம் சிவந்து விட்டிருந்தது.

"அது ஒரு பேச்சுக்குத்தாங்க அண்ணாச்சி."

"ஒரு பேச்சுக்கோ ரெண்டு பேச்சுக்கோ — இது எனக்குப் பிடிக்காத பேச்சுவே!"



"ஒங்களுக்கும் ஒரு நன்மையை நல்லதைச் செய்யணும் என்கிறதுதான் எங்களோட விருப்பம்ங்க அண்ணாச்சி..."

"எதுவே எனக்கு நன்மை?" உலகநாதன் ஆத்திரத்துடன் கேட்டார்.

"வந்தவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

"ஒத்தையில நின்னு நான் வானத்தையும் பாதாளத்தையும் பாப்பேன்! நீங்க யாருலே என்னை வந்து சொல்றதுக்கு..."

வந்தவர்களில் சோலையப்பனுக்கு கோபம் வரப் பார்த்தது! 'யாருவே' என்று உலகநாதன் கேட்டிருந்தால் கோபம் வரப் பார்க்கவே பார்க்காது! உலகநாதன் 'யாருலே' என்று கேட்டுவிட்டார்! சோலையப்பனுக்கு கோபம் வரப் பார்த்தால் என்ன வரப் பார்க்காவிட்டால் தான் என்ன... உலகநாதனுக்கு ரொம்ப மோசமான கோபம் வந்துவிட்டது! மணிவாசகம்; முருகபூபதி; சோலையப்பன்; அழகுமலை என்ற அந்த நால்வர் கூட்டணியை வாசல் வரைக்கும் கொண்டுபோய் வெளியில் அனுப்பி வைத்து விட்டுத்தான் அடுத்த 'சிமிட்டா' பொடியை எடுத்து மூக்கில்வைத்து ரோஷமாக இரண்டு தேய்ப்பு தேய்த்தார்! உலகநாதனுக்கு இதில் ஏன் இத்தனை கோபம் என்று தெரிந்து கொண்ட பிற்பாடு தான் அந்த இடத்தைவிட்டு நகர்வதென்று நால்வர் கூட்டணி தலை கீழாக நின்று பார்த்தது! உலகநாதரிடம் அவர்களின் பருப்பு வேகவில்லை! பிறகென்ன செய்ய?

செந்துறை ஜனம் முழுசும் பார்க்கும்படி கூட்டணி தலையில் துண்டைப் போட்டபடி ஆளுக்கொரு பக்கமாக ஓட்டம் பிடித்தது?

நால்வர் கூட்டணி ஓடிப்போய் நான்கு மணி நேரத்திற்கு மேல் ஆகியும்கூட உலகநாதனின் நாடித் துடிப்

பின் வேகம் குறைந்தபாடில்லை! அந்த வேகத்தில் மூக்குப் பொடியை தேய்த்துத் தேய்த்து அவருடைய மூக்கு நுனி சூடகு ஆரஞ்சுப் பழம்போல சிவந்துவிட்டிருந்தது! இப்படியொரு கோபம் வந்து விடுகிற தருணங்களில் உலகநாதனுக்கு செத்துப்போன பெண்டாட்டியின் மேலேயும் அசாத்திய கோபம் வந்து விடும் — 'பாதகத்தி — இப்படி விட்டுட்டுப் போயிட்டாளேயென்று...! — இது கிட்டத்தட்ட அப்படிப்பட்ட தருணம்! என் பெண்டாட்டி மண்டையை போட்டுட்டாளாம். நான் இவனுங்க ஊருக்கு நாலு காரியம் பண்ணனுமாம்! எதுக்குலே?!

கோபத்துடன் செருப்பை மாட்டிக் கொண்டு உலகநாதன் தெருவில் இறங்கி நடந்தார். சிவமதி அவளுடைய வீட்டுத் திண்ணையில் தூணை மார்போடு பிடித்தபடி நின்று கொண்டிருந்தாள். கரைக்கு வந்ததும் கடலின் அலை வேகமாக பின்வாங்குவதுபோல உலகநாதனின் கோபமும் சிவமதியைப் பார்த்ததும் கொஞ்சம் உள்வாங்கியது. தூக்கி டப்பா கட்டு கட்டிய வேட்டியை மெதுவாக கீழே இறக்கிவிட்டார். இது சிவமதிக்கு உலகநாதன் காட்டுகிற மௌன மரியாதை! இருவரின் பார்வையும் வழக்கம்போல தயக்கத்துடன் சந்தித்துக் கொண்டன.

சிவமதியின் வீட்டைத் தாண்டியதும் உலகநாதன் மறுபடியும் வேட்டியை தூக்கி கட்டிக்கொண்டு நடந்தார். அவருடைய கணுக்காலின் கரும் பச்சை நிற திரட்சி சிவமதியின் சுவாசத்தை சூடாக்கியது. பனங்காய் போன்ற வலிமையான முழங்கால்கள் உலகநாதனுக்கு. தெருவில் அவர் நடந்து போகிற நேரங்களில் சிவமதி அவசர அவசரமாக அவருடைய கரும் பச்சை நிற முழங்கால்களைப் பார்த்து விடுவாள். ஆணின் கால்கள் அவளுக்கு இப்படி வளமாக இருக்க வேண்டும். சில நேரங்களில் ராத்திரி உறங்குவதற்கு



முன்னால் சிவமதி உலகநாதனின் முழங்கால்களை மனசால் மார்போடு கட்டிப் பிடிப்பது உண்டு...!

குறுக்குப் பாதையில் நடந்து உலகநாதன் படித்துறையை நெருங்கிவிட்டிருந்தார். உணர்வுகளில் இன்னமும் கோபம் படபடத்துக் கொண்டிருந்தது. சிவந்து கிடந்த படித்துறையில் நின்றார். பொருனை ஓசையின்றி ஓடிக் கொண்டிருந்தது. எதிர்கரை மரங்களில் நிறைய தேன் கொத்திகள் தெரிந்தன.

பின்னால் யாரோ நடந்து வரும் சப்தம் கேட்டு உலகநாதன் திரும்பிப் பார்த்தார். அவருடைய பெரிய பாட்டி வயிற்றுச் சித்தி எழுபத்தைந்து வயசான தங்கம்மா வந்து கொண்டிருந்தாள். உலகநாதனுக்கு இந்தச் சித்தியைப் பிடிக்காது. பெரிய கோட்டிக்காரி இந்தச் சித்தி! ஒட்டை வாய்காரி வேறு! இங்கே எதற்கு விழுந்தடித்துக்கொண்டு ஓட்டமாக ஓடி வருகிறாள்...

"மணிவாசகம் சொன்னான்" தங்கம்மா ஆரம்பித்தாள்.

"என்ன சொன்னான்?"

"அவன் சொன்னது கெடக்கட்டும்... எதுக்கு ஒலகு ஒனக்கு அப்படி ஒரு கோவம் வந்திச்சி? ஒன்னை அவனுங்க தேர்தல்லதான நிக்கச் சொன்னானுங்க..."

"அவங்க வேற ஒண்ணும் சொல்லலையாமா?"

"நீதான் சொல்லேன்."

"நான் பெண்டாட்டி இல்லாம செத்த சவமாட்டம் நிக்கறேனாம். இப்படி பைத்தியார பய கணக்கா நிக்கறதுக்கு தேர்தல்ல நின்னு இவனுங்களுக்கு நாலு காரியம் செஞ்சா எனக்கும் நல்லதாம்... ஊருக்கும் நல்லதாம்... இப்ப நான் எதுல இவனுங்களைவிட கெட்டுப்

போயிட்டேனாம்? எல்லாம் கட்டுச் சோத்துக்கு மேளம் அடிக்கிறவனுங்க சித்தி! பெண்டாட்டி இல்லேங்கிற ஒரே காரணத்தால தேர்தல்ல நிக்கணுமாம் நான். ஹே! ஏன்-பெண்டாட்டி இருந்தா நிக்கப்படாதாமா?''

''உலகநாதன் ஏறக்குறைய உறுமினார்!''

''ஒரு ஆறுதலுக்காக அவுங்க சொன்னதா நெனைச்சிக்கோயேன் ஒலகு!''

''ஏதாச்சும் சொல்லிடப் போறேன் சித்தி! நெசமாவே ஆறுதல் சொல்றதா இருந்தா புண்ணாக்குல தொவையல் பண்ணிச் சாப்பிடற இந்தப் பயக என்ன சொல்லிருக்கணும் தெரியுமா... ஏலே ஒலகநாதா! ஏன்லே இப்படி பெஞ்சாதி இல்லாம கிறுக்கன் கணக்கா பேயா அலையுற... ஒன்கிட்ட பணம் இல்லலையா; சொத்து சுகம் இல்லையா? பேசாம இன்னொரு கல்யாணத்தைப் பண்ணிட்டு சொகுசா இருப்பியான்னு சொல்லிருக்கணும் சித்தி...! அதைச் சொல்லாம...''

''எப்பிடி எப்பிடி...?'' தங்கம்மாவின் பஞ்சடைந்த கண்களே பெரிய வட்டக்கெண்டை மீன் அளவிற்கு விரிந்து விட்டன. ''இன்னொரு கல்யாணம் பண்ணிக்க சொல்லணுமா?''

''உலகநாதன் ஒரு மாதிரி பேய் முழி பிசாசு முழி முழித்தார்! தான் என்ன சொன்னோம் என்று ஒரு நிமிஷத்திற்கு அவருக்கே உறைக்கவில்லை.''

''இதை என்கிட்ட வந்து சொல்லிருந்தீன்னா இந்நேரம் நானே ஒனக்குப் பொண்ணைப் பாத்து கட்டி வச்சி—இந்நேரம் அவளும் முழுகாம இருந்திருப்பா...!''

கடுப்பாகிவிட்டார் உலகநாதன். ''அட - நீங்க ஒண்ணு சித்தி. நான் ஏதோ வயித்தெரிச்சல்ல வாய் தவறி எதையோ சொன்னா...''



''நீ வாய் தப்பிச் சொன்னியோ; இல்லை மூக்குத் தப்பி சொன்னியோ... ஒனக்கு ஒருத்திய பாத்து கட்டி வச்சிட்டுத்தான் மறு ஜோலி எனக்கு...''

—இதைச் சொன்ன அடுத்த நிமிஷம் நிற்கவில்லையே கிழவி... கயிரை அறுத்துக்கொண்டால் எருமை மாடு உற்சாகத்தில் ஓட்டம் ஒன்று விடுமே! அந்த மாதிரி ஒரு ஓட்டமிட்டாள் தங்கம்மா. எருமை மாடு ஓட்டத்தோடு நிறுத்திக் கொள்ளும்! தங்கம்மா ஊரெல்லாம் தண்டோரா போட்டுவிட்டுத்தான் நிறுத்துவாள்.

உலகநாதன் திகிலடைந்து போய் நின்று கொண்டிருந்தார்...

# 5

படித்துறையில் நின்று ஒரு மணி நேரமாக உலகநாதன் தலையைச் சொரிந்து கொண்டிருந்தார். இந்த ஒரு மணி நோத்தில் மூக்குப்பொடி டப்பா காலியாகி விட்டதென்றால் பார்த்துக் கொள்ளலாம்! தங்கம்மா சித்தி பெரிய கோட்டிக்காரியென்று நன்றாக தெரிந்தும் இப்படி வாயைக் கொடுத்து மாட்டிக்கொண்டு விட்டோமேயென்று வருத்தமாக இருந்தது அவருக்கு.

இப்போது தங்கம்மாவைப் பொறுத்தவரை உலகநாதன்தான் 'கோட்டி' பிடித்த மனுஷன். அதுவும் கல்யாண கோட்டி! இன்று பொழுது சாய்வதற்குள் உலகநாதனின் இந்த கல்யாண கோட்டி விஷயம் வீட்டுக்கு வீடு தங்கம்மாவால் 'ஸ்பீடு போஸ்ட்'டில் டெலிவரி செய்யப்பட்டு விடும்! இந்த விஷயங்களில் தங்கம்மா நெல்லை எக்ஸ்பிரஸ்!

உலகநாதன் திகிலுடன் பெருமாள் கோயில் கோபு ரத்தைத் பார்த்தார். ''பெருமாளே! நெசமாவே வாய் தவறித்தான் அப்படி சொன்னேன். அந்த ஆசையெல் லாம் எனக்குள்ள கெடையவே கெடையாது சாமி! இந்த கெழவி வாயைத் திறக்கவுடாத பெருமாளே! எப்படியாவது கோட்டிக்காரி வாயை அடைச்சிடு. ஒனக்குப் பன்னீராலேயே அபிஷேகம் பண்றேன்... என் மானத்தைக் காப்பாத்திடு அய்யா!''

படித்துறையில் நின்றபடி உலகநாதன் கிட்டத் தட்ட புலம்பவே செய்தார். ஆனால் எத்தனை நேரத் திற்குத்தான் அங்கேயே நின்று கொண்டிருப்பது... கிளம்பலாம் என்று நினைத்தபோது பறந்து வந்து கொண்டிருந்த சில காக்கைகளுக்கு நேரம் கெட்ட நேரத்தில் அடையாளம் வேறு தெரிந்துவிட்டது உலக நாதனை. சரேலென பாய்ந்த ஒரு காக்கை அவரின் தலையில் இறக்கைகளால் ஒரு தட்டுத் தட்டிவிட்டுப் பறந்தது!

உடல் சிலிர்த்த உலகநாதனுக்கு ஒன்று உறுதியாகி விட்டது. அவருக்கு நேரம் சரியில்லை. இந்நேரம் தங்கம்மா ஊர் பூராவும் ஓதி விட்டிருப்பாள்! ஆள் ஆளுக்கு அவரை ஒரு மாதிரியாக பார்க்கப் போகிறார் கள். எல்லாராலும் வந்து ''அப்படியா சங்கதி?'' யென்று கேட்க முடியாது. ஆனால் அப்படியா சங்கதி என்கிற மாதிரி ஒரு தடவைக்கு இரண்டு தடவை பார்க்க முடியும்! கௌரவம் எரிந்து சாம்பலாக பார்த் தாலே போதுமே உலகநாதனுக்கு.

சரி - நடக்கிறபடி நடக்கட்டும் என்ற நினைப்பில் உலகநாதன் துண்டை உதறி தலையைச் சுற்றி தலைப் பாகை கட்டிக் கொண்டார். சாயங்காலங்களில் படித் துறைப் பக்கம் வந்துவிட்டு வீடு திரும்புகிறபோது இப்படி தலைப்பாகை கட்டி நடப்பது உலகநாதனின் ஸ்டைல்!



பத்தடி நடந்திருக்க மாட்டார். கட்டுச் சோற்றுக்கு மேளம் தட்டும் முருகபூபதி உலகநாதனுக்குக் குறுக்கே போனான். பார்த்தால் வேண்டும் என்றே குறுக்கே போவது போல இருந்தது. உலகநாதன் முருகபூபதியை பார்க்காதவர் மாதிரி போனார். அடுத்த இருபதாவது அடியில் புண்ணாக்கில் துவையல் செய்து சாப்பிடுகிற அழகுமலையும் சொல்லி வைத்த மாதிரி குறுக்கே போனான்! என்ன செய்ய—சரியில்லாத நேரத்தில்... உலகநாதன் அழகுமலையையும் பார்க்காதவர் மாதிரி தான் போக வேண்டியிருந்தது.

சிவமதியின் வீட்டுத் திண்ணை காலியாக இருப் பதை உலகநாதன் தூரத்தில் இருந்தே பார்த்துவிட்டார். வீட்டை வேகமாக தாண்டிவிடலாம் என்ற அவசரத்தில் நடையை எட்டிப் போட்டார். எட்டிப் போட்டு என்ன செய்ய...

ஏதோ ஒரு ஜோலியாக பக்கத்து வீட்டுக்குள் போய்விட்டு வெளிப்பட்ட சிவமதி அவளுடைய வீட்டு படியில் அப்படியே நின்று விட்டாள். உலகநாதன் எதற்காக தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போக வேண்டும்—அவள் முன்னால்... பாவம்—தலை யைத் தொங்கப் போட்டபடி நடந்தார்.

அதனால் சிவமதியின் பார்வை எப்படி இருந்தது என்பதை அவரால் பார்க்க முடியவில்லை. ஆனால் காலில் குத்திய முள்ளை எடுக்க நின்ற சகுந்தலை மாதிரி நின்றுவிட்டதில் சிவமதியின் மனசும் தெரிந்தது; நெல்லை எக்ஸ்பிரஸ் இந்த வழியாக எல்லா ஸ்டேஷனி லும் நின்று போயிருப்பதும் தெரிந்தது!

இந்த இடத்தில் உலகநாதன் தப்புப் பண்ணிவிட் டார். தலையைத் தூக்காமல் வேக நடை போட்டதில் தூக்கி 'டப்பா' கட்டுக் கட்டியிருந்த வேட்டியை எப் போதும்போல கீழே இறக்கிவிட மறந்து போய்விட்டார்!

'அப்ப தங்கம்மா ஆச்சி சொன்னது நெசந்தான் போலி ருக்கு!' என்று உடனே சிவமதியின் மனசு இதை விகற் பாகப் பார்த்தது. வேட்டியை மரியாதைக்காக இறக்கி விடாமல் அலட்சியமாகப் போகிறாரே...!

"ஏட்டி... வாசல்ல நின்னுட்டு என்னலா செய் யுத...?" வீட்டுக்குள் இருந்து சிவமதியின் 'அம்மை' யின் குரல் கேட்டது.

"சட்டியும் பானையும் செய்யுறேன்—வந்து பாரு!" அடுப்புத் தீயில் எறிந்த மிளகாய் வத்தல் மாதிரி சிவமதி சுள்ளென்று வெடித்தாள்.

"என்னதான் இருக்கோ அந்த வாசல்ல பொழு துக்கும்"—திருப்பி பட்டாணி வெடி உள்ளே இருந்து!

"பொழுதுக்கும் வீட்டுக்குள்ளேயே கெடந்து உசிரைவிட முடியாது என்னால" வெகு தூரம் போய் விட்ட உலகநாதனின் காதுவரைக்கும் சிவமதியின் இந்த லஷ்மி வெடி வெடித்தது! இதுவரை அவளிடம் இருந்து இவ்வளவு தடித்த குரலை உலகநாதனின் காது கள் கேட்டது கிடையாது. திரும்பி அவளை ஒரு தடவை பார்க்கலாமாயென்றுகூட யோசித்தார். ஆனால் மனசின் எங்கேயோ ஒரு மூலையில் தயக்கம் இருந்தது. அதனால் திரும்பிப் பார்க்காமலேயே நடந்தார்.

என்றும் இல்லாமல் இன்றைக்குத்தான் சிவமதிக்கும் உலகநாதன் திரும்பி அவளை ஒரு தடவை பார்க்க மாட்டாரா என்றிருந்தது. அவள் நினைத்தது நடக்க வில்லை.

உலகநாதன் திரும்பிப் பார்க்காமல் அவருடைய வீட்டிற்குள் படியேறி நிமிஷத்தில் மறைந்துவிட்டார். சிவமதியின் மனசு கொஞ்சம் அடி வாங்கிவிட்டது! தலைவிதி இதுதான். உலகநாதன் திரும்பிப் பார்க்காமல் ஓடினது—வெட்கப் பட்டுக் கொண்டு... மடியில் கனம்-



அதனால் திரும்பிப் பார்க்காமல் ஓடுவதாக சிவமதிக்கு நினைப்பு... உடனே கோபத்தில் அவளுக்கு மார்பு விம்மி கனத்துப் போய்விட்டது!—எப்படி அவள் அவ ளுடைய வீட்டிற்குள் குட்டி போடப் போகிற பூனை மாதிரி சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தாளோ—அதே மாதிரி உலகநாதனும் குட்டியே போட்டுவிட்ட பூனை மாதிரி அவருடைய வீட்டிற்குள் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார்!

சமையல்காரர் நெல்லையப்பனுக்கும் உலகநாத னின் மனநிலை புரிந்தது. ஏனென்றால் முதலாளி சாப் பிட்ட 'கூறே' சரியில்லையே! சாப்பிட்ட பிறகு ஆள் காட்டி விரலால் மிச்ச துவையலை ஒரு 'இழுவு இழுவி' வாயில் வைத்து நக்கிவிட்டுப் போகும் உலகநாதன் துவையலையே வேண்டாத விருந்தாளியை பார்ப்பது போலத்தான் பார்த்துவிட்டு எழுந்தார்!

சாப்பிட்ட ஏப்பம்கூட விடாமல் கூடத்து ஊஞ் சலில் அவர் உட்கார்ந்து கொள்ளவும் பெத்தையா சோடா பாட்டில் போன்ற 'கேட்ராக்ட்' கண்ணாடியின் வழியே தரையை உற்று பார்த்துக் கொண்டு உள்ளே வரவும் சரியாக இருந்தது. பெத்தையா உலகநாதனின் சித்தி தங்கம்மாவின் எண்பது வயதுக் கணவர்.

"நெனைச்சேன்—கெழம் வரும்னு" உலகநாதன் வாய்க்குள் முணங்கிக் கொண்டார்.

"ஒன் சித்தி சொன்னா"

"சொல்லாட்டித்தான் ஆச்சர்யம்" என்றார் உலக நாதன்.

"ஆங் ஆங்... சாப்பாடெல்லாம் ஆச்சி ஒலகா!"

நேரம்தான் உலகநாதனுக்கு! இந்தக் காதுகளை வைத்துக் கொண்டு வந்திருக்கிறார் பெத்தையா...

''நீ சாப்பிட்டாச்சா?'' பெத்தையா உட்கார்ந்து கொண்டே கேட்டார்.

''சாப்பிட்டாச்சி...''

''உலகா! நீ என்னதான் சொல்லு; பெஞ்சாதி சமையல் வேறதான். சம்பளம் வாங்குகிற சமையல்காரன் சமையல் வேறதான்! ஒன் சித்தி இன்னிக்கி என்ன சமையல் செஞ்சா தெரியுமா? வெறும் பருப்பு ரசமும் எள்ளுத் தொவையலும்தான்! ஒறைப்பும் புளிப்பும் சுள்ளுனு எப்படி இருந்திச்சின்னு நெனைக்கே...அது வும் ஒன் சித்தி கருணைக்கிழங்குல கொழம்பு வச்சான்னா—எட்டு ஊருக்கு அந்த வாசனை அடிக்கும் பாரு—சமையல்காரன் சமையலையெல்லாம் அந்தக் கொழம்புக்கு வால்ல கட்டித்தான் அடிக்கணும்!''

சமையல் அறைக்குள் நின்றபடி நெல்லையப்பன் கேட்டுக் கொண்டுதான் இருந்தார். எதற்காக இத்தனை நேரங்கெட்ட நேரத்தில் கிழவர் வந்திருக்கிறார் என்று புரியவில்லை அவருக்கு. ஆனால் கிழவர் சும்மா வரவே மாட்டார். அதனால் நெல்லையப்பன் கதவின் பின்னால் நின்று பெத்தையாவின் பேச்சை காதைத் நீட்டி வைத்துக் கொண்டு கேட்டார். அடுத்த ஐந்து நிமிடங்களில் பெத்தையாவின் வாயில் இருந்து விஷயம் வந்து விட்டது.

நிஜமாகவே உலகநாதன் ஆசைப்பட்டால் பெத்தையாவும் தங்கம்மாவும் சேர்ந்து நல்ல பெண்ணாகப் பார்த்து அவருக்குக் கல்யாணம் செய்து வைக்க இந்த நிமிஷமே தயாராக இருக்கிறார்களாம்! நடக்க முடியாத விஷயம் இல்லையாம் இது! உலகநாதன் தயக்கப்படவோ கூச்சப்படவோ வேண்டாமாம்! ஐம்பத்தி ஐந்து வயது ஒரு வயசே கிடையாதாம்! உலகநாதன் ஜாம்ஜாம் என்று கல்யாணம் செய்து கொள்ளலாமாம்! என்னதான் வீட்டோடு இருந்து சமையல்காரன் சமைத்



துப் போட்டாலும் சமையல்காரன் சமையல் சமையல்காரன் சமையல்தானாம்...!

—பெத்தையா இதைச் சொன்னபோது மட்டும் உலகநாதன் சமையல் அறைப்பக்கம் ஒரு தடவை திரும்பிப் பார்த்துக் கொண்டார்!

''உலகநாதன் சரியென்றால் கல்யாணத்தை இரண்டே மாதத்தில் நடத்திடலாமாம். உலகநாதனின் இரண்டு மகள்களிடமும் பேசி அவர்களை சம்மதிக்க வைப்பதையெல்லாம் பெத்தையா பார்த்துக் கொள்வாராம்!

''யோசிச்சி வை ஒலகா! நாளைக்கி வந்து பாக்குறேன்''—பெத்தையா எழுந்து கொண்டார். உலகநாதன் உள்ளே பார்த்து குரல் கொடுத்தார்.

''நெல்லையப்பா''

நெல்லையப்பன் வேகமாக வந்தார்.

''இவரை வீடுவரை கொண்டு விட்டுட்டு வந்திரு''

''நானே போயிருவேன் ஒலகா''

''பரவால்ல வரட்டும்...''

பெத்தையா நெல்லையப்பனின் கையைப் பிடித்து கொண்டே படிகளில் இறங்கியவர் ''ஒன் சமையலை சாப்பிட்டே பார்த்ததில்லை நெல்லை! சாப்பிட்டுப் பாக்கணும் ஒரு நாளைக்கி!''

பெத்தையா சென்றபின் உலகநாதன் மெதுவாக வாசல் திண்ணைக்குப் போனார். செந்துறை கிராமத்தில் இருள் கவிந்து விட்டிருந்தது. அவருடைய வீட்டைத் தவிர மற்ற எல்லா வீடுகளிலும் பெண்களின் நடமாட்டம் இருந்ததை உலகநாதன் புத்தம் புதிய கண்களோடு பார்த்தார்! காந்திமதி இருந்தபோது அவரு

டைய வீடு இப்படியா வெறிச்சோடிப்போய் கிடக்கும்... 'மதினி இருக்காங்களா; அக்கா இருக்காங்களா' என்று கேட்டு மாற்றி மாற்றி யாராவது பெண்கள் வந்து கொண்டும் போய் கொண்டும் இருப்பார்கள். உலகநாதனும் அங்கே இங்கேயென்று போய்விட்டு இந்நேரம் வீடு திரும்பினால் வாசல்படி ஏறும்போதே முல்லைப் பூவின் வாசனை நெஞ்சை நிறைக்கும். பட்டுச் சேலையோடும் தலை நிறைய முல்லைப் பூவோடும் பார்க்க வேண்டுமே காந்திமதியை. லட்சுமிக்களை அப்படி சொட்டும்!

பக்கத்தில் பட்டு சேலையுடன் காந்திமதி நிற்கிறாற்போல உலகநாதன் கற்பனை செய்து பார்த்தார். பெருமூச்சு நெஞ்சைச் சுட்டது. கூடத்து ஊஞ்சலுக்குத் திரும்பினார். மனம் அவருக்குக் கொஞ்சம் கலைந்து போயிருந்தது. தங்கம்மா சித்தியிடம் அவர் சொன்னது வாய் தவறிதானா? இல்லை—அவருக்குள் அவருக்கே தெரியாமல் இன்னொரு கல்யாண ஆசை ஒளிந்து கிடக்கிறதா? இன்னொரு கல்யாணம் செய்து கொள்கிற சாத்தியமும் நிஜமாக வாழ்க்கையில் இருக்கிறதா? ஆனால் இதை ஏன் தான் இத்தனை நாட்களாக நினைத்தே பார்க்கவில்லையென்று யோசித்துப் பார்த்தார். நிஜமாகவே யோசித்துப் பார்க்கலாமாயென்று யோசனை செய்தார். யோசிப்பதில் தப்பே இல்லை! ஆனால் இந்த யோசனையில் பெத்தையா தம்பதியை மட்டும் சேர்த்துக் கொள்ளவே கூடாது! இரண்டும் ரெட்டை நாயனங்கள்! உள்ளூரில் இல்லாவிட்டாலும் ஊர் ஊராகப் போய் உலகநாதன் இரண்டாம் கல்யாணத்திற்காகக் கிடந்து அலைந்து கொண்டிருக்கிறார் என்று வாய் கூசாமல் இரட்டை நாயனம் மேளதாளத்தோடு கச்சேரி வைத்துவிட்டு வரும்!

உலகநாதன் மடேர் மடேர் என்று தலையில் அடித்துக் கொண்டார். இப்படியா ஒரு கூறுகெட்ட

CPL522199



கோட்டிகாரியிடம் போய் உளறித் தொலைவேன் என்று தன்னையே ஏசிக் கொண்டார். இனி அவருக்கு ரொம்ப வேண்டியவர்கள் என்று யாராவது மாற்றி மாற்றி வந்து தயங்கித் தயங்கியாவது இரண்டாம் கல்யாணம் என்று தாங்கள் கேள்விப்பட்டது நிஜம்தானாயென்று உலகநாதனை கேட்கத்தான் செய்வார்கள்.

522199

அவர்களுக்கெல்லாம் என்ன பதில் சொல்வது? அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை என்பதா? இல்லை—ஆமாம்; கல்யாணம் பண்ணிக் கொள்வதாக இருக்கிறேன் என்பதா?

894.8113

உலகநாதன் எரிச்சலோடு பிடரியைச் சொறிந்தார். இந்நேரம் தங்கம்மா சித்தி வைத்த வேட்டுக்கள் வெளியூருக்கெல்லாம் போய்கூட வெடித்து வைத்திருக்கும். போதாதற்கு பெத்தையா வேறு படியேறி வந்து நெல்லையப்பனின் காதில் படும்படியாகவே வேட்டு வெடித்துவிட்டுப் போயிருக்கிறார்! அந்தப் பெத்தையாவுடன் போய் உலகநாதன் நெல்லையப்பனை வேறு வீடுவரை அனுப்பி வைத்திருக்கிறார்.

இதுதான் கூறுகெட்ட காரியம்என்பது! பெத்தையா நெல்லையப்பனிடம் என்ன மாதிரியான அதிர்வேட்டுக்களை வைத்துத் தள்ளிக் கொண்டிருக்கிறாரோ... மற்றவர்களைக் கூட உலகநாதன் அவருடைய பாணியில் எதிர்நோக்கி விடுவார். அவரிடம் சம்பளம் வாங்குகிற சாதாரண ஒரு சமையல்காரனை பெத்தையாவின் வேட்டு விஷயத்தில் எப்படி எதிர்நோக்குவார்?

நினைத்தபோதே உலகநாதனின் முதலாளித்வ அகங்காரம் ஒரு குலுங்கல் குலுங்கியது! இதுவரை நெல்லையப்பனிடம் அவருக்கு பிரச்னை வந்ததில்லை. ஏனென்றால் அந்த அளவிற்கு நெல்லையப்பனோடு இழைந்து கொண்டதே இல்லை அவர்! முதலாளி என்ற ஹோதாவில் கொஞ்சம் விறைப்பாகத்தான் நடந்து

10 JAN 2001

கொள்வார்! சில அபூர்வமான தருணங்களில் நெல்லையப்பன் அவருடைய மனைவியின் நோய்கள் பற்றியும்; மகன்கள் படிப்பு வராமல் 'மெஸ்'ஸில் வேலை பார்க்கிற அவலம் பற்றியும் சொல்லும்போது உலகநாதன் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருப்பார்.

ஆனால் அதே நெல்லையப்பன் பல வருஷம் முன்னால் தான் சொந்த ஹோட்டல் நடத்திக் கொண்டு வசதியாக வாழ்ந்த நாட்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் உலகநாதன் 'தின்னவேலி வரை போயிட்டு வரேன். ஜோலியிருக்கு!' என்று சொல்லிக்கொண்டே எழுந்து விடுவார்! நிஜமாகவே ஜோலி இருப்பதாகக் காட்டிக் கொள்ள வெறுமே பஸ் ஏறி ஒரு 'ட்ரிப்' திருநெல்வேலிக்கு போயும் வருவார்! அப்பேற்பட்ட ஆசாமி உலகநாதன்!

நெல்லையப்பனிடம் அவரின் சமையல் எத்தனைதான் சுவையாக இருந்தாலும் உலகநாதன் அதைப் பாராட்டி ஒரு சொல் சொல்லிவிட மாட்டார். சொன்னால் அடுத்த மாதமே சம்பளத்தைக் கூட்டித் தரச் சொல்லிக் கேட்பான் என்பது அவருடைய அபிப்பிராயம்! இது மட்டுமில்லை உலகநாதனின் குணம். ஊர்காரர்களிடம் நெல்லையப்பனின் சமையலைப் பற்றி "சமையலா சமைக்கான் அவன்! நமக்கு நாதியில்லை. பெருமாள் என்னை இந்த வயசுல இவன் சாப்பாட்டை சாப்பிட வச்சிட்டான். என்ன செய்ய...?" என்று சொல்லி மூக்கால் அழுவார்!

இதனால் சாப்பாட்டு விஷயத்தில் செந்துறைகாரர்களுக்கு உலகநாதன் மேல் ஏகப்பட்ட பரிதாபம்! "நெசந்தாவே அண்ணாச்சி சொல்லுறதும்... அவுஹளோட வயசுக்கும் அந்தஸ்துக்கும் இப்படி ஒரு செத்த சமையல்காரன் பண்ணிப் போடற அரைவேக்காட்டுச் சாப்பாட்டைச் சாப்பிடணும்னு தலையிலேயா எழுதியிருக்கு?" என்று ஏகப்பட்ட பேர் கடுப்புடன் ஒருத்



தருக்கொருத்தர் கேட்டுக் கொண்டாலும் அதற்கு ஒரு சிலரின் ஆணித்தரமான அதிரடிப் பதில் இது - "தலையிலதான் எழுதியிருக்கே!"

இந்தப் பதில் சில நேரங்களில் உலகநாதனின் காதுகளுக்கும் வந்தது உண்டு. அவரும் அதை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டதுண்டு! - ஆனால் இப்போது திடீரென்று அந்தப் பதில் ஞாபகத்திற்கு வர உலகநாதனுக்கு மகா கோபம் வந்துவிட்டது! 'எழுதியிருக்கும் எழுதியிருக்கும்! எழுதினதை அழிக்கிறதுக்கு எவ்வளவு நேரம்லே ஆகும்?' என்று கடுப்புடன் முணங்கிக் கொண்டே உத்திரத்தை அண்ணாந்து வெறித்துப் பார்த்தார். எழுதியிருப்பதை அழித்து விடலாமாயென்று ஆராய்ந்து கொண்டிருக்கிறாரோ? இருக்கலாம்...

# 6

அதிகமாகப் போனால் பத்து நிமிடங்களில் போய் வந்து விடலாம். இருபது நிமிடங்களாகி விட்டன. பெத்தையாவைக் கொண்டு போய் விடப்போன நெல்லையப்பன் திரும்பிவந்த பாட்டைக் காணோம். உலகநாதன் கோபம் என்ற படிக்கட்டில் கொஞ்சம் கொஞ்சமாக ஏறிக் கொண்டிருந்தார்! முப்பது நிமிஷங்களுக்குப் பிறகு நெல்லையப்பனின் தலை வாசலில் தெரிந்தது. உலகநாதன் பார்வையை உத்திரத்தை நோக்கி உயர்த்திக் கொண்டார்! நெல்லையப்பன் சிறிது தயங்கி நிற்பது போலிருந்தது.

"அடுத்த வாரம் ஊருக்குப் போயிட்டு வரலாம்னு பாக்கேன்."

''எந்த ஊருக்கு?''

''ஆலங் கொளத்துக்குத் தான்.''

''போயிட்டு வந்து மூணு மாசம் ஆயிட்டா?''

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நெல்லையப்பன் ஊருக்கு மூன்று நாள் விடுமுறையில் போய் வரலாம். இது எழுதப்படாத ஒரு ஒப்பந்தம். உலகநாதன் எப்பவும் ஒப்பந்தத்தை மீறுவதற்குத்தான் பிரியப்படுவார்!

''மூணு மாசத்துக்கு மேலயே ஆயிப் போச்சி.''

''ரெண்டு மாசந்தான் ஆகுதுன்னு எனக்கு நெனைப்பு. அதான் எந்த ஊருக்குன்னு கேட்டேன்.''

''முக்கியமான ஜோலி ஒண்ணு முக்கூடல்ல இருக்கு... அதனால லீவு கூடுதலா ஒரு நாள் வேணும்''

''ஏன் எப்பவும் போல மூணு நாள் லீவு பத்தாதா?''

நெல்லையப்பன் பேசாமல் நின்றார். உலகநாதன் கேட்க வேண்டியதைக் கேட்டார். ''அதென்ன பெத்தய்யாவை கொண்டு போய் விட்டுட்டு வர ஒனக்கு அரைமணி நேரம்?''

''சும்மாதான் பேசிட்டு இருந்தார்.''

''சும்மாதான் என்ன பேசினார்னு கேக்கறேன்.''

நெல்லையப்பன் பதில் சொல்லவில்லை.

''அவர்ட்ட பேச்சு ரொம்ப வச்சிக்காத! ஊருக்கு எப்பப் போகணும்?''

''வெள்ளிக்கிழமை வெள்ளென போகணும்.''

உலகநாதன் ஒரு சிமிட்டா பொடியை எடுத்து மூக்கில் வைத்துத் தேய்த்துக் கொண்டார். நெல்லையப்பனுடன் பேச்சு வார்த்தையை அவர் முடித்துக்



கொண்டுவிட்டார் என்பதற்கும்; வெள்ளிக்கிழமை நெல்லையப்பன் ஊருக்குப் போகலாம் என்பதற்கும் அடையாளம் இது!

நெல்லையப்பன் சமையல் அறையை நோக்கி நடந்து விட்டார். அவர் போவதையே உலகநாதன் பார்த்துக் கொண்டிருந்தார். 'பெத்தையா கிழம் என்னவெல்லாம் கதை கட்டி அனுப்பியதோ - பாப்பம்; வேற நல்ல சமையல்காரன் கெடைச்சா நெல்லையப்பனை வீட்டுக்கு அனுப்பிடலாம்...!'

படுக்கையை போடலாமாயென்று நினைத்தார் உலகநாதன். 'கல்லும் கனை கடலும் வைகுந்த வானாடும் புல்லென் றொழிந்தன கொல் ஏபாவம் - வெல்ல நெடியான் நிறங்கரியான் உள் புகுந்து நீங்கான் அடியேன துள்ளத் தகும்...' படுக்கும்போது நல்ல மன நிலையில் இருந்தால் நம்மாழ்வாரின் இந்தப் பாசுரத்தை சப்தமாக சொல்லிவிட்டு கட்டையை படுக்கையில் சாய்ப்பார்: இன்று சொல்வாரா? சந்தேகம்தான்!

வாசலில் 'அய்யா' என்ற குரல் கேட்டு 'எவன்லே அது இந்த நேரத்ல?' என்பது போல எரிச்சலுடன் உலகநாதன் திரும்பிப் பார்த்தார். தந்திச் சேவகன் அம்பலம் நின்றான். உடனே உலகநாதன் திடுக்கிட்டுப் போனார். ''என்னவே அம்பலம்?''

''ஒங்க நெல்லையப்பனுக்கு தந்திங்க.''

நெல்லையப்பன் வேகமாக வந்து கையெழுத்துப் போட்டு தந்தியை வாங்கிப் பிரித்தார். அவருடைய மனைவிக்கு உடல் நிலை மோசமாக இருப்பதால் அவரை உடனே கிளம்பி வரச் சொல்லி இருந்தது. ஆனால் இனிமேல் பஸ் கிடையாது.

''நாளைக்கு வெள்ளென கிளம்பறேன்.''

''பயமில்லைன்னு தெரிஞ்சதும் வந்திரு!''

நெல்லையப்பன் உள்ளே போய் கிளம்புவதற்கான ஆயுத்தங்களை செய்ய ஆரம்பித்தார். உலகநாதனுக்கு இது ஒரு புது எரிச்சல்! காலையில் எழுந்ததும் அவர் தான் கையில் கரண்டியை பிடிக்கணும்! அவசரத்திற்கு எத்தனையோ நாள் உலகநாதனின் கை கரண்டி பிடித்த கைதான்! ஆனால் இப்போது அதுவும் ஒரு சோதனை போல மனசை வெறுப்பேத்தியது! பாசுரம் சொல்ல சுத்தமாக மறந்து போய்விட்டது. 'சும்மா சும்மா என்னை சோதிக்காத பெருமாளே'யென்று மனசுக்குள் கோபத்துடன் அரற்றினார்!

உடனே பெண்டாட்டி இல்லாத சுய இரக்கம் இது தான் சந்தர்ப்பம் என்று அவருக்குள் பீறிட்டுக் கொண்டு வந்தது. எத்தனை காலத்திற்கு இப்படி சமையல்காரன் கையையே நம்பிக் கொண்டிருப்பது... தன் பெண்டாட்டிக்கு உடம்பு சரியில்லை என்றதும் இதோ மூட்டையை கட்ட ஆரம்பித்து விட்டான். அவன் திரும்பி வருவதற்குள் உலகநாதனுக்கே உடம்பு சரியில்லாமல் போனால் ஒரு வாய் கஞ்சி வைத்துக் கொடுக்க நாதியுண்டா? அதற்கும் மேல் உலகநாத னுக்கு மாரடைப்பு வந்து - அதுவும் நட்ட நடு ராத்திரி யில் ஏற்பட்டு ஏலொன்று கேட்க ஆளில்லாமல் அவர் செத்தே போக நேர்ந்தால்?

- அய்யோ; உலகநாதனுக்குள் அந்தக் காட்சி ஒரு சினிமா போல ஓடியதில் மரணபயம் அவருடைய நெஞ்சைப் போட்டு அழுத்த ஆரம்பித்துவிட்டது. மரணத்தின் நிழல் அவர் உடம்பின் மேல் படுவது போலவே இருந்தது! உலகநாதன் பட்டென்று படுக் கையில் இருந்து எழுந்து விட்டார்.

ஓடிப்போய் தண்ணீர் குடித்துவிட்டு வந்தார். நகர்ந்து போய் வாசல் கதவைத் திறந்தார். குளிர்ந்த



காற்று வீசியது. திண்ணையில் அப்பாடாவென்று உட் கார்ந்தார். மணிக்கட்டை விரல்களால் தொட்டு ஒரு நிமிஷம் 'பல்ஸ்' பார்த்தார்! நார்மல்! காற்றுப்பட்டதும் வியர்வை காய்ந்தது போல மரணபயமும் லேசாக உலர்ந்தது! இப்போது ஒரு விஷயம் உலகநாதனின் ஞாபகத்திற்கு வந்தது. எப்போதோ ஒரு ஜோதிடர் அவருக்கு ஆயுள் சுமார் எழுபத்தைந்து என்று சொல்லி இருந்தார். அதன்படி பார்த்தால் இன்னும் இருபது வருஷம் இருக்கிறது. ஆனால் அந்த இருபது வருஷத் திற்கும் இப்படி தனியாகவேதான் தாளம் போட்டுக் கொண்டிருக்க வேண்டுமா? இதுதான் ஏற்பட்டிருக்கும் திடீர் கேள்வி...? பெத்தையா குடும்பம் சொல்கிறது - தேவை கிடையாதென்று! ஆனால் உலகநாதனின் மனசுதான் ரொம்பவே தயங்கியது. மகள்களை நினைத்தும் அவரின் மனசு குழம்பியது. மாமியாரின் குடும்பத்தை நினைத்த போதோ ஏதோ ஒன்று நெஞ்சைப் போட்டு நெருடியது. உலகநாதனின் மாமியார் இன்னும் உயிரோடு இருக்கிறார். ரொம்ப நல்ல மனுஷி! மாப்பிள்ளை மேல் அளவு கடந்த மரியாதை வைத்திருப்பவள் வேறு. உலகநாதன் இன் னொரு கல்யாணம் செய்து கொண்டால் அந்த மரியாதையெல்லாம் என்னவாகுமோ? ஒரு ஆளுக்கு ஒரு மாமியார் வீடு இருந்தால்தான் சரிப்பட்டு வரும்! உலகநாதனின் மனசு இங்கேதான் உதைத்தது. எதனா லும் சின்ன மரியாதைக் குறைவுகூட வந்துவிடக் கூடாது அவருக்கு! தாங்க மாட்டார்!

இந்தக் கோணத்தில்தான் உலகநாதன் ஆயிரத் தெட்டு யோசனை செய்தார். யோசிக்க யோசிக்கத் தான் உண்மை புலனாகியது அவருக்கு. இன்னொரு கல்யாணம் செய்து கொள்வதென்பது அவர் மட்டும் சம்பந்தப்பட்ட தனிநபர் விஷயமில்லை. அது அவரு டைய குடும்ப விஷயம். அதனால் எடுத்தேன் போட்டு

உடைத்தேன் என்று பெத்தையா கோஷ்டி மாதிரி கல்யாண கோதாவில் அவசரப்பட்டு குதித்துவிடக் கூடாது. நல்ல அவகாசம் எடுத்துக்கொள்ள வேண்டும். நல்லது கெட்டது எல்லாவற்றையும் நிதானமாக யோசனை செய்து பார்த்த பின்புதான் முடிவிற்கு வர வேண்டும்—இந்தத் தீர்மானத்துடன் திண்ணையில் இருந்து உலகநாதன் எழுந்து கொண்டார். ஆனால் அவகாசம் எல்லாம் கிடையாது என்கிற மாதிரி சம்பவங்கள் அமைந்துவிட்டன.

மறுநாள் அதிகாலையில் ஆலங்குளம் கிளம்பிப் போன நெல்லையப்பனிடம் இருந்து ஒன்பதாவது நாள்தான் கடுதாசி வந்தது. தினசரி ஆளை நேரில் எதிர்ப்பார்த்து பொறுமையை இழந்திருந்த உலகநாதனுக்குக் கடுதாசியைப் பார்த்ததும் மகா எரிச்சலாகிவிட்டது. முணங்கிக் கொண்டே கடுதாசியைப் பிரித்தார். மனைவி செத்துப்போன செய்தியை மட்டும் நெல்லையப்பன் சுருக்கமாக நான்கு வரிகளில் தெரிவித்திருந்தார். என்றைக்கு வேலைக்குத் திரும்பி வருகிறார் என்ற செய்தியே இல்லை.

உலகநாதனுக்குக் கோபம் வந்து விட்டது. இதெல்லாம் இனிமே சரிப்பட்டு வராது. நெல்லையப்பன் திரும்பி வரப் போகிற தேதி தெரியப் போகிறதோ இல்லையோ தன்னுடைய கல்யாண தேதியை நிச்சயம் பண்ணிவிட வேண்டியதுதான் என்ற படபடப்பு அவரின் உணர்வுகளில் துடித்தது. துடிப்பை யாரிடம் எப்படிக் காட்டுவது என்று மூளையைப் போட்டு உலகநாதன் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தபோது நெல்லையப்பனிடம் இருந்து அடுத்த கடுதாசி வந்துவிட்டது. வேலைக்கு வரப் போகிற தேதியை நெல்லையப்பன் ரொம்பப் பணிவாக எழுதியிருந்தாலும் உலகநாதனுக்கு அது எந்தத் திருப்தியையும் தரவில்லை. எவனாக இருந்தாலும் சரி-சம்பளம் வாங்கும் சமையல்



வேலைக்கு வருகிறவன் எப்போது வேண்டுமானாலும் வேலையை விட்டுப் போகலாம். அவர் செத்துப் போனார் என்று லீவும் கேட்கலாம். லீவே எடுக்காமல் உயிரோடு இருக்கிறவரை சமைத்துப் போடுகிற ஒரே ஒரு ஜீவன்-தாலி கட்டின பெண்டாட்டிதான்! செத்துப் போவதற்கு ஏழு நாட்களுக்கு முன்புகூட காந்திமதி சமைத்துப் போட்ட 'கொடுப்பை கீறை துவரன்' ருசி இன்னமும் உலகநாதன் நாக்கில் அப்படியே இருக்கிறது!—ஆக புதுப் பெண்டாட்டி ஒருத்தியின் சமையல் தான் இனி உலகநாதனுக்கு தேவையே தவிர இந்த நெல்லையப்பன்களின் சமையல் வேண்டியதில்லை! வர தோதுப்பட்டால் வந்து நெல்லையப்பன் கையில் கரண்டியை பிடித்துக் கொள்ளட்டும்! ஆனால் அது தற்காலிகம்தான்! உலகநாதனுக்குப் புதுப்பெண்டாட்டி வந்த அடுத்த நிமிஷம் நெல்லையப்பன் மடத்தைக் காலி செய்தாக வேண்டும்!

கொஞ்ச நேரம் இந்த நினைப்பில் தோய்ந்து காலை ஆட்டிக் கொண்டிருந்த உலகநாதனின் புத்தியில் வேறொரு கோணலான பார்வை சட்டென தட்டுப் பட்டது. இப்போது நெல்லையப்பனும் உலகநாதனைப் போலவே பெண்டாட்டியைப் பறிகொடுத்த ஆள்! 'மானம் போச்சிலே' என்று இருந்தது உலகநாதனுக்கு! பெணடாட்டியைப் பறிகொடுத்த ஒரு ஆசாமியே பெண்டாட்டியைப் பறிகொடுத்த இன்னொரு ஆசா மிக்கு வடித்துப் போட வரப் போகிறான்! திடுக்கிட்டுப் போனார் உலகநாதன். மனசு அவருக்குப் பொங்கி விட்டது! இதென்ன பெண்டாட்டி இல்லாத பயல்கள் வீடாயென்று நொந்து போனார் நொந்து!

நிரந்தரமாக கரண்டியைப் பிடிக்க புதுசா ஒரு பெண்டாட்டி வரப் போகிறாளோ இல்லையோ-அவள் வருகிறவரைகூட நெல்லையப்பன் கையில் கரண்டி இருந்துவிட்டுப் போகட்டும் என்று உலகநாதனால்

நினைக்க முடியவில்லை. பெண்டாட்டி இல்லாதவனுக்கு இந்த வீட்டில் தற்காலிக வேலைகூட இல்லை!

தாமதிக்கவே இல்லை உலகநாதன். நெல்லையப்பனின் ஆறுமாத சம்பள பணத்தை எண்ணிக் கையில் எடுத்துக் கொண்டார். நெல்லையப்பனிடம் துக்கம் கேட்கப் போவதாக ஊருக்குள் சொல்லிவிட்டு பஸ் ஏறி ஆலங்குளம் போனார். ஒரு பொய்யான துக்கத்தை முகத்தில் காட்டிக் கொண்டு நெல்லையப்பனுக்கு ஆறுதல் சொன்னார். ஆறுமாத சம்பள பணத்தை கையில் கொடுத்தார். "நீ இனிமே வேலைக்கெல்லாம் வர வேணாம் நெல்லை. ஒன் மகன்களோடு ஆலங்குளத்திலேயே இருந்து எப்படியாது பிழைத்துக் கொள்..." என்று அன்பொழுக சொல்லிவிட்டு அழகாக எழுந்து விட்டார். நெல்லையப்பனுக்கே தெரியாமல் உலகநாதன் அவனை வேலையில் இருந்து கழற்றிவிட்டிருந்தார்-அதாவது அவரைப் பொறுத்தவரையில்!

ஆனால் இது நெல்லையப்பனை கடுகளவும் அதிர்ச்சி அடைய வைக்கவில்லை என்பது தெரியவில்லை அவருக்கு! "ஒலகநாதனுக்கு கல்யாண கோட்டி பிடிச்சிருக்கு. எந்த நிமிஷமும் அவனுக்குக் கல்யாணம் நடக்கும்! ஒனக்கு எந்த நிமிஷமும் வேலை போகும்" என்று பெத்தையா என்றைக்கோ நெல்லையப்பனின் காதில் போட்டு வைத்து விட்டாரே...! பிறகு எங்கேயிருந்து வரும் அதிர்ச்சி...?!

அதனால்-நெல்லையப்பனைப் பொறுத்தவரையில் பெத்தையாவின் வாய்க்கு சர்க்கரைதான் போட வேண்டும்! ஆனால் பெண்டாட்டி வருவதற்கு முன்பே தன்னை உலகநாதன் கழட்டி விட்டுவிட்டதைத்தான் நெல்லையப்பனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. பழிக்குப் பழி வாங்கும் உணர்ச்சியை அவனும் வார்த்தையால் காட்டுவது தெரியாமல் காட்டி விட்டான்!



"சரிங்க அண்ணாச்சி; ஒங்க சொல்படி நான் இங்கேயே என் மகன்களோட இருந்திடறேன். நீங்களும் ஒங்க கல்யாணத்துக்கு பத்திரிகை அனுப்பறதுக்கு மறந்துடாதீங்க! கண்டிப்பா நான் ஒங்க கல்யாணத்துக்கு முதல் ஆளா வருவேன்!" தூள் தூளாகிவிட்டார் உலகநாதன்! அமிலம் பட்டவர்போல வெந்து தணிந்து போனார்! அவரின் அத்தனை அகம்பாவமும் அடுப்புக் குழம்பாக கொதித்தன! இதற்குமேல் அவரை ஒருத்தன் கிண்டலடித்துவிட முடியாது! அந்த அளவு-ஒரு விரலை சொடுக்குகிற மாதிரி நெல்லையப்பன் அவரை கிண்டலடித்துவிட்டான்! இரண்டு பக்க மீசையும் துடித்தது அவருக்கு. வந்த ஆத்திரத்தில் தூக்கிப் போட்டு இரண்டு மிதி மிதிக்கலாம் போல இருந்தது! அதற்காக தூக்கிப் போட்டு மிதித்துவிட முடியுமா? ஒரு மிதிகூட மிதிக்க முடியாது! மிதித்தால் அடுத்த நிமிஷம் அது பயங்கர ஜாதிப் பிரச்னையாகிவிடும்! அப்படி இருக்கிறது நிலைமை! - உலகநாதனால் முடிந்ததெல்லாம் ஆலங்குளம் பஸ் ஸ்டாண்டை நோக்கி ஒரு 'தீமிதி' ஓட்டம் ஓடியதுதான்! அதுவும் சும்மா இல்லை. 'நீ சொன்னாலும் சொல்லாட்டியும் நான் கல்யாணம் பண்ணிக்கத்தாண்லே நெல்லை போறேன்! ஆனா போயும் போயும் ஒனக்கு கல்யாணபத்திரிகை அனுப்புவேன்னு மட்டும் கனவுலேயும் நெனைச்சிக்காத! இந்த ஜென்மத்தல நடக்காது அது!" என்று ஆவேசத்தோடு முணங்கிக் கொண்டு...

-எப்போதும் இப்படித்தான். விதி காய்களை மிக சாமர்த்தியமாகத்தான் நகர்த்துகிறது. உலகநாதன் என்ற காயை இரண்டாம் கல்யாணத்தை நோக்கி கச்சிதமாக நகர்த்தியிருக்கிறது! கொஞ்சம் சாந்தமாக நகர்த்தி இருக்கலாம்! ஆக்ரோஷமாக நகர்த்தியிருக்கிறது! என்ன செய்ய? உலகநாதனின் விதி இப்படி இருக்கிறது...!

# 7

கல்யாணம் செய்து கொள்வதென்றால் பெண் எப்படிப் பார்ப்பது? யார் மூலம் பார்ப்பது? - இதைப் பற்றியெல்லாம் யோசித்து முடிவுக்கு வர உலகநாத னுக்கு வேறொரு ஏகாந்தமான சூழ்நிலை தேவையாக இருந்தது. தன்னுடைய மாந்தோப்புப் பக்கம் போயிட லாம் என்ற எண்ணத்தில் தெருவில் இறங்கி நடந்தார். நல்லவேளையாக சிவமதியை அவளுடைய வீட்டுத் திண்ணையில் காணோம். இந்த நேரத்தில் அவள் கண்ணில் படாமல் இருந்தால் தேவலையாக இருந்தது! அவள் இல்லாதது கொஞ்சம் நல்ல சகுனமாகக்கூடத் தெரிந்தது!

காவலுக்காக தோப்புக்குள்ளேயே குடிசை போட்டுக் கொண்டு குடும்பத்துடன் வசிக்கும் சிங்க முத்து உலகநாதன் உட்கார அவசரமாக கயிற்றுக் கட்டிலை எடுத்துப் போட்டான். அவனோடு ஒரு பேச்சுப் பேசாமல் உலகநாதன் கட்டிலில் உட்கார்ந்து கொண்டார். தொடர்ச்சியாக குயில்களின் ஓசைகள் ஒலித்துக் கொண்டிருந்தன. நேர் எதிர்மரத்தின் தாழ்ந்த கிளையில் வாலாட்டிகுருவி வினாடிக்கொரு தடவை வாலை ஆட்டியபடி அமர்ந்திருந்தது.

கட்டிலில் உட்கார்ந்த மூன்றாவது நிமிடம் உலக நாதன் நேராக விஷயத்திற்கு வந்துவிட்டார்! முதலில் எப்படிப்பட்ட பெண்ணாகப் பார்ப்பதென்று யோசித்தார். அழகான பெண்ணாக பார்ப்பதா; அழகு இல்லாத பெண்ணாக பார்ப்பதா? நல்ல வசதியான இடத்துப் பெண்ணாக பார்ப்பதா வசதி இல்லாத வீட்டுப் பெண்ணாக பார்ப்பதா? - இந்தக் கேள்விக்கு



மட்டும் உடனே பதில் தயார்! வசதியான வீட்டுப் பெண்ணெல்லாம் கிடைக்காது இப்போது! உலகநாத னின் வயசு அந்த மாதிரி!

அதனால் வசதி இல்லாத ஏழைப் பெண் வந்தால் வத்துவிட்டுப் போகட்டும். கல்யாணமாகி வந்ததும் தான் பெரிய இடத்து மனுஷியாகி விடப்போகிறாளே...! அதேபோல வரப் போகிறவள் அழகு சுந்தரியாக இருக்க வேண்டும் என்பதும் கட்டாயம் கிடையாது! காந்திமதியே அழகில் ரொம்ப ரொம்ப சுமார்தானே! ஆனால் வருகிறவள் அழகாக இருந்தால் உலகநாத னுக்கு சந்தோஷம்தான்! பெண் கறுப்பாக மட்டும் இருக்கக் கூடாது! உலகநாதனே நல்ல சிகப்பு! கறுப் பாக இருந்தால் அவருக்குப் பிடிக்கவும் செய்யாது!

இன்னொரு முக்கியமான விஷயம் - பெண்ணின் வயது. உலகநாதனின் மேட்டு விழிகள் அப்படியும் இப்படியுமாக சஞ்சரித்தன. அவருக்கு வயசாகி விட்டது என்பதற்காக வயசான பெண்ணையே கல்யாணம் செய்துகொள்ள முடியாது. வேடிக்கையாக சஷ்டியப்த பூர்த்தி மாதிரி இருக்கும்! குறைந்த வயசுப் பெண்ணாகத்தான் பார்க்க வேண்டும். உலகநாதனின் மேட்டு விழிகள் அதிகமாக அலைபாய்ந்தன. முப்பத் தைந்து வயசுப் பெண்? அவ்வளவு வயசு வேண்டாம்! முற்றிப் போய் இருப்பாள்! முப்பது வயசு? அதுவும் கூட ஜாஸ்திதான்!

இருபத்தேழு வயசுப் பெண்ணாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. இதையும் விட வயசு குறைந்த பெண்ணாகப் பார்க்கலாம் என்ற பேராசையும் உலகநாதனுக்குக் கிடையாது! ஆனால் சில விஷயங்களில் உலகநாதன் கறாராக இருந்தார். வரப் போகிறவள் கன்னி கழியாதவளாக இருக்க வேண்டும். இது ரொம்ப ரொம்ப முக்கியம்.

விவாகரத்துப் பெற்றவளாகவோ விதவைப் பெண்
ணாகவோ இருக்கக் கூடாது. இந்த இடத்தில் உலக
நாதனின் நினைப்பில் சிவமதி வந்தாள். காந்திமதி
இறந்து போன பிறகு அவருக்கும் சிவமதிக்கும்
இடையே நடந்திருக்கும் மௌன நாடகத்தின் பல
காட்சிகளை ஒருவித கள்ளத்தனத்தோடும் அலட்சியத்
தோடும் நினைத்துப் பார்த்தார். இந்த நிமிஷம் அவை
எல்லாமே அவருக்கு ஒவ்வாததாக இருந்தது. இனி
சிவமதியை நிமிர்ந்துப் பார்ப்பதில்லையென்று தீர்
மானம் செய்து கொண்டார்.

கயிற்றுக் கட்டிலை விட்டு எழுந்தபோது உலகநாத
னுக்குக் கல்யாணம் நடந்து முடிந்துவிட்டாற் போலவே
இருந்தது! வேத பாடசாலையை அவர் தாண்டியபோது
எதிரில் மணிவாசகம் வந்தார் - இயல்பாக. முகத்தில்
கூட அண்ணாச்சியைப் பார்த்துவிட்ட இயல்பான
புன்னகை.

''அண்ணாச்சி, நம்ம தொகுதிக்கு கேண்டிடேட்
முடிவு பண்ணியாச்சி.''

''அப்படியா - யாரு கேண்டிடேட்டு?'' உலகநாத
னும் இயல்பாகவே கேட்டார்.

''நம்ம குழல்பட்டணம் சங்கரலிங்கந்தான்.''

நிஜமாகவே உலகநாதன் திகைத்துப் போனார்.

''ஏவே - அவன் ஒரு செரியான கள்ளத்தோ
ணிலா.''

''என்ன அண்ணாச்சி பண்ணச் சொல்றீக- தோணி
தோணியா பணம் வச்சிருக்கானே.''

''தோணி தோணியா கிழிச்சான்! எனக்குத்
தெரிஞ்சி 'கள்ளப்பயனி' குடிச்சிட்டு இருந்தவன்!
அவன்ன்லாம் ஒரு கேண்டிடேட்டு...! நாடு போற



போக்கு சரிகெடையாது! வேறென்னத்தைச் சொல்ல...
வரட்டா; சாவகாசமா வீட்டுப் பக்கம் வாவே...''

உலகநாதனுக்கு மணிவாசகத்தின் மேல் ஏற்பட்
டிருந்த கோபம் தீர்ந்து போயிருந்தது. வரப் போகிற
தேர்தலில் அவரை நிற்கச் சொல்லி இந்த மணிவாசகம்
நால்வர் அணி அன்றைக்கு வரப்போய்தானே இரண்
டாம் கல்யாணம் என்ற விதை உலகநாதனின் மனசில்
தூவப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக முளைக்க ஆரம்
பித்தது... பாலம் கடந்து படித்துறையை ஒட்டி நடந்து
வலப்புறம் ஏறி தெருமுனையில் திரும்பியதுமே உலக
நாதன் பார்த்து விட்டார். வீட்டுத் திண்ணையில் தினை
வனத்தில் நிற்கும் வள்ளி போல சிவமதி நின்று கொண்
டிருந்தாள்! 'இவ ஒருத்தி!' என்ற பெரிய சலிப்பு அவ
ருக்கு! உலகநாதனின் முழங்கால்களைப் பார்க்காமல்
சிவமதி கேள்விக்குறியோடு அவரின் முகத்தைப் பார்த்
தாள். உலகநாதனின் முகத்தில் அவளுக்குப் பதில்
இருந்தது! அவர் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தார்!

''ஒலகநாதனுக்கு கல்யாண கோட்டி பிடிச்சிருக்கு''
என்று என்றைக்கோ தங்கம்மா ஆச்சி சொல்லிவிட்டுப்
போனதுதான். அதற்குப் பிறகு அது நிஜமா இல்லையா
என்பதெல்லாம் சிவமதிக்கும் தெரியாது. யாருக்கும்
தெரியாது. 'அப்படி ஒரு விஷயம் இருக்கும் போலி
ருக்கே' என்று நினைக்கிற மாதிரி இதற்கு முந்தி ஒரு
நாள் உலகநாதன் நடந்து கொண்டிருக்கிறார்.

இன்று நன்றாக கண்ணில் விளக்கெண்ணெய்
விட்டே பார்த்து விடலாம் என்ற நினைப்பில் முந்தா
ணியை இழுத்துச் செருகிக் கொண்டு வேறு பார்த்தாள்!
ஆனால் மனுஷர் அவளைப் பார்க்கவிட்டால்தானே.
ஆர்மிக்காரன் மாதிரி முகத்தை விறைப்பாக தொண்
ணூறு டிகிரியில் வைத்தபடி போய் கொண்டிருந்தார்.
தூக்கிக் கட்டிய வேட்டியின் 'டப்பா' கட்டை மரியா

தையாக கொஞ்சம் இறக்கிவிட்டுப் போவாரே - முந்தியெல்லாம்; எல்லாம் ரொம்பப் பழைய கதை போல! அந்த சின்ன மென்மையான மரியாதையை உலகநாதன் சிவமதிக்குக் காட்டவில்லை!

வந்துவிட்டது சிவமதிக்கு ஆத்திரம்! சும்மாவே சிவமதி கோபக்காரி. புருஷன் செத்துப் போனதும் பெரிய கோபக்காரியானாள். இப்போது வழக்கமான மரியாதையை உலகநாதன் கொடுக்காமல் போனதும் சிவமதி ரொம்பப் பெரிய கோபக்காரியாகி விட்டாள்! மனதிற்குள் பொருமினாள் "பெரிசாத்தான் விண்ணாணம் கொழிச்சிரு! இப்ப புதுசா வேற சிறுக்கிய பாக்கப் போறீகளாக்கும்...!

சிவமதியின் பொருமலில் இப்போதைக்கு வேகம் கொஞ்சம் குறைச்சல்! இனி சிறிது சிறிதாக விஷம் ஏறுவது போல் ஏறும்! உலகநாதனுக்கு இனிமே இருக்கிறது பெரிய பெரிய மங்களசாசனம்! "கௌப்பி விடாதிரும் என் ஆத்திரத்தை... ஏழு கோலம் பண்ணிப்புடுவேன்" என்ற முனகலுடன் இப்போதைக்கு மங்களம் பாடிவிட்டு சிவமதி வீட்டுக்குள் போக மூஞ்சியை திருப்பிக் கொண்டாள்!

சிவமதியின் ஆத்திரத்தில் கடுகளவைக்கூட உணர்கின்ற மனநிலை இல்லாத ஒருவித செருக்குடன் உலகநாதன் வீடுபோய் சேர்ந்தார். மனசில் இருந்து அவளை நிராகரித்துவிட்ட ரகசியமான திருப்தி அவருக்கு. இன்னும் கொஞ்ச நாட்களுக்குத்தான் அவருடைய கையில் கரண்டி! உலகநாதன் மனதிற்குள்ளேயே நிச்சயதார்த்தம் நடத்திவிட்டார்! இருபத்தேழு வயசிலோ இருபத்தெட்டு வயசிலோ புதுப் பெண்டாட்டி வந்து விடுவாள். கைநிறைய தங்க வளையல்களின் சப்தத்தோடு அவளுடைய சமையல் ஆரம்பிக்கப் போகிறது இந்த வீட்டில். முன்பு காந்திமதியுடன்



நடந்து போன மாதிரி இந்தத் தெருவில் சீக்கிரம் புதுப் பெண்டாட்டியுடன் உலகநாதன் நடந்து போகப் போகிறார். அதை அழகர்சாமியின் மகளும் பார்க்கத் தான் போகிறாள்! சரிதான்; கள்ளப்பார்வை பார்த்த காலத்தில் அவள் சிவமதி. இப்போது அழகர்சாமியின் மகள்!

சூலம் பார்த்து, ராகு காலம் தவிர்த்து; நல்ல குரு ஹோரையில் ஒருநாள் உலகநாதன் வலது காலை எடுத்துத் தெருவில் வைத்தார். சிமிட்டா பொடியை எடுத்து மூக்கில் தேய்த்துவிட்டுக் கொண்டு அவர் கிளம்பியிருக்கும் இடம்-அவருடைய மாமியார் வீடு இருக்கும் சீவலப்பேரி. உலகநாதன் முக்கியமான இரண்டு தீர்மானங்களுக்கு வந்திருந்தார். தான் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்திருப்பதை சீவலப்பேரி போய் காந்திமதியின் அம்மா வீட்டில் சொல்லிவிட்டு வந்து விட வேண்டும். சொல்லிவிட வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் கிடையாதுதான்! திடீரென்று ஒருநாள் போய் கல்யாணம் என்று சொல்லி பத்திரிகை வைத்தால் அதிர்ச்சியாக இருக்கும்! உலகநாதனின் அபிப்பிராயம்! தேவையில்லாமல் அதிர்ச்சியைத் தருவானேன்...- -இது முதல் தீர்மானம்.

முதலில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு வந்துவிட்டால் இரண்டாவது தீர்மானத்திற்கான காரியத்தில் இறங்கலாம். இரண்டாம் தீர்மானம்-பம்பாயிலும் டெல்லியிலும் இருக்கிற இரண்டு மகள்களுக்கும் போன் பண்ணி தான் இரண்டாவது கல்யாணம் செய்து கொள்ள பெண் பார்க்க ஆரம்பிக்கப் போகிற விஷயத்தை வெட்கப்படாமல் சொல்லிவிடுவது...!

உலகநாதனைப் பொறுத்த வரையில் அவரின் மறுமணத்திற்கு சீவலப்பேரி மாமியார் வீட்டுச் சம்மதம் அவசியம் கிடையாது! ஆனால் இரண்டு மகள்களின்

சம்மதம் கட்டாயம் வேண்டும்! அதற்காக மகள்கள்
சம்மதம் தராவிட்டால் அதை ஏற்றுக் கொண்டு உலக
நாதன் பேசாமல் இருந்து விடுவார் என்று அர்த்த
மில்லை! மகள் சம்மதிக்கா விட்டாலும் அவர்களை
சம்மதிக்க வைக்கும் வழி அவருக்குத் தெரியும்!

முதல் தீர்மானத்தின்படி உலகநாதன் சீவலப்பேரி
போய் சேர்ந்தார். கிளம்புகிறபோது ரொம்ப கம்பீரமாக
கிளம்பிவிட்டாரே ஒழிய சீவலப்பேரி போய் சேர்ந்த
போது கம்பீரம் கொஞ்சம் கம்மியாகிவிட்டது! மாமியார்
வீட்டை நெருங்க நெருங்க கம்பீரம் சுத்தமாக இல்லா
மல் போய் விட்டது! தலைகூட சிறிது தொங்கினாற்
போல! தயங்கித் தயங்கி மாமியாரின் வீட்டை நோக்கி
உலகநாதன் நடந்த நடை பார்க்க எப்படி இருந்தது
தெரியுமா? நேற்றுவரை எதிர்கட்சியில் இருந்துவிட்டு
இன்று ஆளும் கட்சியில் சேர்வதற்குப் போகிற அரசியல்
வாதியின் நடைபோல இருந்தது...!

''ஏசுவடியாள் இல்லம்'' என்று பெயர் சூட்டப்
பட்ட மாமியார் வீட்டுக்குள் உலகநாதன் கொஞ்சம்
அதிகரித்த மார்புத் துடிப்புடன் நுழைந்தார். மாமியார்
வீட்டார் ஹிந்துக்கள்தான். இருந்தாலும் ஏசுநாதரை
ரொம்பப் பிடிக்கும் - அவர்களுக்கு. 'ஏசுவடியாள்
இல்லம்' என்று வீட்டுக்குப் பெயர் அதனால்தான்.

வீட்டுக்குள் நுழைந்ததும் 'உலகநாதன் உணர்ச்சி
வசப்பட்டு விட்டார். காந்திமதி இறந்த பிறகு இப்
போதுதான் முதல் தடவையாக வருகிறார். இடையில்
இரண்டொரு கல்யாணங்கள் அந்த வீட்டில் வரத்தான்
செய்தன. மனைவி இறந்த பிறகு கல்யாணங்களில்
கலந்து கொள்வதில்லை என்ற தீர்மானத்தைக் காட்டி
உலகநாதன் வராமல் இருந்துவிட்டார். மாமியார் வீட்டு
ஆட்கள் அவ்வப்போது செந்துறை வந்து போய்
கொண்டுதான் இருந்தார்கள். இருந்தாலும் முக்கிய



இழை அறுந்து போய்விட்டதை இரண்டுபக்கத்தினரும்
உணர்ந்தே இருந்தார்கள். 'தேரோடு போச்சு திருவிழா,
பெத்த தாயோடு போச்சு பொறந்த வீடு' என்ற பழ
மொழி நெல்லை மாவட்டத்தில் ரொம்பப் பிரபலம்!
அந்தப் பழமொழியோடு 'பெண்டாட்டியோடு போச்சு
மாமியார் வீடு' என்பதையும் சேர்த்துக் கொள்ள
லாம்...!

# 8

சீவலப்பேரி போன்ற சிற்றூர்களில் வசதியான
குடும்பத்தாரின் வீட்டிற்கு அவர்கள் வீட்டு மாப்
பிள்ளை வரும்போது எப்படிப்பட்ட வரவேற்பும்
மரியாதையும் கிடைக்குமோ அதைவிட அதிகமான
மரியாதையும் வரவேற்பும்தான் உலகநாதனுக்கு ஏசு
வடியாள் இல்லத்தில் கிடைக்கும். இப்போதும் அது
கிடைத்தது. புதுமாப்பிள்ளைக்கு உரிய சங்கோஜத்
துடன் உலகநாதன் மாமியாரின் எதிரில் உட்கார்ந்திருந்
தார். மாப்பிள்ளையைப் பார்த்ததும் காந்திமதியின்
அம்மாவிற்கு அழுகை அப்படி வந்துவிட்டது!

நேற்றுத்தான் மகள் செத்துப்போன மாதிரி சேலை
தலைப்பால் முகத்தை மூடிக் கொண்டு அந்த அம்மா
ஒப்பாரி வைத்தது. அதனால் மௌன அஞ்சலி
செலுத்துவது மாதிரி மற்றவர்கள் நிசப்தமாக இருக்க
வேண்டியிருந்தது! உலகநாதனின் மனதிற்குள் மட்டும்
நெருடல். அவர் வந்திருப்பதோ கல்யாண சங்கதி
சொல்ல. நடந்து கொண்டிருப்பதோ அழுகைக்
கச்சேரி...!

ஒரு வழியாய் அழுகைக் கச்சேரியெல்லாம் முடிந்து கொஞ்ச நேரம் பரஸ்பர விசாரிப்புகள். வரப் போகிற தேர்தலில் செந்துறைத் தொகுதியில் கள்ளத்தோணி சங்கரலிங்கம் போட்டியிடப் போகிற செய்திவரை வந்துவிட்டது பேச்சு. ஆனால் உலகநாதனிடம் இருந்து எந்தப் பேச்சு வரணுமோ அதுமட்டும் வர வில்லை. மனசுக்குள்ளேயே கிடந்து முக்கி முணகிக் கொண்டிருந்தது. காந்திமதியின் பெரிய தம்பிக்கு மாத்திரம் மூக்கில் வியர்த்து விட்டது! ஐந்தாறு வருஷம் வராத மாப்பிள்ளை வந்திருக்கிறார்! ஏதோ ஒரு சங்கதி இருக்கிறது என்ற எதிர்பார்ப்போடு உலகநாதனின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தார்.

இதற்கிடையே வீட்டு அடுப்புகள் வராத மாப் பிள்ளை வந்திருக்கிறார் என்றதும் சுறுசுறுப்பாக எரியத் தொடங்கி இருந்தன. வெட்டிப் பேச்சும் விருதா பேச்சும் போய் கொண்டிருக்கும்போதே ஒரு சட்டி மலைப்பூண்டு உரித்துப் போடப்பட்ட ரங்கூன் மொச்சைப் பயற்றுக் குழம்பின் வாசனை தேடி வந்து உலகநாதனை ஒரு உசுப்பு உசுப்பியது! ஒரு நிமிஷம் உலகநாதன் பேச்சு மூச்சு இல்லாமல் உட்கார்ந்திருந் தார். இந்தக் குழம்பை காந்திமதி செய்தாலும் அப் படியே இந்த வாசனைதான் வரும்! நெஞ்சு விரிய குழம்பு வாசனையை சுவாசித்துக் கொண்ட உலக நாதன் விஷயத்தை வெளியிட்டு விட்டார். அவ்வளவு தான்! ஏசுவடியாள் இல்லமே பெரிய பரீட்சை நடக்கிற பள்ளிக்கூட ஹால்போல கப்சிப்பென்றாகி விட்டது. யாரும் யாருடைய முகத்தையும் பார்க்கவில்லை. யாரும் யாரோடும் பேசிக் கொள்ளவில்லை.

இந்த நேரம் பார்த்து உலகநாதனின் சின்ன மச்சான் குலசேகரம் கிளம்பி நழுவிக் கொண்டார். மூன்றாவது மச்சானும் ஸ்ரீவைகுண்டத்தில் ஜோலி இருப்பதாக சொல்லி நடையைக் கட்டிவிட்டார்!



சுருக்கமாக சொன்னால் ஏசுவடியாள் இல்லத்தில் உலகநாதன் மிச்ச நேரம் பூராவும் வேண்டாத விருந் தாளி போலத்தான் இருந்தார்! எவ்வளவு நேரம் இருப் பது? 'நேரமாச்சி—கௌம்பறேன்' என்று உலகநாதன் எழுந்து கொண்டபோது மாமியார் "காந்தியை என் னால மறக்கவே முடியலை" என்று சொல்லி கண்களை துடைத்துக் கொண்டாள். மற்றவர்களும் "எங்களுக்கும் காந்திக்கா செத்துட்ட மாதிரியே இல்லை. செந்துறை யில உசிரோட இருக்கற மாதிரிதான் இருக்கு" என்றார் கள். அவர்கள் உலகநாதனிடம் சொல்லாமல் சொன் னது - காந்திக்காவை அவர்தான் மறந்து விட்டார்...!

ஏசுவடியாள் இல்லத்தில் இருந்து வெளியேறி நடந்த உலகநாதனின் நடை ஆளும் கட்சியில் சரியான வரவேற்புக் கிடைக்காமல் நொந்துபோன அரசியல் வாதியின் பாவப்பட்ட நடையாக இருந்தது! 'இனிமே இங்கே யார் வரப் போகிறார்கள்?' என்று மனதை சமாதானம் செய்து கொண்டார். இனி ஏசுவடியாள் இல்லம் அவரின் மகள்களுக்கு வேண்டுமானால் ஆச்சி வீடாக இருக்கலாம். அவருக்கு மாமியார் வீடு இல்லை அது...!

அடுத்து உலகநாதன் புதுடெல்லியில் இருக்கும் மூத்த மகள் கலைச்செல்விக்கு 'ட்ரங்க்கால்' புக் பண்ணினார். அவர் வீட்டு போனில் எஸ். டி. டி. வசதி கிடையாது! ஆனால் என்ன உபத்திரம் - டெல்லி லைன் கிடைப்பதற்குள் அவருடைய கல்யாணத் தையே முடித்து விடலாம்! டெல்லி லைன் கிடைப்பது குதிரை கொம்பாம்! அதற்காக இத்தனை பெரிய கொம்பா?'

—இதோ லைன் கிடைத்து விட்டது.

"அப்பா"

"கலை..."

''எதுவும் விசேஷமாப்பா?''

''மாப்பிள்ளை எப்படியிருக்கார்?''

''நல்லாருக்கார்ப்பா - நீங்க எப்படிப்பா இருக்கீங்க?''

''ஏதோ இருக்கேன் தாயி!''

''ஒடம்புக்கு ஒண்ணுமில்லையேப்பா''

''ஒடம்பே சரியில்லை தாயி. ஒரே வயித்துக் கோளாறு.''

''நெல்லையப்ப அண்ணாச்சி சமையல் வயித்துக்கு எதுவும் செய்யாதேப்பா.''

''நெல்லையப்பனா - அவன் வேலையை விட்டு ஓடிப் போய் அது ஆயிப் போச்சி ரெண்டு மாசம்''

''அச்சச்சோ... அப்ப சாப்பாட்டுக்கு என்னப்பா பண்றீங்க?''

''தாளந்தான்!''

''இங்க வந்திருங்கன்னு சொன்னா கேக்குறீங்களா?''

—கலைச்செல்வி அலுத்துக் கொண்டாள். உலகநாதனுக்கு எரிச்சல் வந்தது. 'பாதகத்தி! இன்னொரு கல்யாணம் செய்துக்கோங்கப்பா'னு சொல்வேனா என்கிறாளே...!'

''அங்கல்லாம் வந்து என்னால இருக்க முடியாது தாயி...''

''வேற என்னதான் செய்வீங்க - இந்த வயசான காலத்ல...''

''பிரியத்ல நீதான் எனக்கு வயசாயிட்டதா சொல்ற. எனக்குத் தெரியல வயசாயிட்ட மாதிரி!''



கலைச்செல்விக்கு குழப்பமாக இருந்தது. என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை அவளுக்கு. அவளுடைய அம்மா செத்துப் போனபோது வயசான காலத்தில் இப்படி விட்டு விட்டுப் போய் விட்டாளே யென்று புலம்பியவர் இதே அப்பாதான். அவர் சொல்கிறார் வயசான மாதிரி தெரியலையென்று...! —அதுவும் ஐந்தாறு வருஷம் கழித்து...

''சமையலுக்கு புதுசா ஒருத்தரும் வரலையாப்பா?''

''ஒரு பய வரமாட்டேங்கான்! சம்பளம் ஆயிரம் ருபான்னு கூட சொல்லிப் பாத்தாச்சி.''

''என்னதான் செய்யப் போறீங்களோ?''

''ஒருவேளை சாப்பாட்டுக்கு இந்தப் பாடாம்மா?''

''சொல்லாதீங்கப்பா- அழுகையா வருது எனக்கு!''

''சாப்பாடுன்னு மாத்திரம் இல்லை கலை. இனிமே என்னால ஒத்தையிலயே கெடந்து சாக முடியாது. நல்லா ஒரு மாசமா யோசனை பண்ணிப் பாத்திட்டு ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்.''

''என்ன முடிவுப்பா?''

உலகநாதன் அவருடைய முடிவைச் சொன்னார். புது டெல்லி முனையில் இருந்து பேச்சு மூச்சைக் காணோம்! உடனே உலகநாதனுக்கு வழக்கம் போல கோபம்தான். 'பார்றா — வாயைத் தெறக்காம அம்மி முழுங்கினவ மாதிரி இருக்கறதை...!' என்று மனசுக்குள் வசைமாரி பொழிந்தார்! 'ஏசுவடியாள் இல்லத்து' ரத்தம் கலைச்செல்வியின் உடம்பிலும் கொஞ்சம் ஓடத்தானே செய்கிறது... அதுதான் 'கப்சிப்'...!

நிஜமாகவே கலைச்செல்வி செந்துறை முனையில் இருந்து இந்தப் பந்தை எதிர்பார்க்காததால் இந்தப்

பந்தை எப்படி எதிர்கொள்வதென்று தெரியவில்லை அவளுக்கு! உலகநாதன் அடுத்த பந்தை வீசினார்.

''அப்பா இன்னொரு கல்யாணம் செய்துக்கிட்டா ஒனக்கோ மாப்ளைக்கோ ஆட்சேபணை ஏதாவது உண்டா தாயி?''

''எங்களுக்கு என்னப்பா ஆட்சேபணை?''

''கேட்டுக்கறது நல்லது பாப்பா! நாளைக்கு எனக்கு தெரியாது ஒனக்குத் தெரியாதுன்னு சொல்லிரக் கூடாது பாரு!''

''அப்படியெல்லாம் சொல்லிர மாட்டோம்ப்பா''

''வேற வழி தெரியலை எனக்கு''

''ஒங்க சந்தோஷந்தான் எங்க சந்தோஷம்ப்பா'' - சொல்லும் போதே கலைச்செல்விக்கு கண்களில் கண்ணீர் பளபளத்தது.

''பெண் பார்த்து முடிவானதும் திருப்பியும் போன் பண்றேன்.''

''ஒடம்பப் பாத்துக்கோங்கப்பா...''

''பிள்ளைங்க பள்ளிக்கூடம் போயாச்சா?''

''கோமதி போயிட்டா, சங்கரனுக்கு லேசா ஒடம்பு சரியில்லை. வீட்லதான் இருக்கான்.''

''பேசச் சொல்லேன் அவனை.''

பேசிய பேரனிடம் சீக்கிரமே அவனுக்கு 'சின்னப் பாட்டி' வரப் போவதாக சொன்னார். திருப்பியும் கலைச்செல்வியிடம் அவளுக்கு ஆட்சேபணை எதுவும் இல்லையேயென்று கேட்டுக் கொண்ட பின் அப்பாடா என்று போனை வைத்தார். புதுடெல்லி வோட்டு கிடைத்து விட்டது. அடுத்து பம்பாய் வோட்டை கேட்க வேண்டும்!''



'கேட்காமலேயே எங்க வோட்டு உலகநாதனுக்கே!' என்று சொன்ன பெத்தையா குடும்பம் கொஞ்சம் 'உசந்த' குடும்பமாக உலகநாதனுக்குக் கொஞ்ச நேரத்திற்குத் தெரிந்தது!...

உலகநாதன் உடனே பம்பாய்க்கு 'கால்' புக் பண்ணிவிடவில்லை. இனி ரொம்பவும் அவர் அவசரம் காட்ட வேண்டியதில்லை! பம்பாய் 'கால்' பிறகு பேசிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் கையில் கரண்டியை எடுத்து விட்டார்! ஆனால் டெல்லியில் கலைச்செல்வியால் அவசரப்படாமல் இருக்க முடியவில்லை. பம்பாயில் இருக்கும் தங்கச்சி செல்வராணிக்கு உடனே 'டயல்' பண்ணி விட்டாள்.

''என்னக்கா?''

''அப்பா ஒனக்கு போன் பண்ணினாங்களா?''

''ஏன்-ஒனக்குப் பண்ணினாங்களா?''

''இப்பத்தான் பண்ணினாங்க. அப்பா இன்னொரு கல்யாணம் செய்துக்கப் போறாங்களாம்...''

உலகநாதன் சொன்ன விபரங்களை கலைச்செல்வி செல்வராணியிடம் அப்படியே ஒரு எழுத்து விடாமல் சொன்னாள். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே செல்வராணி உறங்கிக் கொண்டிருக்கும் மகளைப் பார்த்தாள். மகளுக்கு அப்படியே தாத்தாவின் மேட்டு விழி!

''நீ என்னக்கா சொன்ன?''

''சரின்னுட்டேன். வேற என்ன சொல்ல முடியும்?''

''இவரு கேட்டா கெடந்து குதிப்பாரு! சும்மாவே அப்பாவோட தோட்டத்தையும் தோப்பையும் வித்துப் பங்கைப் பிரிச்சித் தரச் சொல்லுனு என்னைப் போட்டு நச்சரிச்சுக்கிட்டு கெடக்காரு... அக்கா அக்கா

அப்பாவை கல்யாணமெல்லாம் செய்துக்க வேண்டாம்னு சொல்லுக்கா''

''நீ சொல்லேன்''

''என்னால முடியாது''

''என்னாலயும் முடியாது''

அக்காவும் தங்கச்சியும் மாற்றி மாற்றி ஆதங்கத்தோடும் ஆற்றாமையோடும் பேசிப் பேசி; பிறகு என்ன செய்வதென்று தெரியாமலேயே போனை வைத்து விட்டு தலையில் கைவைத்தவாறு உட்கார்ந்திருந்தாலும்கூட உலகநாதன் போன் பண்ணிப் பேசியபோது ''ஒங்க சந்தோஷம் தான்ப்பா எங்க சந்தோஷம்'' என்பதற்கு மேல் செல்வராணியால் எதுவும் சொல்ல முடியவில்லை. ஏதோ ஒரு துக்கம் வந்து நெஞ்சை அடைத்தது. அம்மா இருந்த இடத்திற்கு புதுசாக ஒரு மனுஷி வரப் போவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இனி அவர்களின் செந்துறை வீட்டுக்கு இயல்பாக போய் வர முடியுமா? நினைத்தபோதே கண்ணில் நீர் தளும்பியது. நாளைக்கே உட்கார்ந்து சீவலப்பேரி ஆச்சிக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

வழக்கமாக ஆபீசில் இருந்து ஏழு மணிக்கு மேல் வீடு திரும்பும் செல்வராணியின் கணவன்-குற்றாலச் செல்வன் ஆறு மணிக்கே வந்து விட்டான். நுழைந்ததுமே கவனித்து விட்டான். ஒரு மாதிரியாக இருந்தது வீடு! எப்போதும் யாரும் பார்க்கிறார்களோ இல்லையோ டி.வி. அதுபாட்டுக்கு ஓடிக் கொண்டிருக்கும். இப்போது செல்வராணியைப் போல அதுவும் 'கப்சிப்'பென்று கிடந்தது!

''என்ன வீடு சத்தமேயில்லாம கெடக்கு...''

செல்வராணியிடம் இருந்து பதில் வரவில்லை. குற்றாலச் செல்வனுக்கு புத்திசாலித்தனம் ஜாஸ்தி!



உடனே பதில் வராவிட்டால் வர இருப்பது ரொம்பப் பெரிய பதில்!

''ஒன்னைத்தானே — ஏய் — ஒன்னைத்தானே...'' குற்றாலச் செல்வன் கேள்வியை சினிமா பாட்டாகவே மாற்றினான். ஆனால் பதில் என்னமோ வரப் போகிற மாதிரி தெரியவில்லை!

''ஒங்கப்பா மறுபடியும் கல்யாணம் கில்யாணம் பண்ணிக்கப் போறாரா யென்ன?!''

அய்யோ! நிஜமாகவே மிகவும் எதிர்பாராத பந்து இது! அதுவும் மிக முதல் பந்து!

அதிலேயே விழுந்து விட்டது விக்கெட்!

சும்மா தமாஷாக கேட்டதற்குப்போய் செல்வராணி ஏன் இப்படி அழவேண்டும் என்று குற்றாலச் செல்வனுக்கு விளங்கவில்லை. விபரம் தெரிந்தபோது அசந்து போய் விட்டான். தமாஷாகக் கேட்டது நிஜமாக இருந்தது...!

## 9

முதலில் சிறிது நேரத்திற்கு 'இதென்னவே கூத்தா இருக்கு' என நினைத்துக் கொண்டு குற்றால செல்வன் பேசாமல் இருந்தான். பிறகுதான் மண்டைக்குள் சூடு மடமடவென ஏறியது. உலகநாதனுக்கு ஆண் வாரிசு கிடையாது என்ற விசேஷ காரணத்திற்காகத்தான் குற்றாலச் செல்வனுக்கு அவனுடைய அப்பா செல்வராணியை தேடி வலைபோட்டுப் பிடித்து மனைவியாக்கினார். அவருடைய கொள்கை அது.

மகன்களுக்கு கால தாமதமானாலும் பரவாயில்லை யென்று ஆண் வாரிசு இல்லாத பெரிய பணக்கார குடும் பத்தில்தான் பெண் எடுப்பார்! இரண்டாம் கல்யாணம் செய்துகொள்வதின் மூலம் உலகநாதனுக்கு நாளைக்கே ஆண் வாரிசு வந்து விட்டால்? இந்தக் கேள்வி குற்றால செல்வனின் மண்டையைப் போட்டு குடைந்தது. தோட்டங்களையெல்லாம் விற்று செல்வராணிக்குச் சேர வேண்டிய 'பங்கை' பணமாக தந்துவிடச் சொல்லி இரண்டு வருஷம் முன்பு குற்றாலச் செல்வன் ஒரு ஆட்டமே காட்டியிருக்கிறான்! அவனுடைய அபிப்பிரா யம்—இத்தனை தோட்டங்களை வைத்துக் கொண்டு இந்த வயதிற்கு மேல் என்ன செய்யப் போகிறார் மாமனார்...!

அதுவும் பெண்டாட்டி வேறு செத்துப்போன பிறகு... ஆனால் உலகநாதனும் ஒரு மாதிரியான ஆசாமி என்பதால் குற்றாலச் செல்வனும் ரொம்ப ஆட்டம் காட்டாமல் வாலைச் சுருட்டிக் கொண்டு விட்டான்!

இப்போது அந்தப் பழைய கதையெல்லாம் வேறு ஞாபகத்திற்கு வந்துவிட்டது.

"ஒங்க அப்பாவுக்கு மண்டைக்குள்ள திடுதிப்னு நட்டு ஏதோ கழண்டு போச்சி! அதான் ஷஷ்டியப்த பூர்த்தி இன்னைக்கோ நாளைக்கோன்னு இருக்கும் போது மறுபடியும் புது மாப்பிள்ளையாகப் பாக்கறார்" என்று காச்மூச்னு சப்தம் போட்டான். தொடர்ந்தும் கத்தினான். "எனக்கு மட்டும் ரெண்டு மூனு வருஷமாவே சந்தேகந்தான்! திடுதிப்னு ஒங்கப்பா இப்படி ஒரு 'கவுத்துமா' வேலை பாப்பார்னு! இந்த விஷயம் எங்க அப்பா காதுக்கெல்லாம் போச்சின்னு வச்சிக்க-அவ் வளவுதான்! எங்க வீட்ல நாமக்காரரை கால்காசுக்கு நம்பமாட்டாங்க சொல்லிட்டேன்!"



செல்வராணி பேசாமலேயே இருந்தாள்.

"சரி - நீ என்ன செய்யறதா இருக்கே?" குற்றால செல்வன் கேட்டான்.

"எதுல என்ன செய்யறதா இருக்கேன்னு கேக்கு றீங்க?"

"நாமக்காரரு கல்யாண விஷயத்ல!"

"நான் செய்யறதுக்கு என்ன இருக்கு?"

"அவரு கல்யாணத்துக்குப் பெறகு ஜாலியா செந் துறையில போய் இஷ்டத்துக்கு இருக்க முடியாதுடி!"

"முடியாட்டி போகுது. எனக்கும் அக்காவுக்கும் ஆச்சி வீடு இருக்கு!"

"பூச்சி வீடு இருக்கு! ஆடிக் காத்துல இங்க அம்மியே பறக்குது! ஆச்சி வீடு இருக்காம் இவளுக்கு...! ஆச்சி வீடு இருந்து என்ன செய்ய? ஆச்சி இருக்க வேண்டாமா?"

செல்வராணிக்கு சுள்ளென்று கோபம் வந்து விட்டது. "ஒங்க கரிநாக்கை வச்சிக்கிட்டு சும்மா வாயை மூடிட்டு இருங்களேன்!"

"என்னைச் சொல்றியே-கல்யாணமும் வேண்டாம் கருமாதியும் வேண்டாம்னு நாமக்காரர்கிட்ட சொல லேன்!"

"நான் என் வாயால அவர்கிட்டே அதைச் சொல்ல மாட்டேன்."

"பிடிக்காததை பிடிக்கலைன்னு சொல்றதுல என்னடி பயம்?"

"பிடிக்கலை என்கிறது என்னோட அபிப்பிராயம். கல்யாணம் அவரோட தனிப்பட்ட விஷயம். அதுல என்னால தலையிட முடியாது."

"அப்ப நான் இன்னொரு கல்யாணம் செய்துக்
கிட்டா அப்பவும் அது என் சொந்த விஷயம்னு வாயை
மூடிட்டு இருப்பியா?"

"இப்படியெல்லாம் குதர்க்கமா கேட்டா என்கிட்ட
இருந்து பதில் வராது!"

"தெரியுமே—பதில் வராதுன்னு...! ஹூம்—காலம்
போன காலத்ல கல்யாணமாம்! நான் இப்பவே சொல்
விடறேன்—கல்யாணத்துக்கு நான் செத்தாலும் வர
மாட்டேன்!"

"வராட்டி கெடங்க!"

இப்படி இவர்கள் குஸ்தி போட்டுக் கொண்டிருந்த
போது போன் மணி அடித்தது. குற்றாலச் செல்வன்
உடனே அழகு காட்டியபடி சொன்னான்: "கல்யாண
ராமர்தான் பண்றார்! கேட்டா நான் இன்னும் ஆபிஸ்ல
இருந்து வரலைன்னு சொல்லிடு!" மகளையும் இழுத்
துக் கொண்டு குற்றாலச் செல்வன் மொட்டை மாடிக்கு
ஓடினான்.

சொன்ன மாதிரியே அது செந்துறை 'கால்' தான்.
மூத்தமகள் கலைச்செல்வியிடம் உலகநாதன் எந்தத்
தடத்தில் பேச்சு வார்த்தையை நடத்தினாரோ அதே
தடத்தில் செல்வராணியிடமும் பேச்சு வார்த்தையை
நடத்தி முடித்தார். ஆனால் ஒன்று—போன் பேசுவதற்கு
முன் இருந்த மனநிலை போன் பேசியதும் மாறிப்போய்
விட்டது.

'பாவந்தான் அப்பாவும். இன்னொரு கல்யாணத்ல
தான் அவங்களுக்கு சந்தோஷம்னா பண்ணிட்டு
போகட்டும். நம்ம அப்பாதானே...'

செந்துறையில் உலகநாதன் பாதிக் கல்யாணத்தை
நடத்திவிட்ட கிளுகிளுப்பில் அவர் சமைத்த பொரித்த
குழம்பையும் கத்தரிக்கா பொடிதுவளையும் ஒரு பிடி
பிடித்தார். இருபத்தேழு வயதில் பெண் பார்க்கப் போகி



றோம் என்ற எண்ணமே உலகநாதனின் உணர்வுகளை
புதுப்பித்திருந்தது. அவருக்குத் தெரிந்த இருபத்தேழு
வயசுப் பெண்களையெல்லாம் நினைத்துப் பார்த்துக்
கொண்டார். கவனமாக சிவமதியை மட்டும் நினைத்துப்
பார்த்துக் கொள்ளவில்லை! இளம் பெண்களுக்கான
புத்தம் புதிய பிரக்ஞை அவருள் கண்ணைத் திறந்து
வைத்துக் கொண்டு அப்படியும் இப்படியும் பார்த்தது!
இளம் பெண் ஒருத்தியின் உடனடித் தேவை அவருக்
குள் அரும்பு மாதிரி பற்றிக் கொண்டுவிட உலகநாதன்
சுறுசுறுப்பாக காரியத்தில் இறங்கிவிட்டார்.

புதுச்சத்திரத்தில் அவரின் நண்பர் அப்பாதுரை
பிரசித்தி பெற்ற கல்யாண தரகர். உலகநாதன் அவ
ருக்குக் கடுதாசி எழுதிப் போட்டார். விஷயத்தைச்
சொல்லாமல் நேரில் பார்த்துப் பேச கிளம்பி வரட்டுமா
என்று கடுதாசியில் சுருக்கமாகக் கேட்டிருந்தார்.
கடுதாசிக்கு நான்கு நாட்களாகியும் பதில் இல்லை.
உலகநாதன் தவித்துப் போனார். வீட்டில் இருக்க
முடியவில்லை. சும்மாவானாலும் திருநெல்வேலி
கல்லிடைக்குறிச்சியென்று பஸ் ஏறிப் போய் வந்தார்.
இளம் பெண்கள் கண்ணில் பட்டால் வைத்த கண்ணை
எடுக்காமல் பார்த்தார்!

கடைசியாக புதுச்சத்திரம் அப்பாதுரையிடம்
இருந்து எட்டாவது நாள் பதில் கடுதாசி வந்தது.
அப்பாதுரை பழநி போயிருந்தாராம். உலகநாதனை
உடனே கிளம்பிவரச் சொல்லி எழுதியிருந்தார். அடுத்த
நாள் காலை எட்டு மணிக்கே உலகநாதன் அப்பாதுரை
யின் எதிரில் அமர்ந்திருந்தார்.

"அண்ணாச்சியைப் பாக்க செந்துறைக்கு நானே
வந்திருப்பேன்"

"வேண்டாம்னுதானே நானே நேர்ல வர்ரதா எழுதி
யிருந்தேன்."

"அண்ணாச்சிக்கு நான் என்ன செய்யணும்?"

"இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம்னு
நெனைக்கேன் அப்பாதொரை."

"தாராளமா பண்ணிக்கோங்க அண்ணாச்சி"

உலகநாதனுக்கு செல்லமாக அப்பாதுரையின்
கையைப் பிடித்துக் கொள்ள வேண்டும்போல இருந்
தது. அந்தஸ்தை நினைத்து அதைச் செய்யாமல் இருந்
தார்!

"என்னோட ரெண்டு மூணு சேக்காளிங்க - பேரன்
பேத்தி எடுத்தாச்சி; இனிமே போய் எதுக்கு ஒய்
கல்யாணம்னு கேக்காங்க தொரை!" - உலகநாதன்
நாக்குக் கூசாமல் பொய்யை அள்ளி விட்டார்.

"சொன்னவங்க பேரைச் சொல்லுங்க."

"பேரெல்லாம் எதுக்கு தொரை?"

"அதுக்கு இல்லீங்க அண்ணாச்சி; இன்னைக்கி
ஒங்க சம்சாரம் உசிரோட இருந்தா நீங்களும் அவுங்
களும் ஒண்ணாத்தானே குடித்தனம் பண்ணிக்கிட்டு
இருந்திருப்பீங்க... பேரன் பேத்தி வந்தாச்சி; நமக்கு
இனிமே என்னத்துக்கு குடித்தனம்னு சொல்லிட்டு
ஆளுக்கொரு பக்கமாவா பிரிஞ்சி போயிருப்பீங்க?"

"அதெப்படி..."

"எத்தனை வயசானாலும் ஒரு ஆம்பளைக்கு
பெஞ்சாதி வேணும். பொம்பளைக்கு புருசன் வேணும்.
சில நேரத்ல அந்த மாதிரி இல்லாம போகிற மாதிரி
விபத்து எதுவும் நடந்திரலாம். அதை வச்சி எந்தக்
கட்டு திட்டத்தையும் ஏற்படுத்திக்கக் கூடாது. ஒவ்வொ
ருத்தரோட மனநிலைக்கும் சூழ்நிலைக்கும் தக்க மாதிரி
தான் நடந்துக்கணும். தப்பே கெடையாது அதுல...
ஒங்களுக்கு எப்படிப்பட்ட இடத்ல எப்படிப்பட்ட



பொண்ணு வேணும்னு சொல்லுங்க அண்ணாச்சி -
பாத்து ஏற்பாடு செஞ்சிரலாம்."

உலகநாதன் அவரின் விருப்பத்தை சுருக்கமாக
சொல்வது போல ரொம்ப விரிவாக சொன்னார்.

"ஒங்க கல்யாணம் முடிஞ்சாச்சின்னே நெனைச்சிக்
கோங்க அண்ணாச்சி" இது அப்பாதுரையின் வெறும்
வாய் பந்தல் இல்லை. மனப்பூர்வமான வார்த்தை.
வார்த்தையை ரொம்ப சீக்கிரம் காப்பாற்றியும் விட்டார்.
அவர் பார்த்து நிச்சயம் பண்ணிக் கொடுத்த பெண்
ணின் பெயர் - பரமேஸ்வரி. ஊர் - அம்பாசமுத்திரம்.

இந்த கல்யாணம் நிச்சயமானதில் உலகநாதனுக்கு
இரண்டு விதத்தில் சந்தோஷம். வறுமைக் கோட்டுக்கும்
கீழே ஏழ்மையில் உழன்றாலும் பரமேஸ்வரி ரொம்ப
அழகான பெண்ணாக இருந்தாள் - இது முதல் சந்
தோஷம். இரண்டாவது சந்தோஷம் - பார்ப்பதற்கு
அவள் பிராமணாள் வீட்டுப் பெண் போல இருந்தாள்!

உலகநாதனுக்கு பாவம் இறக்கை இல்லாமல் போய்
விட்டது! அது மட்டும் இருந்திருந்தால் அம்பாசமுத்
திரத்து வானத்தில் நூறு தடவையாவது பறந்து விட்டு
வந்திருப்பார்...!

பரமேஸ்வரிக்கு அம்மா மட்டும்தான். அப்பா ஆறு
வருஷத்துக்கு முன்பு வறுமை தாங்க முடியாமல் ஓடிப்
போய் விட்டார். மற்றபடி அவளுக்கு ஒரு அண்ணனும்
இரண்டு தங்கச்சிகளும் இருந்தார்கள். அண்ணன்
கைத்தறி நெசவுக் கூடம் ஒன்றில் தினசரி சம்பளத்தில்
வேலையில் இருந்தான். தங்கச்சிகள் வேலைக்குப்
போகக்கூடாது என்பது அண்ணன்காரனின் கண்டிப்
பான தீர்மானம். அண்ணன்காரனும் அம்மாகாரியும்
பரமேஸ்வரிக்கு எப்படியாவது கல்யாணம் செய்து
வைத்துவிட வேண்டும் என்று நினைத்தார்கள். இரண்
டாம் தாரமாக கட்டிக் கொடுக்கவும் தயாராக இருந்

தார்கள். ஆனால் உலகநாதனின் வயதை அப்பாதுரை சொன்னபோது ரொம்ப யோசித்தார்களாம்! அப்பா துரை இதைச் சொன்னபோது உலகநாதன் தலையை கொஞ்சம் தொங்கப் போட்டுக் கொண்டார்! அண்ண னும் அம்மாவும் பரமேஸ்வரியின் அபிப்பிராயத்தைக் கேட்டார்களாம். முதலில் அவளும் பதிலே சொல் லாமல் இருந்தாளாம். பிறகுதான் "பொண்ணு பாக்க வரச் சொல்லுங்க" என்றாளாம்.

"அப்பப் பொண்ணைப் பாத்திட்டு வந்திரலாமா அண்ணாச்சி...?" அப்பாதுரை கேட்டார்.

"பொண்ணோட வயசு சொல்லலையே" - உலக நாதன் இழுத்தார்.

"நான் ஒரு செத்த சவம்! அதை மறந்திட்டேன் பாருங்க. அந்தப் பொண்ணுக்கு வயசு இருபத்தைஞ் சிங்க அண்ணாச்சி..."

உலகநாதன் திருப்தியுடன் வயிறு நிறைய சாப்பிட் டவர் போல ஏப்பம் விட்டார்! அவர் ஆசைப்பட்டது இருபத்தேழு வயதுப் பெண். அதற்கும் இரண்டு வயசு குறைந்த பெண் வருவதாக அவரின் தலையில் எழுதி யிருந்தால் வந்துவிட்டுப் போகட்டுமே... உலகநாதன் அப்பாதுரையுடன் கிளம்பி, அம்பாசமுத்திரம் போனார். அம்பாசமுத்திரம் இதற்கு முன் அவர் நூறு தடவை போயிருக்கிற ஊர்தான். ஆனாலும் இப்போது போன போது அதன் நிறமே அழகாக மாறிப் போயிருந்தது!

பரமேஸ்வரியைப் பார்த்ததும்உலகநாதன் கொஞ்ச நேரம் மூச்சு விடவே மறந்து போய்விட்டார். அவள் இத்தனை அழகான பெண்ணாக இருப்பாளென்று சத்தியமாக அவர் எதிர்பார்க்கவில்லை. பரமேஸ்வரி யின் கைகளிலும் கழுத்திலும் வறுமையின் சோகமும் வெறுமையும் படிந்து போயிருந்தாலும்கூட அவளின் முகத்தில் மிருதுவான அழகின் உயிரோட்டம் லேசாக



மிளிரவே செய்தது. விலை மலிவான புளியங்குடி சேலையிலும் பரமேஸ்வரி துடைத்து வைத்த குத்து விளக்கு போல இருந்தாள்.

உலகநாதனின் மனசில் தேவையே இல்லாமல் முப்பது வருஷங்களுக்கு முன்னால் (அப்போது இந்தப் பரமேஸ்வரி பிறக்கவே இல்லை!) சீவலப்பேரிக்குப் போய் காந்திமதியை பெண் பார்த்த சம்பவம் கண்முன் வந்தது! ஹோ! அழகான இந்த பரமேஸ்வரி எங்கே; அழகே இல்லாத காந்திமதி எங்கே... உலகநாதனுக்குள் இருக்கும் ஆணவச் சிங்கம் சின்னதாக ஒரு கர்ஜனை செய்தது...!

சிங்கம் யோசிக்கவே இல்லை. அடுத்த நிமிஷம் சம்மதத்தைச் சொல்லிவிட்டு கிளம்பி வந்துவிட்டது. ஆனால் பெண் சிங்கத்தின் சம்மதம் நான்கு நாட்களுக் குப் பிறகுதான் புதுச்சத்திரம் வந்து சேர்ந்தது. உலக நாதன் பெருமாள் கோயிலுக்குப் போய் சந்நதியை இருபத்தைந்து தடவை பிரதட்சணம் செய்தார்! குறிப் பாக ஏன் இருபத்தைந்து தடவை பிரதட்சணம் செய் தார் என்பது அவருக்கும் பெருமாளுக்குமே தெரிந்த ரகசியம்...! செந்துறை கிராமத்தில் ஒரே நாளில் தன் அந்தஸ்து கூடி விட்டதாகக்கூட உலகநாதனுக்கு ஒரு பிரமை!

இப்படியொரு அழகான பெண்ணை கல்யாணம் பண்ணிக் கொள்ள நிஜமாக ஒரு ஆம்பளைக்கு அந்தஸ்து வேண்டும். ரதி போல பெண் வேண்டும் என்று கேட்க அந்தஸ்து இல்லாதவனால் முடியவே முடியாது! பணக்காரனுக்குத்தான் லட்டு போன்ற பெண்டாட்டி கிடைப்பாள். உலகநாதனே பார்த்திருக் கிறார். பைசா இல்லாத பயல்களுக்கெல்லாம் கட் டெறும்பு போல கருவாச்சிப் பெண்டாட்டிகள்தான்!

உலகநாதனுக்கு இந்த சந்தோஷம் எப்போதும் உண்டு. பெருமாள் அவரை பணக்காரராக பிறக்க வைத்து விட்டார்! இப்போது இந்தப் பணக்காரருக்கு இருபத்தைந்து வயதில் லட்டு போன்ற இரண்டாம் தாரம் வரப்போகிறாள்!

உலகநாதனுக்குத் தெரிந்து சுற்று வட்டாரம் எங்கேயும் ஐம்பத்தைந்து வயதுப் பணக்காரன் எவனுக்கும் பரமேஸ்வரி போல ஒரு அழகான பெண் மனைவியாக கிடைத்ததே இல்லை! நிஜமாக தேர்தலில் நின்று ஜெயித்த உணர்வு உலகநாதனுக்கு! இந்த ஒரு விஷயத்திற்காகவே திருநெல்வேலி ஜில்லா முழுதும் ஒரு சிங்க நடை நடந்துவிட்டு வரலாம் போல இருந்தது மனிதருக்கு! கூடவே பரமேஸ்வரியையும் கூட்டிக்கொண்டு போனால் இன்னும் விசேஷம்தான்! ஆனால் பரமேஸ்வரி அவருக்கு இரண்டாம் தாரமாக வருவதில் இன்னொரு மறுபக்கம்கூட இருக்கிறது. கல்யாணமான பிறகு பரமேஸ்வரியை பார்க்கிற பணக்கார கிழவர்கள் உலகநாதன் மேல் பயங்கர பொறாமைப்பட சாத்தியம் இருக்கிறது! ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் அவர்!

# 10

நான்கு நாட்கள் கழித்து உலகநாதன் மறுபடியும் அப்பாதுரையுடன் அம்பாசமுத்திரம் போனார். அவர் போக வேண்டிய அவசியம் கிடையாது. ஆனாலும் கல்யாண தேதியை சொல்லப் போன அப்பாதுரையுடன் இவரும் ஒட்டிக் கொண்டார். எத்தனை வயசானாலும் மாமியார் வீட்டுக் கவர்ச்சி என்பது ஆம்பிளைகளுக்கு ஒரு மாதிரிதான் போலும்!



அம்பாசமுத்திரத்தில் மீண்டும் அந்த 'ஒரு கட்டு சமையல் அறை' வீட்டுக்குள் நுழைந்தபோது உலகநாதனின் மனம் பூவாகப் போயிருந்தது. அவரின் வயதைப் பொருட்படுத்தாமல் அழகான பெண்ணை கொடுக்க முன்வந்த அந்த நல்ல குடும்பத்தின் தார்மீக தலைவர் இனி உலகநாதன்தானே... அந்த உணர்வு மேலீட்டில் உலகநாதன் நிறைய வார்த்தைகளை அள்ளித் தெளித்து கோலமும் போட்டு விட்டார்...!

இறந்து போன காந்திமதியின் நூறு பவுன் நகைகள் பூராவும் பரமேஸ்வரிக்குத்தான் என்று பெருமையாக அறிவித்து விட்டார். இதைக் கேட்ட பரமேஸ்வரியின் கண்களிலோ எந்த மாற்றமும் கிடையாது. ஆனால் அவளுடைய அம்மாவின் முகத்தில் பெரிய வெளிச்சமே பரவிவிட்டது. அந்த அம்மா இந்த அளவுக்கு எதிர்பார்க்கவில்லை. எத்தனை கோட்டை விதைப்பாட்டு வயல் இருக்கிறது; தோப்பில் தென்னை மரங்களும் மாமரங்களும் எத்தனை; சொந்த வீடுகள் எத்தனை என்பதைத்தான் கேட்டுத் தெரிந்து வைத்திருந்தாள்.

ஆனால் நூறு பவுன் நகைபற்றி உலகநாதன் சொன்னதும் உலகநாதனைப் போலவே உணர்ச்சி வசப்பட்டு நன்றியுடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். உலகநாதனால் நிமிர்ந்து நேராக அந்த அம்மாவைப் பார்ப்பதற்குக் கொஞ்சம் கூச்சமாக இருந்தது. கூச்சம் புது மாமியார் என்பதால் இல்லை. புது மாமியாருக்கு அவரைவிட இரண்டு வயசு குறைச்சல் என்பதால் வந்தது இந்த கூச்சம்!

கல்யாண தேதியை குறித்துக் கொடுத்துவிட்டு உலகநாதன் விடைபெற்றுக் கொண்டார். தெருவில் அவர் நடந்தபோது எல்லா வீட்டு வாசல்களிலும் பெண்கள் நின்று அவரையே பார்த்தார்கள். அவர்களுக்கெல்லாம் தெரிந்த அழகான பெண்ணை மணக்கப் போகிறோம் என்ற பெருமையில் நடப்பதா; இருபத்

தைந்து வயசுப் பெண்ணை மணக்கப் போகிற ஐம்பத்தைந்து வயதான மனிதர் என்ற சின்ன வெட்கத்தில் நடப்பதா என்று தெரியாத குழப்பத்தில் நடந்ததால் உலகநாதனின் நடையே ஒரு மாதிரியாக இருந்தது!

செந்துறை போய் சேர்ந்ததும் உலகநாதன் செய்த முதல் காரியம் - இரண்டு மகள்களுக்கும் போன் பண்ணினதுதான். இந்த முறை முதலில் பம்பாய் மகள் செல்வராணிக்கு போன் பண்ணினார். அன்று அரசாங்க விடுமுறை. அதனால் குற்றாலச்செல்வன் வீட்டில் இருந்தான். செல்வராணி மகாலஷ்மி மந்திர் போயிருந்தாள். ஆகையால் உலகநாதனின் 'ட்ரங்க்காலு'க்கு குற்றாலச் செல்வனே பேச வேண்டியதாகிவிட்டது. அவர் சொன்ன ஒவ்வொரு வரிக்கும் 'உம் உம்...' என்பதற்கு மேல் அவனால் எதுவும் சொல்ல முடியவில்லை. உலகநாதனுக்கு அத்தனை எளிதாக பெண் கிடைத்துவிடாதென்று குற்றாலச்செல்வன் நம்பிக் கொண்டிருந்தான். அவனுடைய நம்பிக்கையில் ஒரு வண்டி அம்பாசமுத்திர மண் விழுந்துவிட்டது!

இந்த கல்யாணத்தால் உலகநாதனுக்குப் பிறகு அவனுக்கு வரவேண்டிய பங்குகள் கணிசமாக குறைந்து போய் விடலாம். அல்லது பங்கே வராமலும் போய் விடலாம்! அதனால் பரமேஸ்வரி பற்றி உலகநாதன் சொல்லிக் கொண்டிருந்த தகவல்களை சுவாரஸ்யம் இல்லாமலும் எரிச்சலோடும் கேட்டுக்கொண்டே வந்தவன் பரமேஸ்வரிக்கு இருபத்தைந்து வயசு என்பதைக் கேட்டதும் திகைத்து அழுகிற நிலைமைக்கு வந்து விட்டான்! 'கெழவருக்கு வந்த யோகத்தைப் பார்லே!' என்று விக்கித்துப் போனான்! இப்போது அவனுடைய மனைவி செல்வராணிக்கும் வயசு இதே இருபத்தைந்துதான்! பெண்டாட்டிக்கும் மாமியாருக்கும் ஒரே வயசு! அதோடு முடியவில்லை விஷயம். மாப்பிள்ளை குற்றாலச் செல்வனைவிட மாமியார்



பரமேஸ்வரிக்கு சரியாக ஐந்து வயசுக் குறைச்சல்! குற்றாலச் செல்வன் நிறைய கதைகள் வாசிக்கிறவன். இப்படி மாமியாருக்கும் பெண்டாட்டிககும் ஒரே வயசு என்பதை அவன் அந்தக் கதைகளில்கூட வாசித்ததில்லை! கடைசியில் உலகநாதனின் கல்யாண கதை இப்படியாகி விட்டது. குற்றாலச் செல்வனால் இதை கதையாக எழுத முடியாது. உடனே உட்கார்ந்து அவனுடைய அப்பாவிற்குக் கடிதமாக எழுத ஆரம்பித்து விட்டான்......

அம்பாசமுத்திரம் நேசமணி தெருவில் பரமேஸ்வரி கதை புஸ்தகம் ஒன்றைப் புரட்டியபடி அவளுடைய வீட்டுக்குப் பக்கத்து மேரி டீச்சரின் வீட்டில் இருந்தாள். மகளுக்கு இரட்டை ஜடை பின்னி ரிப்பன்களால் தூக்கிக் கட்டிய மேரி "ஓடுளா மக்கா-போயி ராணிக்கா வீட்டுல வெளையாடிட்டு வா மீனு கழுவி அறுக்கணும் எனக்கு. வேலை கெடக்கு."

"என்ன மீனுக்கா?" பரமேஸ்வரி கேட்டாள்.

"சாளை வைக்கலாம்னு பாத்தேன். சவம்! நெத்திலி மட்டுந்தான் வச்சிருந்தான். என்ன செய்ய-நாத்தமுன்னாலும் இருக்கட்டும்னு வாங்கிட்டேன். ஆஞ்சு கழுவினா எம்புட்டு இருக்குமோ... ஒன் கல்யாண தேதி சொல்லிட்டாங்களா இல்லையா?"

"சொல்லிட்டாங்கக்கா. தேர்தல் அன்னைக்கி கல்யாணம். கல்யாணம் இலஞ்சி குமரன் கோயில்ல..."

"அவுங்க அய்யருமாருங்க மாதிரி சுத்த சைவமாமே... நெசந்தானா?

"ஆமாக்கா... ஒங்களுக்கு பல்வலி சரியா போச்சாக்கா?"

"அது எங்கே போகும்... சவம் என்னைக் கெடத்திட்டுத்தான் போகும்! பொட்டு தண்ணிபட்டாலே பல்

பூராவும் கூசுது. சொன்னா காதுல விழுதா அந்த மனுசனுக்கு... என்னவோ போ... பொட்டைச் சவங்களுக்கு கல்யாணம் கட்டிக்காமலும் இருக்க முடியலை. என்னதான் பண்ணிப் போடு. நன்னியோ ஆம்பளைங்களுக்கு... சேக்காளி வீட்டுச் சோறு கெடைக்காதான்னு தான் புத்தி போகும். பெறவி அப்பிடி...!"

பரமேஸ்வரி வெறுமே புன்னகை செய்தாள்.

"ரொம்ப தைரியமா நீதான் ஒன்னைவிட முப்பது வயசு பெரியவுங்களை கட்டிக்கிறேன்னு சொல்லிட்டே... நம்பவே முடியலை. எனக்குத் தெரிஞ்சி பணத்தாசையெல்லாம் கூட கெடையாது ஒனக்கு..."

பரமேஸ்வரி மௌனமாக இருந்தாள். பணம் இல்லாமல் வாழ்க்கையில் பட்டிருக்கும் இன்னல்கள் ஒவ்வொன்றும் அவளுக்குள் தெரிந்து கொண்டிருந்தன. விருப்பப்பட்ட எதைப் பெறவும் பணம் அவளுக்குப் பிரச்னையாக இருந்தது. நல்ல நல்ல கதைப் புஸ்தகங்கள் ஒன்று விடாமல் வாங்கிப் படிக்க பரமேஸ்வரிக்கு அப்படியொரு ஆர்வம் உண்டு. ஒரு நாளில் ஒரே ஒரு தடவை சமையல் நடக்கிற அவருடைய குடும்பத்தில் ஒரு கதைப் புஸ்தகம் வாங்கிக் கொள்வது கூட குதிரைக் கொம்பான விஷயம். பக்கத்து வீடுகளில் கிடைக்கின்ற ஒன்றிரண்டு புஸ்தகங்களை எப்போதாவது வாங்கிப் படித்து பரமேஸ்வரி கதை வாசிக்கும் ஆர்வத்தைச் சிறிது தணித்துக் கொள்வாள். அதெல்லாம் ஒரு பானைத் தண்ணீர் குடிக்கிற ஆர்வத்திற்கு உள்ளங்கையளவு தண்ணீர் குடித்த மாதிரிதான் இருக்கும். தண்ணீரே குடிக்காததில்தான் சேர்த்தி அது...!

அதேபோல அழகழகான உடைகள் வேண்டும் பரமேஸ்வரிக்கு. குறிப்பாக மென்மையான பூனைக் குட்டி போன்ற வெளி நாட்டு நைலக்ஸ் சேலைகள். ரொம்ப விலை குறைந்த முரட்டு கைத்தறி சேலைகளுக்கு மேல் எதையும் எப்போதும் பரமேஸ்வரியால் வாங்கிக் கொள்ள முடிந்ததில்லை. இது வெறும் விலை குறைந்த விலை ஜாஸ்தியான என்ற பணரீதியான, விஷயம் இல்லை அவளுக்கு—மற்றவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிற மாதிரி... மென்மையும் நளினமும் கலந்த வேலைப்பாட்டு துணிகள் நளினமே இல்லாத கச்சாவாக நெய்யப்பட்ட துணிகள் என்ற ரசனைப் பார்வையில்தான் பரமேஸ்வரியின் ஆடை ஆர்வங்கள் அமைந்திருந்தன.



இதற்கும் மேல் அவளுக்கு சங்கீத ஆர்வம் இருந்தது. நாட்டியத்தின் மேல் ஆசை இருந்தது. முறைப்படி பாட்டு கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை பரமேஸ்வரிக்குள் ஊறிப்போய் கிடந்தது. இவை எல்லாவற்றுக்குமே பணம் தேவைப்பட்டது. இதற்குத் தான் அவளுக்குப் பணம் இல்லாமலும் இருந்தது.

ஆனால் பரமேஸ்வரியின் இந்த ஆசைகளுக்கும் ரசனைகளுக்கும் மிக அழகாக அவள் இருப்பதுதான் காரணம் என்று அவளின் அம்மாவும் அண்ணன் கண்ணுசாமியும் நினைத்தார்கள். மற்றவர்களைவிட தான் உயர்ந்தவள் என்று காட்டிக் கொள்ளும் ஆசையும் இதற்குக் காரணம் என்று அவர்கள் நினைத்தார்கள். யாரோடும் அதிகம் பேசாமல் இருப்பதும்; சப்தமாக சிரிக்காமலும் இருப்பது கூட பரமேஸ்வரியின் அழகால் வந்த மௌனமான செருக்குத்தான் என்றும் அவர்கள் அபிப்பிராயம் வைத்திருந்தார்கள்.

பரமேஸ்வரிக்கு அவளுடைய அம்மாவிடமும் அண்ணனிடமும் இன்னொரு பெரிய கஷ்டமும் இருந்தது. அவளுடைய தங்கச்சிகள் அங்கே இங்கேயென்று வெளியில் போய் வரலாம். பரமேஸ்வரி எங்கேயும் போக முடியாது. வர முடியாது. அதற்கு அனுமதி கிடையாது அவளுக்கு. பக்கத்தில் இருக்கும் ஐந்தாறு வீடுகளுக்கு மட்டும் அவள் போய் வரலாம் — அதுவும்

அந்த வீடுகளில் ஆம்பளைகள் இல்லாத போது...! அதிகமாக வெளியில் போக அனுமதித்தால் பரமேஸ்வரியின் அழகு அவளை தவறான பாதைகளுக்கு இட்டுச் சென்றுவிடும் என்று அவளுடைய அண்ணன் கண்ணுசாமி பயந்தான். பரமேஸ்வரிக்கோ ரயிலில் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டு ஊர் ஊராக போக ஆசை... —இப்படி எல்லாமே அவளுக்கு நிறைவேறாத ஆசைகள்தான். பிறந்த வீட்டில் அவள் ஒரு கைதியைப் போலத்தான் இருந்தாள். எந்தக் கைதிக்குமே எதிர்பார்ப்பு விடுதலைதான். இந்தச் சிறையின் கதவுகளைத் திறக்க பரமேஸ்வரிக்கு கல்யாணம் என்ற சாவி தேவைப்பட்டது. அந்தச் சாவி கிடைக்கவும் பணம் தேவைப்பட்டபோது அவளுடைய உணர்வுகளில் பணத்திற்கான தாபமும் தாகமும் கனல்போல மூண்டு போயிருந்தன. ஆனால் அவளுடைய இந்தப் பண தாகத்திற்கும் அவளின் பேரழகுதான் காரணம் என்று கண்ணுச்சாமி முடிவு செய்ததைத்தான் பரமேஸ்வரியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. விரும்பும் சில விஷயங்களைப் பெற பணம் வேண்டும் என்று நினைப்பது வேறு; பெரும் பணக்காரியாக வேண்டும் என்று பேராசைப் படுவது வேறு என்று வாய் கிழியப் பேசி அண்ணன் கண்ணுச்சாமிக்குப் புரிய வைப்பதற்கு ஒரு வாய் வேண்டும். பரமேஸ்வரியிடம் அந்த வாய் இல்லை. வாயே திறக்காமல் இருந்ததற்கும் அவளுக்கு அம்மாவிடமும் அண்ணனிடமும் இருந்து கிடைத்த பெயர்—ரொம்ப அழுத்தக்காரி...

இந்த மாதிரியோ அல்லது வேற மாதிரியோ பிறந்த வீட்டில் கிடந்து மூச்சுத் திணறிக் கொண்டிருப்பதால்தான் நிறைய பொம்பளை பிள்ளைகளுக்கு எவனாக இருந்தாலும் சரி கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு பிறந்த வீட்டைவிட்டு ஓட்டம் பிடிக்கலாம் என்ற மனவேகத்தில் காத்திருக்கிறார்கள் என்பது மேரி டீச்சர்



அடிக்கடி பாடுகிற ஒரு பாட்டு... ஆனால் என்ன கஷ்டம்—போய் சேர்ந்த இடத்திலும் பொம்பளைப் பிள்ளைகளுக்கு வேறு மாதிரியான மூச்சுத் திணறல்கள்... மேரி டீச்சரின் இந்தப் பாட்டுக்களையெல்லாம் மௌனமாகக் கேட்டவாறு அனுமதிக்கப்பட்ட நேரங்களில் பரமேஸ்வரி மேரி டீச்சரின் வீட்டில் இருப்பாள். வெளியில் ஒன்றும் மனசில் ஒன்றும் என்ற வேஷமே இல்லாத மேரி டீச்சரின் நேர்குணம்தான் பரமேஸ்வரியை அவளிடம் மிகவும் நெருக்கமாகி விட்டிருந்தது.

இந்த நெருக்கம்கூட கண்ணுச்சாமிக்கு எரிச்சலான விஷயம். பரமேஸ்வரி சம்பந்தப்பட்ட எந்த விஷயமுமே பிடிக்காதே அவனுக்கு. ''ஒனக்கும் டீச்சருக்கும் அப்படி என்னதான் பழக்கமோளா...'' என்று எத்தனையோ சந்தர்ப்பங்களில் பரமேஸ்வரியைப் பார்த்து கேட்டிருக்கிறான் அவன். இப்படி எதையாவது கேட்டுக் கொண்டிருப்பது கண்ணுச்சாமியின் வழக்கம் என்றால் பதிலே சொல்லாமல் இருப்பது பரமேஸ்வரியின் வழக்கம். ''வாயைத் தெறந்திராதளா! முத்து சித்து உதிர்ந்து வைக்கப் போகுது!'' என்பான் எரிச்சலாக.

இப்படி பரமேஸ்வரி சம்பந்தப்பட்ட எல்லாமே கண்ணுச்சாமிக்கு எரிச்சலானதுதான் என்று இருக்கும்போது அவளைக் கல்யாணம் செய்து கொடுப்பதென்பது எவ்வளவு பெரிய எரிச்சலானதாக இருக்கும்... அதுவும் கையில் பைசா துட்டு இல்லாத நிலையில்... அதனால் முதல் தாரத்தை இழந்தவனாக இருந்தாலும் பரவாயில்லை; துட்டு இருக்கிறவனாகப் பார்க்க வேண்டியிருந்தது...

இரண்டாம் தாரமாக வாழ்க்கைப் படுவதில் பரமேஸ்வரிக்கும் ஆட்சேபணை கிடையாது. ஆனால் அவளை இரண்டாம் தாரமாக கல்யாணம் செய்து கொள்ள வருகிறவருக்கு முதல் மனைவியின் மூலம்

குழந்தைகள் எதுவும் இருக்க வேண்டாம் என்பது அவளுடைய விருப்பம். ஆனால் இரண்டாம் தாரமாக கல்யாணம் செய்து கொள்ள முன்வந்தவர்கள் எல்லோருக்கும் பத்து வயதில் ஏழு வயதில் அல்லது நான்கு வயதில் என ஒன்றோ இரண்டோ குழந்தைகள் இருந்தார்கள். அந்த ஆண்களை மணந்து கொள்ள பரமேஸ்வரி மறுத்து விட்டாள். நாற்பது வயதோ அதற்கு அதிகமாகவோ இருக்கிற பண வசதி உள்ள ஒருத்தருக்கு மனைவி ஆவதற்கு அவளின் மனம் தயாராக இருந்தது. ஆனால் சட்டென ஒருத்தரின் இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவாகிவிட அவளின் உணர்வுகள் மறுத்தன! நாளாக நாளாக அவளுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்குத்தான் அவளால் அம்மாவாக உருவாக முடியும். அம்மா என்பது ஒரே நாளில் அவள் மேல் சுமத்தப்பட்டதாக இருக்கக் கூடாது. வாய் திறந்து இதை பரமேஸ்வரி சொன்னதற்கு கண்ணுச்சாமி கேட்ட கேள்வி இது— ''இன்னொருத்தியோட புருஷன் ஒனக்குப் புருஷனாகலாம். இன்னொருத்தியோட புள்ளைங்க ஒனக்குப் புள்ளைங்க ஆயிடக் கூடாதோ?''

—இப்படியெல்லாம் இருந்த சூழ்நிலையில்தான் அப்பாதுரை உலகநாதனின் சம்பந்தத்தைக் கொண்டு வந்தார். முதலில் எல்லோருமே அவரின் வயசுக்காகத்தான் யோசித்தார்கள். வயது ஒரு பிரச்னையாக இருக்குமாயென்று பரமேஸ்வரி யோசனை செய்து பார்த்தாள். பிரச்னையாக இருக்குமானால் எந்த விதத்தில் பிரச்னையாக இருக்கும் என்று எண்ணிப் பார்த்தாள். ஆனால் பதில் தெரியவில்லை அவளுக்கு.

அதே நேரம், உலகநாதனின் விஷயத்தில் இருக்கும் மூன்று சாதகங்களை பரமேஸ்வரியால் அலட்சியப்படுத்த முடியவில்லை. அவளுடைய ஆர்வம் அத்தனையையும் பூர்த்தி செய்து கொள்ள பணம் உலகநாதனிடம் ஏராளமாக இருந்தது. அவரின் இரண்டு மகள்



களும் கல்யாணமாகி ரொம்ப தூரத்தில் இருந்தார்கள். எப்போதாவது அவர்கள் செந்துறை வந்தாலும் அதிக நாட்கள் தங்கியிருக்கப் போவதில்லை. பிள்ளைகளும் பெற்றுக் கொண்டுவிட்ட அவர்களிடம் பரமேஸ்வரி அம்மாபோல இருக்க வேண்டியதும் இல்லை! மனிதரை ஒரு தடவை பார்த்துவிட்டால் அவருடைய வீட்டில் கால் வைக்கலாமா வேண்டாமா என்ற முடிவிற்கு வந்து விடலாம். இந்தத் தீர்மானத்தில்தான் உலகநாதனை பெண் பார்க்கவரச் சொன்னாள்.

பெண் பார்க்க வந்த உலகநாதன் அவளுக்கு வயதான பணக்காரர் போலத்தான் இருந்தாரே தவிர வயசான ஆம்பளை போல தெரியவில்லை; உலகநாதன் வந்து பெண் பார்த்துவிட்டுப் போன நான்காம் நாள் அவரைக் கல்யாணம் செய்து கொள்ள பூர்ண சம்மதம் என்பதை அண்ணனிடமும் அம்மாவிடமும் சுருக்கமாக சொல்லிவிட்டு பரமேஸ்வரி எப்போதும் போல மௌனமாக இருந்து விட்டாள்... இந்த மௌனம்தான் அவளின் சீலம்...

# 11

உலகநாதனை கல்யாணம் செய்து கொள்ள பரமேஸ்வரி சம்மதம் சொல்வாள் என கண்ணுச்சாமி கொஞ்சம் எதிர்பார்க்காவிட்டாலும் கூட; மனசுக்குள் அவள் ஒரு பணக்காரனுக்காக காத்துக் கொண்டிருக்கிறாள் என்ற எண்ணத்தில் அவள் மேல் அவனுக்கு காழ்ப்புணர்ச்சி இருந்தது, அதே போல அழகான பெண்களைக் கல்யாணம் செய்து கொள்வதற்காகவே பிறந்து வளர்ந்தது போல் வி..றப்பாக இருக்கிற பணக்காரன்கள் மேலேயும் கண்ணுச்சாமிக்கு துவேஷம்

உண்டு. அப்படிப்பட்டவனுக்கு பரமேஸ்வரிக்கும்
உலகநாதனுக்கும் கல்யாணம் நிச்சயமானதும் மன
சுக்கு எப்படி இருந்திருக்கும்? எப்படி எப்படியோ
இருந்தது! மௌனமாகவே இருந்து பரமேஸ்வரி
அவனை வென்று விட்ட மாதிரியும் இருந்தது...

இனி பரமேஸ்வரியிடம் கண்ணுச்சாமியின் அதி
காரம் எதுவும் செல்லுபடியாகாது! விஷயம் அதோடு
முடியாது. வீட்டில் இனிமேல் அவளுடைய அதிகாரக்
கொடிதான் பறக்கும். தானும் இனி அவளின் அதிகாரத்
திற்குக் கீழ்ப்படிய வேண்டியிருக்குமோ என்று வேறு
பயந்தான். அந்த பயத்தில், உலகநாதன் ரொம்ப வய
தானவர் என்ற காரணம் காட்டி கல்யாணத்திற்கு
மறுப்புத் தெரிவித்து விடலாமா என்றுகூட யோசித்
தான். ஆனால் பரமேஸ்வரியே சம்மதம் தெரிவித்து
விட்ட பிறகு வழி இல்லாமல் கண்ணுச்சாமி ஊமைச்
சாமியாக இருக்க வேண்டியதாகி விட்டது!

கண்ணுச்சாமி ஊமைச்சாமியாய் இருக்க இன்
னொரு காரணமும் இருக்கிறது. அம்பாசமுத்திரம் நேச
மணி தெருவில் உலகநாதன் அவருடைய பணத்தை
முதலீடு செய்து பெரியதாக மளிகைக் கடை ஒன்றை
கண்ணுச்சாமிக்கு ஆரம்பித்துக் கொடுக்கப் போகிறார்.
கடைக்கு முதலாளி அவர்தான். கண்ணுச்சாமி 'வொர்க்
கிங் பார்ட்னர்!' இன்னொரு விஷயம் - அதே நேசமணி
தெருவில் நல்லதாக வீடு ஒன்று விலைக்கு வந்தால்
பரமேஸ்வரியின் பெயரில் வாங்கிப் போட்டு விடப்
போகிறார். அந்த வீட்டில் பரமேஸ்வரியின் அம்மா
குடும்பம் வாடகை எதுவும் இல்லாமல் இருந்துகொள்ள
லாம்! - இத்தனை பொருளாதார நலத் திட்டங்களை
உலகநாதன் அறிவித்த பிறகு எப்படி கண்ணுச்சாமி
யால் ஊமைச்சாமியாகாமல் இருக்க முடியும்?! சீக்கிரம்
அவனும் ஒரு பணம் புரளும் ஆசாமியாகி விடுவான்.
முடிந்தால் பரமேஸ்வரியை விடவும் அழகான ஒருத்



தியை அவனாலும் கல்யாணம் செய்து கொள்ள
முடியும்! அது போதும் அவனுக்கு!

உலகநாதன் - பரமேஸ்வரி கல்யாண நிச்சயதார்த்
தம் அம்பாசமுத்திரம் பூராவும் எப்படி பரபரப்பாக
பேசப்பட்டதோ; அதைவிட பரபரப்பாக செந்துறை
வட்டாரத்திலும் பேசி தீர்க்கப்பட்டது. செந்துறையில்
முதலில் விசாரித்தவர்களுக்கெல்லாம் உலகநாதன்
கொஞ்சம் சங்கோஜத்துடன் பதில் சொல்லிக் கொண்
டிருந்தார். பிறகு பெருமையோடு நெஞ்சை உயர்த்திக்
கொண்டு பதில் சொன்னார். தெருவில் இறங்கி அவர்
நடந்த நடையில் சிறிது செருக்குக்கூட தெரிந்தது!

பரமேஸ்வரி வந்த பிறகு இதற்கும் மேல் ஒரு ராஜ
நடை நடக்கவும் உலகநாதனுக்கு உத்தேசம்! ஊரில்
நடக்கிற எல்லா கல்யாணம் காட்சிக்கெல்லாம் பரமேஸ்
வரியையும் அழைத்துக் கொண்டு சபைக்கு அலங்கார
மாக போய் வரலாம்! எவ்வளவு பெரிய பணக்காரனாக
இருந்தாலும் மனைவி இல்லாதவனாக ஒரு விசேஷத்
திற்குப் போனால் அதற்குக் கிடைக்கும் மரியாதையும்
கவனிப்பும் வேறு! அதே விசேஷத்திற்கு மனைவி
யுடன் ஜோடியாக போனால் அதற்குக் கிடைக்கிற
உபச்சாரமும் வரவேற்பும் தனி!

காந்திமதி இறந்து போன பிறகு உலகநாதன் அவ
ருடைய அனுபவத்திலேயே பார்த்திருக்கிறார். பெண்
டாட்டி இல்லாத ஆம்பளைக்கும்; புருஷன் இல்லாத
பொம்பளைக்கும் இந்தச் சமூகத்தில் மரியாதை கிடை
யாது!

தேவையில்லாமல் உலகநாதனின் மனதில் புருஷன்
இல்லாத சிவமதியின் உருவம் தெரிந்தது. 'போளா ஒன்
வழியைப் பாத்து...' என்று வேகமாக தலையை குலுக்கி
அவளின் ஞாபகத்தை மனசில் இருந்து விரட்டி அடித்
தார். ஆனால் சிவமதியால் அத்தனை எளிதாக உலக

நாதனை ஞாபகத்தில் இருந்து விரட்டித் தள்ள முடியவில்லை. பார்வையால் அவளை உலகநாதன் எத்தனைக்கு எத்தனை தூக்கி எறிந்தாரோ அந்த அளவுக்கு அவளும் அவரை மனசில் போட்டு துவைத்துப் பிழிந்தாள்!

'கள்ளப் பார்வை பாக்கறதுக்கு மட்டும் ஒமக்கு அறுதலி முண்டை வேணும்! கட்டிக் கொள்றதுக்கு நேத்து சமைஞ்ச கன்னிச் சிறுக்கி வேணும்! நடத்துவே நம்ம களவாணி ராசாங்கத்தை! வயசாக வயசாக சின்ன பிள்ளையளா தேடுதாக்கும்! கட்டிட்டு வாரும் பாக்கேன் அவ அழகையும்!' என்று சிவமதி மனசுள் பொருமி பொருமி பொங்கிப் போயிருந்தாள். திண்ணையில் அவளைப் பார்த்தாலே அழகான சின்ன வயசுப் பெண்ணை கட்டிக் கொள்ளப் போகிற பூரிப்பையும் செருக்கையும் உலகநாதன் சும்மா சும்மா நடையில் காட்டிக் கொண்டிருந்தால் பொறுத்துக் கொண்டிருப்பாளா ஒருத்தி... அதுவும் சிவமதி...

ஒருநாள் தெருவில் திமிர் நடையை காட்டிக் கொண்டு உலகநாதன் வந்தபோது விருட்டென்று எழுந்து வீட்டுக்குள் போய் சிவமதி அவளுடைய எல்லா ஆங்காரத்தையும் கதவின் மேல காட்டுவது போல எட்டுத் தெருவிற்குக் கேட்கிற மாதிரி தடாலென்று அறைந்து சாத்தினாள். உலகநாதனுக்கு இது மூஞ்சியில் அறைந்ததற்கு சமானம்! ரத்தமாக சிவந்துவிட்டது அவருடைய முகம். அவமானத்தில் உடம்பெல்லாம் பதறியது. "பழி வாங்கிட்டா சிறுக்கிவிள்ளா! ஹோ! இதுக்கு மேல என்னளா செய்வ? ஒன்னை வச்சி அழகு பாக்க புதுசாவா எவனும் வரப் போறான்... எனக்கு வரப் போகுதா பாரு பூலோக ரம்பை! ஒன்னை அவ வால்ல கட்டித்தான்ளா வெளுக்கணும்!" என்றும் அதற்கு மேலும் ஏழெட்டு நாட்களுக்கு உலகநாதன் சிவமதியை வசைமாரிப் பொழிந்து கொண்டிருந்தார்.



அது மட்டுமா? சிவமதியின் மேல் இருந்த அத்தனை கோபமும் அவளுடைய தகப்பன் அழகர்சாமியின் மேலும் பாய்ந்ததென்றால் உலகநாதன் என்ற நிலப்பிரபு எவ்வளவு மோசமான ஆசாமியென்று தெரிந்து கொள்ள வேற ஒரு உதாரணமே வேண்டாம். அப்பாவியான அழகர்சாமியை மனசுக்குள் உலகநாதன் எப்படி ஏசினார் தெரியுமா? "ஈர் எடுக்கக் கூலியாக பேன் கேட்கிற பிச்சைக்காரப் பயல்" என்று...!

ஆனால்; மூஞ்சியில் அறைந்த மாதிரி சிவமதி கதவைச் சாத்தியதெல்லாம் அவமானத்தில் சேர்த்தியே இல்லை என்பது போன்ற வேறொரு சம்பவம் பத்து நாட்களுக்குப் பிறகு உலகநாதனின் வாழ்க்கையில் நடந்தது. உலகநாதனின் வீட்டுக்குள் சீவலப்பேரியில் இருந்து வந்த அவரின் பெரிய மச்சான் இடது காலை எடுத்து வைத்து நுழைந்தார்,

"அடடே! பெரிய மச்சான்; வாங்க வாங்க. ஏது இவ்வளவு தூரம்?"

"முக்கியமான ஜோலியா வந்தேன்..."

"ஜோலி கெடக்கட்டும். மொதல்ல உக்கார கூடாதா?"

பெரிய மச்சான் விறைப்பாக உட்கார்ந்தார். பிறகு தொண்டையை செருமிவிட்டு சொன்னார். "போன வாரத்ல பம்பாய்ல இருந்து செல்வராணி அவ ஆச்சிக்கு கடுதாசி ஒண்ணு போட்டிருந்தா..."

"ஆச்சிகிட்ட ரொம்பப் பிரியமாச்சே அவளுக்கு"

"அம்பாசமுத்ரத்ல நீங்க பொண்ணு பாத்து கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டதா கடுதாசியில எழுதியிருந்தா"

"ஆமா..." அதற்கு மேல் உலகநாதனுக்கு சொல்ல விருப்பம் இல்லை. மூக்குப் பொடியை எடுத்து மூக்கில் தேய்த்துவிட்டு பேசாமல் இருந்தார்.

''அந்தக் காலத்ல நாங்க எங்க காந்திக்காவோட கல்யாணத்ல அவங்களுக்கு எம்பதுபவுன் நகை செஞ்சி போட்டிருக்கோம்.''

''இப்ப எதுக்கு மச்சான் அதைப்பத்தியெல்லாம் பேசணும். காந்தியே போயாச்சி!''

''அதைப் பத்திதான் பேசணும்'' என்று ஆரம்பித்து பெரிய மச்சான் சொன்ன சமாச்சாரம் இது—

அந்த எண்பது பவுன் நகைகளை தூக்கி உலகநாதன் அம்பாசமுத்திரம் பெண்ணுக்குக் கொடுப்பது என்பது ஒத்துக் கொள்ள முடியாத சமாச்சாரம்! அந்த நகைகள் உலகநாதனின் இரண்டு மகள்களுக்கு மட்டும் தான் சேர வேண்டும்! வேறு யாருக்கும் அந்த நகைகளின் மேல் எந்தப் பாத்யதையும் கிடையாது! ஆனபடியால் உலகநாதன் இப்போதே அந்த எண்பது பவுன் நகைகளை எடைபோட்டு பெரிய மச்சானிடம் ஒப்படைத்து விடவேண்டும்! நகைகளை சரிசமமாக பிரித்து சீவலப்பேரி ஏசுவடியாள் இல்லத்துக்காரர்களே காந்திக்காவின் மகள்களுக்குக் கொடுத்துக் கொள்வார்கள்...! சூடம் அணைத்துச் சொல்லலாம். வாழ்க்கையில் அதற்கு முன் இப்படிப்பட்ட ஒரு அவமானத்தை உலகநாதன் அனுபவித்ததில்லை. அவரின் மேட்டு விழிகளில் ரத்த வரிகள் படர்ந்து விட்டன...

இத்தனைக்கும் பெரிய மச்சான் விவகாரமா செய்ய வந்திருக்கிறார்? கிடையாது. ஒரு சமூக பாரம்பர்ய நடைமுறையை நினைவுபடுத்தி அதைச் செயல்படுத்தத்தான் வந்திருக்கிறார். ஆனால் இதை அகங்காரம் பிடித்த உலகநாதன் விவகாரமாக்கினார். பெரிய மச்சான் மெனக்கெட்டு வந்து தன்னை அவமதித்து விட்டதாக ஒரு குதி குதித்தார். நகையையும் தர முடியாது; எந்த நட்டையும் தர முடியாதென்று கூச்சல்

MARA PU



போட்டார், கோர்ட்டுக்கே போனாலும்கூட பயந்திட மாட்டேனென்று ஆணித்தரமாக சொன்னார். உலகநாதன் பக்கம் நியாயம் இல்லைதான். ஆனால் அதற்காக பெரிய மச்சானும் கூச்சலெல்லாம் போடவில்லை. கனமான பெருமூச்சுடன் கேட்டார் ''அப்பக் காந்திக்கா நகைகளை தரப் போறதா இல்லை நீங்க?''

''எதையும் ஒரே ஒரு தடவைதான் நான் சொல்லுவேன்!'' இதை உலகநாதன் மூன்று தடவை சொன்னார்!

''அப்பக் கடவுள் விட்ட வழி. ஆனா ஒண்ணை மாத்திரம் மறந்திடாதீங்க மாப்ளை... கடைத் தேங்காய எடுத்து பிள்ளையாருக்கு ஒடைக்கலாம்னு பாக்குறீங்க... பிள்ளையாருக்கு நீங்க தேங்கா ஒடைங்க! ஆனா எங்க கடைத் தேங்காய எடுத்து ஒடைக்காதீங்க!''—இதைச் சொல்லிவிட்டு பெரிய மச்சான் எழுந்து விட்டார். இரண்டு எட்டு எடுத்து வைத்தவரை உலகநாதனின் கோபக்குரல் கூப்பிட்டது ''தேங்கா ஒங்க கடைத் தேங்கா கெடையாது மச்சான்! அது ஒங்க தோப்புத் தேங்கா! என் கடைக்கும் அது வந்து சேர்ந்தாச்சி! இப்ப அது என் கடைத் தேங்கா! அதை நான் பிள்ளையாருக்கு ஒடைக்கிறேனோ இல்லை; பெருமாளுக்கு ஒடைக்கிறேனோ அது என் பாடு!''

இதெல்லாம் பெரிய மச்சானின் காதில் விழுந்ததோ இல்லையோ; உங்கள் பேச்சை கேட்டுக் கொண்டு நிற்க இனிமேல் நான் தயாரில்லை என்கிற மாதிரி வேகமாக படிகளில் இறங்கி திரும்பிக்கூட பார்க்காமல் நடையை கட்டி விட்டார்!

''ஒடுவே...!'' என்று ஆங்காரத்துடன் முனகிக் கொண்டே உலகநாதன் மூக்குப் பொடியை நிறையவே எடுத்து காட்டமாக இழுந்தார். பிரச்னை இப்படி வரும்

என்று அவர் நினைத்துக்கூட பார்க்கவில்லை. அவருடைய மனதில் ஒரு துக்கம் நெகிழ்ந்து சுய இரக்கத்தில் உருகிக் கரைந்தது. 'பாருவே ஒலகநாதா! ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிறதுக்கு முந்தி இப்படியெல்லாம் பாடு ஒனக்கு...!'

ஆனால் ஒரு விஷயம். தான் தப்புப் பண்ணிவிட்டோம் என்பது உலகநாதனின் மனச்சாட்சிக்குத் தெரிந்து விட்டது. காந்திமதியின் அம்மா வீட்டில் அவளுக்குச் செய்துபோட்ட நகையை தூக்கி பரமேஸ்வரிக்குக் கொடுப்பதற்கு கொஞ்சம்கூட அவருக்கு உரிமை கிடையாது. ஆனாலும் தான் பண்ணியது தப்பு என்று மச்சானிடம் மன்னிப்புக் கேட்பதற்கு அவருடைய சுய கௌரவம் இடம் தரவில்லை. மன்னிப்புக் கேட்கிற பரம்பரையா அவருடைய பரம்பரை...! அதனால் 'வரட்டும் பாப்பம்' என்று வேட்டியை வரிந்து கட்டினார்! மூன் வைத்துவிட்ட காலை இனி அவர் பின் வைப்பதாக இல்லை! சிவலப்பேரிக்காரர்கள் அவரைப்பற்றி இனி என்ன நினைத்தாலும் கவலை கிடையாது அவருக்கு. அம்பாசமுத்திரத்துக்காரர்கள் தான் தப்பாக அவரைப்பற்றி எதுவும் நினைத்துவிடக் கூடாது. இனிமேல் அவருக்குத் தேவை புது மாமியார் வீடுதானே தவிர பழைய மாமியார் வீடு இல்லை. இந்த வேகமான மன நிலையில் உலகநாதன் பம்பாய் மகள் செல்வராணிக்கு ஒரு 'டிரங்க்கால்' அடித்தார்!

''செல்வராணியா?''

''ஆமாப்பா''

''ஒன் ஆச்சிக்கு நீ என்ன எழுதினே?''

''எப்பப்பா?''

''உலகநாதனின் கோபம் ஜாஸ்தியாகியது ''எட்டு வருஷத்துக்கு முந்தி''



''ஒண்ணும் எழுதலையேப்பா...'' செல்வராணி பயந்துகொண்டே சொன்னாள்.

''நெசமாவா ஒண்ணும் எழுதலை?''

செல்வராணி பேசாமல் இருந்தாள்.

''ஓங்க எல்லாருக்கும் நான் கல்யாணம் பண்ணிக்கிறது பிடிக்கலை. அப்படித்தான?''

''இல்லப்பா.''

''நொல்லப்பா! பிடிச்சிருந்தா ஓங்க அம்மா நகையை நான் ஒன் சின்னம்மாவுக்கு கொடுக்கிறதப் பத்தி மெனக்கெட்டு ஒன் ஆச்சிக்கு எழுதியிருப்பியா?''

செல்வராணியின் கண்களில் நீர் முட்டியது.

''ஒன் பெரிய மாமன் வந்து என்னல்லாம் கேட்டுட்டு போயிட்டார் தெரியுமா?''

''தெரியாம செஞ்சிட்டேன். என்னை மன்னிச்சிருங்கப்பா.''

''வெள்ளம் தலைக்கு மேல போயாச்சி தாயி! காத்துல பறந்தாச்சி என்னோட மானம் மரியாதை எல்லாம். நான் கிறுக்கன்! பேசாம மண்டையைப் போடற வரைக்கும் கிருஷ்ணா ராமான்னு இருந்திருக்கணும். நீங்களும் பம்பாயிலும் டெல்லியிலும் உக்காந்துக்கிட்டு எங்கப்பா ஒத்தையில வெந்ததையும் வேகாததையும் தின்னுக்கிட்டு கிடக்காரேன்னு மூக்கால அழுதிட்டு சும்மா இருந்திருப்பீங்க! நான் செத்ததும் ஓங்க அம்மா படத்துக்குப் பக்கத்லேயே என் படத்தையும் மாட்டி வச்சிட்டு திதி வந்தா ரெண்டு பூ போட்டு பாயசம் பண்ணிச் சாப்பிட்டு சாமி கும்பிட்டுட்டு ஓங்க பாட்டுக்கு இருந்திருப்பீங்க! அப்படி இருந்தாத்தான் ஓங்களுக்கும் சரிப்படும்! ஒருத்தியைப் பாத்து கட்டிக்கலாம்னு பாத்தா ஆச்சிக்காரிக்கும் பூச்சிக்காரிக்கும் ஒடனே தந்தி அடிச்சிருவீங்க...!''

இந்த நீண்ட டெலிபோன் பேச்சை உலகநாதன் படபடப்பாகவோ கத்தியோ பேசவில்லை. சாமவேதம் சொல்கிற மாதிரி இழுத்து இழுத்து மெதுவாகத்தான் சொல்லிக் கொண்டிருந்தார். இருந்தாலும் பேசிவிட்டு நாற்காலியில் இருந்து எழுந்தபோது கீழே விழப் போவது போல இருந்ததால் சட்டென்று சுவரைப் பிடித்துக் கொண்டார். கொஞ்ச நேரம் பயத்துடன் அப் படியே நின்று கொண்டிருந்தார். லேசாக உடம்பு வியர்த்தது. மணிக்கட்டை தொட்டு 'பல்ஸ்' பார்த்தார்! நாடி ரொம்ப வேகமாக துடித்தது! உலகநாதன் அவசர அவசரமாக பெருமாளுடன் பேசினார் 'கல்யாண தேதி யெல்லாம் நிச்சயமாகிவிட்ட பின் என் உடம்புக்கு எதுவும் வந்துவிடக் கூடாது பெருமாளே! நோய் நொடி இல்லாமல் வாழ்க்கையை பரமேஸ்வரியுடன் நான் அனுபவிக்க வேண்டும் மறந்து விடாதே! உன் பாட்டுக்கு எனக்கு ஏதாவது நோய் நொடியை கொடுத்துவிட்டால்—நான்—இந்த உலகநாதன் ஆளே மாறிப் போயிடுவான்! அப்போது பெருமாள் உலக நாதனை தப்புச் சொல்லக் கூடாது!' ஆனால் பாவம்; உலகநாதனின் இந்தப் பூச்சாண்டியை பெருமாள் கண்டு கொள்ளவில்லை. காதிலும் போட்டுக்கொள்ள வில்லை...!

# 12

மறுநாள் காலையில் எழுந்ததும் உலகநாதன் டாக்டரிடம் போய் உடம்பைச் சோதித்துப் பார்த்துக் கொண்டபோது அவருடைய ரத்தக் கொதிப்பு இரு நூறைத் தொட்டிருந்தது. மிரண்டு போனார் உலக நாதன். எந்தச் சமயத்திலும் அவருக்கு ரத்தக் கொதிப்பு



இருந்ததில்லை. டாக்டர் உலகநாதனை எச்சரிக்கை யாக இருக்கச் சொன்னார். மாத்திரைகள் நிறைய எழுதிக் கொடுத்தார். உப்பு இல்லாமல் சாப்பிடச் சொன்னார். ஒரு நாள் விட்டு ஒரு நாள் கண்டிப்பாக வரச் சொன்னார்.

உலகநாதனின் மனம் வேறு எதிலுமே ஈடுபடாமல் ரத்தக் கொதிப்பிலேயே அமுந்திக் கிடந்தது. கல்யாண தேதி நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த நேரம் பார்த்தா இப்படி ஒரு ரத்தக் கொதிப்பு வந்து சேரும்... இதற்கு பேசாமல் பெருமாள் உலகநாதனை வைகுண்டத்திற்கு கூட்டிக்கொண்டு போய்விடலாம்! வாழ்ந்தால் பரமேஸ் வரியுடன் நல்லபடியாக வாழ வேண்டும். அவளுடன் ரத்தக் கொதிப்பு நோயாளியாக வாழ்வதற்கு வாழா மலேயே இருந்துவிட்டுப் போகலாம்! ஏற்கனவே பரமேஸ்வரியைவிட முப்பது வயசு ஜாஸ்தியானவர்! இப்படி நோயாளியாக வேறு ஆகிவிட்டால் பரமேஸ்வரி மதிப்பாளா உலகநாதனை! மதிக்காவிட்டால் போச்சே! குடி முழுகிப் போய் விடுமே உலகநாதனுக்கு!

உலகநாதன் ரொம்ப கோபத்துடன் பெருமாளுக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்தார்! இந்த உடம்பு விஷயத் தில் பெருமாள் அவருக்குப் பெரிய கஷ்டம் எதையும் தந்துவிடக் கூடாது. மீறி தந்தாரென்றால் உலகநாதன் அவருடைய ஆயுசுக்கும் எந்தப் பெருமாள் கோயில் வாசல்படியிலும் காலை வைக்க மாட்டார்!

பெருமாள் எதற்கு வம்புபென்று உலகநாதனின் மிரட்டலுக்குப் பயந்து போனாரோ என்னவோ அவரின் ரத்தக் கொதிப்பு பத்து நாட்களில் நூற்றி ஐம்பதுக்கு வந்து விட்டது. இது போதும் உலகநாத னுக்கு. கண்ணீர் மல்க பெருமாளை சேவித்துவிட்டு கல்யாண வேலைகளில் ஜரூராக இறங்கிவிட்டார். இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான் வீட்டில் அவரின்

சமையல். பரமேஸ்வரியின் விதவிதமான சமையலின் வாசனை பெத்தையாவின் வீடு வரைக்கும் சுழன்று சுழன்று அடிக்கப் போகிறது! அந்த வாசனையை நோக்கி நாக்கை சப்புக் கொட்டியவாறு உலகநாதன் என்ற ஆணாதிக்க மனப்பான்மை கொஞ்சம் ஜாஸ்தியாகவே கொண்ட நிலப்பிரபு மனசால் வேகமாக நடந்து கொண்டிருந்தார்...

ஆனாலும் என்ன... புதுடெல்லியில் இருந்து பல மணி நேரம் தாமதமாக தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் சென்னை வந்து சேர்வது போலத்தான் இருந்தது உலகநாதனின் கல்யாண நாள் வந்து சேர்ந்ததும்! ஒரு வழியாக தேர்தல் நாளும் வந்தது. உலகநாதனின் கல்யாணமும் வந்தது. முதலில் அரசியல் கட்சியின் பேரணி ஒன்றுக்கு லாரிகளில் தொண்டர்களை அழைத்துப் போவது போலத்தான் சுற்றுவட்டார ஜனங்கள் எல்லாரையும் பேருந்துகளில் இலஞ்சிக்கு அழைத்துப் போக உலகநாதன் திட்டம் போட்டிருந்தார்.

பிறகுதான் முழித்துக் கொண்டுவிட்டார். கூட்டத்தின் மொத்த பார்வையும் கட்டாயம் பரமேஸ்வரியின் மேல் இருக்கும். ஒரு கண்போல இன்னொரு கண் இருக்காது. திருஷ்ட்டி பட்டாலும் பட்டுவிடும், எதற்கு வீண் வம்பு? ரொம்ப சொந்தக்காரர்களாக ஏழெட்டு பேர்; வேண்டிய மூன்று நான்கு சேக்காளிகள். அதற்கு மேல் இருக்கவே இருக்கிறார்கள் — மகள்கள் மகன்கள் பேரன் பேத்திகள்—இத்தனை பேர்தான் கல்யாணத்திற்கு. போனால் போகட்டும் என்று காந்திமதியின் அம்மா பெயருக்கு ஒரே ஒரு அழைப்பிதழை அனுப்பி வைத்தார். யாரும் வரப் போவதில்லையென்று தெரியும்! தெரிந்தும் அனுப்பி வைத்தார். எதிர்பார்த்த மாதிரி யாரும் வரவில்லை. எலெக்ஷனில் வோட்டுப் போட அவர்கள் எல்லாரும் கர்ம சிரத்தையாக போய்விட்டதாக கேள்வி...!



என்னென்னவோ உணர்வு பேதங்களும் விரிசல்களும் இருந்தாலும் உலகநாதனின் மகள்கள் இருவரும் குடும்பத்துடன் இரண்டு நாட்களுக்கு முன்பாகவே செந்துறை வந்து சேர்ந்து விட்டார்கள். வரவே முடியாதென்று ஆரம்பத்தில் ஆட்டம் காட்டிய குற்றாலச் செல்வன் முதல் ஆளாகக் கிளம்பி வந்து விட்டான். வராமல் இருந்து அது ரொம்பவும் பெரிய விஷயமாகி விட்டால் ஆபத்து. உலகநாதன் ஒரு மாதிரியான ஆசாமி. செல்வராணிக்குக் கொடுக்க இருக்கிற சின்னப் பங்கையும் கொடுக்காமல் இருந்துவிட்டால் 'உள்ளதும் போச்சிலே நொள்ளக் கண்ணா!' என்ற கதையாகி விடும்! அதற்கும் மேல் குற்றாலச் செல்வனுக்குப் புது மாமியாராக வரப் போகிற இருபத்தைந்தே வயசான பரமேஸ்வரியை பார்த்தே ஆக வேண்டும்!

உலகநாதனின் மகள்கள் செந்துறை வந்து சேர்ந்து விட்டார்களே தவிர அவர்கள் பிறந்து வளர்ந்த அந்த வீட்டில் இயல்பாக இருக்க முடியவில்லை அவர்களால்... இயல்பாக இருப்பது போல உலகநாதனிடம் நடித்தார்கள். அவர்களிடம் இயல்பாக இருப்பதுபோல உலகநாதனும் நடித்தார். ஆனால் இது மட்டும் உண்மை - அவர்கள் யாருக்குமே சரியாக நடிக்கத் தெரியவில்லை!

பெரியவர்களின் இந்த நடிப்பின் மத்தியில் டெல்லி மகள் கலைசசெல்வியின் மகன் தாத்தா உலகநாதனிடம் ஞாபகமாக கேட்டு வைத்தான். இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்ததும் உலகநாதன் கலைச்செல்விக்கு போன் செய்து பேசிய போது அவளின் மகனிடம் அவனுக்கு சீக்கிரமே ஒரு சின்னப் பாட்டி வரப் போவதாக ஆசையாய் சொல்லி வைத்திருந்தார். ஊரில் இருந்து வந்ததும் ஞாபகமாக பேரன் "எங்கே தாத்தா சின்னப் பாட்டி?"; என்று கேட்டு விட்டான்.

உலகநாதன் இதில் ரொம்பத்தான் மனசு கரைந்து போனார். பரமேஸ்வரியின் கழுத்தில் தாலியைக் கட்டிய அடுத்த நிமிஷமே பேரனை பக்கத்தில் கூப்பிட்டு "பாரு - இதான் ஒன் சின்னப்பாட்டி" என்று சொல்லி பரமேஸ்வரியை காட்டினார். பேரன் பரமேஸ்வரியை சில நிமிடங்கள் உற்றுப் பார்த்தான். பின் உலகநாதனிடம் "போங்க தாத்தா. பொய் சொல்றீங்க நீங்க. இது சின்னப்பாட்டி இல்லை; சின்ன அக்கா!" என்று பெரிய குரலில் சொல்லிவிட்டு அம்மாவிடம் ஓடிப் போய்விட்டான். அவன் சொன்னதைக் கேட்டு பரமேஸ்வரியின் உதடுகளில் மெல்லிய புன்னகை ஓடியது.

உலகநாதனுக்கு இந்த முதல் புன்னகை அவ்வளவாக பிடிக்கவில்லை! பேரன் அவருடைய மானத்தைப் போட்டு வாங்கி விட்டானே...! பேரன் சொன்னது எல்லாருடைய காதுகளிலும் விழுந்தது. ஆனால் காதில் விழாதவர்கள் போல முகத்தைக் காட்டப் பார்த்தார்கள். உலகநாதன் தன்னுடைய மேட்டு விழியால் கற்றிலும் ஒரு நோட்டம்விட்டார். எல்லோரும் பரமேஸ்வரியை ஆச்சர்யத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் அனுதாபத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். குற்றாலச்செல்வன் மட்டும்தான் பரமேஸ்வரியை ஒருவிதமான திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். கிழ மாமனாருக்கு இப்படியொரு அழகான பெண்டாட்டியா என்ற மலைப்பு கொஞ்சநஞ்சமில்லை அவனுக்கு! உலகநாதனின் மேல் அவனுக்குப் பொறாமை உணர்வு வந்ததென்று சொன்னால் நிறைய பேரால் நம்ப முடியாதுதான். இருந்தாலும் நிஜம் அது!

ஆகையால் குற்றாலச் செல்வனுக்கு பம்பாய்க்கு ரயில் எப்போதடா ஏறுவோம் என்றிருந்தது! மாமனார் வீட்டில் இருப்பது போல இல்லை. யாருடைய வீட்



டிலோ இருப்பது போல இருந்தது. அதே போல- மகள்கள் எப்போது ஊரில் இருந்து வந்தாலும் அவர்கள் ஊர் திரும்ப வேண்டிய நாள் வரும்போது மகள்கள் இன்னும் சில நாட்கள் கழித்துப் போக மாட்டார்களாயென்று ஆதங்கமாக இருக்கும் உலகநாதனுக்கு. இப்போது அவருடைய மனநிலை அதற்குத் தலைகீழ்! மகள்கள் உடனே ரயில் ஏறினால் தேவலை என்றிருந்தது!

மகள் மருமகன் பேரன் பேத்தி என்ற சூழ்நிலையில் அவரால் பரமேஸ்வரியுடன் குடித்தனத்தை ஆரம்பிக்க கொஞ்சம் வெட்கமாக இருந்தது! புதுப் பெண்டாட்டியையே சுற்றிக் கொண்டிருக்கிறார் என்று குடும்பத்தினர் யாரும் நினைத்துவிடக் கூடாது என்பதற்காக மகள்கள் இருந்த நாட்களில் உலகநாதன் பரமேஸ்வரி இருந்த பக்கம்கூட அதிகம் பார்க்காமல் இருந்தார்! அதற்கு ஏற்ற மாதிரி பரமேஸ்வரியின் இயற்கையும் சாதகமாக இருந்தது.

இன்னும் நான்கு அல்லது ஐந்து நாட்கள் கழித்துத்தான் 'தூர'க்கல்யாணம் நடந்தாக வேண்டும் அவருக்கு. அதென்னமோ கல்யாணத்தன்று சாயந்தரம் ஆகிவிட்டது! 'போச்சிலே' என்றெல்லாம் இருக்கவில்லை உலகநாதனுக்கு. 'பரவாயில்லை - கொஞ்சம் தள்ளியே ஆரம்பிக்கலாம் என்றிருந்தது அவருக்கு. மனசிற்குள் இதற்கு ஒரு காரணம் இருந்தது. பாலுறவு விஷயத்தில் உலகநாதனுக்கு பரமேஸ்வரியிடம் கொஞ்சம் தயக்கமும் பயமும் இருந்தன. இந்த உணர்ச்சிகளை யாருமே உணர்ந்து கொண்டு விடாதபடி உலகநாதன் ரொம்ப உஷாராக இருந்தார். ஆனால் கல்யாணத்தை நிச்சயம் செய்து கொண்ட போதெல்லாம் இந்த உணர்வுகள் அவருக்குள் இல்லை. ஆனால் பரமேஸ்வரியின் வயசு தெரிந்ததுமே பெத்தையா வம்பு பேசுவதற்காக வீடு கட்டி உட்கார்ந்திருந்த ஒரு

செத்த சவத்திடம் போய் ரொம்ப நக்கலாகக் கேட்ட கேள்வி இது—''இப்படி ஒரு சின்ன வயசுப் பொம்பளப் புள்ளைய போய் கட்டிக்கப் போறானே — அவளை அந்த விஷயத்ல ஒலகநாதன் சமாளிச்சிருவாணாமா?'' இது அங்கே இங்கேயென்று விழுந்து உலகநாத னுடைய காதிலும் வந்து விழுந்தது.

பெத்தாயாவை கூப்பிட்டு 'அப்படி சொன்னீங்க ளா'மே'யென்று கேட்டுவிட உலகநாதன் இரண்டு படி இறங்கியே விட்டார். பிறகுதான் கஷ்டப்பட்டு தன்னை கட்டுப்படுத்திக் கொண்டார். கேட்டால்தான் அப்படிச் சொல்லவே இல்லையென்று பெத்தையா பெருமாள் கோயில் வாசலிலேயே துண்டைப் போட்டு தாண்டி சத்தியம் பண்ணுவார்! எதற்கு சவங்களிடம் போய் வீண் வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டு... அதனால் உலகநாதன் காதில் விழாத மாதிரி இருந்து விட்டார். ஆனால் அவருடைய மனசிற்குள் பெத்தையாவின் நக்கல் கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தது. அதற் காக உலகநாதன் ஒரேயடியாக பயந்து போனார் என்று சொல்ல முடியாது. ஆம்பளை சிங்கம் அவர்! ஆனால் என்ன கொஞ்சம் வயதாகிவிட்ட சிங்கம்! இளம்புலியின் பாய்ச்சலில் இருக்கும் அசாத்திய வீரம் கொஞ்சம் வயதாகிவிட்ட சிங்கத்திடம் இருக்க முடியுமா? இருப் பது கொஞ்சம் சாத்தியம் இல்லைதான்! அதனால்தான் உலகநாதனிடம் கொஞ்சமாக தயக்கமும் கொஞ்சமாக பயமும்...!

எல்லாம் நல்லபடியாய் ஆயிற்று. பரமேஸ்வரியின் தாரக் கல்யாணத்தின் கடைசி நாளில் உலகநாதனின் மகள்கள் அவரவர் ஊர்களுக்குக் கிளம்பி விட்டார்கள். அவர்களை ரயிலேற்றிவிட ரொம்ப உற்சாகமாக கிளம்பிவிட்டார் உலகநாதன்.

''நீயும் வா பரமேஸ்வரி. தின்னவேலி போய் பிள்ளைங்களை ரயில் ஏத்தி அனுப்பிட்டு வந்திர



லாம்...'' என்று ஆசையுடன் புது மனைவியை கூப்பிட் டார். ஊரே பார்க்கும்படி அழகான பெண்டாட்டியுடன் பெருமையுடன் நடந்து போகத்தானே காத்துக் கொண் டிருக்கிறார்... விட்டு விடுவாரா கிடைத்த முதல் சந்தர்ப்பத்தை...

பரமேஸ்வரிக்குக் கிளம்புவதற்கு சந்தோஷமாக இருந்தது. அவளின் வறண்ட சில உணர்வுகளில் குளிர்ந்த வாய்க்கால் நீர் பாய்ந்த மாதிரி இருந்தது. வறுமை இறுக்கிய குடும்பத்திற்குள் அடைபட்டுப் போயிருந்த அவளுடைய மனநிலையில் புதிய சிறகுகள் சிறகடித்தன. துள்ளிக் குதிக்க பரமேஸ்வரிக்குள் ஒரு புள்ளிமான் அந்த நிமிடமே காதுகளை நிமிர்த்து அழகு டன் எழுந்து நின்றது. அதேபோல் ஆறு வருடங்கள் ஒற்றையாக திரிந்த உலகநாதனுக்குள்ளும் மீண்டும் மனைவியுடன் வெளியுலகைச் சந்திக்கப் புறப்படும் காளை திம்மென்று தலையை குலுக்கி விட்டுக் கொண் டது...

தனிப்பட்ட பரிசாக செல்வராணி பம்பாயில் இருந்து வாங்கி வந்து கொடுத்திருந்த விலை உயர்ந்த அரை டஜன் 'கார்டன்' சேலைகளில் குருத்து ஓலை கலரில் இருந்ததை எடுத்துக் கட்டிக் கொண்டு கிளம் பியபோது பரமேஸ்வரிக்கு ரொம்ப இதமாக இருந்தது. இந்த மாதிரியான ரம்மியமான மிருதுவான சேலை களுக்காக எத்தனை காலம் அவளின் மனசு காத்துக் கிடந்தது...

திருநெல்வேலி ஜங்ஷனில் உலகநாதன் கைகளை பின்னால் கட்டிக் கொண்டு பெருமையுடன் நின்று கொண்டிருக்க பரமேஸ்வரி அடக்கமாக நின்று கொண் டிருந்தாள். இப்படியெல்லாம் இதற்கு முன் யாரையும் வழியனுப்ப வந்திராத அவளுக்குள் பொங்கிப் போயி ருந்த பரவசம் மட்டும் அவளின் கண்களில் பளிச்சென தெரிந்தது. அழகிய இளம் மனைவியை மணந்து

கொண்டிருக்கும் பெருமையில் நின்று கொண்டிருக்கும்
உலகநாதனுக்கு போவோரும் வருவாரும் பரமேஸ்
வரியை சற்று கவனித்துப் பார்த்துவிட்டுப் போனது
வேறு கொம்பை சீவிவிட்டாற்போல இருந்தது! இவ
ளின் புருஷன் நான்தான் என்று எல்லோரிடமும் வாய்
திறந்து பீற்றிக் கொள்ள வேண்டும்போல இருந்தது.

இதெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும் திருநெல்
வேலி ஸ்டேஷனில் உலகநாதனை எரிச்சல் படுத்துகிற
மாதிரியான சம்பவமும் நடந்து தொலைத்து விட்டது.

# 13

பரமேஸ்வரியை நடுத்தர வயதான ஆண்களோ
அல்லது வயசான ஆண்களோ கவனித்துப் பார்த்ததில்
உலகநாதனின் மனசில் பெருமைதான் ஏற்பட்டதே
ஒழிய வேற பாதிப்பு எதுவும் இல்லை. அதே சமயம்
சின்ன வயசுப் பையன்கள் பரமேஸ்வரியை கொஞ்சம்
உற்றுப் பார்த்தால்கூட அந்தப் பார்வை அவரை
கொஞ்சம் நெளிய வைத்தது! மகள்கள் சென்ற ரயில்
கிளம்பிப் போன பிறகு ஸ்டேஷனில் இருந்த புத்தகக்
கடையில் பரமேஸ்வரி சில வாரப் பத்திரிகைகளும்
கதைப் புத்தகங்களும் வாங்கிக் கொள்ள ஆசைப்பட்
டாள். உலகநாதன் 'சரி வாங்கிக் கொள்' என்றார்.

பரமேஸ்வரி அவற்றை வாங்குவதற்காக சில நிமி
டங்கள் புத்தகக் கடையில் நின்று கொண்டிருந்தபோது
இரண்டு இளைஞர்கள் உலகநாதனை மிக இலகுவாக
பார்வையில் இருந்து தவிர்த்துவிட்டு புத்தகம் வாங்கும்
சாக்கில் பரமேஸ்வரியை ஜாலியாக 'சைட்' அடித்துக்



கொண்டிருந்தார்கள். அவளுடைய கவனத்தைப் பெற
வேண்டும் என்றே உரத்த குரலில் ஜோக் அடித்து
சிரித்துக் கொண்டிருந்தார்கள். கடுப்பாகி விட்டார்
உலகநாதன். புத்தக கடையில் அவர் நின்றதே பர
மேஸ்வரிக்காக.

இதற்கு முன் மழைக்காகக்கூட உலகநாதன் புத்தக
கடையில் ஒதுங்கியவர் இல்லை. இன்று மனைவிக்காக
ஒதுங்கினார். ஒதுங்கியவரின் மனைவியையே பயல்கள்
நோட்டம் விடுகிறார்கள். "போங்கலே" என்று பயல்
களையா விரட்ட முடியும்?" "சீக்கிரம் வாங்கி முடி.
நேரமாகுது" என்று பரமேஸ்வரியை அவசரப்படுத்தி
னார். புத்தகங்களுடன் கிளம்பிய மனைவியுடன்
ஸ்டேஷனைவிட்டு வெளியேறியதும் நல்ல ஹோட்ட
லுக்கு அழைத்துப் போய் ஆற அமர உட்கார்ந்து
சாப்பிட வேண்டும் என்றுதான் உலகநாதன் திட்டமிட்
டிருந்தார். ஆனால் புத்தகக் கடையில் பரமேஸ்வரியை
சைட் அடித்த இளைஞர்கள் ஸ்டேஷனுக்கு வெளியி
லும் பின் தொடர்ந்து வந்ததைப் பார்த்ததும் எரிச்ச
லாகி விட்டது அவருக்கு.

ஹோட்டலுக்குப் போகிற எண்ணத்தை மாற்றிவிட்
டார் "வா வா—ஊருக்கே போயிரலாம்" என்று சொல்லி
பஸ் ஸ்டாண்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்.
ஹோட்டலுக்குப் போகலாம் என்று உலகநாதன்
முதலிலேயே அவளிடம் ரகசியமாக சொல்லி வைத்
திருந்தார். அதற்குள் அவருக்கு என்ன ஆயிற்று என்று
பரமேஸ்வரிக்குத் தெரியவில்லை.

"உம்... சீக்கிரமா நட பரமேஸ்வரி. ஆமை வேகத்ல
நடந்தா எப்படி?" என்று மேலும் அவளை அவசரப்
படுத்தியதும்தான் ஏதோ காரணம் இருப்பது அவளு
டைய உணர்வில் பட்டது. முதல் தடவையாக பணம்
கொடுத்து புத்தகங்கள் வாங்கியிருக்கும் சந்தோஷத்தை
சற்று கலைத்துவிட்டு பரமேஸ்வரி பார்வையை சுற்றி

லும் சுழலவிட்டபோது இரண்டு இளைஞர்கள் அவளைப் பின் தொடர்வதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. அவளுடைய கவனத்தைப் பெற்றுவிட்ட உற்சாகம் இளைஞர்களின் முகங்களில் பளிச்சிட்டதை உலகநாதன் அவருடைய இரண்டு கண்ணாலும் பார்த்தார்!

“பராக்குப் பாக்காம பாதையைப் பாத்து நட தாயீ! வண்டியும் காருமா வருது” உலகநாதன் கொஞ்சம் கடுமையுடன் சொல்லி பரமேஸ்வரியின் கவனத்தை திருப்பப் பார்த்ததில் அவரின் உள்மனம் தெரிந்து அவள் நேர்பார்வை பார்த்தபடி அவருடன் வேகமாக நடந்தாள்.

பஸ் ஸ்டாண்டை அடைந்த பிறகு உலகநாதன் யதேச்சையாக திரும்பிப் பார்ப்பது போல பார்த்தார். இளைஞர்கள் இல்லை. அப்பாடா என்றிருந்தது. பஸ்ஸில் ஏறி உட்கார்ந்த பிறகுகூட எங்கேயாவது அந்த இளைஞர்கள் தென்படுகிறார்களாயென்று உலகநாதன் ஒரு காக்கா பார்வை பார்த்துக் கொண்டுதான் இருந்தார்! இந்த நிமிஷ அவருடைய மனநிலை இது—இளைஞன் எவனும் பரமேஸ்வரியை உற்றுப் பார்க்கக் கூடாது! அதே மாதிரி பரமேஸ்வரியும் எந்த இளைஞனையும் நிமிர்ந்து பார்க்கக் கூடாது!—இந்த இரண்டாவது விஷயம் நடக்கிற கதையோ நடக்காத கதையோ; முதலாவது விஷயம் இருக்கிறதே—நடக்கிற கதையா அது...!”

கல்யாணம் முடிஞ்சாச்சி. இனி பரமேஸ்வரியை கூட்டிக்கொண்டு ஊர் ஊராகக் கிளம்பிப் போய் சுற்றிப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்பதுதான் உலகநாதனின் திட்டம். பரமேஸ்வரிக்கா? கேட்கவே வேண்டாம். எங்கேயாவது ஊர் ஊராக போய் கொண்டே இருக்க வேண்டும் அவளுக்கும். முதலில் எங்கே



போகலாம் என்று உலகநாதன் கேட்டதும் குற்றாலம் என்றாள். இத்தனைக்கும் அவளின் கல்யாணம் நடந்ததே குற்றாலத்துக்குப் பக்கத்து ஊரான இலஞ்சியில்தான். அப்போதே பொங்குமாங் கடலில் பெரிய அருவி அகலமான வெண்மையில் விழுந்து கொண்டிருப்பதைக் கண்டு ஓடிப்போய் அதை கட்டிப் பிடித்துக்கொள்ள வேண்டும் போல இருந்தது பரமேஸ்வரிக்கு. ஆனால் அவள் பரபரத்த அளவிற்கு உலகநாதன் குற்றாலத்திற்காக பரபரக்கவில்லை. காரணம் குற்றாலத்தில் அத்தனை ஆர்வம் அவருக்குக் கிடையாது என்பது அல்ல. அவர் பார்க்காத அனுபவிக்காத குற்றாலமா என்ற இறுமாப்பும் செருக்கும்தான் காரணம்!

காந்திமதி இருந்தவரை வருஷா வருஷம் ஜூன் மாதம் குற்றாலம் போகாமல் இருந்ததில்லை உலகநாதன். கண் இரண்டும் சிவந்து போகிறவரை அருவியில் நின்றுவிட்டு காந்திமதி சமைத்துப் போடுகிற அறுசுவை சாப்பாட்டை நிமிர நிமிர சாப்பிட்டுவிட்டு உறங்கித் தள்ள குற்றாலத்தைப் போல ஒரு இடம் இந்தியாவிலேயே கிடையாது என்பது உலகநாதனின் அபிப்பிராயம். ஆனால் என்ன - செந்துறை சமையல் கடையை காந்திமதி குற்றாலத்திலும் போய் விரித்தாக வேண்டும். ஏதோ போன இடத்தில் எளிமையாக சாப்பிட்டுவிட்டுக் கிடப்போம் என்று இருக்க மாட்டார் உலகநாதன். அவியல் மசியல் புளிசேரி பிரதமன் என எந்த அயிட்டத்தையும் குறைக்காமல் வக்கணையாக சாப்பிட்டு ஏப்பம் விட்டாக வேண்டும் அவருக்கு! இதெல்லாம் தெரியாமல் பரமேஸ்வரி அவள் பாட்டுக்கு குற்றாலம் போகலாம் என்று சொல்லி விட்டாள். ஆனால் குற்றாலம் கிளம்புவதற்கு முன்பே சமையல் விஷயத்தில் பரமேஸ்வரி ஒரு பெரிய சைபர் என்பது தெரிந்து உலகநாதன் திகைத்துப் போனார் திகைத்து!

''அவியல் பீர்க்கங்காய் கூட்டு செய்யேன்'' என்றார்.

''அதெல்லாம் தெரியாதே எனக்கு சமைக்க...'' என்றாள் பரமேஸ்வரி பரிதாபமாக.

உடனே உலகநாதனின் மேட்டு விழிகள் கோழி முட்டை போல விரிந்து விட்டன.

''எப்பிடி எப்பிடி - சமைக்கத் தெரியாதா?''

''வித விதமா சமைக்கத் தெரியாது''

''என்னதான் சமைப்பே?''

''ஒரு சாம்பாரோ ரசமோ வச்சி சோறு வடிச்சிருவேன்''

''கறி எதுவும் செய்யத் தெரியாதா?''

''உருளைக்கெழங்குக் கறி செஞ்சிருவேன். தக்காளி சட்னி வைக்கத் தெரியும்''

''கருணைக்கெழங்கு மசியல்?''

''தெரியாது''

''பருப்பு உருண்டை கொழம்பு?''

''கேள்விப்பட்டது கூட இல்லை''

''கொத்தவரங்கா பருப்பு உசிலி?''

இதற்கு பதில் பரமேஸ்வரி, கள்ளம் கபடம் இல்லாமல் சிரித்த சிரிப்பில் இருந்தது! பரமேஸ்வரியை பக்கத்தில் உட்கார வைத்து என்ன ஏதுவென்று உலகநாதன் விசாரித்துப் பார்த்தபோதுதான் சங்கதி தெரிய வந்தது. அவள் பிறந்த வீட்டில் சமையல் என்பது மத்யானம் ஒரே ஒரு வேளை சோறு வடிப்பதுதான். ரசம் கூட என்றைக்காவதுதான். சாம்பாரோ அல்லது குழம்போ ஆடிக்கோ அமாவாசைக்கோ ஒரு தடவைதான். எதிர்த்த வீட்டு ஆச்சியிடம் துட்டு கொடுத்து வாங்கிய



மோரை விட்டுப் பிசைஞ்சு சோற்றை உருட்டி உருட்டி
வாயில் போட்டுக்கொள்வதோடு சரி. தொட்டுக்
கொள்ள காணப் பருப்பு துவையல் இருந்தாலும்
இருக்கும். இல்லாவிட்டாலும் இல்லை. ராத்திரிக்கும்
மத்யானம் வடித்த அதே சோறுதான். அதில் தண்ணீர்
கொட்டி வைத்து விட்டால் மறுநாள் காலையில் சாப்
பிட அதுவே, பழையதாகி' விடும்!

கேட்கவே உலகநாதனுக்கு வெட்கக் கேடாக
இருந்தது. சாப்பாட்டுக்கு 'லாட்டரி' அடித்த ஒரு
குடும்பத்தில் பெண் எடுத்திருக்கிறார்! சிவலப்பேரி
மாமியார் வீட்டில் பாலும் பாதாம்பருப்பும் ஆறு போல
ஓடும்... சாப்பாட்டு விஷயத்தில் சிவலப்பேரி சிவலப்
பேரிதான்...!

உடனே உலகநாதன் பரமேஸ்வரிக்கு பரிட்சை
ஒன்று வைத்தார். அவளுக்குத் தெரிந்த சாம்பாரை
வைத்துக் காட்டச் சொன்னார். பரிட்சை எழுதுகிற
மாணவி போல பாவம் பரமேஸ்வரியும் கத்தரிக்கா
சாம்பார் வைத்துக் காட்டினாள். உலகநாதன் வலது
கை ஆட்காட்டி விரலை சாம்பாருக்குள் முக்கி பார்த்த
பின் கேட்டார் ''சாம்பாரா ரசமா இது?''

''சாம்பார்தான்''

''விரல்ல கொஞ்சங்கூட ஒட்டவே மாட்டேங்குதே!
அதனால ரசம்னு நெனைச்சிட்டேன்!''

பரமேஸ்வரி விசித்திரமான உணர்வில் நின்றாள்.

''சாம்பார்னா திக்கா கரைச்ச சந்தனம் கணக்கா
ஒட்டணும் கையெல்லாம்! காந்திமதி இதே கத்த
ரிக்கா சாம்பார் வச்சா - கொதிக்கிற போதே எட்டாவது
வீட்ல சொல்லிடுவாஹ - நம்ம வீட்ல சாம்பார்னு!''

பரமேஸ்வரி மௌனமாக நின்றாள்.

''நீ இப்படியெல்லாம் சமையல் செஞ்சா தோதுப்
படாது தாயி! போனா போகுதுன்னு ரெண்டு மூணு
மாசத்துக்கு நல்ல சமையல்காரனா பாத்து ஏற்பாடு
பண்றேன். அவன்கிட்டேயே நீ எல்லா சமையலையும்
ஒண்ணு விடாம நல்லா கேட்டுத் தெரிஞ்சிக்க.''

பரமேஸ்வரி தலையை ஆட்டினாள்.

''சமையல்காரனை ஏற்பாடு செய்றதுக்கு முந்தி
ஒன் ஆசைப்படி நாம குற்றாலம் போயிட்டு வந்திர
லாம். இந்தத் தடவை மட்டும் குற்றாலத்ல ஓட்டல்ல
சாப்பிடுவோம். குற்றாலத்ல அடுத்த வருஷம் ஒன்
சமையல்தான்...''

பரமேஸ்வரி அதற்கும் தலையை ஆட்டி வைத்
தாள்.

மறுநாள் காலை பத்து மணிக்கு உலகநாதனும்
பரமேஸ்வரியும் குற்றாலத்தில் இருந்தார்கள். வழக்கம்
இது - குற்றாலத்தில் இருக்கும்போது உலகநாதனுக்கு
புது கம்பீரம் வந்துவிடும். சீசனுக்கு அவர் குடும்பத்
தோடு குற்றாலம் வந்திருக்கிறாராம்! ஆனால் என்ன -
இந்த வருஷம் குற்றாலம் போய் சேர்ந்து ஐந்தருவியில்
ஒரு குளியல் போட்டு தலையைத் துவட்டிய கொஞ்ச
நேரத்தில் உலகநாதனின் கம்பீரம் தலைகீழாக குடை
சாய்ந்து விட்டது!

முக்கால் மணி நேரத்திற்கும் மேலாக அருவிக்குள்
திளைத்துவிட்டு வந்த போது பரமேஸ்வரி நனைந்த
சித்திரம் போல தெரிந்தாள். மூன்று நான்கு இளைஞர்
கள் பிரமிப்புடன் நின்று அவளைக் கவனிக்கலானார்
கள். உடனே உலகநாதன் உஷாராகி விட்டார். நகர்ந்து
நின்று இளைஞர்கள் பரமேஸ்வரியை பார்க்க இயலாத
படி மறைத்துக் கொண்டார்! இளைஞர்களும் அதற்கு



ஏற்ற மாதிரி நகர்ந்து பரமேஸ்வரியை கண்டு களிப்
பதைத் தொடர்ந்தார்கள்! உலகநாதன் மறுபடியும் ஒரு
நகர்வு கொடுத்து பரமேஸ்வரியை மறைத்து நின்றார்!
இளைஞர்கள் மட்டும் சளைத்தவர்களோ... அவர்களும்
அதற்கு ஏற்ற மாதிரி நகர்வு கொடுத்தார்கள்! சில
நிமிடங்களுக்கு இது ஒருவித சதுரங்க ஆட்டம் போல
இருந்ததில் இளைஞர்களில் ஒருத்தன் கடுப்பாகி விட்
டான். ''இந்த 'பெரிசை'ப் பாரு! நந்தியாட்டம் குறுக்க
குறுக்க வந்து நின்னுக்கிட்டு சைட் அடிக்க விடமாட்
டேங்குது!'' என்று கொஞ்சம் சப்தமாகவே சொல்லி
விட்டான்.

கொதித்துப் போய்விட்டார் உலகநாதன். உடம்
பெல்லாம் படபடத்தது அவருக்கு. பாய்ந்து இளை
ஞனை உதை பின்னலாமாயென்று துடித்தார். ஆனா
லும் அந்த சூழலை மொத்தமாக எப்படி எதிர்நோக்கிக்
கையாள்வதென்றும் தெரியாமல் வெறுமே மனசால்
பதைபதைக்கத்தான் முடிந்தது அவரால். ஆனால்
உலகநாதனின் மனக் கடுமையை அவருடைய முகத்
தில் பார்த்துவிட்ட இளைஞர்கள் பின்வாங்கி நடந்து
விட்டார்கள். பரமேஸ்வரி தலைகுனிந்து உலகநாத
னின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். உலகநாதன்
நீண்ட நேரத்திற்கு இயல்பாக பேச முடியாமல் தவிப்
புடனேயே இருந்தார். எந்தக் காட்டுப் பயலோ
'பெரிசு' என்று அவரை சொல்லிவிட்டது ஆயிரம்
காக்கை அவருடைய தலைமேல் எச்சமிட்டு விட்டாற்
போல இருந்தது!

அந்த அவமான எச்சத்தை அவரால் துடைத்துப்
போடவே முடியவில்லை! மறுபடியும் ஒரு அவமானம்
உலகநாதனுக்கு நடக்கவில்லை. ஆனால் ஐந்தருவி
யிலோ பெரிய அருவியிலோ அல்லது புலி அருவி
யிலோ பரமேஸ்வரியை ஏதாவது ஒரு இளைஞர்
கூட்டம் சைட் அடிப்பதும் பின் தொடர்வதும் நடக்

கவே செய்தது. இதில் உலகநாதன் ஒரு மாதிரி சித றுண்டு போனார். எந்த இளைஞர் கும்பலுக்கும் பரமேஸ்வரியின் கணவராக தெரியவே இல்லை அவர்! —இங்கேதான் அழகான பரமேஸ்வரியின் கணவன் என்ற அவருடைய பெருமைகள் உடைந்து சிதறின! அவருடைய கோபம் பூராவும் இளைஞர் வர்க்கத்தின் மேலே ஈட்டி முனையாகப் பாய திரண்டு நின்றது. காந்திமதியுடன் இதே குற்றாலத்திற்கு எத்தனையோ தடவை வந்திருக்கிறார். ஒருத்தன் காந்திமதியை 'சைட்' அடித்திருப்பானா?! எல்லா பாடும் இப்போதுதான்!

உலகநாதன் பரமேஸ்வரியின் அழகை முதல் முறை யாக கேள்விக்குறியுடன் பார்த்தார். பத்து நாட்கள் குற்றாலத்தில் இருக்கலாம் என்று சொல்லி பரமேஸ் வரியை அழைத்து வந்தவர் நான்காம் நாளே மூட் டையை கட்டச் சொன்னதில் பரமேஸ்வரியின் மனசு லேசாக காயப்பட்டது. அதைப் புரிந்து கொள்ளாத உலகநாதன் ''பரமேஸ்வரி; ஒன்னை இனிமே குற்றாலத் துக்கே கூட்டிட்டு வரமாட்டேன் என்று வேறு ஒரு வித து வே ஷ த் து ட ன் சொன்னபோது அவளுக்கு ரொம்பவும் அவமானமாக இருந்தது... திருநெல்வேலி போகிற பஸ்ஸில் ஏறி உட்கார்வதற்குள் உலகநாதனின் துவேஷம் மேலும் பல மடங்கு எகிறும்படி நேர்ந்து விட்டது. அவரை 'பெரிசு' என்று கிண்டல் பண்ணின இளைஞன் குற்றாலம் பஸ் ஸ்டாண்டில் தனியாக நின்று சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான்.

பார்த்ததுமே உலகநாதனுக்கு அவனை அடை யாளம் தெரிந்து விட்டது. உலகநாதனுக்குள் ஒரு ரௌத்ர அலை பொங்கி எழுந்தது. தனது அந்தஸ்து என்ற பிரக்ஞை உச்சந் தலையில் பாய்ந்தது. செந் துறையாக இருந்திருந்தால் இந்நேரம் இந்தப் பயலை தீ வைத்தே எரித்துச் சாம்பலாக்கி இருப்பார். சாம் பலை இதே குற்றால அருவிக்கே எடுத்து வந்து கரைத்



திருப்பார்! இது குற்றாலம். இங்கே அவன் மேல் கை வைத்தால் நாறிப் போய்விடும் அவருடைய நிலைமை! அதனால் அந்த இடத்தில் மீசையை முறுக்கிக் காட்டின தற்கு மேல் உலகநாதனால் எதுவும் பண்ண முடிய வில்லை!

செந்துறை போய் சேர்கிறவரை உலகநாதனுக்கும் பரமேஸ்வரிக்கும் இடையே பேச்சே இல்லாமல் நிசப் தம்தான் கனமாக கவிந்திருந்தது. அந்த நிசப்தம் மிகப் பெரிய விரிசலுக்கான ஆரம்பப்புள்ளி என்றுதான் சொல்ல வேண்டும். அடுத்தபுள்ளி விழவும் ரொம்ப நாளாகவில்லை. குற்றாலத்தில் இருந்து திரும்பிய ஆறாவது நாளே இன்னும் கடுமையாகவும் ஆழமாக வும் தெறித்து விட்டதை யாருடைய தலையெழுத்து யென்று சொல்ல...? பெருமாள்தான் சொல்ல வேண்டும். ஆனால் என்ன கஷ்டம் என்றால் — பெரு மாள் வாயைத் திறந்து சொல்லவே மாட்டார்!

விதி இதுதான்...!

# 14

நாங்குநேரி நாங்குநேரியென்று திருநெல்வேலி மாவட்டத்தில் ஊர் ஒன்று இருக்கிறது. அந்த ஊரில் உலகநாதனின் சொந்த அத்தை ஒருத்தி எமனுடைய வாயில் வருஷத்திற்கு நான்கு தடவை விழுந்து விழுந்து எழுந்து உட்கார்ந்து விடுவதை கிட்டத்தட்ட ஒரு வழக்கமாகவே வைத்திருந்தாள்! அவளுக்கு என்ன வயசென்று நிஜமாக யாருக்கும் தெரியாது. அப்படி யொரு பழுத்த பழம் அந்த அத்தை. உலகநாதனின் கல்யாண சேதியை கேள்விப்பட்டு செந்துறைக்கு ஆள்

அனுப்பி வைத்தாள். மண்டையை அவள் போடுவதற்குமுன் உலகநாதன் புதுப் பெண்டாட்டியை கூட்டிக் கொண்டு ஒரு தடவை நாங்குநேரிக்கு வந்து அவளுடைய இரண்டு கண்களிலும் பரமேஸ்வரியை காட்டி விட வேண்டுமாம். பார்க்காமல் செத்துப் போனால் செத்த பிறகு அத்தையின் மனசு பேயாக அலையுமாம்.

உலகநாதனுக்கு அந்த அத்தையை கொஞ்சம் பிடிக்கும். அதனால் சரியென்று டாக்சி ஒன்று ஏற்பாடு செய்து பரமேஸ்வரியை ரொம்ப ரொம்ப பத்திரமாக நாங்குநேரிக்குக் கூட்டிக் கொண்டு போனார். பாவம் பரமேஸ்வரி; குற்றாலம் போய் வந்திருந்த அனுபவம் மனசில் உறுத்திக் கொண்டே இருந்ததால் வெளியூர் போகிற பரவசம் அவளில் குன்றிப் போயிருந்தது. அதே போல் உலகநாதனுடைய மனசிலும் பரமேஸ்வரியுடன் ஊர் ஊராகப் போக வேண்டும் என்ற ஆர்வம் சுத்தமாக வடிந்து போயிருந்தது. அதனால் அந்த பிரத்யேக டாக்சி பயணத்தில் கூட இருவரும் பேசாமலேயே இருந்தார்கள்.

பொதுவாக உலகநாதனின் நாக்கில் அவ்வப்போது சனி வந்து உட்கார்ந்து கொள்ளும்! இந்த முறை சனி ஜாகை மாறி நாங்குநேரி அத்தை கிழவியின் நாக்கில் போய் உட்கார்ந்து கொணடது! உலகநாதனையும் பரமேஸ்வரியையும் ஒன்றாக பார்த்ததும் அத்தை கிழவியின் நாக்கில் இருந்த சனி சொன்ன சொல் இது—

''நல்ல காரியம் செஞ்சிருக்க ஒலகய்யா! வயசான காலத்ல ஒத்தியில கெடந்து சாகறதுக்கு ரொம்ப வெவரமா கல்யாணத்தைப் பண்ணிக்கிட்ட. ஒன் பெண்டாட்டியும் மயலு கணக்கா அழகு சொட்டுதா! ஆனா பாக்குறதுக்குத்தான் புருஷன் பெண்டாட்டி கணக்கா தெரியலை நீங்க ரெண்டு பேரும். ஒங்களைப் பாத்தா தகப்பனும் மகளும்னுதேன் சொல்லணும்...!'



இதைச் சொல்லிவிட்டு இருக்கிற ஏழெட்டு பல்லை காட்டி அத்தை கிழவி ஒரு சிரிப்பு சிரித்ததை உலகநாதன் ரொம்பவும் சிரமப்பட்டு தாங்கிக் கொண்டார். வயசு வித்தியாசத்திற்காக மன காயத்தையோ மன ஆவேசத்தையோ காட்டிக் கொள்ளாமல் பல்லைக் கடித்துக் கொண்டு உலகநாதன் நாங்குநேரியில் இரண்டு மணி நேரம் இருந்துவிட்டுத்தான் கிளம்பினார். பரமேஸ்வரியின் முகத்தை அவரால் பார்க்கவே முடியவில்லை. ஜன்னலுக்கு வெளியில் பார்த்தபடியே டாக்சியில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு ஒரு உண்மை புரிந்தது. அவரையும் பரமேஸ்வரியையும் சேர்த்துப் பார்க்கிற யாருக்கும் அவர்கள் இருவரும் தம்பதிகள் போல் தெரியவில்லை! பரமேஸ்வரி அவருக்குத்தான் அழகிய இளம் மனைவி. இளைஞர்களின் பார்வைக்கு அவள் அழகிய இளமையான பெண் மட்டும்தான்! இதுதான் நிஜம். இந்த நிஜத்தை ஏற்க உலகநாதனின் மனம் மறுத்தது! மறுத்து என்ன செய்ய? நிஜம் நிஜம்தான்...!

அதனால் குற்றாலம் போய் வந்ததில் எவ்வளவு மோசமான மனபாதிப்புக்கு உள்ளானாரோ அதைவிட ஒரு மோசமான மன இறுக்கத்திற்கு உலகநாதன் நாங்குநேரி போய் வந்ததில் ஆளாகிப் போனார். வாசல் திண்ணைக்குக்கூடப் போகாமல் வீட்டிற்குள்ளேயே முடங்கிப் போயிருந்தார். இந்த நேரம் பார்த்து தேர்தல் முடிவுகள் வெளியாகி 'கள்ளத்தோணி' சங்கரலிங்கம் வெற்றி பெற்ற செய்தி வேறு பயங்கர வேட்டுச் சப்தங்களுடன் அறிவிக்கப்பட்டதும் உலகநாதனை ரொம்ப பாதித்து விட்டது. நியாயமாக பார்த்தால் உலகநாதன் நின்று ஜெயித்திருக்க வேண்டும்! காலம் செய்த கோலம்! ஒரு கள்ளக்கடத்தல் சண்டியர் இன்று எம்.எல்.ஏ.! அன்றைக்கு மட்டும் மணிவாசகம் கும்பல் பேச வேண்டிய முறையோடு பேசியிருந்தால் உலகநாதன் எம்.எல்.ஏ. ஆகி அவர்பாட்டுக்கு 'கிருஷ்ணா

ராமா'யென்று சேவை செய்து கொண்டு நிம்மதியாக
பேரும் புகழுமாக இருந்திருப்பார். இப்படி ஒரு
நப்பாசைக்கு ஆளாகி முப்பது வயசு குறைச்சலான
ஒருத்தியை கல்யாணம் பண்ணிக் கொண்டு அவமானத்
திற்கும் கிண்டலுக்கும் ஆளாகியிருக்க மாட்டார்!

பரமேஸ்வரியுடன் ஏற்படுத்திக் கொண்டிருக்கும்
தாம்பத்ய வாழ்க்கை என்ற புதிய பிரேமையும் கிளர்ச்சி
யும் உலகநாதனின் மன நிலையில் இருந்து சரேலென
கலைய பார்த்தது! வெளியூர் என்றும் உறவினர்
வீடென்றும் பரமேஸ்வரியுடன் பெருமையுடன் கலந்து
கொள்ள வேண்டும் என்ற அவருடைய கனவு அடி
வாங்கி விட்டது! வெளியில் போகாமல் வீட்டிற்குள்
ளேயே ஒரு மாதிரியாக அடைபட ஆரம்பித்தார்.
ஆனால் வீட்டிற்குள்ளேயும் அவரால் தொந்தரவு இல்
லாமல் இருக்க முடியவில்லை. ஊர்காரர்கள் என்றும்
உறவுக்காரர்கள் என்றும் 'புதுப்பொண்ணு' பரமேஸ்
வரியை பார்த்துவிட்டுப் போக ஆண்களும் பெண்களும்
குடும்பம் குடும்பமாக வருவதும் போவதுமாக இருந்
தார்கள்.

ஆனால் உலகநாதனால் யாரையும் மனப்பூர்வமாக
வரவேற்கவோ உபசரிக்கவோ முடியவில்லை. வருகிற
எல்லோருக்கும் நாங்குநேரி அத்தையின் அபிப்பிராயம்
தான் மனதிற்குள் இருக்குமோ என்ற சந்தேகம் அவரு
டைய மனசைப் போட்டு அலைக்கழித்துக் கொண்
டிருந்தது. ஆனால் அந்த மனநிலையிலும் உலகநாத
னின் திருட்டுப் புத்தி பரமேஸ்வரியை பார்ப்பதற்கு
சிவமதி வந்து போகிறாளா என்பதை கண்காணித்துக்
கொண்டே இருந்தது. ஆனால் பரமேஸ்வரியை பார்க்க
சிவமதி வரவில்லை. எல்லோரும் அவரவர் பங்குக்கு
அவளை கூப்பிட்டுப் பார்த்து விட்டார்கள்.

''என்னை எவளும் தொந்தரவு பண்ணாதீங்களா—
நா வரலை'' என்று சிவமதி சொன்னது சொன்னது



தான். உலகநாதன் வீட்டுப் படியேறவில்லை அவள்.
இது உலகநாதனின் வினோதமான ஆக்ரோஷத்தை
ரகசியமாக தாக்கியது. எந்த முகத்தை வைத்துக்
கொண்டு தன்னுடைய பெண்டாட்டியைப் பார்க்க
வருவாள் என்று பெரிய மனசுடன் உலகநாதன் பேசா
மல் இருந்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை
அவர். சிவமதியின் எதிர்வீட்டு சுப்பையாவின் சம்சாரம்
பரமேஸ்வரியை இரண்டாவது தடவையாக வந்து
பார்த்துவிட்டுப் போக வந்தபோது உலகநாதன்
—''எங்கே நம்ம அழகர்சாமி மவ சிவமதியை கண்ணு
லேயே காங்கலியே?'' என்று கேட்கக்கூடாத கேள்
வியை கேட்டு விட்டார். கேட்கலாமா இப்படி? மனுஷத்
தனமா இது?

நாங்குநேரிக்காரி கேட்டபோது மட்டும் உன் மனசு
எப்படி புழு போல் துடித்தது? இப்போது நீ மட்டும்
அதைவிட மோசமான கேள்வியை கேட்கலாமா?
பாவம் இல்லையா அந்தப் புருஷன் இல்லாதவள்.
உலகநாதா! உனக்கு ஒரு நீதி நாங்குநேரிக்காரிக்கு ஒரு
நீதியா? - என்றெல்லாம் உலகநாதனின் மனசாட்சி
கொஞ்சம் அவரை சன்னமான குரலில் நியாயம் கேட்
கத்தான் செய்தது... மனசாட்சியை குழி தோண்டிப்
புதைத்துவிட்டு அவர் பாட்டுக்கு ஊஞ்சலில் உட்கார்ந்
திருந்தார்.

ஆனால் சிவமதி சும்மா உட்கார்திருக்கவில்லை.
உலகநாதனைவிட பல மடங்கு கோபக்காரி அவள்.
உலகநாதன் சுப்பையா சம்சாரத்திடம் கேட்டதை
உடனே உள் விஷயம் தெரியாமல் அவள் அதை சிவ
மதியிடம் சொன்னாள். அடுத்த அரைமணி நேரத்தில்
சிவமதி கேசவபெருமாள் கோயில் சந்நிதியில் நின்
றாள். உலகநாதனின் அந்த அயோக்கியத்தனமான
விசாரணை அவளுடைய மனசில் தீங்கங்கு மாதிரி
விழுந்து எரித்துக் கொண்டிருந்தது. ''என்ன - முழிச்சி

முழிச்சிப் பாக்கேரு... (யாரையும் இல்லை; பெருமாளைத்தான்!) நீரு என்ன செய்வீரோ தெரியாது. என் மனசை அலைபாயவிட்ட மனுசன் விளங்கித் துலங்கி இருக்கக் கூடாது. கொள்ளி விளங்கக்கூடாது அந்த சண்டாளனுக்கு... என் மனசை எரிச்சானே ஒருநா அவன் மனசும் எரியணும். இல்லை - நான் சுட்டு எரிப்பேன் அவன் குடியை...''

சினத்தின் வேகத்தில் சிவமதியின் நெஞ்சுக் கூட்டுக்குள் வெடித்துச் சிதறிய கடுமையான சொற்கள் கோயிலின் குடவறைச் சுவர்களில் முட்டி மோதித் தெறித்தன. இப்படியொரு விபரீதமான கோணத்தில் காயை விதி நகர்த்தியிருப்பது கொடியதுதான். என்ன செய்ய? பலிக்கப் போகிற சிவமதியின் இந்த சாபத்தைப் பற்றி தெரியாமல் உலகநாதன் என்ற நிலப்பிரபு பரமேஸ்வரியின் அழகைப் பார்க்க சிவமதி வரமாட்டாளாயென்று வீட்டுத் திண்ணையில் கொக்கு மாதிரி நின்றபடி காக்கா மாதிரி பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்!

ஆனால் அவருடைய பருப்பு சிவமதியிடம் வேகவே இல்லை! பரமேஸ்வரியை அவள் திரும்பிக் கூட பார்க்கவில்லை. இன்னும் யாரெல்லாம் பரமேஸ்வரியை பார்க்க வரவில்லை என்பதை உலகநாதன் குத்துமதிப்பாக ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தார்! விடை சலவை செய்யப்பட்ட துணிபோல பளிச்சென்று அவருடைய புத்தியில் தெரிந்தது! செந்துறையில் இருக்கும் ஒரு இளைஞன்கூட உலகநாதனின் வீட்டுக்குக் கல்யாணம் விசாரிப்பதற்கு வரவே இல்லை. ஊர் வழக்கம் அது. யார் வீட்டில் எந்த ஊரில் கல்யாணம் நடந்தாலும் வயசு வித்தியாசம் இல்லாமல் சின்ன வயசுப் பையன்கள் முதற்கொண்டு கல்யாணம் விசாரிக்க போகவும் வரவுமாக இருப்பார்கள். முப்பது வருஷங்களுக்கு முன்பு உலகநாதனின் கல்யாணம் சிவலப்பேரியில் நடந்தது. கல்யாணம் முடிந்து காந்தி



மதி செந்துறை வந்ததும் அவளைப் பார்க்க வந்தவர்களில் ஊர் இளைஞர்களும் அடக்கம்.

அப்போதே சகஜமாக காந்திமதியுடன் உட்கார்ந்து இளைஞர்கள் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அப்போது மாத்திரம் இல்லை. காந்திமதி உயிரோடு இருந்தவரை அவளிடம் ஏதாவது யோசனை கேட்கவும் ஏதாவது நல்ல செய்தி இருந்தால் சொல்வதற்கும் இளைஞர்கள் உலகநாதனின் வீட்டுக்கு வருவதும் போவதுமாகத்தான் இருந்திருக்கிறார்கள். அவ்வளவு ஏன்? உலகநாதனின் மகள்கள் கலைச்செல்வியும் செல்வராணியும் ஊரில் இருந்து வந்துவிட்டால் உடனே வந்து அவர்களைப் பார்க்கும் இளைஞர்கள் இப்போதும் செந்துறையில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தன் கூட பரமேஸ்வரியை பார்க்கவோ அறிமுகம் செய்து கொள்ளவோ உலகநாதன் வீட்டுப் பக்கம் மறந்துகூட தலை காட்டவில்லை! இது ரொம்பவும் யோசிக்க வேண்டிய சங்கதியாகப் பட்டது உலகநாதனுக்கு!

கல்யாணமான புதிதில்கூட காந்திமதியை செந்துறை பையன்கள் அவளை இளம் பெண்ணாகப் பார்க்காமல் உலகநாதனின் மனைவியாகத்தான் பார்த்தார்கள். அதேபோல கலைச்செல்வியையும் இளம் பெண்களாகப் பார்க்காமல் அவரின் மகள்களாகவே பார்த்தார்கள். இப்போது செந்துறையின் அதே சின்ன வயதுப் பையன்கள் பரமேஸ்வரியை உலகநாதனின் மனைவியாக பார்க்கவில்லையோ? எல்லா பையன்களுமே பரமேஸ்வரியை அழகான சின்ன வயசுப் பெண்ணாக மட்டும்தான் பார்க்கிறார்களோ?

இந்தக் கேள்வி மண்டைக்குள் எழுந்ததும் உலகநாதன் கொஞ்சம் திகைத்துப் போனார். குற்றாலத்தில் இளைஞர்கள் அழகிய இளம் பெண்ணாகப் பார்த்ததாலேயே பரமேஸ்வரியின் பக்கத்தில் வந்து வந்து அவளை கவனித்தார்கள். செந்துறைப் பையன்கள்

அதே காரணத்தால் பரமேஸ்வரியை பார்க்கவே வராமல் இருந்து விட்டார்கள்! இதுதான் வித்தியாசமான உண்மை!

பரமேஸ்வரியை பார்க்க வராமல் இருந்துவிட்ட சிவமதியை மறந்துவிட்டு; பார்க்க வராத இளைஞர்களின் மேல் உலகநாதனின் சிங்கமனம் திரும்பிவிட்டது! செந்துறையில் இருக்கும் ஒவ்வொரு இளைஞனாக நினைவில் கொண்டு வந்தார். மனோகரன்; பிச்சைக்கனி; மாரிமுத்து; ராஜேந்திரன்; காளைச்சாமி; என்று பட்டியல் அதுபாட்டுக்கு அனுமார் வால் போல நீளமாக போய் கொண்டே இருந்தது. தனிப்பட்ட முறையில் இவன்களில் யாருமே கெட்ட பையன்கள் கிடையாது. அதேபோல ரொம்ப அழகான பையன் என்று சொல்கிற மாதிரியும் ஒருத்தனும் கிடையாது!

ஆனாலும் உலகநாதனின் ஆழமான மனசில் ஊர் பையன்களின் விஷயத்தில் ஒரு கரும்புள்ளி விழுந்துவிட்டது! இளைஞர் சமுதாயத்தின் மேலேயே கொஞ்சம் பயம் கொண்டு விட்டார்! இந்த பயத்தில் இருந்து அவரால் மீளவும் முடியவில்லை. பயத்துக்கு அணை போடவும் தெரியவில்லை! இதனால் என்ன ஆயிற்று தெரியுமா? அணை போடமுடியாத அவருடைய பயமெல்லாம் பரமேஸ்வரியின் சுதந்திரங்களுக்கு அணை போடுகிற கருவியாகி விட்டது! இத்தனைக்கும் உலகநாதன் அவரின் உள் மன பய ஊற்றை சொற்களால் ஆரம்பத்தில் பரமேஸ்வரியிடம் காட்டிக் கொள்ளவே இல்லை. அவளிடம் அவர் நடந்து கொண்ட சின்னச் சின்ன தோரணைகளில் சின்ன வியர்வைப் பெருக்கு போல உள்மன பயஊற்று கசிந்தோடிக் கொண்டிருந்தது.

நதிமூலம் இப்படித்தான் இருக்கும். தலைக்காவிரி இல்லையா? சின்னஞ்சிறிய சதுக்கத்தில் ஸ்படிகமாக



சுரக்கும் சின்ன அந்த ஊற்று நீர் போகப் போக விரிந்து பாயும் மகா நதியாக எப்படி பீறிட்டு பிரவகித்து விடுகிறது...

அந்தக் கதைதான் ஆகப் போகிறது உலகநாதனின் பய வெள்ளத்திற்கும்... நாளுக்கு நாள் பொங்கிப் பீறிடப் போகிற அந்த மாய வெள்ளத்தின் மாயநதியின் மையத்தில் ஒரு தீவுத் திடலாகத்தான் இருவரின் தாம்பத்ய வாழ்க்கையும் துண்டிக்கப்படப் போகிறது. பரமேஸ்வரிக்குக் கூட தீவுத்திடலில் இருந்து மீட்சி உண்டு. உலகநாதனுக்குத்தான் மீட்சி கிடையாது. சிவமதியிடம் அவர் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கும் சாபம் அத்தனை சக்தி மிக்கது........

# 15

பரமேஸ்வரி உலகநாதனுடன் திருமண வாழ்க்கையை தொடங்கி பதினாறு மாதங்கள் பாலைவனத்தில் நகரும் ஒட்டகமாக கடந்து விட்டிருந்தன. நீரில் மூழ்கிக் கிடக்கும் கனமான வாகனம் போல அவளுடைய ஒவ்வொரு தினமும் உலகநாதனின் பயப் பிரவாகத்தின் கீழ் அமிழ்ந்து போயிருந்தது. பரமேஸ்வரியின் அம்பாசமுத்திர வாழ்க்கையில்கூட சன்னமான உயிர் துடிப்பு மனசுக்குள் தம்பூராவின் சுருதியாக ரீங்கரித்துக் கொண்டிருந்தது. உலகநாதனின் மனதில் இருந்து வெள்ளமாக பீறிட்ட பய எண்ணம் அந்த தம்பூராவின் இழைகளையே சிதிலப்படுத்தி விட்டது. அழகான இசைக்கருவி சிதைந்து போவது பெரிய துர்ப்பாக்கியம். பரமேஸ்வரியின் துர்பாக்கியத்தின் மேல் மேலும்மேலும் துர்பாக்கியங்கள் கவிந்து கொண்டே இருந்ததில் அவ

ளின் வாழ்வு வெளி மேலும் மேலும்தான் குறுகியது. அதனால் பரமேஸ்வரிக்கு ஒருவித மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

கல்யாணத்தின் போது பம்பாயில் இருந்து செல்வ ராணி வாங்கி வந்து தந்திருந்த 'ஹார்ஸ் ப்ரவுன்' நிற 'கார்டன்' சேலையை கட்டிக்கொண்டு ஒருநாள் பர மேஸ்வரி கேசவ பெருமாள் கோயிலுக்குக் கிளம்பி னாள். திண்ணையில் உட்கார்ந்திருந்த உலகநாதன் உடனே தெருவின் இரண்டு புறமும் இரண்டு தடவை ஒரு பார்வை பார்த்தார்! அதன் அர்த்தம் - இளைஞன் எவனாவது தெருவில் எங்கேயாவது நின்று பரமேஸ்வரி கோயிலுக்குப் போகிற அழகைப் பார்க்கிறானா என்பது தான்!

தினமும் காலையில் எல்லா வேலையும் முடிந்ததும் பரமேஸ்வரி பெருமாள் கோயிலுக்கு போய்விட்டு கொஞ்சம் நிதானமாக வரலாம். இந்தச் சிறிய சுதந் திரத்தை உலகநாதன் பெரிய மனசு வைத்துத் தந்திருந் தார். கொஞ்ச நேரத்திற்காகவாவது சுதந்திர காற்றை சுவாசித்துவிட்டு வர பரமேஸ்வரியும் தவறாமல் காலை யில் பெருமாள் கோயிலுக்குக் கிளம்பி விடுவதுண்டு. அதுவும் இல்லாமல் மலையோடு மலையாய் சார்ந்து போயிருந்த கோயிலின் அமானுஷ்ய வனப்பு பரமேஸ் வரியின் மனசை மிகவும் ஈர்த்திருந்தது. அன்றும் அந்த வனப்பில் நீண்ட நேரம் மனதைப் பறிகொடுத்து விட் டிருந்து விட்டு தெருக்கோடியில் திரும்பியதுமே வீட்டுத் திண்ணையில் தூணைப் பிடித்தவாறு உலகநாதன் நிற்பதை பரமேஸ்வரி பார்த்தாள். ஆனால் அவளு டைய தலை தெரிந்ததுமே உலகநாதன் உள்ளே விரைந்து போய் ஊஞ்சலில் உட்கார்ந்து குறைந்த வேகத்தில் ஆட ஆரம்பித்து விட்டார் - கண்கள் இரண் டையும் இறுக்கி மூடிக் கொண்டு...! மெட்டி சப்தம் கேட்டது. துளசி மணம் நாசியை வருடியது.



''ஈஸ்வரி தாயி!'' - கண்களைத் திறக்காமலேயே... கூப்பிட்டார். இந்த அலட்டலில் எல்லாம் குறைச்சல் கிடையாது!

''என்னங்க?''

''துளசி இருக்கா?''

''இருக்கு. இந்தாங்க''

''துளசி வாசனை துளசி வாசனைதான் - இல்லே?'' —உலகநாதன்.

''நம்ம வீட்டுத் துளசிகூட இவ்வளவு பசுமையா இருக்காது.''

''முந்தி இருந்துச்சி ஈஸ்வரி. அதாவது காந்திமதி இருந்தப்ப... அது சரி; இது என்ன சேலை இப்ப நீ கட்டியிருக்கிறது...?''

''பம்பாய்ல இருந்து செல்வராணி வாங்கிட்டு வந்து தந்தது''

''நல்லாவாயிருக்கு?''

''எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இப்படிப்பட்ட சேலை எதையும் இதுக்கு முந்தி நான் கட்டினதே கிடையாது...''

''என் அபிப்பிராயம் - இதெல்லாம் பொருத்தமாவே இல்லை ஒனக்கு. இதெல்லாம் கல்யாணமாகாத சின்ன வயசுப் பொம்பளைப் பிள்ளைங்க கட்றது. இப்ப ஒனக்கு ஏற்பட்டிருக்கிற அந்தஸ்துக்கு பட்டுச் சேலையை மாத்திரம்தான் கட்டணும் நீ''

''வீட்ல இருக்கும் போது கூடவா?''

''காந்திமதி இருக்காளே - இருவத்திநாலு மணி நேர மும் அவ பட்டுச் சேலையிலதான் இருப்பா. வாய் நெறய வெத்தலையும் போட்டுக்கிட்டு மகாலட்சுமி

கணக்கா நிப்பா பாரு... என் ஆசை; நீயும் அவளை மாதிரியே இருக்கணும். இந்த வெங்காய தோல் கணக்கா இருக்குற சேலை சவங்களையெல்லாம் தூக்கித் தெருவுல போடு! அலமாரியில காந்திமதியோட பட்டுச் சேலைங்க அம்பதோ அறுவதோ இருக்கு. இன்னும் வேணுமானாலும் சொல்லு; திண்ணவேலி போய் வாங்கிட்டு வந்து தரேன் (நீயும் வாயென்று சொல்லவில்லை!) நெதம் ஒண்ணு கட்டு. நம்ம அந்தஸ்துக்குத் தக்கபடி பெரிய மனுஷியாட்டம் இரு. எனக்கு அதான் பிடிக்கும்...''

'எனக்கு அதான் பிடிக்கும்' என்ற கடைசி வார்த்தைகள் மட்டும் கடுமையாக வந்தன. கட்டுகிற சேலையில்கூட உலகநாதனின அதிகாரம் பரமேஸ்வரியை சற்று திகைக்க வைத்தது. இந்த அதிகார கடுமை வெறும் சேலை சம்பந்தமானதாகத் தெரியவில்லை. பணக்கார வாழ்க்கை கிடைத்தும் பிரியப்படும் சேலைகள் கட்டும் சுதந்திரம் ரொம்ப தந்திரமாக மறுக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. நியாயமே இல்லாமல் கண்டிக்கப்பட்ட குழந்தையின் மனநிலையிலேயே அன்று பூராவும் இருந்தாள் பரமேஸ்வரி.

சாயந்தரம் உலகநாதன் படித்துறைப் பக்கம் கிளம்பிப் போனார். திரும்பி வர இரண்டு மணி நேரமாவது ஆகும். உடனே பரமேஸ்வரி பலகாலமாகத் திறக்காமல் இருந்த காந்திமதியின் அலமாரியைத் திறந்தாள். ஒரு பட்டுச் சேலையை உருவி எடுத்தாள். சேலையில் ஒரே தூசி வாசனை. குட்டிச் சாக்கு போல கனத்தது பட்டுச் சேலை. பரமேஸ்வரி அதை கட்டிக் கொண்டாள். வெற்றிலைப் பெட்டியை எடுத்து அவசரமாக வெற்றிலையும் போட்டுக் கொண்டாள். வேகமாக கண்ணாடியின் முன்னால் போய் நின்றாள். தன்னுடைய உருவத்தை உற்றுப் பார்த்தாள். சட்டென பரமேஸ்வரியின் அறிவில் மின்னல் வெட்டியது. அந்த



பட்டுச்சேலையிலும் வாய் நிறைந்த வெற்றிலையிலும் பத்து வயசு கூடினவளாக அவள் தோற்றமளித்தாள்! கணவன் என்ற மனிதனின் கபடமனசு அவளுடைய தோற்றத்தில் தெரிந்தது.

வாயை கழுவி மறுபடியும் மிருதுவான 'கார்டன்' சேலையை கட்டிக்கொண்டு கண்ணாடியில் பார்த்தாள். சின்ன வயசு கன்னிப் பெண் போல அழகாகத் தெரிந்தாள். பரமேஸ்வரியின் கண்களில் லேசாக கண்ணீர் திரண்டது. மனம் சற்று விம்மியது. சின்ன வயசுப் பெண் போல் தெரியக்கூடாது என்பதற்காக அவளை பட்டுச்சேலை கட்டச் சொல்கிற உலகநாதனின் கள்ளத்தனம் முள் போல பரமேஸ்வரியின் மனசைத் தைத்தது. ஒருவித பயத்தையும் ஏற்படுத்தியது. இது நடந்து ஒரு வாரம் இருக்கும். ஏதோ ஒரு ஜோலியாக உலகநாதன் திருநெல்வேலி கிளம்பிப் போனார். இப்படி ஏதாவது ஒரு வீட்டில் ஆண்கள் வெளியூர் கிளம்பிப்போவது தெரிந்தால் அக்கம் பக்கத்து வீடுகளில் இருந்து பெண்கள் கிளம்பி அந்த வீட்டுக்கு வந்து சாவகாசமாக பேசிக் கொண்டிருப்பார்கள். அந்த வழக்கத்தில், நான்காவது வீட்டில் இருக்கிற தைலம்மா உலகநாதன் புறப்பட்டுப் போனதைப் பார்த்துவிட்டு பரமேஸ்வரியுடன் பேசிக் கொண்டிருக்க ஓடிவந்து விட்டாள். பல பேச்சுக்களின் இறுதியில் பரமேஸ்வரி தைலம்மாவைப் பார்த்து சாதாரணமாக கேட்டாள்.

''காந்திக்கா எப்பவுமே பட்டுச் சேலைதான் கட்டுவாங்களாமே?''

''சொன்னது ஆரு?''

''அவங்கதான்''

''அண்ணாச்சியா?''

''ம்

''என்னத்துக்கு அவுஹ இப்படி புளுகியிருக்கா ஹன்னு தெரியலையே''

பரமேஸ்வரி சற்று அதிர்ந்தாள். ''அவங்கதான் சொன்னாங்க. அக்கா இருபத்திநாலு மணி நேரமும் பட்டுச் சேலையிலதான் இருப்பாங்களாம்.''

''இருந்தாலும் அண்ணாச்சி இப்படி புளுகக் கூடாது. கல்யாணம் காட்சின்னு போவும்போது மட்டுந் தான் பட்டுச் சேலை. மிச்ச நேரம் பூராவும் புல்வாயல் சேலைதான் கட்டுவாஹ...''

''நெசமாவா சொல்றீங்க?''

''பொய் சொல்லி எனக்கு ஆக வேண்டியது என்ன இருக்கு கண்ணு...?''

சிறிது சிறிதாக பரமேஸ்வரிக்குள் அதிர்வின் தாக்கம் ஜாஸ்தியாகிக் கொண்டிருந்தது. இவ்வளவு பெரிய அற்பப் பொய் எதற்காக? பரமேஸ்வரி யோசித்துக் கொண்டே இருந்தாள். ஆனால் வாய் கூசாமல் இத்தனை பெரிய பொய்யைச் சொல்லிவிட்டு உலகநாதன் அவர் பாட்டுக்குத்தான் பரமேஸ்வரியின் முன்னால் நடமாடிக் கொண்டிருந்தார். உண்மை நன்றாக யோசனை செய்தபின் பரமேஸ்வரிக்குப் புரிந்தது. யாருடைய கண்ணிலுமே அவள் இளம் பெண்ணாகத் தெரிவதை உலகநாதன் விரும்பவில்லை. அப்படித் தெரிந்ததில் ஏற்பட்டதுதான் குற்றால அனுபவம் நாங்குநேரி அனுபவம். அந்த அனுபவம் இனி தவிர்க்கப்பட்டாக வேண்டும். அதற்காக பரமேஸ்வரியை ஒரே நாளில் ஔவைக் கிழவியாக்கிவிட முடியாது! ஆனால் ஒரு பத்து வயசை ஜாஸ்தியான மாதிரி காட்ட முடியும்! இருபத்திநான்கு மணி நேரமும் பட்டுச்சேலையும் வாய் நிறைய வெற்றிலையும் அதற்குத்தான்! அந்தஸ்துக்காக என்று சொல்லிக் கொள்வதெல்லாம் வெறும் பித்தலாட்டம்! - இதனால் உலகநாதனின் அந்தஸ்து பரமேஸ்வரியிடம் தாழ்ந்து போனதுதான் மிச்சம்!



உலகநாதனிடம் பரமேஸ்வரிககு ஏற்பட்டுவிட்ட மற்றொரு காயம் இது. அவளுடைய கணவன் என்ற மனிதனுக்கு அவளின் இளமை பெரிய பிரச்னையாகிக் கொண்டிருக்கிறது. அவளுக்கு அவரின் முதுமை பிரச்னையாக இல்லை. ஆனால், அவரின் முதுமைக்கு அவளின் இளமை பிரச்னையாகி விடும்போது அவளுக்கும் அவருடைய முதுமை பிரச்னையாகி விடுகிறது. பெருமாளே! இவருக்கு இளமையான பெண் மனைவியாக வர வேண்டும், ஆனால் அவளுடைய இளமை பிறருடைய கண்களுக்கும் தெரியக்கூடாது! பரமேஸ்வரி பொருமினாள். கடந்த கால வறுமை போட்டு வைத்திருந்த எத்தனையோ 'பர்தா'க்களின்போது கூட கண்கலங்கியதில்லை அவள். இப்போது பணக்கார முதுமை போடப் பார்க்கிற 'பர்தா'க்களால் கண் கலங்காமல் இருக்க முடியவில்லை...

பத்து வயசு கூடுதலாக தெரிகிறாள் என்பதற்காக பரமேஸ்வரியை பட்டுச் சேலையிலும் வாய் நிறைய வெற்றிலையிலும் ஊர் ஊராக உலகநாதனால் அழைத்துச் சென்று விடவும் முடியவில்லை. பரமேஸ்வரியின் உடம்புக்கு அவரால் பட்டுச்சேலையை கட்ட முடிந்தது. அவரின் மனசுக்கு எந்த பட்டுச் சேலையால் கட்ட? உலகநாதனின் அழுக்கு மனம் எந்த ஆடையாலும் மறைக்க முடியாத அம்மணமாகவே காட்சி தந்தது!

ஆனால் பாவம்; பட்டுச் சேலையிலாவது உலகநாதன் தன்னை வெளியூர்களுக்கு அழைத்துப் போவார் என்று ஆரம்பத்தில் பரமேஸ்வரியிடம் சின்னதாக நம்பிக்கை இருந்தது. ஸ்ரீவில்லிபுத்தூர் போய் ஆண்டாள் கோயில் பார்த்துவிட்டு வருவோம் என்று கேட்டுப் பார்த்தாள். முழங்கால் வலியென்று

பொய்யை சொல்லி உலகநாதன் தப்பித்துக்கொண்டார். மற்றொரு சமயம் மதுரையும் அழகர் கோயிலும் பார்த்துவிட்டு வருவோம் என்று கூப்பிட்டாள். வயிறே சரியில்லையென்று புளுகி சாப்பாட்டைக்கூட சரியாக சாப்பிடாமல் நடித்துக் காட்டினார். ஆனால் முழங்கால் வலிக்கும் வயிறு சரியில்லாததற்கும் உலகநாதன் டாக்டரிடம் போய் வந்து மருந்து எதையும் சாப்பிடுகிறாரா என்று பரமேஸ்வரி கவனிக்க மாட்டாளா? கவனிக்க மாட்டாள் என்பது உலகநாதனின் அபிப்பிராயம். ஏனென்றால் ஏற்கனவே அவள் கவனிக்க முடியாமல்தான் உலகநாதன் ரத்தக் கொதிப்பிற்கான மாத்திரைகளை ரகசியமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு வயசாகி விட்டதால் ஏற்படும் பிரச்னை எதுவும் பரமேஸ்வரிக்கு தெரியக் கூடாது என்பது உலகநாதனின் முதல் விருப்பம்! ஆனால் மூட்டுவலியென்று நினைத்த போதெல்லாம் புளுகிக் கொண்டிருக்கிறாரே— அதெல்லாம் வயசான ஆசாமிகளுக்குத்தான் வரும் என்று தெரியவில்லை மனிதருக்கு...

உலகநாதன் என்ற மனிதரின் முதுமையின் இந்த முரண்பாடுகளையே சகித்துக்கொள்ள முடியாத பரமேஸ்வரியின் மிருதுவான மனசால் பாலுறவு விஷயத்தில் அவரின் தேவையற்ற மூர்க்கத்தனமான முரண்பாடுகளை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்... பாலுறவில் தேவையற்ற மூர்க்கத்தனத்தை உலகநாதன் காட்டிக் கொள்வதின் நிஜமான காரணம் பரமேஸ்வரிக்குத் தெரியாது. ஆனால் உலகநாதனுக்குக் காரணம் தெரியும். அந்தக் காரணம் அவருக்குள்தான் வேதாளம் போல எந்த நேரமும் தொங்கிக் கொண்டிருக்கிறதே... உலகநாதனால் அந்த வேதாளத்தை விரட்டவே முடியவில்லை. 'சின்ன வயசுக்காரியை கல்யாணம் செய்துக்கிறானே— பெண்டாட்டியை அந்த விசயத்ல சமாளிச்சிப் பிடுவானா?' - என்று என்றைக்கோ ஒரு வம்பு மடத்தில் உட்கார்ந்து பெத்தையா வாய்சவுடால் அடித்தாரே—அந்த சவுடால்தான் உலகநாதனின் மனசில் தொங்கும் வேதாளம்!



கல்யாணமானதும் முதல் தடவையாக உலகநாதன் பாலுறவிற்காக பரமேஸ்வரியை நெருங்கியபோது அவருடைய மனசிற்குள் இந்த வேதாளம்தான் பூதாகரமாக பூதக்கண்ணாடியின் கீழ் தெரிகிற வஸ்துவாக தெரிந்தது! சமாளிக்க முடியாதோ என்ற சந்தேகத்தையும் கொடுத்தது வேதாளம்! சமாளிக்க முடியாமல் போனால் என்ன செய்வதென்ற பயத்தையும் வேதாளம் மனசுக்குள் ஏற்படுத்தியது!

எப்படியும் சமாளித்துவிட வேண்டும் என்ற ஆக்ரோஷமும் கூடவே தோன்றியது. ஆக்ரோஷத்தின் குணம் என்னவென்றால் கூடவே அவசரத்தையும் அழைத்து வருவது! அவருடைய ஆக்ரோஷமும் அவசரமும் பாலுறவு என்பதையே வலியும் இம்சையும் சேர்ந்த முரட்டுச் செயலாக பரமேஸ்வரியை மிரள வைத்து விட்டது. ஆனால் அவளுடைய வலியையும் பயத்தையும் உலகநாதன் அவருடைய வெற்றியாக பாவித்தார்! வெற்றியை தக்க வைத்துக்கொள்ள மேலும் அவசரம் காட்டினார். அதற்காக மேலும் ஆக்ரோஷப்பட்டார்! ஆனால் தொடர்ந்த இந்த அனுபவத்தில் பரமேஸ்வரிக்கு ஆக்ரோஷத்தின் ரகசியம் புலப்பட்டு விட்டது. ஒரு நாள் தாங்க முடியாத இம்சையில், மெல்லிய குரலில்தான் கேட்டாள் "சுலபமா முடியாம இருக்கிற விஷயத்துக்குப் போய் எதுக்கு இத்தனை கோபமும் பதட்டமும் காட்டணும்?"

பரமேஸ்வரியின் இந்தக் கேள்வியில் பொத்தென்று விழுந்து விட்டார் உலகநாதன். பரமேஸ்வரியிடம் அவர் வாங்கிய முதல் உதை இது! பரமேஸ்வரி என்னமோ உதைக்கவில்லை! ஆனால் உலகநாதனுக்கு

உதைதான் அது! உதை அவருடைய வாயை அடைத்து விட்டது. உஷாராகி விட்டார் மனிதர். ஆக்ரோஷத்தையும் அவசரத்தையும் குழி தோண்டி மூடினார்! நிதானமாகவும் மென்மையாகவும் நடந்து பார்க்கலாமே யென்று நினைத்தார்! ஆனால் அதுவோ இயல்பற்ற எச்சரிக்கை பாவனை நிறைந்ததாகவே இருந்ததில் உலகநாதனுக்குள் தொங்கிய வேதாளம் எகத்தாளமாக சிரித்தது!

என்னதான் செய்வார் உலகநாதன்... காந்திமதியுடன் நேர்ந்த பாலுறவு அனுபவமெல்லாம் தண்ணீரோடு தண்ணீர் கலந்த இயல்பான விஷயமாக இருந்தது. பரமேஸ்வரியுடன் ஏற்பட்ட பாலுறவு அனுபவம் தண்ணீருடன் எண்ணெய் கலந்த ஒருமிக்காத கடினமான அனுபவமாக இருந்தது...!

இதற்கு யாரைப் போய் நொந்து கொள்ள முடியும்? யாரையும் நொந்துகொள்ள முடியாது. ஆனால் உலகநாதன் ஓயாமல் பெத்தையாவைப் போட்டே நொந்து கொண்டிருந்தார்! — இது அவருடைய தனிப் பெருங்குணம் என்பதற்கு மேல் என்ன சொல்ல...?

# 16

ஊர் ஊராக சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வங்கள் மறுக்கப்பட்டு விட்டன. மென்மையான மிருதுவான நவீன சேலைகள் கட்ட வேண்டும் என்ற கனவுகள புறக்கணிக்கப் பட்டன. பாலுறவை நினைத்தாலே பரமேஸ்வரியின் உணர்வுகள் அதிர வைக்கப் பட்டன. இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் கை வரிசையைக் காட்டிக் கொண்டே வந்த உலகநாதன் அடுத்து



கைவைத்தது பரமேஸ்வரியின் கதைகள் வாசிக்கிற ஆர்வத்தில்.

படிப்பதற்காக அவர் மூலம் பரமேஸ்வரி வாங்கி வைத்திருந்த சில கதைப் புஸ்தகங்களை உலகநாதன் ஒருநாள் படித்துத்தான் பார்ப்போமே என்ற எண்ணத்தில் ஒவ்வொன்றாக எடுத்து வாசித்துப் பார்த்தார். வாசித்துப் பார்த்ததும் ஒருமாதிரியாகி விட்டார். எல்லா கதைகளுமே இளைஞர்களையும் இளம் பெண்களையும் பற்றிய விஷயங்களாகவே இருந்தன. ஒரு கதை அவருடைய கதையைப் போலவே இருந்தது! ஒரு சின்ன வயசுப் பெண் கொஞ்சம் வயசானவரை கல்யாணம் செய்து கொள்கிறாள். அவளுக்கு ஒரு இளைஞனுடன் தொடர்பு ஏற்பட்டு விடுகிறது! அந்தக் கதையை உலகநாதன் திருப்பித் திருப்பி மூன்று முறை வாசித்துப் பார்த்தார்! எல்லாமே இளமை பற்றிய சங்கதிகளாகவே இருப்பதால்தான் பரமேஸ்வரி விழுந்து விழுந்து கதைகள் வாசிப்பதாக உலகநாதன் தீர்மானம் பண்ணி விட்டார்! அவ்வளவுதான்!

அடுத்த முறை திருநெல்வேலி அவர் போய் வந்த போது புத்தகம் எதையும் வாங்காமல் வந்து விட்டார்! விற்றுப் போய் விட்டனவென்று வாய் கூசாமல் பொய்யைச் சொன்னார். அடுத்த தடவை 'மறந்து போச்சு' என்று ஏமாற்றினார் கடைசியில் ஒரு நாள் சுற்றி வளைத்து விஷயத்திற்கு வந்து விட்டார். கதைப் புஸ்தகம் படிப்பதால் கால்துட்டு நன்மை 'கிடையாது' என்றார். 'ஒரு எழுத்தாளன்' பெயரைச் சொல்லி அவனுக்கு தெருவுக்கு ஒரு பெண்டாட்டியென்று சொல்லி கேவலமாக ஏசித் தள்ளினார். கதை எழுதுகிறவனுக்கு முதலில் ஒழுக்கம் தேவை என்றார். ஒழுக்கம் இல்லாதவனின் எழுத்துக்களை தூக்கி நெருப்பில் போட வேண்டும் என்று கூச்சல் போட்டார். இப்படியொரு புலிவேஷம் போட்டு ஆடி பரமேஸ்வரியின் கதை

வாசிக்கிற ஆசைக்கு உலகநாதன் வேட்டு வைத்து விட்டார்! இந்த வேட்டு வெடிக்கிற சாக்கில் காந்திமதி இந்த மாதிரியான கதைப் புஸ்தகம் எதையும் தொடக் கூட மாட்டாள் என்ற வெட்டி பீற்றல் வேறு...!

பரமேஸ்வரி வேறொரு ஆசையை நேரம் காலம் பார்த்து வெளியிட்டாள். வசதி இல்லாததால் எட்டாவது வகுப்புடன் கல்வியை நிறுத்திவிட்ட பரமேஸ்வரி 'பிரைவேட்'டாக படித்து 'ப்ளஸ் டு' பரீட்சை எழுதப் போவதாக சொன்னாள்.

"ப்ளஸ் டு எழுதி என்ன செய்யப்போற?" உலகநாதன் காது குடைந்து கொண்டே கேட்டார்— சுவாரஸ்யம் ஏதும் இல்லாமல்.

"ஒவ்வொரு பரீட்சையா எழுதுவேன்"

"ஒவ்வொரு பரீட்சையானா?"

"மொதல்ல பி.ஏ. பிறகு எம்.ஏ."

உலகநாதன் காது குடைவதை நிறுத்தி விட்டார்! பாளையங்கோட்டையில் அந்தக் காலத்தில் அவர் படித்திருப்பது பத்தாவது வரைக்கும்தான். அவரைப் பொறுத்தவரையில் அவருடைய பெண்டாட்டி அவரை காட்டிலும் பணக்காரியாக இருக்கலாம்! ஆனால் அவரைவிட படிப்பாளியாக இருக்கக் கூடாது! நாளைக்கு அவள் புருஷனை மதிக்க மாட்டாள்! (இப்போது பரமேஸ்வரி உலகநாதனை மரியாதையின் கோபுர உச்சியில் அல்லவா வைத்திருக்கிறாள்...!)

கொஞ்சம் பழைய பாணியிலும் கொஞ்சம் புதிய பாணியிலும் இந்தப் படிப்புச் சமாச்சாரத்திற்கு உலகநாதன் சமாதி கட்டி ஆணி அடித்தவிதம் இது—

"ஈஸ்வரி தாயி! நீ ஒரு படிக்காத மேதை! ஒனக்கு எதுக்கு இந்த படிப்பும் பரீட்சையும்...! தூக்கி அதையெல்லாம் ஓடப்புல போடு! சட்டுப்புட்டுனு எனக்கு



ஒரு பிள்ளை பெத்துக் குடுக்கிற வழியை பாரு! சரியா கல்யாணமான பத்தாவது மாசம் காந்திமதிக்கு கனலச் செல்வி பொறந்தாச்சி!"

படிப்பு விஷயத்திற்கும் உலகநாதன் நாமம் போட்டு விட்ட பிறகும் பரமேஸ்வரி சோர்ந்து போய்விடவில்லை. பாட்டுக் கற்றுக் கொள்ளவாவது உலகநாதன் ஒப்புக் கொண்டு ஏற்பாடு செய்து தரமாட்டாரா என்று ஆசைப்பட்டாள். ஏதாவது ஒரு ஜன்னலை திறந்தாவது நன்றாக மூச்சுவிடலாமே என்ற தவிப்பு அவளுக்கு.

உலகநாதன் பரமேஸ்வரியின் பாட்டுக் கற்றுக் கொள்வதில் இளமை சார்ந்த விஷயம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை அவருக்கு! உலகநாதன் கல்லிடைகுறிச்சிக்குப் போய் அவருடைய ஆப்த பிராமண நண்பரைப் பார்த்தார். வயசான பாட்டு வாத்தியார் ஒருத்தரை அவர் ஏற்பாடு செய்தார். ஆனால் அவரால் செந்துறை வந்து சொல்லித் தர வசதிப்படாதுதென்று சொல்லி விட்டார். பரமேஸ்வரிதான் வாரத்தில் மூன்று நாட்கள் கல்லிடைக்குறிச்சி போய் கற்றுக்கொள்ள வேண்டும்.

"தனியா அனுப்ப தோதுப்படாது" என்றார் உலகநாதன் வேகமாக.

"நீயும் கூடவே வாயேன்..." என்றார் நண்பர்.

பரமேஸ்வரியோடு நன்றாக போய் வருவாரே உலகநாதன்! இப்படியாக பாட்டு சமாச்சாரத்திற்கும் மங்களம் பாடியாகி விட்டது! இதற்கு மேல் என்ன இருக்கிறது? பரமேஸ்வரி திறந்து பார்க்க ஆசைப்பட்ட அத்தனை ஜன்னல்களும் உலகநாதனால் மூடப்பட்டு ஆணி அறையப்பட்டு விட்டன. சுருக்கமாக சொன்னால் செந்துறை வாழ்க்கை சிறைவாசமாக இருந்தது பரமேஸ்வரிக்கு. உலகநாதனும் ஒரு சிறை கண்காணிப்

பாளராக அவளிடம் நடந்து கொண்டார். ஆயுள் கைதிகளுக்கு சிறைக்குள் சின்னச் சின்ன சலுகைகள் கிடைப்பது மாதிரி பரமேஸ்வரிக்கும் சில சலுகைகள் தரப்பட்டிருந்தன. கோவிலுக்குப் போய் வரலாம். பக்கத்து வீட்டுப் பெண்கள் பாத்திரம் பண்டம் வாங்க திருநெல்வேலி போனால் அவர்களுடன் பரமேஸ்வரியும் போய் வரலாம். மற்றபடி ஆற்றில் நிறைய தண்ணீர் போகிறது என்ற ஆசையில் போய் குளிப்பதற்கெல்லாம் பரமேஸ்வரிக்கு அனுமதி கிடையாது. ஆற்றில் அவள் குளிக்கும் போது சின்ன வயசுப் பையன்கள் பார்த்துவிட்டால் உலகநாதனின் குலப் பெருமை என்ன ஆவது? அதற்கும் மேல் பரமேஸ்வரியின் கற்பு என்ன ஆவது?

ஆனால் எதிர்பாராமல் உலகநாதன் வெளியூர் போகிற சமயங்களில் ஆற்றிலும் தண்ணீர் நிறைய போய் கொண்டிருந்தால் பரமேஸ்வரியை ஆற்றுக்குக் குளிக்க அழைத்துப் போக செந்துறையில் பெண்களில் ஒரு கூட்டமே இருந்தது. பரமேஸ்வரியை உலகநாதன் அநியாயமாக வீட்டுக்குள்ளேயே அடைத்து வைத்திருக்கிறார் என்பதில் செந்துறை ஜனங்களின் மத்தியில் ஒரு ரகசிய அனுதாப அலை இருந்தது. ஆனாலும் என்ன — பரமேஸ்வரி என்ற சிறைப்பறவைக்கு இந்த அனுதாப அலையெல்லாம் போதவில்லை.

சிறைக்குள்ளேயே கைதிகள் சில நேரங்களில் தற்கொலை செய்து கொள்வதுண்டு. அல்லது சிறையை விட்டு தப்பிச் செல்ல காத்திருந்து முயற்சி செய்து பார்ப்பதும் உண்டு. பரமேஸ்வரிக்குள்ளும் அப்படிப்பட்ட மனநிலை லேசாக முளைவிடத் தொடங்கியிருந்தது. அந்த மனச் சூழ்நிலையில், பொழுது விடிந்து இருட்டும்வரை மூன்று வேளையும் உலகநாதன் சொல்கிற சமையலை செய்து போட்டுக்கொண்டு, உனக்கு சமைக்கவே வரமாட்டேன்கிறது என்ற தினசரி சான்றிதழையும் பெற்றுக்கொண்டு - செந்துறை வீட்டிற்குள்



பரமேஸ்வரியும் அப்படி இப்படியென்று ஐந்நூறு தண்டனை நாட்களை மௌனமாகவே கழித்து விட்டிருந்தாள். ஆனால் மௌனமாகவே இருந்து விடுகிற அபிப்பிராயமும் கிடையாது பரமேஸ்வரிக்கு...!

அன்று - செந்துறையில் பரமேஸ்வரியின் ஐநூற்றி ஒன்றாவது நாள்! காலையில் வேலைகள் முடிந்து வழக்கம் போல கேசவ பெருமாள் கோயிலுக்குக் கிளம்பினாள். உலகநாதன் பள்ளிகொண்ட பெருமாள் போல ஊஞ்சலில் படுத்திருந்தார். படிகளில் இறங்கி தெருவில் இரண்டு எட்டு வைத்துவிட்ட பரமேஸ்வரி "எக்ஸ்க்யூஸ் மீ" என்ற மென்மையான ஆண் குரல் கேட்டு நின்று திரும்பிப் பார்த்தாள். இளமையின் வசீகரத்தோடும் நவீனமான நகரத்து உடைகளோடும் மிக அழகான இளைஞன் நின்று கொண்டிருந்தான். இளம் காற்றில் அவனின் நீண்ட பட்டுப் போன்ற பழுப்பு நிற தலைமுடி பிரமாதமாக கலைந்து ஆடியது.

"மிஸ்டர் உலகநாதன் வீடு இதுதானே?" - அந்த இளைஞன் கேட்டான்.

"ஆமா"

"இருக்காரா அவர்?"

"இருக்காங்க. நீங்க?"

"நான் மெட்ராஸ்ல இருந்து வரேன். அவரைப் பார்க்கணும்..."

பரமேஸ்வரியுடன் யாரோ ஆடவன் பேசுகிற சப்தம் வீட்டிற்குள் ஊஞ்சலில் படுத்திருந்த உலகநாதனின் காதுகளில் விழாமல் இருக்குமா? பெருமாள் எழுந்து உற்சவ மூர்த்தியாய் வாசலுக்கு ஓடி வந்தார்! அதி நாகரீகமான ரொம்ப ரொம்ப அழகான இளைஞன் ஒருத்தன் பரமேஸ்வரியின் பக்கத்தில் நின்று கொண்டிருந்ததைப் பார்த்ததும் மலைத்துப் போய் விட்டார்!

அதிர்ந்து விட்டார்! திடுக்கிட்டு விட்டார்! ஸ்தம்பித்தும் விட்டார்! இனி 'விடுவதற்கு' ஏதும் இல்லை அவரிடம்! செந்துறையின் நாகரீகம் இல்லாத இளைஞர்களின் பார்வையில் பரமேஸ்வரி படுவதைக்கூட விரும்பாத உலகநாதன் மிக அழகான நகரத்து இளைஞன் ஒருத்தன் மனைவியின் பக்கத்தில் நின்று அவள் கூடவே பேசிக் கொண்டிருந்தால் தாங்குவாரா? அந்த இளைஞனோ அவருடைய வீட்டிற்கே வேறு வந்திருக்கிறான். ஒரு பாட்டில் வேப்பெண்ணெய் குடித்தவர் மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு அவனை உள்ளே அழைத்துப் போனார். பரமேஸ்வரி ஒரே ஒரு கணம் கனவு கண்டவள் போல கோவிலை நோக்கி நடந்தாள்.

தேவையில்லாத இறுக்கத்தைக் காட்டியவாறு ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்ட உலகநாதன் இளைஞனை பக்கவாட்டில் இருந்த நாற்காலியில் உட்காரும்படி சைகை காட்டினார்! வேண்டாத விருந்தாளிகளுக்கு சைகைகள்தான்! பேச்சு ரொம்ப அவசியம் வரும்போது மட்டும்தான்!

நாற்காலியில் உட்கார்ந்த இளைஞன் ''என் பெயர் அச்சுதன். மெட்ராஸ்ல இருந்து வரேன். உங்க நண்பர் மிஸ்டர் தர்மராஜன் உங்களுக்கு ஒரு லெட்டர் குடுத்து விட்டிருக்கார்'' என்று சொல்லி கடிதத்தை உலகநாதனிடம் நீட்டினான்.

''கடுதாசி யாரு குடுத்து விட்டிருக்கிறது?'' - உலகநாதன் பாவம்— இந்த நேரம் பார்த்து காது அவருக்குச் சரியாகக் கேட்கவில்லை!

''மிஸ்டர் தர்மராஜன்''

''எந்த தர்மராஜன்?''

''மெட்ராஸ்ல ரெவின்யு போர்டுல இருக்காரே...''



''அவனா - சரி சரி...''

உலகநாதன் கடுதாசியைப் பிரித்துப் படித்தார்.

அன்பார்ந்த உலகநாதனுக்கு தர்மராஜன் எழுதிக் கொள்ளும் கடிதம். ஷேமம். ஷேமத்திற்கு எழுதவும். இரண்டு வருடம் ஊர் பக்கமே வர முடியாமல் போயிற்று. எப்படியும் இந்த வருஷம் உற்சவத்திற்கு வரணும் என்று நினைப்பு. நிற்க. இந்தக் கடிதம் கொண்டு வரும் அச்சுதன் எனக்கு வேண்டிய பிராமண குடும்பத்தைச் சேர்ந்த பையன். அவனுடைய தகப்பனார் ஜெகந்நாதன் என்னுடன் சம அதிகாரியாக பணியில் இருக்கிறார். அவருடைய மனைவி கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரியில் டாக்டர். அச்சுதன் வைஷ்ணவ கோயில்கள் சம்பந்தமாக ஆராய்ச்சி ஒன்றில் ஈடுபட்டிருக்கிறான். பத்திரிகைகளில் அவன் கதைகளும் எழுதுவதுண்டு. திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கும் வைஷ்ணவ கோயில்கள் பலவற்றையும் பார்த்து ஆராய்ச்சியில் ஈடுபட விரும்பி நம் பக்கத்து கிராமம் ஒன்றிலேயே அதிகபட்சம் ஆறு மாதங்கள் தங்கிக் கொள்ள ஆசைப்படுகிறான்.

அவனுக்கு இருக்கின்ற வசதிக்கு திருநெல்வேலியில் பெரிய ஹோட்டல் ஒன்றிலேயே தங்கிக் கொள்ள முடியும். அச்சுதன் அதை விரும்பவில்லை. நான் நமது கிராமத்தையும் உன்னையும் பற்றி விபரமாக அச்சுதனிடம் சொன்னேன். காந்திமதி காலமான பிறகு நீ சமையலுக்கு ஆள் வைத்துக்கொண்டு தனியாக இருந்து வருவதால் அச்சுதன் உன்னுடன் உன் வீட்டிலேயே தங்கிச் சாப்பிட்டுக் கொண்டு அமைதியாய் அவனுடைய ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு வசதியாய் இருக்கும் என்பது என் நம்பிக்கை .அச்சுதனுக்கு இந்த வசதியை செய்து கொடுக்க எவ்விதத்திலும் உனக்கு ஆட்சேபணை இருக்காது அல்லவா? அச்சுதன் நல்ல பையன். அவனால் உனக்கு எந்த சிரமமும் இருக்காது.

எனக்காக அவனை உன் வீட்டில் தங்க வைத்துக் கொண்டு ஒத்துழைக்குமாறு உரிமையுடன் உன்னைக் கேட்டுக் கொள்கிறேன். மற்றவை பின். வேணும் இறைவன் துணை.

இங்ஙனம் உன் நண்பன்
ப. தர்மராசன்

பிடிக்கவே பிடிக்காத அந்தக் கடிதத்தை உலகநாதன் எரிச்சலுடன் இரண்டு தடவை வாசித்தார். மூன்றாவது முறையாகவும் படிப்பது போல பாசாங்கு செய்தார்! தர்மராஜன் உலகநாதனுக்கு ரொம்பப் பிடித்தமான நண்பர். ஆனால் இந்த நிமிஷம் அவரைப் பிடிக்காமல் போய் விட்டது! பிடிக்காத அந்தக் கடிதத்தை திருப்பி மௌனமாக அச்சுதனிடம் நீட்டினார்.

"லெட்டர் உங்களுககு எழுதினதுதானே..." என்றான் அச்சுதன் - அதை வாங்கிக் கொள்ளாமலே... அவன் இப்படிச் சொன்னது உலகநாதனின் எரிச்சலைத்தான் ஜாஸ்தியாக்கியது.

"எல்லாம் சரிதான் - தர்மராசன் சொன்னான்னு நீ இப்படி திடீர்னு கௌம்பி வந்திருக்கக் கூடாது" என்று ஒரு மாதிரியான தொனியில் உலகநாதன் பேச ஆரம்பித்ததை அச்சுதன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவரைப் பார்த்து ஒரு குழந்தைப் பையன் போல முழித்தான். உலகநாதன் தொடர்ந்தார்.

"கடுதாசியில அவன் எழுதியிருக்கானே - அந்த மாதிரி இப்ப நான் தனியாவும் இல்லை. சமையல்காரப் பையனை வச்சி சமைச்சிப் போடச் சொல்லி, சாப்பிட்டுக்கிட்டும் இல்லை. அதனால ஒன்னை இப்ப இந்த வீட்ல தங்க வச்சிக்கிற நெலைமையிலும் இல்லை நான்..."

இதைக் கேட்டதும் அச்சுதன் 'என்னடா செய்வ' தென்று தெரியாமல் திகைத்துப் போய் உலகநாதனை



பார்த்தான். அவர் அவனைப் பார்க்காமல் வீட்டு வாசலையே பார்த்தபடி இருந்தார். அச்சுதனை கிளப்பி அனுப்பி வைப்பதற்குள் கோயிலுக்குப் போன பரமேஸ்வரி வந்து வைக்கப் போகிறாளே என்ற பயமும் பதட்டமும் அவருக்கு...!

# 17

அச்சுதன் உலகநாதனையே பார்த்தபடி அமர்ந்திருந்தான். உலகநாதன் வாசலையே பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

"ஸாரி சார்! தர்மராஜ் அங்கிள் ரொம்ப சொல்லி, அனுப்பினதாலேதான் அவசரமா கிளம்பி வந்துட்டேன்..." அச்சுதன் தயங்கித் தயங்கிச் சொன்னான்.

"தர்மராசனுக்கு ஒரு சமாச்சாரம் தெரியாது. அதனால ஒன்னை அனுப்பி வச்சிட்டான். நீ போய் அவன்ட்ட நான் சொன்னதா சொல்லு. ஒன்றரை வருஷத்துக்கு முந்தி நான் ரெண்டாங் கல்யாணம் செய்துக்கிட்டேன் தம்பி! இப்ப நானும் என் ரெண்டாம் சம்சாரமும்தான் இந்த வீட்ல இருக்கோம். அதனால ஒன்னை என் வீட்ல தங்க வச்சிக்கிற நெலைமை இல்லை..." - உலகநாதன் அவசரமாகவும் சுருக்கமாகவும் விஷயத்தைச் சொல்லி விட்டார்.

அச்சுதன் இதையும் எதிர்பார்க்காததால் என்ன செய்வதென்ற யோசனையில் சில நிமிடங்கள் தலையை குனிந்தவாறு இருந்தான். அப்போது சட்டென ஒரு விஷயம் புரிந்தது. வீட்டிற்குள் நுழையும் முன் அவன் பார்த்து பேசிய அழகான இளம்

பெண் அவன் நினைத்தபடி உலகநாதனின் மகள் இல்லை! அவள்தான் உலகநாதனின் இரண்டாம் மனைவியென்றால் - கொஞ்சம் அவள் இரக்கத்திற்கு உரியவள்தான்! அச்சுதன் பெருமூச்சு விட்டான். உலகநாதனிடம் இனி பேசுவதற்கு அவனுக்கு விஷயம் எதுவும் இல்லை. நண்பர் என்ற முறையில் உலகநாதன் தர்மராஜனைப் பற்றி ஏதாவது விசாரிப்பாரா என்று எதிர்பார்த்தான். உலகநாதன் வாயைத் திறக்கக் காசு கேட்கிற நிலைமையில் இருந்தார்!

''ஓகே சார் - வேற ஏதாவது நியூஸ் இருந்தா சொல்லுங்க... அங்கிள்கிட்ட சொல்றேன்'' என்றான் அச்சுதன். அப்போது டெலிபோன் மணி அடித்தது... அடித்த தினுசுலேயே தெரிந்தது — அது எஸ்.டி.டி. கால்! உலகநாதன் ரிசீவரை எடுத்தார்.

''அலோ — ஒலகநாதன்தான் பேசறேன்''

''ஒலகநாதா! நான் மெட்ராஸ்ல இருந்து தர்மராசன் பேசறேன்... அச்சுதன் என்கிற பையன் வந்திருக்கானா?''

''வந்திருக்கான் வந்திருக்கான்''

''ஆறுமாசம் அவனை ஒன் வீட்லேயே தங்க வச்சிக்க ஒலகநாதா...''

''முடியாதே தர்மராசா''

''ஏன் முடியாதுங்கறே?''

''தர்மராசா! ஒண்ணறை வருசமா நான் இந்த வீட்ல தனியா இல்லை''

''அப்படின்னா?''

''ரெண்டாந்தாரமா ஒரு பொண்ணைப் பாத்து கல்யாணம் பண்ணிட்டிருக்கேன்... இப்ப இந்த வீட்ல நானும் அவளுந்தான் இருக்கோம்.''- சொல்லும்போதே



உலகநாதனுக்குள் ஒருவிதமான பதட்டம் உணர்வுகளில் படபடத்தது.

''அடப்பாவி மனுசா! ஏன் நீ எனக்கு பத்திரிகையே அனுப்பலை?''

''யாருக்குமே பத்திரிகை கெடையாது தர்மராசு! எங்க வீட்டு மனுசங்களைத் தவிர யாரையும் கூப்பிடலை. ரெண்டாங் கல்யாணம்தானே...! சிம்பிளா கோயில்ல வச்சி தாலியை கட்டிப்பிட்டு வீடு வந்து சேர்ந்திட்டோம்!''

''இது பித்தலாட்டம்! பத்திரிகை வைக்காட்டி போ. பின்னாடி ஒரு கடுதாசியாவது எழுதிப் போட்டிருக்கலாம்ல நீ...''

' தானா தெரியும்போது தெரிஞ்சுக்கட்டும்னு இருந்திட்டேன்... நீயும் ஊருப் பக்கமே வராம இருந்திட்ட''

''இப்ப அச்சுதனை ஒன் வீட்ல தங்க வச்சிக்க முடியாது அதனால?''

''ஆமா''

''அப்ப நீ வேற ஒண்ணு பண்ணு''

''சொல்லு''

உலகநாதன் பேசப் பிடிக்காமல் போனில் பேசிக் கொண்டிருந்தார். அவருடைய பார்வை வாசல் பக்கமே அலை பாய்ந்து கொண்டிருந்தது!

''ஒனக்குத்தான் இன்னும் மூணு வீடு இருக்கே— செந்துறையில?''

''ரெண்டு வீட்டை வாடகைக்கு விட்டாச்சி...''

''ஒன் வீட்டுக்கு அடுத்த வீடு சும்மாதானே இருக்கு''

''சும்மா இல்லையே... நெல்லு மூட்டை அது இதுன்னு போட்டு வச்சிருக்கேன். வேண்டாத ஓட்டை ஒடசல் சாமான் பூராவும் அடுத்த வீட்லதான் கெடக்கு...''

''உடனே அதை க்ளீன் பண்ண ஏற்பாடு செய்! அச்சுதன் அவன்பாட்டுக்கு அந்த வீட்ல தனியா இருந்துப்பான்.''

உலகநாதன் எரிச்சல் பட்டார். ஆத்திரப்பட்டார். மனசுக்குள் தர்மராஜனைப் போட்டு வறுத்து எடுத்தார்! எரிச்சலை தர்மராஜனிடம் காட்டவும் முடியவில்லை. யோசிப்பது போல பாசாங்கு செய்தார்!

''என்ன யோசிக்கிறே?''—தர்மராஜன் கேட்டார்...

''அடுத்த வீடு ரொம்பப் பழசான வீடு... அதுல இந்தப் பையனால இருக்க முடியுமான்னு யோசிக்கிறேன்!''

''க்ளீன் பண்ணிக்குடு—இருந்துப்பான்...''

''க்ளீன் பண்றதை பெறகு பாப்பம்! ஆனா இந்தப் பையனோட சாப்பாட்டுக்கு நான் பொறுப்பேத்துக்க முடியாது. அது மட்டும் தோதுப்படவே படாது!''—உலகநாதன் இதை கடுப்புடன் சொன்னார்!

''ரிசீவரை ஒரு நிமிஷம் அச்சுதன் கிட்ட குடு''

உலகநாதன் ரிசீவரை அச்சுதனிடம் கொடுத்து விட்டு தள்ளிப்போய் நின்று கொண்டார்! அச்சுதனை ஒரு நோட்டம் விட்டார்! அவனுடைய அழகைப் பார்க்கப் பார்க்க அவரின் மூளைக்குள் பயம் பளீர் பளீரென பாய்ந்தது. இவன் என்ன பெரிய ஆராய்ச்சி பண்ணி கிழிக்கப் போகிறான் என்று அலட்சியமாக நினைத்தார். அதுவும் கோயிலைப்பற்றி...! தர்மராஜன் என்ற எழவு பிடித்தவனுக்காக இந்த ஆண் அழகனை அடுத்த வீட்டில் தங்கவைக்க வேண்டியிருக்கிறது...!



அடுத்த வீடும் கிடையாது எதிர்த்தவீடும் கிடையாது என்று சொல்ல ரொம்ப நேரமாகாது உலகநாதனுக்கு! ஆனாலும் என்னமோ — விதி செய்த சதி — அவரால் அந்த வார்த்தையை சொல்ல முடியவில்லை! சில நேரங்களில் கொஞ்சமாவது இப்படி அனுசரித்துப் போய் தொலைய வேண்டியதாகி விடுகிறது! ஒரேயடியாகவும் மனிதர்களோடு முறுக்கிக்கொள்ள முடியவில்லை! ஆனால் உலகநாதனின் பயங்கர வேதனை — எந்த இளைஞனின் பார்வையிலும் படாமல் பரமேஸ்வரியை கட்டி காப்பாற்றி வருகிறார்! அது பிடிக்கவில்லை கேசவபெருமாளுக்கு! அழகான சின்ன வயசுப் பையனை அழைத்து வந்து அடுத்த வீட்டிலேயே உட்கார வைக்கிறார்! அதுவும் ஆறு மாதங்களுக்கு...! 'பெருமாளே! நீதான் காப்பாத்தணும்!' என்று உலகநாதன் பிரார்த்தனை செய்தார்.

தர்மராஜனுடன் பேசிவிட்டு ரிசீவரை கீழே வைத்த அச்சுதன் ''சாப்பாடு ஒரு பெரிய விஷயமே இல்லை சார்! சிம்பிளா நானே சமையல் பண்ணி சாப்பிட்டுப்பேன்'' என்றான். உலகநாதனுக்கு தானே சமைத்து தானே சாப்பிட்ட நாட்கள் ஞாபகத்தில் பளிச்சென்று தோன்றி பளிச்சென்று மறைந்தன!

''அடுத்த வீட்டுச் சாவி இப்பவே வேணுமா?'' என்றார்.

''இப்போ சும்மா திறந்து காட்டுங்க போதும். வீட்டைப் பாத்திட்டுப் போயிடறேன். பத்து நாள் கழிச்சு வந்து சாவி வாங்கிக்கறேன்...''

''ரெண்டு ஆளை ஏற்பாடு பண்ணி ஒனக்காகத்தான் க்ளீன் பண்ணியாகணும் வீட்டை. அதனால அந்தச் செலவை நீதான் தரணும்!''

''நோ ப்ராப்ளம் சார்,'' என்றான் அச்சுதன் சிரித்துக் கொண்டே. உடனே உலகநாதன் 'சிரிக்காதலே'

என்றார் — வாயைத் திறந்து இல்லை! வாயை மூடிக் கொண்டு! உலகநாதன் அடுத்த வீட்டுச் சாவியைத் தேடினார். அது என்ன எழவோ... அடுத்த வீட்டுச் சாவியை எப்போதும் தேடித்தான் கண்டு பிடிக்க வேண்டும். அவர் சாவியை தேடி எடுத்து வரட்டும் என்ற எண்ணத்தில் அச்சுதன் வாசலுக்குப் போய் நின்றபோது பரமேஸ்வரி கோயிலில் இருந்து திரும்பி வந்தாள். அவளுக்காக அச்சுதனின் மனதிற்குள் ஏற்பட்டிருந்த இரக்கம் அவனையும் மீறி அவனின் கண்களில் லேசாகக் கசிந்து விட்டது. சின்ன ஆர்வத்துடன் பரமேஸ்வரியும் அவனை நிமிர்ந்து பார்த்தாள். இரக்கத்திற்கும் சிறிது கூடுதலான அபிமானம் அச்சுதனின் விழிகளில் தெரிந்ததைப் பார்த்ததும் பரமேஸ்வரியின் மார்புத் துடிப்பு சட்டென அதிகமாகி விட்டது. வேகமாக படியேறி வீட்டிற்குள் போனாள். இந்தக் காட்சி தான் நடக்கக் கூடாதென்று உலகநாதன் பெருமாளை வேண்டிக் கொண்டிருந்தார்! ஆனாலும் நடந்துவிட்டது. நடந்துவிட்ட பின் கோவிந்தா கோவிந்தா என்றா கூப்பாடு போட முடியும்? அடுத்த விட்டுச் சாவியுடன் உலகநாதன் இறுக்கமான மௌனத்துடன் நடக்க அச்சுதனும் மௌனமாக அவரைப் பின் தொடர்ந்தான்.

உலகநாதன் அடுத்த வீட்டைத் திறந்து காட்டினார். இடது பக்கம் இருந்த பெரிய அறையை மட்டும் உபயோகப் படுத்திக் கொள்வதாக சொல்லி, வாடகை தான் எவ்வளவு தரட்டும் என்று கேட்டான் அச்சுதன். ஒரு நொடியில் உலகநாதன் சுதாரித்துக் கொண்டு விட்டார். தர்மராஜனுக்காகத்தான் வீடு கொடுப்பதாகவும் வாடகை வேண்டாம் என்றும் சொல்லிவிட்டார். பொய் இது! வாடகையென்று வாங்கி விட்டால் அச்சுதனுக்கு அந்த வீட்டில் ஒரு உரிமை வந்துவிடும்! அதைத் தர உலகநாதனுக்கு விருப்பம் கிடையாது!



அச்சுதன் உலகநாதனுக்கு நன்றி சொன்னான்.

உலகநாதன் அவனுக்கு நிறைய 'கண்டிஷன்ஸ்' சொன்னார். தான் உண்டு தன்னுடைய ஆராய்ச்சி உண்டு என இருக்க வேண்டும் அச்சுதன்! அக்கம் பக்கம் பார்க்கிற ஜோலி எதையும் வைத்துக் கொள்ளக் கூடாது அவன்! ஊர் ரொம்ப கட்டுப்பாடுகள் உள்ள கண்ணியமான ஊர்! சின்ன வயசுப் பெண்கள் வீட்டுக்கு வீடு உள்ள ஊர்! அச்சுதன் நிமிர்ந்துகூடப் பார்க்கக்கூடாது யாரையும்! அவன் மேல் ஏதாவது 'ஆவலாதி' வந்தால் உலகநாதனுக்குத்தான் முதல் கௌரவக் குறைச்சல்!

தன்னால் யாருக்கும் எந்தப் பிரச்னையும் வராது என்று அச்சுதன் உறுதி சொன்னான். பத்து அல்லது பதினைந்து நாட்களில் வேண்டிய பொருட்களுடன் செந்துறை வந்து சேர்வதாகக் கூறினான். அவனை உலகநாதன் மறுபடியும் அவருடைய வீட்டிற்கு அழைத்துப் போய் சாப்பிட வைத்துத்தான் அனுப்புவார் என்று அச்சுதன் இயல்பாக நினைத்தான். 'வீட்டுக்குள் வந்துவிட்டு போ' என்று உலகநாதன் ஒரு மரியாதைக்குக்கூட அவனை கூப்பிடவில்லை. 'வருவதற்கு முன் ஒரு கடுதாசி எழுதிப் போட்டுட்டு வா' என்று மட்டும் சொல்லிவிட்டு வீட்டுப் படியேறிக் கொண்டார். அச்சுதனுக்கு இது கொஞ்சம் விகற்பமாக இருந்தது. ஆனால் உலகநாதனின் சுபாவமே இதுதானோ என்று நினைத்துக் கொண்டே மெதுவாக அவன் நடந்தபோது ''தம்பி''யென்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டு நின்றான்.

அச்சுதனைக் கூப்பிட்டது சிவமதியின் தகப்பன்- அழகர்சாமி. தன் வீட்டுப் படியேறிவிட்ட உலகநாதனும் எதற்கோ படியிலேயே நின்று விட்டிருந்தார். அழகர்சாமி அச்சுதனை யார் என்ன ஏதென்று கனி

வுடன் விசாரித்தார். உலகநாதன் தெருவைக் கவனித்தார். பல வீட்டுத் திண்ணையிலும் வாசலிலும் பெண்கள் நின்று அச்சுதனை ஆச்சர்யத்துடன் கவனித்துக் கொண்டிருந்தார்கள். வழக்கம்போல உலகநாதன் எரிச்சல்பட்டார். 'தெருவுல புதுசா ஒருத்தன் கொஞ்சம் அழகா போயிட கீயிட கூடாது! வாயைத் தொறந்துக்கிட்டு வந்திருவாளுங்க!'

அழகர்சாமியுடன் அச்சுதன் நின்று பேசிக் கொண்டிருந்தபோது சிவமதி வேறு அவள் வீட்டுத் திண்ணைக்கு ஒட்டமாக ஓடிவந்து விட்டாள். போதாதா உலகநாதனுக்கு? மனசுக்குள் பொறாமை 'உர்உர்' என்று உறுமியது! உலகநாதனுக்கு இப்போது ஒரு ஞானம் வந்தது. இந்த சிவமதி சிறுக்கியை அவர் கட்டுப்பாட்டுக்குப் பயந்து விட்டு வைத்திருக்கக் கூடாது! நன்றாக அனுபவித்திருக்க வேண்டும்! இந்தப் புதிய வேட்கையுடன் உலகநாதன் எப்படி சிவமதியை பார்த்துக் கொண்டிருந்தாரோ அதே மாதிரிதான் சிவமதி அச்சுதனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அச்சுதன் அவளுக்குப் பிடித்த ஒரு சினிமா நடிகன் போல அப்படியே இருந்தான்! அந்த நடிகனை சிவமதி மானசீகமாக பல நேரங்களில் கட்டியணைத்து என்ன வெல்லாமோ செய்தது உண்டு! கிட்டத்தட்ட அதே மானசீக பார்வைதான் அச்சுதன் மேலும்...

அந்தப் பார்வையை பொறுத்துக்கொள்ள முடியாமல் உலகநாதன் வீட்டுக்குள் சென்று விட்டார்.

கை கால் கழுவிவிட்டு வந்து சாப்பிடுகிற நேரம் வந்து விட்டதா என்று கடிகாரத்தைப் பார்த்தார் உலகநாதன். சாப்பாட்டுக்கு இன்னும் அரைமணி நேரம் இருந்ததில் எரிச்சலான எரிச்சலில் பீடரியை சொரிந்தார். என்னமோ-இப்போதெல்லாம் அவருக்கு எதற்கெடுத்தாலும் எரிச்சலாக வருகிறது. சின்ன



விஷயத்தைக்கூட சகித்துக்கொள்ள முடிவதில்லை. ஓய்ச்சல் இல்லாமல் மனசு ஒரு மாதிரியாக அலை பாய்ந்தபடியே இருக்கிறது. இதனாலோ என்னவோ அவ்வப்போது அவரின் ரத்தக் கொதிப்பு ஜாஸ்தியாகி விடுகிறது. இந்த அழகில் பெண்டாட்டிக்குத் தெரியாமல் வேறு ரத்தக் கொதிப்பிற்கான மருந்து சாப்பிட வேண்டியதாகிறது...!

உலகநாதனுக்கு அச்சுதனின் ஞாபகம் வந்தது. சிவமதி அச்சுதனை விழுங்கி விடுவது போல 'சைட்' அடித்தது பரமேஸ்வரியே 'சைட்' அடித்தது போல இருந்தது அவருக்கு! என்னமோ; அச்சுதன் அடுத்த வீட்டுக்கு வந்து தங்கியிருக்கப்போவது ஒரு கெட்ட சகுணமாகவே தெரிந்தது அவரின் மனசுக்கு! அவரையும் அறியாமல் ஒரு பயம் வேறு தலைக்குள் ஊடுருவி பரவியது. எழுந்து வாசலுக்குப் போய் எட்டிப் பார்த்தார். இன்னமும் அச்சுதனுடன் அழகர்சாமி என்னவோ கேட்டுக் கொண்டிருக்க சிவமதியும் ஆணி அடித்தவள் போல நின்று கொண்டிருந்தாள். சும்மா போகிற மாதிரி அங்கே போகலாமாயென்ற எண்ணம் ஒரே ஒரு நிமிஷம் வந்தது. ஆனால் சுயகௌரவம் காலை கெட்டியாக நகர முடியாமல் பிடித்துக்கொண்டு விட்டது!

அப்போது, "இலை போடட்டுமா — சாப்பிடறீங்களா?" என்று கேட்டுக் கொண்டே பரமேஸ்வரி வர எல்லா எரிச்சலையும் உலகநாதன் அவளிடம் காட்டினார் "பெரிய விருந்து சாப்பாடு சமைச்சி வச்சிருக்கே! கூப்பிட வந்திட்டே! போ வரேன்..."

உலகநாதன் பாய்ச்சிய சொல் கத்தி பரமேஸ்வரியின் நெஞ்சின் முன்னே குத்தி பின்னே துளைத்துக் கொண்டு வந்தது...

# 18

பெருமாளின் ஏழெட்டுப் பெயர்களை உரக்க சொல்லிக்கொண்டே உலகநாதன் சாப்பிட உட்கார்ந்தார். எத்தனைக்கு எத்தனை எரிச்சலாக இருக்கிறாரோ அத்தனைக்கு அத்தனை அவர் கூப்பிடும் பெருமாளின் பெயர்களின் எண்ணிக்கை அதிகமாகும்!

இரண்டு கரண்டி நிறைய இலையில் வைக்கப்பட்ட கொத்தவரங்கா பருப்பு உசிலியை ஐந்து நுனி விரல்களால் கொஞ்சம் குவித்து அள்ளி உலகநாதன் வாயில் போட்டார். பிறகு சொன்னார்.

''இவ்வளவு எண்ணை விடக்கூடாதுன்னு எத்தனையோ வாட்டி சொல்லியாச்சி. ஒனக்கு மண்டையில ஏறவே மாட்டேங்குது. சீனி கணக்கா ஒடனே கரையணும் வாயில போட்டா! பூவாட்டம் பொல பொலன்னு உதிரணும்! வாய்க்கு ருசியா நீ உசிலி செய்ய தெரிஞ்சிக்கிறதுக்கு முந்தி நான் போயே சேந்திடுவேன் போல இருக்கு!''

''இப்படி சமைச்சாத்தான் டேஸ்ட்டா இருக்கும்னு தைலாக்காதான் சொன்னாங்க'' - பரமேஸ்வரி தலையைக் குனிந்தவாறே சொன்னாள்.

''நல்லா கிழிச்சா அவ! உசிலின்னா என்னன்னு தெரியுமா அவளுக்கு? தைலாக்கா சொன்னாளாம்... சரி சரி... ரசத்தை ஊத்து.''

பரமேஸ்வரி ரசத்தைத் தெளிவாக ஊற்றினாள். உலகநாதனுக்கு ரசத்தை கலக்கக் கூடாது!

''ரசம்கூட தைலாக்கா சொல்லிக் குடுத்தது போல! ஏன்னா - ரசத்ல ரெண்டு கல் உப்பு ஜாஸ்தி!''



சாப்பாட்டு நேரத்தில் வார்த்தைகள் இப்படி அடுப்
பில் விழுந்த மிளகாயாகத்தான் வெடிக்கும். இன்று
அச்சுதன் விவகாரத்தால் மிளகாயில் காரம் ஏழெட்டு
கல் ஜாஸ்தியாக இருக்கிறது! உலகநாதனின் மனசுக்
குள் அழகிய இளம் மனைவி என்ற பிரேமையெல்லாம்
காய்ந்த சுள்ளிகளாகி விட்டன. பரமேஸ்வரியின் மேல்
கொஞ்சம் கொஞ்சமாக ஒருவிதமான பகை உணர்ச்சி
உலகநாதனின் மனதில் வேர்விடவும் தொடங்கியிருந்
தது. பகை உணர்ச்சி பரமேஸ்வரி மோர் ஊற்றிய
போதும் அதன் காரம் மணம் ருசியை காட்டியது!
- ''மோரை இன்னைக்கு நான் தாளிக்கச் சொல்ல
லையே!' என்ற குற்றச்சாட்டுடன்!

''எனக்காகத்தாண்டா கெழவா மோரை தாளிச்
சிருக்கேன்!'' என்றுதான் பரமேஸ்வரி நியாயமாகப்
பார்த்தால் திருப்பி வெடித்திருக்க வேண்டும்! பாவம் -
அந்த மாதிரியான சுபாவமெல்லாம் கிடையாதே அவ
ளுக்கு. அதனால் வெறுமே பல்லைக் கடித்தபடி
ஆனால் கொஞ்சம் சப்தமாக ''எனக்காக தாளிச்சிக்
கிட்டேன்... தாளிக்கக் கூடாதா?'' என்று கேட்டு விட்
டாள். 'என்ன - சத்தம் கொஞ்சம் ஜாஸ்தியா வருது?'
என்கிற நினைப்போடு மேட்டி விழியை உயர்த்திப்
பார்க்க மட்டும் உடனே தெரிந்து போகிறது! உலக
நாதனும் பரமேஸ்வரியும் நிசப்தமாக ஒருவரை ஒருவர்
பார்த்துக் கொண்டார்கள், நிசப்தத்திற்கு மேல் அப்
போதைக்கு கடுமையான பேச்சு எதையும் வைத்துக்
கொள்ள வேண்டாம் என்று உலகநாதனுக்குத் தோன்
றியது.

அதனால் தோசைக்கு அரைத்த மாவு போல
பிசைந்து விட்ட மோர் சோறை கறிவேப்பிலைத்
துவையலுடன் வழித்து வழித்து உறிஞ்சுவதில் அவர்
கவனத்தைத் திருப்பிவிட்டுக் கொண்டார்.

ரொம்ப நேரமாக கேட்க நினைத்துக் கொண்டிருந்த கேள்வியை பரமேஸ்வரி கேட்டாள். ''நான் கோயிலுக்குப் போனபோது ஒருத்தர் வந்திருந்தாரே - யாரு அவரு?''

''அதுவா - அது ஒரு குட்டிச் சுவரு!'' உலகநாதன் எரிச்சலுடன் சொன்னார்.

''ஏன் எப்பப் பாத்தாலும் இப்படி எரிச்சலாவே பதில் சொல்றீங்க?'' பரமேஸ்வரி பொருமலை அடக்க முடியாமல்தான் கேட்டாள்.

''வந்திட்டுப் போனவன் எவனா இருந்தா ஒனக்கு என்ன?'' உலகநாதனும் அடங்கிவிட வில்லை.

''ஏன் - நம்ம வீட்டுக்கு புதுசா ஒருத்தர் வந்திட்டுப் போனா - யாருன்னு கேக்கக் கூடாதா?''

''கேக்கக் கூடாதுன்னு யாரும் சொல்லலை இங்க''

''நீங்க பதில் சொன்னவிதம் கேக்கக்கூடாத கேள்வியை நான் கேட்டுட்ட மாதிரி இருக்கு...''

உலகநாதன் சட்டென வேறொரு பாணிக்கு மாறிக் கொண்டார்.

''சரி தாயி! சரி; பெரிய மனுசி நீ கேட்டுட்ட... சொல்லிடறேன். வந்திட்டுப் போனாரே அவரு குட்டிச் சுவரு இல்லை! பெரிய கோட்டைச் சுவர்! அந்த கோட்டைச் சுவரோட பேரு - அச்சுதன். மெட்ராஸ்ல வேலை கெட்ட நம்மூர்காரன் - தர்மராசன்னு ஒருத்தன் இருக்கானே - அவந்தான் இந்த கோட்டைச் சுவரை அனுப்பி வச்சிருக்கான். நம்மளோட அடுத்த வீட்ல ஆறு மாசம் தங்கி கோட்டை சுவரு ஏதோ ஆராய்ச்சி பண்ணப் போகுதாம்! பத்துப் பதினைஞ்சி நாள்ள மூட்டை முடிச்சோட வந்திரும் அது! இவ்வளவு போதுமா இன்னும் ஏதாவது சொல்லணுமா...'' - உலகநாதன் இதைச் சொல்லி முடிக்கவில்லை. வாசல் கதவை யாரோ தட்டு



கிற சப்தம் கேட்டது. பொதுவாக இந்த நேரத்தில் வந்து யாரும் கதவைத் தட்டமாட்டார்கள். உலகநாதனுக்குள் அச்சுதன்தான் எதற்கோ திரும்பி வந்து விட்டானோ என்ற எண்ணம் வந்ததில் குபீர் என்ற பயம் அவருடைய உச்சந்தலையில் பாய்ந்தது. உடனே எழுந்து விட்டார்.

''இரு இரு. நான் போய் பாக்கறேன்'' என்றபடி கையைக் கழுவி துண்டில் துடைத்துக் கொண்டே போய் கதவைத் திறந்தார். அவரின் சிநேகிதர் சோலைமலை நின்று கொண்டிருந்தார்.

''என்னவே சோலை?''

''நம்ம எம். எல். ஏ. சங்கரலிங்கம் மேல எவன்களோ அக்னி திராவகத்தை ஊத்திப்புட்டானுங்க அண்ணாச்சி...''

இந்தச் செய்தி உலகநாதனுக்கு உள்ளூற சின்ன சந்தோஷத்தைத் தந்தது! ஆனால் வெளிக்கு முகத்தை ரொம்ப துடித்துப் போனவர் மாதிரி மூஞ்சியை வைத்துக் கொண்டு ''அய்யோடா பெருமாளே! யாருவே சோலை இப்படியொரு அநியாயம் செஞ்சது?'' என்றார்.

''யாருன்னு தெரியலை அண்ணாச்சி. ஆளு பொழைக்கறது கஷ்டம்னு பேசிக்குறாங்க. தின்னவேலி பக்கமெல்லாம் ஒரே கலாட்டாவாம். பஸ்ஸெல்லாம் அங்க அங்க நின்னு போயிருச்சாம். ராத்திரி வந்து மிச்ச வெவரத்தையெல்லாம் சொல்றேன்...''

சோலை வேகமாக ஓடிவிட்டார். உலகநாதன் தெருவைப் பார்த்தார். ஆங்காங்கு ஆட்கள் சேர்ந்து சேர்ந்து நின்றார்கள். உலகநாதனை திடீரென ஒரு பயம் வந்து தொற்றிக் கொண்டது. நின்று நின்று பார்த்துவிட்டு அச்சுதன் பஸ் எதுவும் இல்லாமல் திரும்பி வந்து விட்டால்? ஒன்றும் செய்ய முடியாது!

வேண்டாத விருந்தாளியை வந்து தொலையென்று வீட்டிற்குள் அழைக்கத்தான் வேண்டும்! உலகநாதன் "கோவிந்தா கோபாலா" என்று பெருமாளை ரொம்ப ரொம்ப அவசரமாக அழைத்தார். 'திருநெல்வேலியில் கலாட்டா எதுவும் இல்லாமல் நல்லபடியாக பஸ் ஏறி அந்தப் பையன் ஊர் போய் சேர வழி செய் பெருமாளே...!' -இது உலகநாதனின் பிரார்த்தனை. ஆனால் பரமேஸ்வரியின் பிரார்த்தனை வேறு மாதிரி!

'பஸ் எதுவும் இல்லாமல் அச்சுதன் திரும்பி வந்து விட வேண்டும்.' பரமேஸ்வரியின் இந்த பிரார்த்தனைக்குக் காரணம் அச்சுதன் திரும்பி வந்தால், அவனுடைய அழகான முகத்தை மறுபடியும் பார்க்கலாமே என்பதில்லை. அவன் திரும்பி வரும்போது உலகநாதனின் அழகான முகம் போகிற போக்கைப் பார்க்கலாமே என்பதுதான்...!

ஆனால் பலித்தது என்னமோ உலகநாதனின் பிரார்த்தனைதான்! இருந்தாலும் எங்கே திரும்பி வந்து நிற்பானோ என்ற பயத்தில் மதியம் இரண்டு மணியில் இருந்து சாயந்தரம் ஐந்தரை மணிவரை திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தாரே - அந்த அழகே போதுமானதாக இருந்தது பரமேஸ்வரிக்கு...!

சென்னை சிந்தாதிரிபேட்டையில் தன் சொந்த ஃப்ளாட்டின் ஹாலில் தர்மராஜன் ஆங்கில தினசரியில் ஆழ்ந்திருந்தார். அவருடைய சொந்த ஊரான செந்துறை தொகுதியின் சட்டசபை உறுப்பினர் திராவகம் வீசப்பட்டு மரணமடைந்ததில் இரண்டு நாட்களாகவே திருநெல்வேலிப் பக்கம் நடந்து முடிந்த வன்முறைச் செய்திகளின் தொடர்ச்சியை கவலையோடு அவர் வாசித்துக் கொண்டிருந்தபோது "குட்மார்னிங் அங்கிள்" என்ற குரல் கேட்டு நிமிர்ந்தார். புன்சிரிப்புடன் அச்சுதன் நின்று கொண்டிருந்தான்.



"வா வா வா... நல்லபடியா வந்து சேந்தியே... எல்லாருக்கும் ஏக டென்ஷன் இங்கே."

"எனக்கும்தான் ஒரே டென்ஷன் அங்கிள். எப்படியோ ரெண்டு மணி நேரம் காத்துக் கிடந்து ஒரே ஒரு பஸ் வந்து அதுவும் திருநெல்வேலிக்கு மூணு கிலோ மீட்டர் தூரத்திலேயே நின்னு போய் - ஏதோ ஒரு லக்; கரெக்ட்டா ஹோட்டல் ரூமை காலி பண்ணிட்டு நெல்லை எக்ஸ்ப்ரஸ்ஸை பிடிச்சிட்டேன்..."

"நெலைமை இப்ப கண்ட்ரோல் ஆயிடுச்சி போல... எப்படியிருக்கு எங்க செந்துறை?"

"கொள்ளை அழகு அங்கிள். இவ்வளவு அழகா இருக்கும்னு நெனைக்கவே இல்லை நான் லைஃப் பூரா அங்கேயே இருந்திடலாம்! மரகத பச்சை போர்த்தின பூமின்னா - அது செந்துறைதான். பேரடைஸ்...!"

"உலகநாதன் எப்படி இருக்கான்? பாரேன் - இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டு மூச்சு காட்டாம இருந்திருக்கான்"

"நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க அங்கிள். என்னை அவர் சரியா ரிசீவ் பண்ணலை. ஏதோ சீரியஸ் பிரச்னை எதுலேயும் மாட்டிண்டு இருக்காரோ என்னவோ ஒரு மாதிரி ரெஸ்ட்லெஸ்ஸாவே இருந்தார். அவரோட அடுத்த வீட்லகூட என்னை ஏதோ இஷ்டமில்லாம தங்கச் சொன்ன மாதிரி வேற இருந்தது...

"அப்படியா... ஆச்சர்யமா இருக்கே நீ சொல்றது... கொஞ்சம் அந்தஸ்து அது இதுன்னு பார்ப்பானே தவிர பொதுவா வீட்டுக்கு வர்ரவங்களை நல்லவிதமாத்தான் ட்ரீட் பண்ணுவான்..."

"நீங்க அனுப்பி இவ்வளவு தூரம் போயிருக்கேன். ஒரு காஃபி சாப்பிடச் சொல்லலை..."

''வீட்ல அவனோட புது ஒய்ஃப் இருந்தாளா இல்லையா?''

''எங்கேயோ போயிட்டு வந்தாங்க. பட் அவர் கொஞ்சம் இன்டிஃபெரெண்டாவே நடந்திண்டார். ஒரு வேளை அவரோட கேரக்டரே அப்படித்தானோன்னு என் மனசை சமாதானம் செய்துக்கிட்டேன்...''

''நீ சொல்றதெல்லாமே புதுசாயிருக்கு...''

''உங்களுக்கே தெரியப்படுத்தாம கல்யாணம் பண்ணிண்டிருக்கார்... அதுவே உங்களுக்குப் புதுசு தானே...''

''ஆமாமா - அதுவே புதுசுதான். வீட்டு மெம்பர்கள் மட்டுமே இருந்து ரெண்டாம் கல்யாணத்தை உலகநாதன் நடத்தியிருக்கலாம். அது தப்பு இல்லை. ஆனா இவ்வளவு நாளாகியும் கல்யாணத்தைப் பத்தி ஒரு வரி எழுதாம தடிப்பயலாடடம் இருந்திட்டான் பாரு...!''

''ஸம் காம்ப்ளெக்ஸ் அங்கிள்...''

''சரி - அவன் எப்படியும் போறான்... உன்னால அவனோட அடுத்த வீட்ல சமையலும் பண்ணிட்டு மேனேஜ் பண்ணிக்க முடியுமா? நல்லா யோசிச்சிக்க... நீ போய்வந்த நேரமே சரியில்லாத மாதிரி தெரியுது...''

''எனக்கு இந்த சென்ட்டிமெண்ட்ஸ் கிடையாது அங்கிள்... செந்துறையில அழகா நான் மேனேஜ் பண்ணிப்பேன்... ரொம்ப அழகான அமைதியான ப்ளேஸ்... எனக்கு அதுபோதும் அங்கிள்... மனுஷா முக்கியமே கிடையாது...''

''உலகநாதன் ஒன்னை சரியா ரிசீவ் பண்ணலைன்னு சொல்றியே''

''இக்னோர் இட் அங்கிள்... ஜஸ்ட் ஹி இஸ் ஏ மேன் ஆஃப் காம்ப்ளெக்ஸ்...''



''அப்ப செந்துறைக்கு எப்ப கௌம்பறதா இருக்கே?''

''என் கைடு நாளைக்கு டெல்லியில் இருந்து வரார். அவரை மீட் பண்ணி சில விஷயங்களை டிஸ்கஸ் பண்ண வேண்டியிருக்கு... அது முடிஞ்சிட்டா செந்துறை கிளம்பற தேதியை முடிவு பண்ணிடுவேன்...''

''உலகநாதன்கிட்ட இன்னொரு முரண்பாடும் எனக்கு உதைக்குது அச்சுதா. அவன்கிட்ட ஒரு ஆச்சரியமான கேரக்டரும் உண்டு. அவனுக்கு பிராமின் கம்யூனிட்டியை ரொம்பப் பிடிக்கும்!''

''நெஜமாவா அங்கிள்?''

''யெஸ். உலகநாதன் பிராமணர்களை ரொம்ப அட்மைர் பண்ணுவான்! அந்த ஜெனரல் அட்மிரேஸனைக்கூட உன்கிட்ட காட்டலை பார் அவன்!''

''அதுக்குக் காரணம் இப்படிக்கூட இருக்கலாம் அங்கிள்''

''எப்படி?''

''உங்களுக்கே தெரியப்படுத்தாம ரெண்டாம் கல்யாணம் பண்ணிண்டது திடீர்னு என்னால உங்களுக்கு தெரிய வந்துடுத்து. ஒரு புதுசா வந்தவன்கிட்ட கில்ட்டியா நிக்க வேண்டியதாயிடுத்து பாவம் அவருக்கு... அந்த கில்ட்டி காம்ப்ளெக்ஸ்ல என்கிட்டேயும் ஸ்டிஃப்பா நடந்துண்டாரோ என்னவோ...''

''அவனோட புது ஒய்ஃப் எப்படி இருக்கா?''

''லுக்ஸ் வெரி யங். முதல்ல அவங்களைப் பாத்ததும் அவரோட டாட்டர்னு நெனைச்சுட்டேன்.''

''எந்த ஊரு பொண்ணுன்னு தெரியலை''

"அம்பாசமுத்ரத்தை சேர்ந்தவங்கன்னு கேள்விப் பட்டேன்"

"அது யாரு சொன்னா ஒனக்கு?"

"அழகர்சாமின்னு ஒருத்தர்தான் சொன்னார். உங்களை ரொம்ப விசாரிச்சதா சொல்லச் சொன்னார்."

"ரொம்ப நல்லவன் அழகர்சாமி. பாவம் - அவனோட மக ஒருத்தி ரொம்பச் சின்ன வயசிலேயே விடோ ஆயிட்டா."

"அந்த லேடியைக்கூட பாத்தேன் அங்கிள். பத்து நிமிஷம் அவங்க வீட்டுத் திண்ணையிலதான் உக்காத்திருந்தேன். குடிக்கறதுக்கு ஜில்லுனு மோர் குடுத்ததே அந்த அழகர்சாமி வீட்டுக்காரங்கதான்..."

"இந்நேரம் உன் விஷயம் செந்துறை பூராவும் தெரிஞ்சி ஒரே உன்னைப் பத்தின பேச்சாத்தான் இருக்கும்..."

தர்மராஜன் சொன்னது சரிதான். ஆறு மாதம் அச்சுதன் செந்துறையில் தங்கி இருக்கப் போகிற செய்தி சில மணி நேரங்களில் ஊர் முழுக்கத் தெரிந்து போய்விட்டது. எல்லார் மத்தியிலும் அதே பேச்சுத் தான்......

# 19

செந்துறையின் சரித்திரத்தில் இது ரொம்ப ரொம்ப புதுசு. அச்சுதனைப்போல எந்த ஒரு இளைஞனும் இந்த பட்டிக்காட்டு கிராமத்தில் வந்து எதற்காகவும் தங்கிக் கொண்டது கிடையாது. அதனால் அச்சுதன்



வரப் போவதும் அவன் மேற்கொள்ளப் போகிற ஆராய்ச்சியும் செந்துறைக்காரர்கள் எல்லாருக்குமே முக்கியமானதாகி விட்டன. அச்சுதன் உலகநாதனின் வீட்டில் வந்து தங்கப் போவதால் எல்லாரும் அவரிடம் வந்து வந்து விசாரித்தார்கள். உலகநாதன் ஏற்கனவே எரிச்சலில் இருந்தார். வருவதற்கு முன்பே அச்சுதன் செந்துறையில் மிகவும் முக்கியஸ்தன் மாதிரி வேறு ஆகி விட்டதில் அவருக்கு இன்னும் எரிச்சல் ஜாஸ்தியாகி விட்டது.

ஆனால் இந்த எரிச்சலை கடுகளவுகூட ஊர்காரர்கள் யாரிடத்திலும் காட்டிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருந்தது — அவர். காட்டினால் அவருக்குத்தான் அசிங்கம்! உலகநாதனுக்கென்று ஏற்பட்ட மனச்சிக்கல் இதுதான். - இந்த மனச்சிக்கலுடன் அச்சுதனின் செந்துறை வருகைக்காக ஒருவித துயரத்துடன் அவர் காத்திருந்தாரென்றால் அவரின் மனைவி பரமேஸ்வரியும், அழகர்சாமியின் மகள் சிவமதியும் வெவ்வேறு விதமான மனநிலைகளோடு அச்சுதனின் வருகைக்காக காத்துக் கொண்டிருந்தார்கள்.

—இப்போது சிவமதியின் மனநிலை...

கற்பனைகூட செய்திராத அழகே உருவாக அச்சுதன் அவளுடைய வீட்டின் எதிரில் நின்றபோது சிவமதிக்கு கனவு காண்பது போல இருந்தது. அவளுக்குப் பிடித்த ஒரு சினிமா நடிகனைப்போல இருந்தான் அச்சுதன். ஏதாவது ஒரு சினிமா நடிகனுடன் உடலுறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ரகசியமான ஏக்கம் சிவமதியின் மன ஆழத்தில் ரொம்ப நாளாக இருந்து கொண்டிருந்தது. அந்த ஏக்கத்தைத் தீர்க்கத்தான் அச்சுதன் செந்துறைக்கு வரப்போகிறான் என்று அவனைப் பார்த்த உடனே நம்ப ஆரம்பித்துவிட்டாள். திண்ணையில் உட்கார்ந்து அச்சுதன் மோர் குடித்துக்

கொண்டிருந்தபோது சுத்தமாக சவரம் பண்ணப்பட்டிருந்த அவனுடைய பச்சையம் படிந்த முகவாய் சிவமதியை பாடாகப் படுத்தியது! அதேபோல அச்சுதனின் காது நுனிகளில் படிந்திருந்த செம்மையும் அவளின் மோகத்தைக் கிளறின.

புருஷன் செத்துப்போன பிறகு சிவமதிக்கு வாழ்க்கையில் ஆண் என்பவனே அற்றுப் போயிருந்தது. கிராமத்தில் இருந்த எந்த இளைஞனும் அவளுடைய மனதில் ஆணாகப் பதிவு பெறவே இல்லை! செந்துறை அவளுக்குப் பெண்கள் மயமானதாக கசகசத்து வியர்த்துப் போயிருந்தபோதுதான் திடீரென உலகநாதனின் மனமாற்றம் அவளுள் சின்ன மனச்சுகம் கொடுப்பதாக இருந்தது. ஆனாலும் பெண்கள் சூழ்ந்த சிவமதியின் உலகத்தில் உலகநாதனும் ஒரு ஊமை ஆம்பளையாகத்தான் உலவிக் கொண்டிருந்தார்! ஒன்றும் இல்லாததற்கு ஊமைப்பிள்ளை போதும்போல் இருந்ததென்னமோ உண்மை!

ஊமைப்பிள்ளை வேற ஒருத்தியிடம் போய் பேசத் தொடங்கி விட்டதும் கிடைத்துக் கொண்டிருந்த ஊமைச் சுகமும் கத்தரிக்கப்பட்டுவிட சிவமதியின் பாலுணர்வு நாடிகள் அதிரத் தொடங்கிவிட்டன! அந்த அதிர்வில் அவளைச் சுற்றி அப்பிக் கிடந்த பொம்பளைகளையெல்லாம் சிவமதி வெறுக்கவும் கோபிக்கவும் ஆரம்பித்து விட்டாள். உப்புப் பெறாத விஷயத்திற்கெல்லாம் கூச்சல் போட்டு பெண்களோடு சண்டை போட தயாராக இருந்தாள். - அவளுடைய இந்தக் கோபங்கள் உச்சந் தலையில் இருந்தபோதுதான் பச்சையம் படிந்த முகவாயுடன் அச்சுதன் அவளுடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து மோர் குடித்தால் பூப்பறிக்கவா போகும் கோபம்...?!

அச்சுதன் என்னமோ மோர் குடித்துவிட்டு எழுந்து போய்விட்டான். இங்கே இவள் உடம்பெல்லாம் மோக



மூட்கள் தைத்துப்போய் கிடந்தாள். சும்மா சும்மா குப்புறப் படுத்துக் கிடந்தாள். ஈரச்சேலை மாதிரி அச்சுதனைப் பற்றின நினைப்பு சிவமதியின் உடம்போடு உடம்பாக ஒட்டிக் கிடந்தது. அச்சுதன் ஆறு மாதம் செந்துறையில்தான் இருக்கப் போகிறான் என்ற தகவல் சிவமதியின் முதுகுத்தண்டில் நீர் வழிய வைத்துக் கொண்டிருந்தது. அவளுடைய உலகத்திற்குள் ஆண் ஒருத்தன் நுழைகிறான். அதுவும் அழகான ஆண்! அவனை தவறவிட்டு விடவே கூடாது என்று தீர்மானித்தாள் சிவமதி. ஒரே ஒரு முறைதான் என்றாலும் கூட அச்சுதனிடம் அவளுடைய உடம்பை கொடுத்து விட வேண்டும்! சிவமதியின் உடலை அவன் கடித்துக் குதறினாலும் பரவாயில்லை! பாலுறவின் மூலம் அவளை அச்சுதன் படுகொலையே செய்தாலும்கூட சந்தோஷம்தான் அவளுக்கு! இதன் மூலம் சிவமதிக்கு இரண்டு சந்தோஷம். ஒன்று - அவளுடைய கட்டை வேகும்! இரண்டாவது - இதன் மூலம் உலகநாதனை அவள் பழிதீர்த்துக் கொண்ட மாதிரியும் இருக்கும்!

''இதற்காகவெல்லாம் சிவமதி புயல் நேரத்துக் கடல்போல பொங்கி நுரைத்து அச்சுதனின் வருகைக்காக கரையோர தோணியாகக் கிடந்தாள்...!

—அடுத்து அச்சுதனின் வருகைக்காகக் காத்திருக்கும் பரமேஸ்வரியின் மனநிலை...

ஆம்பளை இல்லாத பொம்பளை மயமாக சிவமதியின் உலகம் ஆகிப் போயிருந்ததென்றால் இளமையே இல்லாத வயோதிக மயமாகிப் போயிருந்தது பரமேஸ்வரியின் 'இளம்' உலகம்! பணக்கார கணவர் என்ற எண்ணத்தில் வாழ வந்த அவளுக்கு வாழ்வு அமைந்தது வயோதிகக் கணவரோடுதான். பரமேஸ்வரியைச் சுற்றிலும் உலகநாதனின் வயோதிக மூச்சே அனலென வியாபித்திருந்தது. அனலில் அவளின் மனம் புழுங்கி வியர்த்துக் கிடந்தது. இளைஞன் என்பவனை பார்வை

யில் கூட காட்டப் பயந்து எல்லாவிதத்திலும் முதுமை
யையே பரமேஸ்வரியின் மனநிலையிலும் திணிக்க-முற்
பட்ட உலகநாதனின் கள்ளகிழத்தனம் அவளுடைய
நெஞ்சில் இளமையின் சூழலுக்கான ஏக்கத்தை உண்டு
பண்ணிவிட்டது. அம்பாசமுத்திரத்தில் கூட அவள்
ஏழை இளம் பெண்ணாகத்தான் இருந்திருக்கிறாள்.
இந்த ஏமாற்றத்தையும் உலகநாதனின் மோசடிகளை
யும் பரமேஸ்வரியால் தாங்க முடியவில்லை. உலக
நாதனை கல்யாணம் செய்து கொண்டதின் தவறு
எல்லா விதத்திலும் வதைத்தது அவளை.

இளைஞனின் தோழமைக்கும் இளம் சூழலுக்கும்
பரமேஸ்வரியின் மனம் ஏங்க ஆரம்பித்துவிட்டது.
இந்த ஏக்கம் கலந்த மனச்சூழலில்தான் — பரமேஸ்வரி
யின் வயோதிகச் சிறைக் கூடத்தின் வாசலில் வந்து
மொத்த இளைஞர்களின் அழகுப் பிரதிநிதியாக
அச்சுதன் வந்து நின்றிருக்கிறான்! அந்த ஒரு நிமிஷம்
பரமேஸ்வரி சூழ்ந்திருந்த வயோதிக அனல் சரேலென
கலைந்தது!

அவளால் கோயிலில் பக்திவயப்பட்டு நிற்கவே
முடியவில்லை. அச்சுதன் யார் யார் என்ற எண்ணம்
தான் மனசு பூராவும் புரண்டு கொண்டிருந்தது. உடனே
வீடு திரும்ப வேண்டும்போல இருந்தது. ஆனால் உலக
நாதன் பற்றிய அனுபவம் போகவிடாமல் தடுத்தது.
உடனே அவள் வீடு திரும்பினால் உலகநாதனின்
மேட்டு விழிகளின் காக்கா பார்வை பரமேஸ்வரியை
குத்தி கிழித்துவிடும்! அதனால் வழக்கமாக கோயிலில்
எவ்வளவு நேரம் இருப்பாளோ அவ்வளவு நேரம்
இருந்துவிட்டே வீடு திரும்பினாள். திரும்பிய போதும்
இளமைப் பிரதிநிதியின் தரிசனம் அவளுக்குக்
கிடைத்தது!

வீட்டுக்கு வந்து போன இளைஞன் யார் என்று
ரொம்ப நேரம் கழித்துத்தான் பரமேஸ்வரி உலகநாத



னிடம் கேட்டாள். என்ன நடந்தது? குட்டிச்சுவர்
கோட்டைச் சுவர் என்று முதுமை அதன் கிழ நகங்
களால் அவளைப் போட்டு கீறி காயப்படுத்தியது.
பத்தோடு பதினோராவது காயம்தான் இதுவென்று
பரமேஸ்வரியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.
முதலில் கொஞ்சம் திசைதெரியாமல் கலங்கினாள். சற்று
அச்சுதனின் இளமையான தோற்றத்தை நினைத்துப்
பார்த்துக் கொண்டிருந்தாள். உண்மை ஒன்று
அவளுக்குக் கண்கூடாகத் தெரிந்தது. அச்சுதன் வந்து
தங்கப் போகும் நாட்கள் உலகநாதனின் கிழத்தன்மை
மேலும் மேலும் ஆக்ரோஷப்பட்டு அவளை வார்த்தை
களால் காயப்படுத்தலாம். பதிலுக்கு பரமேஸ்வரியும்
உலகநாதனை காயப்படுத்த மெனக்கெட வேண்டிய
தில்லை. அந்தக் காயத்தை அச்சுதனின் அழகும்
இளமையும் ரொம்ப சாதாரணமாக செய்து முடித்து
விடும்! அப்படி உலகநாதனை ஒவ்வொரு நாளும்
ஆக்ரோஷப்படுத்தவாவது முதலில் அச்சுதன் செந்
துறை வந்து சேரட்டும்.

மற்றவை நேரில்...!

...இந்தக் கோணத்தில் பரமேஸ்வரி அச்சுதனின்
வருகைக்காக நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள்.
இந்த இரண்டு பெண்களின் எண்ண ஓட்டத்திற்கு
உலகநாதன் மட்டும் சளைத்தவரா? அச்சுதன் வந்து
சேர்கிற நேரம் பார்த்து பரமேஸ்வரியுடன் பம்பாய்
டெல்லி என்று கம்பி நீட்டிவிட்டால் என்னவென்று
கணக்குப் போட்டார்! பம்பாய் மகள் வீட்டில் ஒரு
மாதம், டெல்லி மகள் வீட்டில் ஒரு மாதம். இப்படி
இரண்டு மாதப் பொழுதை ஓட்டிவிட்டு வந்தால் பிறகு
நான்கு மாதங்கள்தான். அச்சுதன் பெட்டியை தூக்கிக்
கொண்டு போய் விடுவான்!

என்றும் காட்டாத அன்புடன் ''ஈஸ்வரி தாயி''
என்று கூப்பிட்டு விஷயத்தை ஆரம்பித்தார்.

"பாவம்! கல்யாணமான இந்த ரெண்டு வருஷத்ல நீயும் நானும் அக்கடான்னு எந்த ஊருக்கும் போகவே இல்லை. அதனால பெரிய டூர் ஒண்ணு ரெண்டு மூணு மாசத்துக்குப் போயிட்டு வரலாம்னு பாக்கேன்! பெரிய பாப்பாகூட ஒரு மாசம்! சின்ன பாப்பாட்ட ஒரு மாசம்! பெறகு அங்கே இங்கேன்னு ஒரு மாசம்! என்ன சொல்ற?"

பரமேஸ்வரிக்கு பகீர் என்றிருந்தது. என்ன சொல்வதென்று தெரியவில்லை. ஒன்று தெரிந்தது. கிழவருக்கு அசாத்திய மூளை! இளமை வரும்போது முதுமை ஒட்டம் பிடிக்கப் பார்க்கிறது!

"என்ன தாயி ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறே?" முதுமை பொடிமட்டையை தட்டிக்கொண்டே கேட்டது!

"ஒங்களுக்குப் போலாம்னு இருந்தா போயிட்டு வருவோம்" என்று மட்டும் சொன்னாள். பேய்க்கு வாழ்க்கைப்பட்டவள் முருங்கை மரத்தில் ஏறாமல் இருக்க வழி எங்கேயாவது இருக்கிறதா?

"ஒனக்குப் போலாம்னு தோணலை போல இருக்கு! — உலகநாதன் இப்படிக் கேட்காமல் இருந்தால்தான் ஆச்சர்யம்!

அவசரப்பட்டு பரமேஸ்வரியிடம் எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்கிற வேகத்தில் கேட்டுவிட்டாரே தவிர உட்கார்ந்து ராத்திரியெல்லாம் யோசித்த பிறகுதான் பிரச்னை ஒன்று மூதறிஞரின் மூளையில் உறைத்தது! டெல்லியிலும் பம்பாயிலும் மகள்களின் ஃப்ளாட்கள் இருக்கின்ற கட்டிடங்களில் வசிக்கின்ற மற்ற குடும்பத்தினர்கள் எல்லாருக்கும் உலகநாதனையும் காந்திமதியையும் தெரியும். தமிழ் தெரியாதபோதும் அங்கிள் என்றும் ஆண்ட்டி என்றும் கூப்பிட்டு அன்போடு ஹிந்தியில் விசாரிப்பார்கள். இப்போது பரமேஸ்வரி



யுடன் போய் நின்றால் அதே சகஜபாவத்தோடு பேசுவார்களா? அல்லது முழித்து முழித்துப் பார்ப்பார்களா? முழித்துப் பார்ப்பதோடு நிற்காமல் நாங்குநேரி கதை போல அங்கேயும் ஏதாவது ஏடாகூடமாக நடந்து விடுமா? அப்படி எதுவும் நடக்காது என்பதற்கு உத்திரவாதம் எதுவும் கிடையாது! உலகநாதன் யோசிக்கவே இல்லை. முன் வைத்த காலை பின் வைத்துவிட்டார்!

"பம்பாயிலும் டெல்லியிலும் ஒரே மழையாம்! அதனால இப்பப் போக வேணாம் இன்னொருவாட்டி பாப்பம்!" என்று வானிலையின் மேல் பழியைப் போட்டுவிட்டு மீதப் பழியை பெருமாள் தலையிலும் போட்டுவிட்டார். வரப்போகும் அழகனிடம் இருந்து அவருடைய பெண்டாட்டியை பெருமாள்தான் காப்பாற்றித் தர வேண்டும்! இந்த வேண்டுதலோடு அச்சுதன் வரப்போகிற நாள் எதுவென்று தெரியாமலேயே உலகநாதன் வீட்டுத் திண்ணையிலேயே பழியாகக் கிடந்தார். ஆனால் அவரைப்பிடித்திருந்த அஷ்டம சனி அத்தனை எளிதாக்கிவிடுமா—அச்சுதன் வந்து சேர்கிற விஷயத்தை...

அச்சுதன் அசத்தலாக அவனுடைய மோட்டார் சைக்கிளில் செந்துறை வந்து சேர்ந்தபோது உலகநாதன் வீட்டில் இல்லை. நடவு ஆதலால் வயலில் நின்றார். அவருடைய நிலைமைக்கு இப்படியெல்லாம் வந்து வயலில் நிற்க வேண்டியதில்லை. ஆனாலும் உடையவன் நிற்காவிட்டால் ஒரு முழம் கட்டைதான்! உலகநாதனின் அபிப்பிராயம் இது. வந்து சேர்ந்து விட்ட நாற்றுக்கட்டுக்களை எண்ணிப் பார்க்கச் சொல்லி வெயிலுக்குக் குடையை விரித்து அவர் நின்று கொண்டிருந்த அந்த அருமையான முகூர்த்தத்தில்தான் அச்சுதனின் ஹீரோஹோண்டா வாசல் கதவு சாத்தப்பட்டிருந்த அவருடைய வீட்டின் எதிரில் கம்பீரமாக வந்து நின்றது. எல்லா வீடுகளிலும் ஆண்களும் பெண்

களும் அவரவர் வாசல்களுக்கு வந்து விட்டார்கள். சிவமதியும் வாசலுக்கு விழுந்தடித்து ஓடினாள். மோட்டார் சைக்கிள் அதற்குள் அவள் வீட்டைத் தாண்டி உலகநாதனின் வீட்டின் எதிரில் போய் நின்றது. என்ஜினை உடனே அணைக்காமல் மோட்டார் சைக்கிளின் மேல் கம்பீரமாக அமர்ந்திருந்த அச்சுதனைப் பார்த்து சொக்கினாள் சிவமதி.

சமையல் அறையில் வேலையில் ஈடுபட்டிருந்த பரமேஸ்வரி வேலைகளை நிறுத்திவிட்டு கவனித்தாள். சட்டென்று மோட்டார் சைக்கிளின் ஓசை அணைந்தது. அடுத்த நிமிஷம் வாசல் கதவு சன்னமாக தட்டப்படுகிற சப்தம் கேட்டது. பரமேஸ்வரி வேகமாக போய் கதவைத் திறந்தாள். அவளுடைய கண் எதிரில் அச்சுதனின் வடிவத்தில் மொத்த இளைஞர் உலகம் நின்று கொண்டிருந்தது. எல்லா ஜன்னல்களும் பூட்டப்பட்டிருந்த வீட்டின் எல்லா ஜன்னல்களும் விரிய திறந்து விட்டாற்போல இருந்தது. முதலில் அச்சுதனை பரமேஸ்வரி வணங்கினாளா? அல்லது பரமேஸ்வரியை அச்சுதன் வணங்கினானா?

"வாங்க; உள்ளே வாங்க..." காத்துக் கிடந்த அத்தனை உணர்வுகளோடும் பரமேஸ்வரி அச்சுதனை வரவேற்றாள்.

"சார் இல்லையா?" அச்சுதன் தயக்கத்துடன் கேட்டான்.

"அவங்க வயலுக்குப் போயிருக்காங்க. யாரை யாவது அனுப்பி கூட்டிட்டு வரச் சொல்றேன். நீங்க உள்ளே வந்து முதல்ல உக்காருங்க..." - பரமேஸ்வரிக்கு அவசரம். உலகநாதன் வந்து சேர்வதற்குள் அச்சுதன் வீட்டிற்குள் வந்து ஆற அமர உட்கார்ந்து விடவேண்டும்! அப்போதுதான் ஆரம்பமே முதுமைக்கு சூடு பிடிக்கும்!



"நீங்க எனக்கு அடுத்த வீட்டுச் சாவியை கொடுத்தாகூட போதும்" என்றான் அச்சுதன்.

"அதைக்கூட நான் தேடித்தான் பாக்கணும். நீங்க உள்ளே வந்து உக்காந்திருங்க..." பரமேஸ்வரியின் அழைப்பில் இருந்த மென்மையான - அதே நேரம் அவசரமான தொனியைக் கொண்டிருந்த நட்பு புரிந்தது. அந்த நட்பை அங்கீகரிக்கும் விதத்தில் "தேங்ஸ்" என்று சொல்லிய அச்சுதன் வீட்டிற்குள் நுழைந்து கூடத்தில் இருந்த நாற்காலியில் களைப்புடன் அமர்ந்து கொண்டான்......

# 20

"ஒரு நிமிஷம் இருங்க — இப்ப வந்திருவேன்" என்று சொல்லிவிட்டு பரமேஸ்வரி 'தைலக்கா' வீட்டுக்குப் போய் தைலக்காவின் மூத்த பையனிடம் விஷயத்தைச் சொல்லி வயலுக்குப் போய் உலகநாதனை கூட்டிக் கொண்டுவரச் சொன்னாள். தைலக்காவின் பையன் ஆடி -அசைந்துபோய் சமாசாரத்தைச் சொல்லி உலகநாதன் வீடு வந்து சேர எப்படியும் அரைமணி நேரமாவது ஆகும். பாவம்; முதல் நாளே முதுமையின் மூஞ்சி அஷ்ட கோணலாகப் போகிறது!

பரமேஸ்வரி தைலாவின் வீட்டுக்கு வந்ததையும் போனதையும் தன் வீட்டுத் திண்ணையில் இருந்து பார்த்த சிவமதிக்கு உடனே புரிந்தது. உலகநாதன் வீட்டில் இல்லை! பாரேன் கொடுமையை! சிவமதிக்கு அச்சுதனுடன் கிடைக்க வேண்டிய தனிமை வாய்ப்பு பரமேஸ்வரிக்கு! சிவமதி பொறாமையுடன் முகத்தை ஒரு நொடிப்பு நொடித்துக் கொண்டாள்! பரமேஸ்வரி

வீட்டிற்குள் போவதற்குமுன் அச்சுதனின் மோட்டார் சைக்கிளை கொஞ்சம் பரவசத்துடன் பார்த்தாள். மோட்டார் சைக்கிளின் 'ஹாண்டில் பாரை' ஒரு விரலால் தொட்டு விட்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

''கால்மணி நேரத்ல வந்திருவாங்க... நீங்க உக்காந்திருங்க... சாவியை நானும் தேடிப் பார்க்கறேன்...'' என்று அச்சுதனிடம் சொல்லிவிட்டு பரமேஸ்வரி சமையல் அறைக்குள் போனாள். ஆனால் அவள் சாவியை எல்லாம் தேடவில்லை! வேகமாக அச்சுதனுக்கு காப்பி போட ஆரம்பித்தாள். சமையல் அறையில் பரமேஸ்வரி குறுக்கும் நெடுக்குமாக போய் கொண்டிருந்ததை நாற்காலியில் உட்கார்ந்தபடியே அச்சுதன் கவனித்துக் கொண்டிருந்தான். அதிகமாகப் போனால் இருபத்தேழு வயதிற்கு மேல் இருக்காதென்று நினைத்தான். இத்தனை அழகான இளம்பெண் உலக நாதனை மணந்து கொண்ட பின்னணி என்னவாக இருக்கும் என்பதை யோசித்துப் பார்த்தான். அப்போது அவனுக்கு மிகப் பெரிய சொம்பு ஒன்றில் பரமேஸ்வரி காப்பி எடுத்து வந்தாள். அவளுடைய கண்களில் அச்சுதன் என்ற இளைஞனுக்கு முதல் முறையாக காப்பி போட்டுத் தருகிற பரவசம் நிறைந்து கிடந்தது. காப்பியை வாங்கிக் கொள்ள அச்சுதன் கையில் வைத்திருந்த இரண்டொரு பத்திரிகைகளை கீழே வைத்தான். பத்திரிகைகளின் பெயர்களை கவனித்த பரமேஸ்வரியின் மனம் 'அட' என்று ஆச்சர்யப்பட்டது.

''எப்பவும் இதெல்லாம் படிப்பீங்களா?'' பரமேஸ்வரி மானசீக நண்பனிடம் கேட்டாள்.

''ஆமா. ரெகுலராகவே வாங்குவேன்''

''இதையெல்லாம் நான் படிச்சிட்டு தரட்டுமா?''

''தாராளமா! மேல இருக்கிற இஷ்யுல என் கதை ஒண்ணுகூட பப்ளிஷ் ஆகியிருக்கு. பரமேஸ்வரிக்கு மற்றொரு 'ஆஹா!' நண்பன் கதைகூட எழுதுவான்.



''கதைப் புஸ்தகம் எது வாங்கினாலும் எனக்கும் தர்ரீங்களா? படிச்சிட்டு தரேன்''

''வீட்ல நீங்க என்ன பத்திரிகை வாங்குறீங்க?''

''கொஞ்ச நாள் இதெல்லாம் வாங்கிட்டு வந்து தந்தாங்க. பிறகு வாங்கித் தர்ரதை நிறுத்திட்டாங்க''

''ஏன்?''

''இப்பத்தானே வந்திருக்கீங்க... நேரம் வரும்போது நானே சொல்றேன்''

அச்சுதன் பரமேஸ்வரியிடம் இருந்து இந்த பரிமாற்றங்களை எதிர்பார்க்கவில்லை. ஆனால் தான் வரப்போவதை ஒருவித எதிர்பார்ப்புடன் விரும்பிக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது.

''மெட்ராஸ்ல இருந்தேவா பைக்ல வர்ரீங்க?''

''நோ நோ. டிரெய்ன்லதான் வரேன். பைக்கை பார்சல் வேன்ல புக் பண்ணி போட்டு எடுத்து வந்திட்டேன். திருநெல்வேலியில இறங்கினதும் டெலிவரி எடுத்து பெட்ரோல் போட்டுட்டு இதுலேயே வந்திட்டேன்...''

''சரி - சாப்பாட்டுக்கு என்ன பண்ணப் போறீங்க?''

''நானேதான் சமைச்சிக்கிறதா இருக்கேன். ஆனா சாப்பாடு ஒரு பெரிய விஷயம் கிடையாது. ஸோ - நோ ப்ராப்ளம்...''

சாப்பாடு ஒரு பெரிய விஷயம் கிடையாது என்று சொன்ன ஒன்றுக்காகவே அச்சுதனை ஒருநாள் அழைத்து ஜோரான சாப்பாடு ஒன்று போடவேண்டும்!

''எனக்கு சமையல் வேலை இருக்கு... நீங்க இங்கயே வெய்ட் பண்ணுங்க - அவங்க இப்ப வந்திடுவாங்க...''

காலியான காப்பி சொம்பையும் பத்திரிகைகளை யும் எடுத்துக்கொண்டு பரமேஸ்வரி சமையலறைக்குள் விரைந்து விட்டாள். வீம்புக்காக பேசிக்கொண்டு நிற்க லாம். முதல் நாளே இத்தனையையும் தாங்க மாட்டார் உலகநாதன்! பரமேஸ்வரிக்கு இருக்கிறது ஆறு மாத அவகாசம்!

அச்சுதன் வாட்ச்சில் மணி பார்த்தான். சரியாக பன்னிரெண்டு. உலகநாதன் சீக்கிரம் வந்தால் தேவலை என்றிருந்தது. அவன் எண்ணத்தை பூர்த்தி செய்கிற வேகத்தில்தான் உலகநாதனும் வேகவேகமாக வந்து கொண்டிருந்தார். அசாத்திய கோபம் அவருக்கு கடுதாசி போடாமல் அழகன் அவன் பாட்டுக்கு கிளம்பி வந்திருக்கிறான் - என்னவோ மாமியார் வீட்டுக்கு வரு கிற மாதிரி...!

தெருமுனையில் திரும்பியதுமே உலகநாதனின் பார்வையில் பட்டது அச்சுதனின் மோட்டார் சைக்கிள் தான்! 'துரைக்கு இது வேறயா?' மோட்டார் சைக்கி ளைச் சுற்றி சின்னப் பையன்களின் ஒரு பட்டாளமே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. 'பெரிய பிளைமத் கார் நிற்கிறது அதை வேடிக்கை பார்க்க கூட்டம் வேறு...!''

உலகநாதன் வீட்டு வாசலில் கால் வைக்கவும் சைக்கிளில் வந்த தந்தி சேவகன் வந்து இறங்கவும் சரி யாக இருந்தது. தந்தி அவருக்குத்தான். வாங்கிப் பார்த் தார். வீட்டினுள் உட்கார்ந்திருந்த அச்சுதன் மரியா தைக்காக எழுந்து வாசலுக்கு வந்தான். உலகநாதன் வேண்டும் என்றே அவனை திரும்பியே பார்க்க வில்லை. தந்தியை வாசித்துப் பார்த்தார். இன்று சென் துறை வருவதாக அச்சுதன்தான் அந்தத் தந்தியை கொடுத்திருந்தான். உலகநாதனுக்கு இருந்த கோபத் தில் தந்தி புரிந்து தொலையவில்லை.



''அச்சுதா! யாரு இந்த தந்தியை குடுத்தது?'' அச்சுதனிடம் காட்டி கேட்டார்.

''அட! முந்தாநாள் நான் குடுத்த தந்தி இது! இப்பத்தான் வந்து சேருது''

''ஒன்னை கடுதாசியில எழுதச் சொல்லியிருந் தேன்...''

''ஸாரி சார். லெட்டர் எழுத முடியாதபடி ஒரே அலைச்சல்... அதான் தந்தி குடுத்தேன்''

''போன் பண்ணியிருக்க வேண்டியதுதானே...''

''வீட்ல போன் அவுட் ஃஆப் ஆர்டர்... அதனால அதுவும் முடியலை...

''சரி சரி; காலையில் ஏதோ ஜோலியா அடுத்த வீட்டைத் தெறந்தேன். பூட்டலை. சும்மாதான் கதவு சாத்தியிருக்கு. போய் இருந்துக்க... ஒனக்கு ஏதாவது வேணும்னா நான் இருக்கும்போது என்னை வந்து கேளு. அதுக்காக சும்மா சும்மா வந்து நிக்காத. நான் ஆயிரத்தெட்டு ஜோலிக்காரன்...!''

அச்சுதன் நன்றி சொல்லிவிட்டு நகர்ந்தான். உலக நாதன் வீட்டிற்குள் பரமேஸ்வரி தென்படுகிறாளா என்று ஒரு நோட்டம் விட்டுவிட்டு வாசலிலேயே விறைப்புடன் நின்று கொண்டிருந்தார். மோட்டார் சைக்கிளைப் பார்க்கப் பார்க்க பொறாமையாக இருந் தது அவருக்கு! உலகநாதன் எதேச்சையாக அழகர் சாமியின் வீட்டுப் பக்கம் பார்த்தார். திண்ணையில் சிவமதி ரொம்பத்தான் ஒயிலாக நின்று கொண்டிருந் தாள்! அவரைப் பார்த்தாலே நொடித்துக் கொண்டு வீட்டுக்குள் போய் விடுகிற சிறுக்கிக்கு இன்று வந்திருக் கிற கொழுப்பைப் பாரேன்! மெட்ராஸ் அழகனை 'சைட்' அடித்துக் கொண்டிருக்கிறாள்!

தோளில் கிடந்த துண்டை எடுத்து ஒரு உதறு உதறிவிட்டு உலகநாதன் வீட்டிற்குள் எரிச்சலுடன்

நுழைந்தார். மெட்ராஸ் அழகன் எவ்வளவு நேரம் வீட்டிற்குள் உட்கார்ந்திருந்தானோ தெரியவில்லை! உலகநாதனுக்கு ஆரம்பமே பிடிக்கவில்லை. ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டே "ஈஸ்வரி"யென்று குரல் கொடுத்தார். அவள் உள்ளிருந்தபடியே "என்னங்க" என்றாள். காலையில் அவர் சொல்லிவிட்டுப் போயிருந்த கருணைக்கிழங்கு குழம்பு செய்து கொண்டிருந்தாள். என்றும் இல்லாத அதிசயமாக குழம்பு வாசனை கூடம் வரைக்கும் வந்து உலகநாதனின் மூக்கைத் துளைத்தது. இந்த நிமிஷம் உலகநாதன் அந்த வாசனையை அனுபவிக்கிற நிலையில் இல்லை என்பதை சொல்ல வேண்டியதில்லை!

"இங்க நீ வந்திட்டு போனா தேவலை!" என்றார்.

வியர்வையை ஒற்றிக்கொண்டே பரமேஸ்வரி வேகமாக வந்தாள்.

"எப்ப வந்தான் அந்தப் பையன்?"

"எந்தப் பையன்?" - பரமேஸ்வரி வேண்டும் என்றுதான் இப்படி எதிர்கேள்வி கேட்டாள். இது இயல்புக்கு மீறினதுதான். அதே நேரம் காலத்தின் கட்டாயம் இது!

"எரிச்சலை கௌப்பற பாத்தியா! நூறு பயலா வந்திட்டுப் போறான்... எவன்னு குறிப்பா கேக்க... இந்த மெட்ராஸ்காரன் எப்ப வந்தான்னு கேக்கேன்"

"மணியெல்லாம் பாக்கலை. வந்தாரு, உக்கார சொல்லிட்டு தைலக்கா மகனை அனுப்பிச்சேன்"

"ஒண்ணும் பேசலையா அவன்கிட்ட நீ?"

"அவருகிட்ட எனக்கென்ன பேச வேண்டிக் கெடக்கு?"

"எதுக்கு வீட்டுக்குள்ள உக்கார சொன்னே? திண்ணையில இருக்கச் சொல்ல வேண்டியதுதானே..."



"ஊர்ல இருந்து வர்ர ஒருத்தரை அப்படிச் சொல்றது மரியாதையா தெரியலை எனக்கு!"

"ரொம்பத்தான் மரியாதை குடுத்தாகுது போல!"

"குடுக்க வேண்டியவங்களுக்கு மரியாதை குடுத்தாத்தான் நமக்கும் மரியாதை!"

"போடு! பேச்செல்லாமே வேகமா வருது!"

உலகநாதன் இதற்குமேல் பேச்சை வளர்க்க விரும்பவில்லை! நிறுத்திக்கொண்டு விட்டார், ஆனால் அவருடைய மன இயக்கம் நிற்கவில்லை. அவர் வீட்டில் இல்லாத நேரத்தில் அச்சுதன் வந்துவிட்ட பதட்டமும் பதட்டம் தந்த பயமும் மனசுக்குள் சஞ்சலித்துக் கொண்டிருந்தது. அவனுடைய மோட்டார் சைக்கிள் வேறு இளமையின் உருவமாக அவரின் பயத்தை அதிகப்படுத்தியது. வாழ்க்கையில் இரண்டு பெரிய தப்பைச் செய்துவிட்ட வேதனையும் ஏற்பட்டது. முதல் தப்பு - பரமேஸ்வரியை கல்யாணம் செய்து கொண்டது! இரண்டாவது தப்பு - தர்மராஜனுக்காக ஊசிமுனை தாட்சண்யம் பார்த்து அச்சுதனை அடுத்த வீட்டில் தங்க வைத்திருப்பது! அவருடைய இந்தத் தப்புக்களால் வேற தப்பு ஏதாவது நடந்து விடக்கூடாதே! அந்தப் பயம்தான் பிசின் மாதிரி உலகநாதனின் மனசில் ஒட்டியிருந்தது! பள்ளத்தில் விழுந்து கிடந்த யானையைப் போல இந்தப் பயத்துக்குள்ளேயே உலகநாதன் அச்சுதன் வந்து சேர்ந்த முதல் நாளே விழுந்து கிடந்தார்!

அதேபோல அச்சுதனோ அடுத்த வீட்டில் பரமேஸ்வரி பற்றிய சில யோசனைகளோடு உலவிக்கொண்டிருந்தான். பதினைந்து நாட்களுக்கு முன்பு அவன் பார்த்த பரமேஸ்வரிக்கும் இன்று பார்க்கும் பரமேஸ்வரிக்கும் இடையில் பெரிய வித்தியாசம் தென்பட்டாற் போல இருந்தது. இன்று அவளிடம் தெரி

கின்ற உற்சாகம் அவனுடைய வருகையை ரொம்பவும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தால்தான் சாத்தியம். பரமேஸ்வரி அவனின் வருகையை இத்தனை தூரம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதின் காரணம்? அச்சுதனின் அறிவில் மின்னல் வெட்டியது. பதினைந்து நாட்களுக்கு முன்பு அவன் பார்த்த பரமேஸ்வரி உலகநாதனின் இளம் மனைவி. இன்று பார்க்கும் பரமேஸ்வரி ஸ்படிகமான இளம் நங்கை...! - அச்சுதன் இந்த வேறுபாட்டை யோசித்துப் பார்த்தான். முரண்பாட்டில் கசட்டுத்தனம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை அவனுக்கு. பிறகு? அச்சுதன் யோசிப்பதை கத்தரித்துக் கொண்டான். இடது பக்க அறையின் இடது சுவற்று ஜன்னல்களை திறந்து விட்டான். உலகநாதனின் வீட்டுச் சுவரிலும் சற்று தள்ளி ஜன்னல் ஒன்று திறந்திருந்தது. ஆனால் அவருடைய வீட்டில் எங்கோ ஒரு ஜன்னல் மூடி கிடப்பதாகத் தோன்றியதில் அச்சுதனின் மென்மையான மனம் சின்னதாக பெருமூச்சு விட்டது. எங்கோ எதற்கோ அவனின் மனம் கசிந்தது. அறைக்குள் நடந்து கொண்டே பாடினான்.

"அம்பரமே தண்ணீரே சோறே யறஞ் செய்யும்
எம்பெருமான் நந்த கோபாலா! எழுந்திராய்......"

பதமான தொனியில் மிருதுவான குரலில் அச்சுதன் பாடிய திருப்பாவை தன் வீட்டுச் சாப்பாட்டு அறைக்குள் கருணைக்கிழங்கு குழம்புச் சோற்றை உருட்டி வாயில் போட்டுக் கொண்டிருந்த உலகநாதனின் காதுகளில் விழுந்ததோ இல்லையோ அவரின் உலகம் அப்படியே ஆடாமல் அசையாமல் ஸ்தம்பித்து நின்று விட்டது! பாட்டும் சங்கீதமும் பரமேஸ்வரிக்கு வெல்லம்! மெட்ராஸ்காரர் பாட்டு வேறு பாடுகிறார். அடுத்த சோதனையா உலகநாதனுக்கு?

உலகநாதன் இந்த திருப்பாவையை மார்கழி மாதங்களில் பெருமாள் கோயிலில் கேட்டிருக்கிறார். ஆனால்



பெருமாள் பாட்டுத்தானே பாடுகிறானே என்றெல்லாம் அவரால் சமாதானம் செய்துகொள்ள முடியவில்லை. முதலில் இப்படி பெருமாள் பாட்டில்தான் ஆரம்பிப்பான்கள் என்ற ரீதியில்தான் புத்தி போயிற்று அவருக்கு. பிறகு இருக்கவே இருக்கிறது சினிமா பாட்டு!

உலகநாதன் 'அவதி அவதி'யென்று சாப்பாட்டை அள்ளி அள்ளிப் போட்டார். அச்சுதனும் விடாமல் பாடிக் கொண்டே இருந்தான். இதில் உலகநாதன் எவ்வளவு பதட்டமானாரோ அதே அளவு அமைதியின் சொருபமாக பரமேஸ்வரி இருந்தாள். பாட்டு அவளுக்கு பக்கத்து வீட்டில் கேட்கவில்லை. அவளுடைய வாழ்க்கையில் கேட்டது!

அவசரமாக சாப்பிட்டு முடித்த உலகநாதன் முதல் காரியமாக சமையல் அறையின் ஜன்னல் ஓரம் போய் நின்றார். அடுத்த வீட்டில் அச்சுதனுக்காக ஏற்பாடு பண்ணிக் கொடுத்திருந்த அறை ஜன்னலின் மேல் கதவுகள் திறந்திருந்தன. ஆனால் அச்சுதனின் உருவம் தெரியவில்லை. அந்த ஜன்னல் ஓரமாக அச்சுதன் வந்து நிற்கும்போது இந்த ஜன்னல் ஓரமாக பரமேஸ்வரியும் எதேச்சையாக வந்து நின்றால் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள முடியும்!

'கிழிஞ்சது லம்பாடி லுங்கி' என்றிருந்தது உலகநாதனுக்கு! இதை அவர் நினைத்தே பார்க்கவில்லை. உடனே அவருடைய ரத்தக் கொதிப்பு கொஞ்சம் ஜாஸ்தியானது. உச்சந்தலையை நோக்கி ஒரு பயம் எழும்பியது. அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இதை ஒரு பெரிய விஷயமாக நினைக்காமல் இருந்துவிடலாம். ஆனால் உலகநாதனின் இயல்புக்கு இது ஒரு உலக மகா விஷயம். இனிமேல் அவருடைய நினைப்பு பூராவும் ஜன்னலைத்தான் வட்டம் போட்டுக்

கொண்டிருக்கும். வட்டம்போட்டுப் போட்டு அழுது வடிந்து கொண்டிருக்கும். வேம்பின் புழு வேம்பன்றி உண்ணாது! இது பழமொழி. உலகநாதனின் மனநிலையை இந்த பழமொழிக்கு உதாரணமாக சொல்லலாமா?

தாராளமாக சொல்லலாம்...!

# 21

உலகநாதன் வாசலில் நின்று வேண்டும் என்றே ஏப்பங்கள் விட்டார். கரிய நிற மோட்டார் சைக்கிளை பார்த்துக் கொண்டும் பார்க்கவே பார்க்காத மாதிரியும் அடுத்த வீட்டிற்குள் நுழைந்தார். பாடிக்கொண்டே அச்சுதன் வெளியில் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தான்.

உலகநாதனுக்கு 'என்னலே! பாட்டா பாடுறே நீ?' என்று கேட்கத்தான் ஆசை. ஆனால் அவருடைய வாயில் இருந்து வந்தது இப்படி — "அச்சுதா! என்ன— ஒரே மார்கழி மாசப் பாட்டுச் சத்தமாயிருக்கு...?"

"வாங்கோ சார்—ஜஸ்ட் திருப்பாவை சொல்லிண்டிருக்கேன்"

"எதை வேணுமானாலும் சொல்லு. ஆனா ஒத்தையில சொல்லாத. ஒரு மாதிரியா நெனைப்பானுங்க இந்த ஊர்காரனுங்க! பாடணும்போல இருந்தா இருக்கவே இருக்கு நம்ம பெருமாள் கோயில். அங்க போயி பாடு. புண்ணியமாவது கெடைக்கும்!"

"அவ்வளவு புண்ணியமெல்லாம் வேண்டாம் சார் எனக்கு..." அச்சுதன் வேடிக்கையாகத்தான் சொன்



னான் இதை ஆனால் இந்த பதில் உலகநாதனின் மனசை லேசாக காயப்படுத்தியது. திருப்பி அவனை லேசாக காயப்படுத்தலாமாயென்று நினைத்தவர் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டார், உடனே கோபத்தையெல்லாம் வெளிப்படையாக காட்டினால் கௌரவ குறைச்சல் அவருக்குத்தான். நேரிடையான தாக்குதல் கூடவே கூடாது! நீர்மூழ்கிக் கப்பல்போல மறைந்து கிடந்து சரியான நேரத்தில் மர்ம அடி தர வேண்டும்! உலகநாதன் பெரிசாக பசுத்தோல் போர்த்திக் கொண்டார்.

"வெளியிலேயா கௌம்பற?"

"திருநெல்வேலிவரை போயிட்டு வந்திடறேன் சார்..."

"இப்பத்தானே சாமி வந்தே?"

"பார்சல் லாரியில நிறைய திங்ஸ் டெலிவரி போட்டு அங்கேயே வச்சிட்டு வந்திட்டேன். போய் அதையெல்லாம் எடுத்திண்டு டேபிள் ஃபேன் ஒண்ணு வாங்கணும். அதையும் வாங்கிண்டு வந்திடலாம்னு போறேன்."

"நீ இந்த ஜன்னலைப் போய் தெறந்து வச்சிருக்கே பார். அதைச் சொல்றதுக்குத்தான் வந்தேன்! அதை மூடிடு அச்சுதா! தெறந்தே—அது வழியா படைபடையா கொசு வந்திடும்!"

"நோ ப்ராப்ளம் சார். ஊர்ல இருந்து கொசுவலை எடுத்திண்டு வந்துட்டேன்!"

தங்கள் வீட்டு சமையல் அறை ஜன்னல் அருகில் மறைவாக நின்றபடி பரமேஸ்வரி இந்த உரையாடலை கேட்டுக் கொண்டிருந்தாள். கிழசிங்கம் எந்த வேலையாக அச்சுதனைப் பார்ப்பதற்காக போயிற்றோ-அதில் தோல்விதான் சிங்கத்திற்கு! கிழச்சிங்கம் இளம் சிங்கம் பாடுவதை தடை செய்யப் பார்க்கிறது! ஜன்னலை

முடிவிடுவதற்கு முயற்சி பண்ணுகிறது! ஆனால் கிழ சிங்கத்தின் பாச்சா எதுவும் பலிப்பேனா என்கிறது! இதில் பரமேஸ்வரி என்ற புள்ளிமானுக்கு சந்தோஷம்! சந்தோஷம் இதனால் மட்டும்தானா? முதலில் அச்சுதன் பரமேஸ்வரிக்கு முழு இளைஞனாகத் தெரிந்தான். பிறகு மென்மையான நண்பனாக தெரிந்தான். பிறகு கதை எழுதுகிற எழுத்தாளனாக... இப்போது அழகாக பாடுபவனாக...

பரமேஸ்வரிக்குள் ரொம்ப அழகாக ஒரு குஞ்சு பொரித்து அதன் சின்ன இறக்கைகளை சிறகடித்துக் கொண்டது!

அச்சுதன் புதிய ஆடை அணிந்த தோற்றத்தில் மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தான். அந்த சப்தம் கேட்டு பல வீட்டுத் திண்ணைகளிலும் ஜன்னல்களிலும் ஆண்களும் பெண்களும் தெரிந்தார்கள். சிவமதியும் திண்ணையில் ஆஜர்! அச்சுதன் சின்னப் பையன்களைப் பார்த்து அன்புடன் கையை அசைத்துக்கொண்டே மோட்டார் சைக்கிளை ரொம்ப மெதுவாக செலுத்தினான். அவன் சாதாரணமாகத்தான் உலகநாதன் வீட்டு வாசலைப் பார்த்தான். அதுவே உலகநாதனுக்கு தப்பாகபட்டது.

'பாக்கான் பாரு!'

இப்போது உலகநாதன் எதிர்பார்க்காத சின்ன சம்பவம் நடந்தது. ஒரு நிமிஷம் சிவமதியின் தகப்பன் அழகர்சாமி அச்சுதனை நிறுத்தி ஏதோ கேட்பதும் அச்சுதன் அதற்கு ஏதோ பதில் சொல்வதும் தெரிந்தது. பின் அழகர்சாமி வீட்டிற்குள் வேகமாக போய் எதையோ எடுத்துக் கொண்டு வந்து மோட்டார் சைக்கிளில் அச்சுதனின் பின்னால் 'தக்கிமுக்கி' ஏறி உட்கார்ந்து கொள்ள வண்டி வேகமாக கிளம்பிச் சென்றது. அந்தக் காட்சியை தெருவே குதூகலத்துடன் பார்த்தது.



சில சின்னப் பையன்கள் சிறிது தூரம் பின்னால் ஓடிவிட்டு வந்தார்கள். விட்டால் சிவமதியே ஓடினாலும் ஓடுவாள்! அச்சுதன் போவதை அவள் பார்த்த பார்வை அப்படி!

அச்சுதனின் பின்னால் உட்கார்ந்து இருபத்தி நான்கு பல்லையும் காட்டிக் கொண்டு அழகர்சாமி எங்கே கிளம்பிவிட்டான் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் வீட்டுக்குள் போக உலகநாதனுக்கு இஷ்டமே கிடையாது. ஆனால் இந்த அல்ப விஷயத்தைப் போய் கேட்பதா என்ற சுயமரியாதையை விட்டுத் தர முடியாமல் எரிச்சலோடு வீட்டிற்குள் போய் கதவை சப்தமாக சாத்திக் கொண்டார்.

அச்சுதன் அழகர்சாமியை மோட்டார் சைக்கிளின் பின்னால் உட்கார வைத்து அவருடைய விருப்பப்படி திருநெல்வேலிக்குக் கூட்டிக்கொண்டு போனது ரொம்ப ரொம்ப சின்ன விஷயம். அச்சுதன் இல்லாவிட்டால் அழகர்சாமி பஸ் பிடித்து ஒரு மணி நேரத்தில் திருநெல்வேலி போய் சேர்ந்திருப்பார். ஆனாலும் அச்சுதனுடன் போனது செந்துறைக்காரர்களுக்கு ரொம்பப் பெரிய விஷயமாகிவிட்டது.

அச்சுதன் எல்லோருக்கும் மிக நல்லவனாக தெரிந்தான். உலகநாதனுக்கு இதுதான் எரிச்சலை ஜாஸ்தியாக்கியது. நிஜமாக அச்சுதன் பொல்லாதவனாக இருந்திருந்தால்கூட நன்றாக இருந்திருக்கும் போலிருந்தது உலகநாதனுக்கு! வந்து சேர்ந்த அன்றே 'பாகதகத்திமவன்' ஃபேமஸ் ஆகிவிட்டானே! இந்தக் கடுப்பை வாய் திறந்து காட்டவும் முடியாமல் இருந்தது தான் உலகநாதனின் பெரிய கடுப்பு! கடுப்பை பரமேஸ்வரியிடம் காட்டி வைக்கலாம். ஆனால் இப்போதே காட்டிவிட முடியாது. காட்டினால் அது அவரைக் காட்டிக் கொடுத்துவிடும்!

தெரிந்திருந்தும் உலகநாதனால் காட்டிக் கொள்ளாமலும் இருக்க முடியவில்லை. திடீரென்று தண்ணீர் குடிக்க வருகிற மாதிரி சமையலறைக்குள் அவர் வந்தால் அடுத்த வீட்டு ஜன்னலில் அச்சுதனின் முகம் தெரிகிறதா என்று கவனிக்க வந்திருக்கிறார் என்று அர்த்தம்!

உலகநாதன் இப்படி தண்ணீர் குடிக்கிற மாதிரி வரும்போதெல்லாம் பரமேஸ்வரியின் வயிற்றுக்குள் சின்னதாக தீ எரியும். இத்தனைக்கும் உலகநாதன் அவளுக்கு ஒரு உத்தரவு போட்டிருந்தார். அச்சுதன் அடுத்த வீட்டிற்குள் இருக்கின்ற நேரங்களில் பரமேஸ்வரி சமையல் அறை ஜன்னல் பக்கம் தலையைக் கூட காட்டக்கூடாது! உத்தரவுதான் போட்டாகி விட்டதே. நம்பிக்கையோடு இருக்க வேண்டியது தானே... அதென்ன அவ்வப்போது 'குத்துவயித்து வலிக்காரன்'போல முக்கலோடும் முனகலோடும் சமையல் அறைப்பக்கம் எட்டு நடை நடப்பது? பட்டென்று பரமேஸ்வரி சமையல் அறை ஜன்னலைப் பூட்டி வைத்துவிட்டாள்! உலகநாதன் பரமேஸ்வரிக்கு சளைத்தவரா என்ன? ஜன்னல் பூட்டப்பட்டிருந்ததை கண்டு கொண்டதாக காட்டிக் கொள்ளவே இல்லை!— பரமேஸ்வரிக்குள் வேறொரு கதவு திறந்து கொண்டாயிற்று. அது இப்போதைக்குப் போதும் அவளுக்கு! அதே நேரம் அச்சுதனின் அறை ஜன்னல் திறந்தே கிடந்ததில் அவ்வப்போது அதன் வழியாக அச்சுதனின் இசை வெள்ளம் பாய்ந்து கொண்டேயிருந்தது. சில நேரங்களில் அவன் பாடாமல் மகாராஜபுரம் சந்தானம்; உன்னிகிருஷ்ணன்; சௌம்யா போன்ற வித்வான்களின் கேசெட்டுகளைப் போட்டு கேட்டுக்கொண்டிருந்தான். உலகநாதனைப் பொறுத்த வரையில் அச்சுதன் ஆராய்ச்சியைத் தவிர மற்ற எல்லாவற்றையும் செய்து கொண்டிருந்தான். இதன் விளைவு—அச்சுதன் செந்



துறை வந்து சேர்ந்த மூன்று நாளும் பெரும்பான்மையான நேரம் உலகநாதன் வீட்டுத் திண்ணையில் ஒரு 'வாட்ச்மேன்' மாதிரி உட்கார்ந்திருந்தார்! அதுவும் பகல் வாட்ச்மேன்!

அச்சுதன் செந்துறை வந்து சேர்ந்த நான்காவது நாள்—காலை டிபன் சாப்பிட்டதும் எளிமையாக உடை அணிந்து கொண்டான். சில புத்தகக் குறிப்பேடுகள்; பேனாக்கள் பென்சில்கள் 'கோளிகா' கேமரா அடங்கிய ஜோல்னா பையைத் தோளில் மாட்டியபடி தெருவில் இறங்கி கேசவபெருமாள் கோயிலை நோக்கி நடந்தான். ஏழெட்டு வீடு தள்ளி ஒரு வீட்டின் முன்னால் சின்னப் பையன் ஒருவன் பள்ளிக்கூடம் போக முடியாது என்று சொல்லி ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தான். பையனின் 'அம்மை' வாசலில் நின்று மகனை ஏசித் தள்ளிக் கொண்டிருந்தாள்.

"இப்பம் நீ பள்ளிகூடத்துக்குப் போகல—மக்கா; ஒன் முதுகுத்தொலியை உரிச்சிட்டுதான்லே மத்த ஜோலி... ஓடுலே; ஒங்கய்யா வந்ததும் புதுசு வாங்கியார சொல்றேன்..."

பையன் அம்மையின் வசவுக்கெல்லாம் மசியவில்லை. ஒப்பாரியையும் நிறுத்தவில்லை. அச்சுதன் இதைப் பார்த்துக் கொண்டே வந்தவன் பையனைப் பார்த்து அன்புடன் கேட்டான் "ஏண்டா குட்டிப் பையா அழறே?"

குட்டிப்பையன் ஒரு நிமிஷம் அச்சுதனைப் பார்த்து அழுகையை நிறுத்திவிட்டு மீண்டும் ஒப்பாரியை தொடர்ந்தான்.

"ஏன் இவன் இப்படி அழறான்?" அச்சுதன் அந்தப் பெண்ணிடம் கேட்டான்.

"மூந்தாநாளுதான் புது பென்சில் வாங்கிக் குடுத்திருக்கு. சவம் நேத்தே அதை காணாக்கியாச்சி.

அவுங்களும் இல்ல... அவுங்க வந்ததும் புதுசு வாங்கித் தரேன்னு சொல்லுறேன். கேக்க மாட்டேங்கான்...''

''இவ்வளவுதானா...குட்டிப் பையா; ஒனக்கு நான் தரேன் புது பென்சில். போவியா ஸ்கூலுக்கு?'' அச்சுதன் இப்படி கேட்டதும் பையனின் அழுகை இருந்த இடம் தெரியவில்லை. அச்சுதன் பையில் கையை விட்டு புதிய பென்சில் ஒன்றை எடுத்து பையனிடம் நீட்டினான். பையன் மூக்கை உறிந்து கொண்டும் அம்மையின் முகத்தைப் பார்த்துக் கொண்டும் பென்சிலை ஆசையோடு வாங்கினான். அன்புடன் அவனுடைய கன்னத்தைத் தட்டிக் கொடுத்துவிட்டு அச்சுதன் நடந்தான்.

பெருமாள் கோவிலை நோக்கிச் சென்றபோது மணவாள மாமுனிகளுக்கு சின்னதாக தனிக்கோவில் இருப்பதைப் பார்த்து வெவ்வேறு நிலைகளில் அதை சில போட்டோக்கள் எடுத்துக்கொண்டான். அந்தக் கோயில் இருந்த நிலைமையைப் பார்த்து அந்தப் பகுதியில் தென்கலைக்காரர்கள் அத்தனை வசதியாக இல்லையென்று தெரிந்தது.

அச்சுதன் சேசவபெருமாள் கோயிலை அடைந்தபோது செந்துறை ஜனங்களின் மூலம் அவனுடைய வருகையைப்பற்றி கேள்விப்பட்டிருந்த பட்டாச்சார்யார்கள் அன்போடு அவனை வரவேற்றார்கள். அச்சுதன் முதலில் பெருமாளை சேவித்துக் கொண்டான். பின் கோயிலின் தனிச்சிறப்புகள்; முக்கிய உற்சவங்கள்; ஸ்தலபுராணம்; போன்றவற்றைப் பற்றியெல்லாம் பட்டாச்சார்யார்களுடன் பேசிக் கொண்டிருந்தான். பிறகு கோயிலை அவனாகவே சுற்றிப் பார்த்தான். ஸ்தலவிருட்சமான வில்வமரத்தை போட்டோ எடுக்க கேமராவை ஃபோகஸ் செய்து கொண்டிருந்தான்.

அப்போது ''என்னையும் ஒரு போட்டோ எடுப்பீங்களா?'' என்ற பரமேஸ்வரியின் மிருதுவான நட்புக்



குரல் கேட்டது. அச்சுதன் திரும்பிப் பார்த்து புன்னகையுடன் ''வாங்கோ. குட்மார்னிங்'' என்றான்.

''உங்க ஆராய்ச்சி ஆரம்பிச்சாச்சி போலிருக்கு...''

''கோயிலுக்கு இந்நேரம் வந்திருக்கீங்க...?''

''தினம் இதான் நான் கோயிலுக்கு வர்ர நேரம்...''

''நெஜமாவா உங்களை போட்டோ எடுக்கணும்னு சொன்னீங்க?''

''ரொம்பச் சின்னப் பிள்ளையா இருந்தபோது ஒரு ஸ்டுடியோவுல எடுத்துக்கிட்டதுதான். இப்ப அதை என் போட்டோனு சொல்லவே முடியாது. அதான் கேட்டேன்—போட்டோ எடுக்குறீங்களான்னு...''

அச்சுதனுக்குள் சின்னதாக ஊற்று ஒன்று திறந்து லேசாகக் கசிந்தது. செந்துறை வந்து சேர்ந்த முதல் நாள் மோட்டார் சைக்கிளில் அழகர்சாமியை அழைத்துக்கொண்டு போன போதே அவனிடம் அழகர்சாமி உலகநாதன் பரமேஸ்வரியை எப்படி நடத்தி வருகிறார் என்பதை சொல்லி வைத்திருந்தார். அதெல்லாம் அச்சுதனின் மனசுக்குள் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது பரமேஸ்வரியின் வெளிப்பாடுகளில் ஒரு அவசரம் இருந்ததை அவனால் உணர முடிந்தது. அதற்காக அவனாலும் அவசரம் காட்டிவிட முடியவில்லை. அதனால் பரமேஸ்வரியை போட்டோ எடுப்பதற்கு தயங்கினான்.

''ஒரே ஒரு போட்டோ எடுங்க போதும்'' என்றாள் பரமேஸ்வரி.

''அவருக்குத் தெரிஞ்சா உங்களுக்குத்தானே கஷ்டம்...'' அச்சுதன் சொன்னான்.

''எல்லா கஷ்டமும் பட்டாச்சி. இதுக்கு மேல இந்த வயசில வேற ஒரு கஷ்டம் பெரிசா வரப் போறதில்லை. அதுக்காக நீங்க என்னை எடுக்கிற போட்டோவை

அவங்ககிட்ட காட்டுவேன்னு சொல்ல வரலை. போட்டோவை அவங்க கண்ல படாம சமையல் ரூமுக் குள்ள ஒளிச்சி வச்சிப்பேன். இப்பகூட நீங்க படிக்க குடுத்த புஸ்தகம் எல்லாத்தையும் அவங்க பார்வையில படாமத்தானே வச்சிருக்கேன். அவங்க கண்ல பட்டா கஷ்டம்தான். அதுவும் கொடுத்தது நீங்கன்னு தெரிஞ்சா கேக்கவே வேண்டாம்..."

"நெஜமாவே அவருக்கு இவ்வளவு கடுமையான காம்ப்ளெக்ஸ்னா நம்ப முடியலை எனக்கு..."

"அன்னைக்கி உங்க வீட்டுக்கு வந்து பாட வேண் டாம்னு சொன்னாங்களே..."

"ஏதோ தமாஷா சொன்னார்."

"தமாஷ் கிடையாது. பாட்டும் சங்கீதமும் எனக்கு ரொம்ப ரொம்ப இஷ்டம். நான் இஷ்டப்படற ஒண்ணு உங்ககிட்ட இருக்கக்கூடாது! அதனால வீட்ல நீங்க பாடிடக் கூடாது. தாராளமா கோயில்ல பாடலாம்!"

அச்சுதன் லேசாக அதிர்ந்தான்.

"நிஜமாவா சொல்றீங்க?"

"உங்களைப் பாட வேண்டாம்னு சொன்னதோட நிஜம் இதான்"

"ஒரு நிஜமே தாங்க முடியாததா இருக்கு..."

"அப்ப ஆயிரம் நிஜத்தைத் தாங்கற என் மனசுக்கு எப்படி இருக்கும். நீங்க இருக்குற ரூம் ஜன்னலை திறந்தா கொசு வரும்னு சொல்லி அதை மூடச் சொன் னாங்களே - அதுவும் நிஜம் கிடையாது. அந்த ஜன்னல் வழியா பாத்தா எங்க சமையல் ரூம்ல இருக்குற ஜன்னல் வழியா என்னை நீங்க பாத்திடலாம்! ஜன் னலை சாத்த சொன்னது அதுக்குத்தான்!"

அச்சுதன் கொஞ்சம் திகில் அடைந்து விட்டான்.

"இதெல்லாம் தெரிஞ்சிருந்தா நான் இந்த ஊருக்கு வந்திருக்கவே மாட்டேன்."



"அதுக்காக தயவு செஞ்சி கிளம்பிப் போயிடா தீங்க. ஒரு வருஷம் இந்த ஊர்ல இருந்திட்டுப் போங்க... அந்த ஒரு வருஷம் இவங்களுக்கு பெரிய தண்டனையா இருக்கும். அந்தத் தண்டனையாவது கிடைக்கணும் இவங்களுக்கு..." - சொல்லும்போதே பரமேஸ்வரிக் குக் கண்கள் பளபளத்தன. அவளின் அந்தக் கண்ணீர் படலம் அவளுடைய மொத்த வாழ்க்கையுமே அச்சுத னுக்கு பிரதிபலித்துக் காட்டியது. என்ன பேசுவதென்று தெரியவில்லை அவனுக்கு. ஆனால் அவனின் மனச் சதுக்கம் பரமேஸ்வரிக்காக கொஞ்சம் கொஞ்சமாக நெகிழத் தொடங்கியிருந்தது.

பரமேஸ்வரி அவசரமாக கண்களை துடைத்துக் கொண்டு சொன்னாள்.

"உங்ககிட்ட எவ்வளவோ சொல்லணும் போல இருக்கு... ஆனா நேரமாகுது. கிளம்பி வந்தாலும் வந் திருவாங்க..."

"வந்து உங்களையும் என்னையும் பாத்தாலே தண்டனைதானே அவருக்கு?"

"இவ்வளவு பெரிய தண்டனையை இப்பவே குடுக்க வேண்டாம்! ஆனா எதுக்காகவும் உங்க ரூம் ஜன்னலை மட்டும் மூடிடாதீங்க! இப்போதைக்கு அந்த தண்டனையை அவங்களுக்கு குடுத்தா போதும் எனக்கு!"

"கண்டிப்பா பூட்ட மாட்டேன். பாடறதையும் நிறுத்த மாட்டேன். போதுமா?"

"ஆண்டாள் சந்நதி பக்கம் போய் என்னை ஒரே ஒரு போட்டோ மட்டும் எடுங்க. எடுத்ததும் நான் கிளம்பிடறேன்..."

அச்சுதன் ஆண்டாள் சந்நதியில் பரமேஸ்வரியை நிற்க வைத்து எடுத்த போட்டோ ஒன்று இல்லை; நான்கு......!

# 22

இயல்பாக பரமேஸ்வரியின் வாழ்க்கை மௌனமானது. அந்த மௌனத்தை உடைத்தெறிந்து விட்டிருந்தார் உலகநாதன். அந்த வெளிப்பாடுதான் அச்சுதனிடம் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே பரமேஸ்வரி உலகநாதனின் மனக் கோணல்களை சுருக்கமாக தெரிவித்து விட்டாள். அவளுக்கே கூட இது ஆச்சர்யமாக இருந்தது. ஒரு வருஷம் செந்துறையில் இருங்கள் என்று சொல்கிற அளவிற்கு அந்நியோன்னியமும் அச்சுதனிடம் வந்திருந்ததில் ஆச்சர்யம் இன்னும் ஜாஸ்தியாயிற்று. பரமேஸ்வரி இதற்கெல்லாம் ஆச்சர்யமே படவேண்டாம். அடிமேல் அடி விழுந்ததில் அம்மி நகரத் தொடங்கியிருக்கிறது! இன்னும் ஆடிக் காற்று வீசும்போது அம்மி பறக்கவே செய்யும்! - இதோ ஆனி உறங்கி ஆடி எழுந்தருளுகிறது...!

தாமதமாகி விட்ட படபடப்பில் பரமேஸ்வரி கோயிலில் இருந்து வேகமாக வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாள். தூரத்தில் இருந்தே பார்க்க முடிந்தது. வீட்டுத் திண்ணையில் மழை வருகிறதா என்று பார்க்கிற தினுசில் உலகநாதன் நின்று கொண்டிருந்தார். அச்சுதனின் மோட்டார் சைக்கிளைச் சுற்றி நின்றபடி நிறைய பையன்கள் இஷ்டத்திற்கு அதைப் போட்டு நோண்டிக் கொண்டிருந்தார்கள். 'நல்லா நோண்டுங்களே' என்ற முகத்தோடு உலகநாதன் பையன்களை சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆனால் பரமேஸ்வரியால் அதைப் பார்த்து சும்மா வர முடியவில்லை. "பைக்கையெல்லாம் தொடக் கூடாது யாரும்... ஓடுங்களே அவங்க அவங்க வீட்டுக்கு..." என்ற கண்டிப்பான குரலில் பையன்களை விரட்டினாள். ஓடும்போது கூட ஒரு பையன் ஹாரனை அழுத்திவிட்டு ஓடினான். "இந்தப் பக்கம் வாங்க - சொல்றேன்..." என்றபடி படியேறிய பரமேஸ்வரியை உலகநாதன் உற்றுப் பார்த்தார். அவரைப் பொருட்படுத்தாமல் உள்ளே போக இருந்தவளை "நில்லு" என்றார். "ஒங்க தாத்தா வீட்டு பைக்கா... பெரிய இவ கணக்கா நோண்டாதீங்களேன்னு சொல்லிட்டு வர்றியே?"



"யாரு வீட்டுப் பைக்கா இருந்தாலென்ன? நோண்டினா ரிப்பேர்தானே ஆகும்..."

"ரிப்பேரானா ஆயிட்டுப் போகட்டும். ஒன் ஜோலிய பாத்திட்டு வா நீ..."

"அப்படி வரமுடியலை என்னால..." பரமேஸ்வரி தீர்க்கமாக சொல்லிவிட்டு வேகமாக உள்ளே நகர்ந்தாள். உலகநாதனின் கருவிழிகளில் தீப்பொறி மின்னியது!

"நில்லுளா" என்றார். திருநெல்வேலி நாட்டு பழைய காலத்து ஆசாமிகள் அவர்களின் பெண்டாட்டிமார்களை "வாளா போளா" யென்றுதான் பேசுவார்கள். உலகநாதன் இதுவரை பரமேஸ்வரியை அப்படி கூப்பிட்டது கிடையாது. அந்த சாதனையையும் இன்று புரிந்து விட்டார்.

"ஆள் நீ கொஞ்சம் சரியில்லை! பத்திரம்! இப்படியெல்லாம் இன்னொரு வாட்டி பதில் வந்தா - நடக்கறது வேற! ஆடி அசைஞ்சி ஒன்றரை மணிநேரம் கழிச்சி வர்ரா! ஒரு பிள்ளை பெத்து குடுக்க துப்பு இல்ல...! பேச்சு மட்டும் வாய் கிழியுது! போய் சட்டுப்புட்டுனு சமைக்கிற வேலையைப் பாருளா...!"

பரமேஸ்வரி விருட்டென்று உள்ளே நகர்ந்து விட்டாள். உலகநாதன் ஒருவித பகை உணர்வுடன்

மீசையை தடவி விட்டுக் கொண்டார். மோட்டார் சைக்கிளையும் வன்மத்துடன் நோக்கினார். 'எங்கே கடன்வாங்கி வாங்கினானோ மெட்ராஸ்காரன்!' திடீரென்று உலகநாதனின் மனசை எதுவோ நெருடியது. சந்தேகத்துடன் கழுத்தை வளைத்து அடுத்த வீட்டுக் கதவை உற்றுப் பார்த்தார். வாசலில் வண்டி நிற்பதால் அச்சுதன் வீட்டிற்குள் இருக்கிறான் என்று நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் வீட்டிற்குள் அரவமே தெரியவில்லை. பாட்டாவது பாடிக் கொண்டிருப்பார் பாகவதர்! அதையும் காணோம்!

உலகநாதன் அப்போதுதான் கவனித்தார். அடுத்த வீட்டு வாசலை ஒட்டி தனியாக ஒரு சின்னப் பையன் நின்று கொண்டிருந்தான்.

''யார்லே நீ - எதுக்காக இங்க நிக்கே?'' உலகநாதன் அருகில் போய் கேட்டார்.

''மெட்ராஸ் மாமாவை பாக்கறதுக்கு வந்திருக்கேன்.''

''நீ எதுக்குலே அவரைப் பாக்கணும்?'' - எரிச்சலோடு கேட்டார்.

''எழுதறதுக்கு எனக்கு ஸ்லேட்டே இல்லை. மாமா கிட்டே கேட்டு ஸ்லேட் வாங்கிட்டுப் போக வந்திருக்கேன் ...''

''மாமா கடையா வச்சிருக்கார்லே ஒனக்கு ஸ்லேட் குடுக்கறதுக்கு...''

''மாமா காலையில சங்கரனுக்கு புதுசா பென்சில் குடுத்திருக்காரே!''

''பொய்யெல்லாம் சொல்லாதளே...''

''சங்கரன்தான் சொன்னான்''

''அப்பம் ஏன் நிக்கே...? கேளு போயி''



''கதவை எத்தினியோ வாட்டி தட்டிப் பாத்திட்டேன். மாமா உள்ள இல்லை போல. அதான் நிக்கேன்...''

உலகநாதன் கதவை உற்றுப் பார்த்தார். வாசலில் பைக் நிற்கிறது. எங்கே போனான் மெட்ராஸ்காரன்... உலகநாதன் தெருவைப் பார்த்தார். தூரத்தில் அச்சுதன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. உலகநாதனின் புருவங்கள் நெரிந்தன. மெட்ராஸ்காரன் கோயிலுக்கா போய் வந்து கொண்டிருக்கிறான்? அப்படியானால் கோயிலில் அவனும் பரமேஸ்வரியும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமே... உலகநாதனுக்குள் குப்பென்று பயம் கவிந்தது.

''அச்சுதா - கோயிலுக்கா போயிட்டு வரே?'' பயந்து கொண்டே கேட்டார்.

''இல்லையே சார். மலைமேல கொஞ்ச தூரம் ஏறிப் பாத்திட்டு வரேன்...'' திட்டமே இல்லாமல் அச்சுதன் பொய் சொல்லி விட்டான். 'அப்பாடா'யென்று இருந்தது உலகநாதனுக்கு.

''ஏன் அச்சுதா; நீ கடை எதுவும் வச்சிருக்கியா?'' என சிறிது கிண்டலாக அச்சுதனைப் பார்த்து கேட்டார். அவன் புரியாமல் பார்த்தான். நேற்றுவரை அவரைப் பார்த்த மாதிரி இயல்பாக பார்க்க முடியவில்லை அவனால்...

''உன்கிட்ட ஸ்லேட் வாங்கிட்டுப் போகணும்னு அப்பப் பிடிச்சி நிக்கான் இவன். ரெண்டு அடி குடுத்து அனுப்பு...''

உடனே அந்தப்பையன் உலகநாதனிடம் சொன்னதையே அச்சுதனிடமும் சொன்னான். அச்சுதனுக்குப் புரிந்து விட்டது. காலையில் அவனிடம் பென்சில் வாங்கிய பையனின் பெயர் சங்கரன் போலிருக்கிறது. அச்சுதனின் மனசு கரைந்து விட்டது. அந்தப்

பையனை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டான்.

"உன் பேரென்னடா பையா?" என்றான்.

"கோபாலகிருஷ்ணன்"

"நாளைக்கி நான் திருநெல்வேலி போவேன். அங்கேயிருந்து உனக்கு புது ஸ்லேட் வாங்கிண்டு வந்து தரேன். சரியா?"

பையன் தலையை ஆட்டினான். அச்சுதன் தொடர்ந்து சொன்னான். "இன்னும் உன்னைப் போல ஸ்கூல் பசங்க யார் யாருக்கு என்னென்ன இல்லையோ - அதெல்லாம் கேட்டுட்டு வந்து சொல்றியா? அதையும் நாளைக்கு அவங்க எல்லாருக்கும் வாங்கித் தந்திடறேன்..."

சரியாக இந்த நேரம் பார்த்து வாசலுக்கு வந்த பரமேஸ்வரி பையன் ஒருத்தனை அச்சுதன் தூக்கிக் கொண்டிருக்கும் காட்சியைப் பார்த்து சிறிது மன அழுத்தம் குறைந்தவளானாள். உலகநாதன் அவளைப் பார்த்து மூஞ்சியை சுருக்கிக் கொண்டு "என்ன?" என்றார். பரமேஸ்வரி வேண்டும் என்றே வாசலுக்கு வந்திருக்கிறாள் என்பது அவருடைய எண்ணம்.

"வாழப்பூ உப்பேரி பண்ணச் சொல்லியிருந்தீங்க... அய்யாவு வாழப்பூ கொண்டாந்து தரலை..."

"அவரைக்கா இருக்கா?"

"இருக்கு"

"உப்பேரி அதுல பண்ணிடு"

அப்போது "அண்ணாச்சிய பாக்கவே முடியலையே..." என்ற குரல் கேட்டு உலகநாதன் திரும்பிப் பார்க்க பரமேஸ்வரி வேகமாக உள்ளே சென்று விட்டாள். உலகநாதனின் சேக்காளிகள் மணிவாசகமும்



சோலைமலையும் திண்ணையிலேயே உட்கார்ந்துவிட உலகநாதனும் அவர்களுடன் அமர்ந்தார். பையனை அனுப்பிவிட்டு அச்சுதனும் கதவைத் திறந்து அவனுடைய வீட்டிற்குள் சென்று விட்டான். மணிவாசகம் சொன்னார் "உங்க அடுத்த வீட்டுக்கு வந்திருக்கும் மெட்ராஸ் தம்பிய பாத்தா ரொம்ப நல்ல மாதிரியா தெரியுதுங்க அண்ணாச்சி..."

உலகநாதனுக்கு இப்போதுதான் மும்முரமாக காது குடைய வேண்டியிருந்தது!

"ஊரு பூரா இந்த தம்பிய பத்தித்தான் அண்ணாச்சி பேச்சு..." - சோலைமலை.

"வேற என்ன பேச்சு இருக்கு?" - உலகநாதன் பேச்சை மாற்றினார்.

"நம்ம எம். எல். ஏ. அநியாயமா போய் சேந்திட்டதால நம்ம தொகுதிக்கு திருப்பியும் தேர்தல் வச்சாகணும். எப்ப வைக்கப் போறாங்களோ..."

"தேர்தல் தேதி சொல்லிட்டானா?"

"அதுக்குள்ளேயா சொல்லுவான்... அது ஆகும் நாலைஞ்சி மாசம். ஆனா இப்பப் பிடிச்சே வீட் எனக்கு ஒனக்குன்னு ஒரே குடுமிப்பிடி...!"

உலகநாதனுக்குள் ஒரு விதை விழுந்தது. இந்த உப தேர்தலில் நின்றால் என்ன என்ற புது நினைப்பு அவருக்குள் ஓடியது. அந்த நினைப்பிலேயே சேககாளிகளுடன் உலகநாதன் பேச்சு நடத்திக் கொண்டிருந்தார். அவர்களுடைய பேச்சு தொடர்வதை நிச்சயம் செய்து கொண்ட பரமேஸ்வரி சாத்தி வைத்திருந்த ஜன்னலின் கதவுகளை படாரென்று திறந்து விட்டாள். படபடப்புடன் நின்று கொண்டே இருந்தாள். அவள் எதிர்பார்த்தபடி அடுத்த வீட்டு ஜன்னலில் அச்சுதனின் முகம் தெரிந்தது. சற்றுமுன் உலகநாத

னின் நாக்கு சவுக்காக சுழன்று சொற்களால் தாக்கி யிருந்த படுகாயம் அவளுடைய கண்களில் கிடந்தது.

'ஒரு பிள்ளையை பெத்துக் குடுக்கத் தெரியலை' என்ற தேவையே இல்லாத சீண்டலில் பரமேஸ்வரியின் மார்பு பொங்கிப் போயிருந்தது. ஜன்னல் கம்பிகளை ஆக்ரோஷமாக திருகிக்கொண்டே "உலகநாதன் என்கிற அந்தமான் ஜெயில்ல கைதியா நான் நிக்கறது தெரியுதா உங்களுக்கு?" என்று குமுறலுடன் கேட்டாள் பரமேஸ்வரி.

'அந்தமான் கைதி' என்ற சொல் தொடர் அச்சுதனை பலமாக தாக்கிவிட்டது. பதறிப் போனான் பதறி. "சொல்லாமலே தெரியுது பரமேஸ்வரி..." என்றான்.

பரமேஸ்வரி தொடர்ந்தாள் "என்னோட பயமெல்லாம் நான் இங்கே ஆயுள் கைதியா இருந்திடக் கூடாது என்கிறது தான்."

அச்சுதன் அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் உதட்டை இறுகக் கடித்தவாறு மௌனமாக நின்றான். பரமேஸ்வரி அவனைப் பார்த்து இரண்டு கைகளாலும் திவ்யமாக வணங்கிவிட்டுச் சொன்னாள்.

"இந்த ஜெயில்ல இருந்து எனக்கு விடுதலை கிடைக்க நீங்கதான் ஏதாவது உதவி செஞ்சாகணும்"

பரமேஸ்வரி வணங்கி நின்றதை அச்சுதனால் தாங்க முடியவில்லை. "எப்படி எந்த வழியில நான் உங்களுக்கு உதவி செய்ய முடியும்னு தெரியலை பரமேஸ்வரி."

"அது தெரியலை எனக்கு. இந்த பாழடைஞ்ச கெணத்ல இருந்து எதையாவது பிடிச்சி மேல ஏறிடணும் எனக்கு. முங்கிப் போயிடக்கூடாது இந்தக் கெணத்ல... அந்தப் பதட்டம்தான் எப்பப் பாத்தாலும். உயிர் வாழ்ந்தா போதும்னு இல்லை. விடுதலை



கிடைச்சா போதும்னு இருக்கு... இவ்வளவுதான் சொல்ல முடியுது எனக்கு..."

"பதட்டப்படாதீங்க பரமேஸ்வரி. கொஞ்சம் பொறுமையா இருங்க... எப்படி உங்களுக்கு உதவலாம்னு யோசிக்கறேன் நான்..."

"அவசரமா யோசிக்கணும்"

"அவசரமா யோசிக்கறேன்"

"இப்பவே உங்களுக்கு கோடி நன்றி சொல்லிடறேன்" பரமேஸ்வரியின் கண்களில் கண்ணீர் பளபளத்தது. தொடர்ந்து அவளுக்கு பதில் சொல்ல முடியாமல் அச்சுதன் வீட்டு வாசலில் ஏதோ சப்தம் கேட்டது. "மறுபடியும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது பேசுவோம். வாசல்ல ஏதோ சப்தம் கேக்குது. நான் வரேன்" என்று சொல்லிவிட்டு அச்சுதன் வேகமாக வாசலுக்குப் போனான். வாசலில் பத்துப் பதினைந்து சிறுவர்களும் சிறுமிகளும் நின்று கொண்டிருந்தார்கள். எல்லோருமே ஏழைக் குழந்தைகளாகத் தெரிந்தார்கள். அச்சுதனுக்குப் புரிந்துவிட்டது. கொஞ்ச நேரத்திற்கு முன்பு அவனிடம் ஸ்லேட் வாங்கவந்திருந்த பையன் கோபாலகிருஷ்ணன் தான் எல்லோருக்கும் முன்னால் நின்றான்.

"கோபாலகிருஷ்ணா - என்னடா கண்ணா இதெல்லாம்?" அச்சுதன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"பாண்டித்துரைக்கும் ஸ்லேட் இல்லை. பெரியசாமிக்கும் ஸ்லேட் இல்லை. சுப்ரமணியனுக்கு புஸ்தகம் இல்லை. வெண்ணிலாக்கு பென்சில் இல்லை..." கோபாலகிருஷ்ணன் சொல்லச் சொல்ல அச்சுதன் கனிந்து போனான். திண்ணையில் சேக்காளிகளுடன் உட்கார்ந்திருந்த உலகநாதன் ஓரக்கண்ணால் மட்டும் தான் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார். பார்க்கப் பார்க்க பொறாமைதான் ஜாஸ்தியாகிக் கொண்டிருந்தது' உலகநாதனின் மனநிலையை உண

ராத மணிவாசகம் அச்சுதனைக் கூப்பிட்டு உற்சாகமாக சொன்னார்.

"மெட்ராஸ் தம்பி! போற போக்கைப் பாத்தா வரப் போற இந்தத் தொகுதி தேர்தல்ல நீங்க போட்டி போட்டுங்கன்னா - செந்துறை ஓட்டு ஒண்ணு விடாம ஒங்களுக்குத்தான் விழும்..."

உலகநாதனுடைய வேலைவெட்டி இல்லாத மூளையில் அந்தக் காட்சி ஓடியது.

அச்சுதன் வேட்பு மனு செய்கிறான். வாக்காளர்களை சந்திக்கிறான். பேரணியே நடத்துகிறான்! வெற்றி பெற்று மாலையும் கழுத்துமாக வருகிறான்! சிவமதியும் பரமேஸ்வரியும் போட்டி போட்டுக் கொண்டு அச்சுதனைப் பார்க்க ஓடுகிறார்கள்!

உலகநாதனின் மூளை இதற்குமேல் பார்க்கப் பிடிக்காமல் கண்ணை இறுக்க மூடிக்கொண்டு விட்டது. இதெல்லாம் நடக்கப் போவது கிடையாது. ஆனால் நடக்கப்போகிற மாதிரி ஒரு பிரமை அவரின் மனசில் ஏற்பட்டு விட்டது. அச்சுதனின் புகழ் வளர்ச்சியை முறியடிக்க முடியுமோ முடியாதோ—அதற்குமேல் தான் புகழ் பெற்றாக வேண்டும் என்ற திமிர் அவருக்குள் தலை தூக்கியது! அதற்கான உடனடியான ஒரே வழி—வரப்போகும் உப தேர்தலில் உலகநாதன் போட்டியிட்டு ஜெயிப்பதுதான்...!

பள்ளிக்கூட குழந்தைகளின் மத்தியில் நின்ற இளம் அச்சுதனை உலகநாதன் இந்தத் தீவிரமான சிந்தனையோடு பார்த்தார். இளமையில்கூட அவர் அச்சுதன் அளவிற்கு இத்தனை அழகாக இருந்ததில்லை! அதெல்லாம்கூட இப்போது ஒரு விசனமாக இருந்தது! இந்த நேரம் பார்த்து யாருடைய வீட்டிற்கோ போகிற சாக்கில் சிவமதி அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தாள். அவளுக்கு மட்டும் கண்ணால் விழுங்கக்கூடிய

...ARA P... 9 JAN 2001



சக்தி இருந்தால் அச்சுதனை விழுங்கி விட்டுத்தான் அடுத்த ஜோலியை பார்ப்பாள்! சிவமதியின் பார்வையை உணராமல் அச்சுதன் குழந்தைகளோடு ஐக்கியமாகி நின்றான். ஆனால் உலகநாதன் பார்த்துவிட்டார். என்ன தைரியம் இருந்தால், அவர்மேல் எத்தனை அலட்சியம் இருந்தால் அவரின் கண் எதிரிலேயே அறுதலி சிறுக்கி அச்சுதனுக்கு இப்படி 'கள்ள வோட்டு' போட வருவாள்?!

உலகநாதன் எழுந்தே நின்றுவிட்டார்! இந்த அறுதலி சிறுக்கிக்கும் சேர்த்து பதிலடி கொடுக்க உப தேர்தலில் போட்டி போட்டே ஆக வேண்டும் அவர்...! இனி அவருக்கு வேற வழி கிடையாது...!

# 23

"மெட்ராஸ் தம்பி, போற போக்கைப் பாத்தா வரப்போற இந்தத் தொகுதி தேர்தல்ல நீங்க போட்டி போட்டிங்கன்னா—செந்துறை ஓட்டு ஒண்ணு விடாம ஒங்களுக்குத்தான் விழும்..." என்று மணிவாசகம் அச்சுதனிடம் சொன்ன சொல் உலகநாதனின் மனநிலையில் நிறைய தாக்கங்களை ஏற்படுத்திவிட்டது. கண்கொத்திப் பாம்பாக பரமேஸ்வரியை காபந்து பண்ணிப் பண்ணி வாழ்ந்து கொண்டிருந்த சுருங்கிப் போன வாழ்க்கையில் இருந்து அவருக்கே விடுதலை வேண்டும்போல இருந்தது! அக்கடாயென்று எங்கேயும் போக முடியவில்லை. போனாலும் நாய் மாதிரி ஓடி வர வேண்டியிருக்கிறது. என்ன ஆகிவிடுமோ ஏது ஆகிவிடுமோ என்ற பயம் இருபத்தி நான்கு மணி நேரமும் அவருடைய மண்டைக்குள் குடைந்து கொண்

டிருந்தது.—உலகநாதனால் இந்த மண்டைக் குடைச்சலைத்தான் தாங்க முடியவில்லை. அதையும் பொருட்படுத்தாமல் எங்கேயாவது போகலாமாயென்று பார்த்தால் அச்சுதன் செந்துறையில் இருக்கும்வரை அதுவும் முடியாது போலிருந்தது. புயல் உருவாகி இருக்கும் நேரம் மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கப் போவது கிடையாதே! இப்போது அச்சுதன் என்ற புயல் ரொம்ப பக்கத்தில் இருக்கிறது! முதலில் அது கரையை கடக்க வேண்டும்! பிறகு உடனே கிளம்பி விடுவார் உலகநாதன்—புதிய காற்றோட்டமான வாழ்க்கையை நோக்கி. புது வாழ்க்கைத் தொடரின் முதல் அத்தியாயம்தான்—உபதேர்தலில் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆவது...

இன்று தேசம் இருக்கிற நிலைமையில் எம்.எல்.ஏ. என்ற பதவியே போதும். என்ன அட்டகாசம் வேண்டுமானாலும் செய்யலாம். அத்தனை அதிகார துஷ்பிரயோகத்திற்கான சாத்தியம் இருக்கிறது. உலகநாதனுக்கு இப்போதைய உடனடி தேவை பதவியும் அதிகாரமும்தான்... பண்ணையார் என்ற அந்தஸ்தெல்லாம் போதவில்லை அவருக்கு! அந்த அந்தஸ்தை வைத்துக்கொண்டு பரமேஸ்வரியை கல்யாணம் செய்து கொண்டதற்கு மேல் அவளால் உலகநாதனுக்கு எந்த சந்தோஷமும் கிடைக்கவில்லை! இத்தனைக்கும் எல்லா விதத்திலும் பரமேஸ்வரியை அவருடைய கெடுபிடியான தீர்மானங்களின்படிதான் ஆட்டி வைத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அவருடைய எல்லா அபிப்பிராயமும் பரமேஸ்வரியின் வெளி நடத்தைகளைத்தான் கட்டுக்குள் வைத்திருக்கிறதே தவிர உள்மனசில் பரமேஸ்வரி நேர் எதிராகத்தான் இருக்கிறாள் என்ற சந்தேகமும் உலகநாதனுக்கு இருக்கவே செய்தது. இந்தச் சந்தேகம் ஒருவித தோல்வி மனப்பான்மையையும் தாழ்வு மனப்பான்மையையும் அவருள் ஏற்படுத்தி



விட்டிருந்தது. அதனால்தான் புத்தம் புதிய வேறொரு அந்தஸ்தால் பரமேஸ்வரி என்ற செத்த சவத்தை உலகநாதனுக்கு உடனடியாக ஜெயித்துக் காட்ட வேண்டியிருந்தது! அதற்கான அருமையான சந்தர்ப்பம்தான் வரப்போகிற உபதேர்தல்! இந்தத் தடவை அதை நழுவவிடத் தயாரில்லை அவர். செத்துப்போன எம்.எல்.ஏ. சங்கரலிங்கத்தின் சமாதியில் மலர் வளையம் வைத்துவிட்டு நேராக வேட்பு மனுத்தாக்கல் செய்யப் போகலாம் என்று நினைக்கிற அளவிற்கு உலகநாதன் கைதேர்ந்த அரசியல்வாதியாகவே ஆகிவிட்டிருந்தார்...!

இதில் ரொம்பவும் சந்தோஷமான விஷயம் — உபதேர்தலில் யாரை வேட்பாளராக தேர்வு செய்து சிபாரிசு பண்ணுவது என்ற பொறுப்பைக் கொண்டிருக்கும் மந்திரி அடைக்கலராஜ் அன்று பாளையங்கோட்டையில் பள்ளிக்கூடம் ஒன்றின் பொன்விழாவிற்காக திருநெல்வேலி வந்து தங்கியிருந்தார். மணிவாசகம் இதை சொன்னாரோ இல்லையோ உலகநாதனின் மேட்டு விழிகள் அப்படியும் இப்படியுமாக கடிகார பெண்டுலம் போல் ஆடின! தேர்தல் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லைதான். அதனால் அவசரமே இல்லைதான். ஆனால் உலகநாதனுக்கு அவசரமோ அவசரமாயிற்றே! இந்த நிமிஷமே அடைக்கலராஜை பார்த்துப் பேசி தன்னுடைய பெயரை 'ரிசர்வ்' செய்து வைத்துவிட்டு வந்துவிடலாம் என்று தோன்றிவிட்டது அவருக்கு. சாப்பாட்டுக் கடையை காமாசோமாவென்று முடித்துவிட்டு மணிவாசகத்தையும் இழுத்துக்கொண்டு திருநெல்வேலிக்குக் கிளம்பிவிட்டார். "ஜோலியா போறேன். அஞ்சி மணிக்கெல்லாம் வந்திருவேன்..." என்று எம்.எல்.ஏ. ஆகிவிட்டாற் போன்ற செருக்கோடு பரமேஸ்வரியை பார்க்காமலேயே சொல்லிவிட்டு தெருவில் வேகமாக இறங்கி விட்டார்.

நிச்சயமாக உலகநாதனால் ஐந்து மணிக்குத் திரும்பி வர முடியாது. அவருக்கே தெரியும் அது. இருந்தாலும் இப்படிச் சொல்லி வைத்துவிட்டுக் கிளம்புவது அவருடைய ஸ்டைல்! அப்போதுதான் ஐந்து மணிக்கு மனிதர் வந்து சேர்ந்து விடுவார் என்ற பயத்தில் இருப்பாள் பரமேஸ்வரி...!

உலகநாதன் வேகமாக குடையும் கையுமாகக் கிளம்பிப் போனதை தற்செயலாக அச்சுதன் பார்த்து விட்டான். சில நிமிடங்கள் அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்தவன் தன்னுடைய வீட்டிற்குள் போய் கதவுகளை சாத்திக் கொண்டான். அறையின் ஜன்னல் ஓரம் நின்று ''ஹலோ'' என்று குரல் கொடுத்தான். குரல் கேட்டு முதலில் பரமேஸ்வரி திடுக்கிட்டாள். குரல் நிஜமா பிரமையாயென்று தெரியவில்லை. சில விநாடிகளுக்குப் பிறகு குரல் மறுபடியும் கேட்டது. அடுத்தகணம் பரமேஸ்வரி சமையலறை ஜன்னலில் நின்றாள். சிறிதும் எதிர்பார்க்காமல் பார்த்துக்கொள்ள கிடைத்த சந்தர்ப்பம் என்பதால் இருவருமே சில நிமிடங்கள் மௌனமாக ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பின் அச்சுதன் கேட்டான் ''என்ன பண்ணிண்டு இருந்தீங்க?''

''என்ன பண்ணலாம்னு யோசனை பண்ணிட்டிருந்தேன்.''

''பரமேஸ்வரியின் இந்த எளிய பதில்கூட அவளை அச்சுதனுக்கு மிகவும் அருகாமைப் படுத்தியது.

''எங்கே போறார் அவர்?''

''அதையெல்லாம் சொல்லிட்டார்னா கௌரவம் குறைஞ்சி போயிடும் அவங்களுக்கு! அதனால சொல்ல மாட்டாங்க...''

''ஒரு முக்கியமான கேள்வியை உங்ககிட்ட கேக்கணும்ங்க பரமேஸ்வரி''



''எதுவாயிருந்தாலும் கேளுங்க...''

''எந்தச் சூழ்நிலையால், அல்லது எந்தக் காரணத் தால் மிஸ்டர். உலகநாதனை நீங்கள் கல்யாணம் செய்து கொண்டீர்கள்?''—அச்சுதன் இதைத் தமிழில் கேட்காமல் ஆங்கிலத்தில் கேட்டான்.

''இப்படி இங்கிலிஷ்ல கேட்டீங்கன்னா புரியாது எனக்கு. தயவு செஞ்சி தமிழ்லேயே கேளுங்க.''

''இங்கிலிஷ் தெரியாதுதானே?''

''ஏ;பி;ஸி;டி. தெரியும். சின்னச் சின்ன வார்த்தை கள் சில தெரியும்'' அறிவுக் களிம்பு துளியும் இல்லாத பதில் பரமேஸ்வரி என்ற கிராமத்துப் பெண்ணை அச் சுதனுக்கு இன்னும் நெருக்கப்படுத்தியது. ஆங்கிலத்தில் கேட்டதை அப்படியே தமிழில் கேட்டான். அந்தக் கணமே பரமேஸ்வரியின் முகம் தீவிரமாகிவிட்டது. அம்பாசமுத்திரத்தில் வறுமையில் முடங்கிக் கிடந்த நாட்களில் இருந்து உலகநாதனின் முதுமைக்குள் ஒடுங்கிக் கிடக்கும் இந்த நிமிஷம் வரைக்கும் பரமேஸ் வரி கொட்டித் தீர்த்துவிட்டாள். அச்சுதன் அழகான இளைஞன் என்ற காரணத்திற்காக உலகநாதன் அவன் மேல் எப்பேற்பட்ட காழ்ப்புணர்ச்சியும் வெறுப்புணர் வும் கொண்டிருக்கிறார் என்பதையெல்லாம் விவரித்துச் சொன்னாள். மோட்டார் சைக்கிளை பையன்கள் நோண்டிக் கொண்டிருந்ததை பரமேஸ்வரி இயல்பாக கண்டித்ததற்காக உலகநாதனிடம் அவள் அடைந்த கடைசிக் காயத்தின் வலியையும் அவமானத்தையும் பொருமலோடு சொன்னாள். அனைத்தையும் அவள் சொல்லிமுடித்த போது சூழலே துக்கமயமாக மாறிப் போயிருந்தது. அச்சுதன் பரமேஸ்வரியை பார்த்தபடி நின்றான். எல்லாமே முடிச்சு அவிழ்ந்து தெரிந்தது.

''புரிஞ்சுதா? இப்ப உங்களுக்கு என் நிலைமை?'' பரமேஸ்வரி கண்ணீரை விரலால் சுண்டிவிட்ட வாறே கேட்டாள்.

"இதை நீங்க வேற யார்கிட்டேயும் சொன்னதில்லையா?"

"சொல்ற அளவுக்கு இந்த ஊர்ல யார்கிட்டேயும் அந்த அளவுக்கு எந்த அந்நியோன்னியமும் இல்லையே..." ஆனா—விவரமா சொல்லாமலேயே இந்த ஊர்க்காரங்களுக்கு என் நிலைமை தெரியும்..."

"உங்க அம்மா கிட்டேயும் அண்ணன் கிட்டேயும் சொல்லி எதுவும் பண்ண முடியாதா?"

"பிரயோஜனப்படாது. இவங்க வாங்கிக் குடுத்த வீட்ல இருக்காங்க அவங்க எல்லாரும். இவங்க பணம் போட்டு ஆரம்பிச்சிக் குடுத்த பலசரக்குக் கடையால தான் வசதியா வாழ்ந்துக்கிட்டு இருக்காங்க. அதனால அவங்க யாரும் எதுவும் இவங்களை கேட்க முடியாது. அதான் அலைமோதுகிறேன் நான். கிடந்து தவிக்கிறேன்."

"சரிங்க பரமேஸ்வரி; இப்போ சொல்லுங்க. நான் உங்களுக்கு எந்த வழியில எப்படிப்பட்ட உதவி செய்யனும்?" அச்சுதன் கேட்டான்.

"நீங்க மெட்ராஸ் போகும்போது ஒருத்தருக்கும் தெரியாம எப்படியாவது என்னையும் கூட்டிட்டுப் போயிடுங்க...ஏதாச்சும் அனாதைங்க இல்லத்திலோ, அபலைப் பெண்களுக்கான விடுதியிலோ சேர்த்து விட்டுடுங்க என்னை. இங்கே இருந்து போனா போதும் எனக்கு. எங்கேயாவது அனாதையா வாழ்ந்திடலாம் போல இருக்கு. ஆனா இப்படி அடிமையா கிடக்க முடியாது... இந்த உதவியை செஞ்சிடுங்க. உயிர் உள்ள வரைக்கும் மறக்க மாட்டேன்..."

கலங்கப் பார்த்த கண்களை அச்சுதன் சிரமப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டான்.

—அப்போது மழைத் தூறல் விழத் தொடங்கிற்று.



"கனவு கிடையாதே இதெல்லாம்?" கேட்காமல் இருக்க முடியவில்லை பரமேஸ்வரியால்.

"இந்த மழைத்தூறல் சாட்சியா-கனவு கிடையாது. அப்பட்டமான நிஜம்.

"இதே மழைத்தூறல் சாட்சியா உங்களுக்கு நன்றி..."

பரமேஸ்வரியின் கை ஜன்னலுக்கு வெளியில் அச்சுதனை நோக்கி நீண்டது—நட்புடன். அச்சுதனின் கரமும் அவனுடைய ஜன்னலுக்கு வெளியில் பரமேஸ்வரியை நோக்கி நீண்டது—அதைவிட நட்புடன். ஒருவர் கையை ஒருவர் பற்றிக்கொள்ள முடியாத அந்த இடைவெளியில் நீண்டவாறே இருந்த அவர்களின் கைகளின் மேல் மழைத்தூறல் ஜில்லென்று தெறித்துக் கொண்டிருந்தது...

—காலம் இப்படி பரமேஸ்வரிக்காக சற்று கனியத் தொடங்கியிருந்தபோது உலகநாதனுக்குக் காலம் கொஞ்சம் கடுமையாக புகைய ஆரம்பித்திருந்தது. அவர்பாட்டுக்கு மணிவாசகத்தையும் இழுத்துக் கொண்டு என்னமோ எம்.எல்.ஏ. பதவி அவருக்காக தங்க தாம்பாளத்தில் வைக்கப்பட்டு காத்துக் கொண்டிருப்பதாக நினைத்து கிளம்பிப் போய்விட்டார்.

அடைக்கலராஜ் திருநெல்வேலியில் ஒரு மில் முதலாளியின் விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தான். மந்திரியை பார்க்க வந்திருந்த பிரமுகர்களின் கார்களே இருபது முப்பது நின்றன. நூற்றுக்கணக்கில் கட்சித் தொண்டர்கள் வேறு... இரண்டு மணி நேரம் காத்திருந்த பின்தான் உலகநாதனால் மந்திரியை பார்க்கவே முடிந்தது. மணிவாசகம்தாம் விஷயத்தைச் சொன்னார். உடனேயே அடைக்கலராஜ் கையை விரித்துவிட்டான்! உலகநாதன் அவருடைய சுய கௌரவத்தையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு கெஞ்சியே பார்த்தார்! அடைக்கலராஜ் மசியவே இல்லை. தீவிரமாக கட்சிப்

பணியில் இருப்பவர்களுக்குத்தான் ஸீட் கொடுக்கப் போவதாக அடித்துச் சொல்லிவிட்டு எழுந்து குளிப்பதற்காக பாத்ரும் போய் விட்டான்!

நேற்றுவரை ஊளைமோர் குடித்துக் கொண்டிருந்த இந்தப் பயலைப்போய் பார்க்க வந்த தனது புத்தியை செருப்பால் அடிக்க வேண்டும் என்ற ஆங்காரத்துடன் உலகநாதன் அந்த அறையைவிட்டு வெளியேறினார். அப்போது இரண்டு லாரி நிறைய வந்து இறங்கிய தொண்டர்கள் வேறு "அமைச்சர் அடைக்கலராஜ் வாழ்க..." என்று ஆக்ரோஷத்துடன் கூச்சல்போட ஆரம்பித்தார்கள். இது உலகநாதனின் ஆங்காரத்தை ஜாஸ்தியாக்கியது. ஏமாற்றத்தைத் தாங்க முடியவில்லை அவரால். ரொம்ப நம்பிக்கையுடன் கிளம்பி வந்திருந்தார்! பரமேஸ்வரியின் கண் முன்னால் அவரால் எம்.எல்.ஏ. ஆகிக் காட்ட முடியாது என்பதை பொறுக்கவே முடியவில்லை அவரால். நிஜமாகவே ஒன்று கேட்டு அது கிடையாது என்பது இதுவரை உலகநாதனின் அகராதியிலேயே கிடையாது! ஒன்றும் இல்லை—ஐம்பத்தைந்து வயதில் இருபத்தைந்து வயசு ரதியை கல்யாணம் செய்து காட்டியிருக்கிறார்! நாளைக்குக் கவிழப் போகிற மந்திரி சபையில் இருந்து கொண்டு அடைக்கலராஜ் பயல் இந்த அலட்டல் அலட்டுகிறான்! ரொம்ப நாள் முன்பு உலகநாதன் அடைக்கலராஜின் பெண்டாட்டியைப் பார்த்திருக்கிறார். அசல் குரங்கு குசலா மாதிரி இருப்பாள்...!

உலகநாதனை சமாதானப்படுத்துவதற்குள் மணி வாசகத்திற்கு 'போதுமடா சாமி...'யென்று இருந்தது! போதாதற்கு மழை வேறு நொச நொசவென்று பெய்து கொண்டிருந்தது. தலையில் துண்டைப் போட்டபடி பஸ் ஸ்டாண்டை நோக்கி உலகநாதன் நாலுகால் பர்ய்ச்சலில் ஓடிய வேகத்தில் அவரின் வலது கால் செருப்பின் வார் அறுந்து போய்விட்டது! நேரம் சரியில்



லாமல் போய்விட்டால் இப்படித்தான் இருக்கும் போலிருக்கிறது! உலகநாதனின் நாலுகால் பாய்ச்சல் ஒரு கால் பாய்ச்சலாகி விட்டது! மணி இப்பவே ஏழரை. அடுத்த பஸ் எட்டு மணிக்குத்தான். ஏமாற்றத்தின் உச்சாணி கொம்பில் நின்றார் உலகநாதன்.

கடைசிவரை ஒரு சின்ன பண்ணையாராக மட்டும் வாழ்ந்துதான் மண்டையைப் போடப் போகிறோமோ என்ற எண்ணம் வந்த மாத்திரத்தில் அவரின் மனம் பயத்தில் கலங்கியது. பரமேஸ்வரியை ஜெயிக்க முடியாதோ என்ற பயம் வேறு மனசைப் போட்டு அழுத்தோ அழுத்தென்று அழுத்தியது! கொட்டுகிற மழையில் தலைவிதியை நொந்தபடி நின்று கொண்டிருந்தார் உலகநாதன். எட்டு மணி பஸ் பிரேக்-டவுன் என்றார்கள். உலகநாதன் நிலை கொள்ளாது தவித்தார். அவரின் மனக்குரங்கு அச்சுதன் மேல் ஒரு தாவு தாவியது! இந்த நேரம் பார்த்து இவன் ஒருத்தன்! அவருடைய மனசு எப்பவோ செந்துறை போய் சேர்ந்துவிட்டிருந்தது! பேசாமல் வீட்டுத் திண்ணையில் இருந்திருக்கலாம்! கிளம்பி வந்தது உலக மகா தப்பு!

அச்சுதனின் அழகிலும் இளமையிலும் பரமேஸ்வரி மனசை பறிகொடுத்து விடக்கூடாதேயென்று உலகநாதன் நிஜமாகவே பயந்தார். நிஜமாகவே கவலைப்பட்டார். இருக்கிற அழகில் அச்சுதன் பாட்டு வேறு அழகாகப் பாடுகிறான்! இப்போதுகூட எதையாவது பாடிக் கொண்டிருக்கிறானோ என்னவோ? ஆஹா! உலகநாதனின் மனசுக்கு ஒரு கை சர்க்கரைதான் போட வேண்டும்! நிஜமாக அந்த நிமிஷம் செந்துறையில் அச்சுதன் பாடிக் கொண்டுதான் இருந்தான். அவனைப் பாடச் சொன்னது வேறு யாரும் இல்லை. அவனுடைய உடன் பிறவாத தோழி பரமேஸ்வரிதான்......!

# 24

இரண்டு வீட்டு ஜன்னல்களின் திறந்த இடைவெளியில் பூப்போல மழை பெய்து கொண்டிருக்க அச்சுதன் பரமேஸ்வரிக்காக முதலில் பாடியது இது—

வாரணமாயிரம் சூழ வலம் செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்ட கனாக் கண்டேன் தோழி
நான்......

இதைப் பாடிய பின் அச்சுதன் 'நாளை வதுவை மணமென்று நாளிட்டு...' என்று அடுத்த பாடலை ஆரம்பித்தபோது பரமேஸ்வரி குறுக்கிட்டாள் ''ஒரு நிமிஷம்; இப்பப் பாடினீங்களே - வாரணமாயிரம்னு; அதை திருப்பியும் பாடிக் காட்டுங்களேன்'' என்றாள். அச்சுதன் மறுபடியும் பாடிக் காட்டினான்,

''நீங்க பாடினதை இப்ப நான் அப்படியே பாடிக் காட்டவா?'' பரமேஸ்வரி கேட்டாள்.

''ஏற்கனவே உங்களுக்கும் தெரியுமா பரமேஸ்வரி இதெல்லாம்?''

''தெரியாது. ஆனா ரெண்டு மூணு தடவை மனசைத் தொடற மாதிரியான பாட்டு எதைக் கேட்டாலும் உடனே அப்படியே அதைப் பாடிக் காட்டிட முடியும்''

''பாடுங்க பாக்கலாம்''

பரமேஸ்வரி அப்படியே பாடிக் காட்டினாள். பரமேஸ்வரியிடம் இதை அவன் எதிர்பார்க்கவே இல்லை. மனசால் இன்னும் அவள் ரொம்ப நெருக்கமாகி விட்டாள்.



''உங்ககிட்ட இருக்கிற இந்தத் திறமை; அப்ஸர்வேஸன் யாருக்காவது தெரியுமா?''

''எங்க ஊர்ல மேரி டீச்சர்னு ஒருத்தங்க இருக்காங்க. அவங்களுக்கு மட்டுந்தான் தெரியும்''

''மிஸ்டர் உலகநாதனுக்கு?''

''என்ன கேள்வி இது? என் தனித்தன்மை எதையும் தெரிஞ்சிக்கவே பிடிக்காது அவங்களுக்கு...''

''கரெக்ட்; அங்கீகரிக்க பிடிக்காதவங்களுக்கு முதல்ல தெரிஞ்சிக்கவே பிடிக்காது''

''தாங்க முடியாதது இதான் எனக்கு... மனசால பாடத் துடிக்கிற குயிலா இருந்துக்கிட்டு பாட முடியாத குயிலா இருக்கேன்...''

''தெரிஞ்சுதான் உங்களை குயில்னு சொன்னீங்களோ என்னவோ - குயில் கொஞ்சம் தனிமையான சோகமான பறவை... யாருடைய கண்ணிலும் அதிகமா பட்டுடாது...''

''அனாதைகள் இல்லத்துக்குக் குயில் போயிட நினைக்கிறது சரியான முடிவுதானே?''

—பரமேஸ்வரி கேட்டாள்.

''இல்லை பரமேஸ்வரி; குயில் இருக்க வேண்டிய இடம் அனாதைகள் இல்லம் கிடையாது'' அச்சுதன் உறுதியான குரலில் சொன்னான்.

''ஜெயிலுக்கு அனாதைகள் இல்லம் ஒசத்திதானே அச்சுதா!'' சிரித்துக் கொண்டே பரமேஸ்வரி சொன்னாள். இது அச்சுதனுக்கு நெஞ்சில் பூ விழுந்தாற்போல இருந்தது.

''இதை இன்னொரு தடவை சொல்லுங்க'' என்றான்.

"ஜெயிலுக்கு அனாதை இல்லம் ஒசத்திதானே அச்சுதா!"

"இல்லை பரமேஸ்வரி. , குயில் இருக்கவேண்டிய இடம் நந்தவனம்."

"ஊமைக் குயிலுக்கும் அப்படியெல்லாம் கூட அதிர்ஷ்டம் வருமா?"

"இதற்கான பதிலை காலம் சொல்லும்."

"குயில் அதற்காக காலம் பூராவும் கூட காத் திருக்கும்."

"இன்னொரு பாசுரம் சொல்றேன். கேட்டுட்டு திருப்பிப் பாடுறீங்களா?"

"இப்ப நீங்க பாடினீங்களே - வாரணமாயிரம். இதெல்லாம் எதைச் சேர்ந்தது?"

"ஆண்டாள் பாசுரம்..."

பரமேஸ்வரிக்குள் பொரித்துக் கிடக்கும் குயில் குஞ்சுக்கு இறக்கைகள் சிலிர்த்தன. அவளுடைய உணர்வுகளில் ஆண்டாள் என்ற பெயர் மின்னோட்டம் போல் பாய்ந்தது. அந்தப் பாய்ச்சலில் மனம் பொல பொலவென்று உதிர, உணர்வுகள் ஆறாகப் பெருகி விட்டன. ஜன்னல் கம்பிகளை பரமேஸ்வரி ஆக்ரோ ஷத்துடன் முறுக்கினாள். கம்பிகளில் தலையைப் புரட்டிப் புரட்டி அவள் அழுத அழுகை அச்சுதனுக்கு இம்சையாக இருந்தது. என்ன சொல்லியும் அவளு டைய கண்ணீர் நிற்கவில்லை. பரமேஸ்வரியின் அழுகை நிற்காத மழையாக குமுறிக் கொண்டிருந்தது.

பார்த்தான் அச்சுதன். அவனுடைய கான மழை யைக் கொட்ட ஆரம்பித்து விட்டான். "நடமாடித் தோகை விரிக்கின்ற மாமயில்காள்..." என்ற ஆண் டாளின் பாசுரத்தை அவன் பாட பரமேஸ்வரியின் அழுகை உடனே நின்று போயிற்று. அச்சுதன் பாடிய



பாசுரத்தை திருப்பி அப்படியே அவள் பாட; "பாடும் குயில்காள்! ஈதென்ன பாடல்..." என்ற இன்னொரு பாசுரத்தை அச்சுதன் பாடிக் காட்டினான். குயிலும் திருப்பி அதைப் பாடியது. அடுத்தது "நல்ல என் தோழி! நாகணைமிசை நம்பார்..." அதற்கு அடுத்தது "கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ..." - அத்த னையையும் குயில் பிள்ளை கிளிப்பிள்ளையாக திருப் பிப் பாட - ஒரு வழியாக பாசுர மழை ஓய்ந்தது - கொட் டித் தள்ளிய பிறகு! இந்த ஒரே மழையில் சிறைக் கூடத்தின் எல்லா சுவர்களும் விழுந்து விட்டாற் போல இருந்தது பரமேஸ்வரிக்கு! அச்சுதன் ஒருவிதமான களைப்புடன் கேட்டான்: "ஆண்டாள்னு சொன்னதும் ஏன் அப்படி உணர்ச்சி வசப்பட்டுட்டீங்க...?"

"படிக்கிறதுக்கோ தெரிஞ்சிக்கவோ சந்தர்ப்பம் எதுவும் கெடைச்சது கிடையாது. ஆனா - ஆண் டாள்னு சொன்னாலே மனசை என்னவோ பண்ணும். கேள்விப்பட்ட ரொம்ப குறைச்சலான விஷயங்களை வச்சே - ஆண்டாள் என்னோட முற்பிறவின்னு கூட நெனைப்பு வரும் எனக்கு. இன்னும் சின்ன வயசிலேயே என்னையும் பெரியாழ்வார் மாதிரி யாராவது கண்டு பிடிச்சிருந்தா நானும் ஆண்டாள் மாதிரியெல்லாம் வந் தாலும் வந்திருப்பேன்."

"இப்பவும் காலம் கடந்து போயிடலை. பரமேஸ் வரியை அச்சுதன் கண்டு பிடிச்சாச்சு. ஹி வில் பிரிங்- அப்... டோண்ட் வர்ரி..."

"ஆண்டாள் பாசுரங்கள் நெறய இருக்கோ?"

"எக்ஸாக்ட் நம்பர் மறந்து போயிடுத்து. அநேகமா டு ஹண்ட்ரட் இருக்கலாம். ஆனா திருப்பாவையின் முப்பது பாசுரங்களை புரிஞ்சுண்டாச்சுன்னா போறும். சாராம்சம் அதுதான்..."

"திருப்பாவை இருந்தா தர்ரீங்களா?"

"இல்லையேம்மா. நாளைக்கு திருநெல்வேலி போறேன். அங்கே கெடைச்சா வாங்கின்டு வரேன்..."

"எனக்கும் உங்ககூட வரணும் போல இருக்கு. திருநெல்வேலியில நீங்க யாரையும் பாக்கணுமா?"

"நோ நோ. நாளைக்கு காலையில ஆறு மணிக்கே கிளம்பி ஆழ்வார் திருநகரிக்குப் போறேன். பிறகு அங்கிருந்து ஸ்ரீ வைகுண்டம் போறேன். திரும்பற வழியில பதினாறு குட்டிப் பசங்களுக்கு ஸ்லேட், புக், நோட் புக், பென்சில் எல்லாம் வாங்க வேண்டியிருக்கு. அதையெல்லாம் திருநெல்வேலியில வாங்கியாகணும். நாளைக்கு ஈவினிங் அவை எல்லாத்தையும் குடுத்தாகணும்..."

"இன்னும் பயங்கர ஃபேமஸ் ஆகப் போறீங்க எங்க ஊர்ல"

"பரமேஸ்வரி - நீங்களும் நானும் வெளியில எங்கேயாவது சந்தித்துப் பேச முடியுமா? ஆண்டாள் பாசுரமெல்லாம் பாடத் தகுந்த இடமா இருக்கணும். ஆனா கோயில் வேண்டாம்..."

"பெருமாள் கோயிலுக்குப் போற ரோட்ல நேராவே போனா - மலையில கொண்டு போய்விடும். கொஞ்ச தூரம் மலையில போனீங்கன்னா பீடம் மட்டும் இருக்குற சின்ன கருப்பசாமி கோயில் ஒண்ணு இருக்கும். அதுக்குப் பின்னால நெறய நவாப்பழ மரமா இருக்கும். அப்படியொரு ரம்மியமா இருக்கும் அந்த இடம். யாரும் வரமாட்டாங்க அந்தப் பக்கம். அங்கே உக்காந்து பேசலாம். துணைக்கு குயில் சப்தம் மட்டும் இருக்கும்..."

"எந்த குயில் சப்தம்?"

"இந்த குயில் சப்தமும்தான்!"



"நாளைக்கு மறுநாள் போலாமா?"

"காலையில பத்து மணிக்கு கோயிலுக்குப் போறதா சொல்லிட்டு நேரா வந்திடறேன்"

"நான் ஒன்பது மணிக்கே போயிடறேன்..."

அப்போது பரமேஸ்வரி வீட்டுக் கதவு மிகப் பெரிய சப்தத்துடன் தட்டப்பட்டது. எம். எல். ஏ. வந்து விட்டார்...!

நுட்பமாக மன விஞ்ஞானம் தெரிந்தவர்களுக்கு புலப்பட்டு விடும் - உலகநாதன் கொஞ்சம் கொஞ்சமாக அதீதமான மன இயக்கத்துக்கு ஆளாகி அதன் மூலம் கடும் மனச் சிதைவை நோக்கி விழுந்து கொண்டிருப்பது. எதையும் யாரையும் வேகமான மனநிலையிலேயே பார்த்தார். மந்திரி அடைக்கலராஜை சந்தித்து விட்டு வந்திருந்த சம்பவம் அவரின் மன வேகத்தை மேலும் ஒரு உயரத்திற்கு ஏற்றி விட்டிருந்தது. வாழ்வில் பின்னடைவு அடைந்து விட்ட உணர்வு உலகநாதனைப் போட்டு பாடாக படுத்தியது. உச்சந்தலையை வலிக்கிற அளவிற்கு மண்டையை குடைந்தெடுத்தது. அந்தக் குடைச்சலைத் தாங்க முடியாமல் சோர்ந்த மனத்துடன் அந்தி சாய்கின்ற நேரத்தில் வீட்டுத் திண்ணையில் ஒருக்களித்துப் படுத்திருந்தார். காலையில் கிளம்பிப் போன அச்சுதனின் மோட்டார் சைக்கிள் அப்போதுதான் செம்மண் தூசியை அப்பிக் கொண்டு வந்து நின்றது.

மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கிய அச்சுதன் உலகநாதனை திரும்பிக்கூட பார்க்காமல் சிவமதியின் வீட்டை நோக்கி நடந்தான். வீட்டுத் திண்ணையில் தயாராக நின்று கொண்டிருந்தாள் சிவமதி. பெண்கள் மயமாக இருக்கின்ற வாழ்க்கையில் தெரிகின்ற ஒரே ஆண் அச்சுதன்தானே. அவனிடம் தன் பெண்மை அத்தனையையும் அள்ளிக் கொடுக்க காத்துக் கிடப்

பவள் அல்லவா சிவமதி... அவளுடைய மன சிலிர்ப்பு
அத்தனையையும் மார்பில் ஏற்றி ஒரு பார்வை பார்த்
தால் அதன் அர்த்தம் தெரியாமலா போய்விடும்
அச்சுதனுக்கு... சிவமதியிடம் இப்படி ஒரு பார்வையை
எதிர்பார்க்காததால் திகைத்துப் போனான் அச்சுதன்...
அவனுடைய மனம் பின் வாங்கியது. ஆனாலும் அவ
னுக்கு இப்போது சிவமதியின் தந்தை அழகர்சாமியை
பார்க்க வேண்டும். அதனால் கொஞ்சம் தயங்கிய
படியே கேட்டான்'' உங்க அப்பா இல்லையா?''

''இருக்காங்களே...'' இதைச் சொல்வதற்குள்
சிவமதியிடம் அத்தனை நெளிசல்! அத்தனை வளை
சல்! அதைப் பார்த்து அச்சுதனும் நெளிய வேண்டி
யிருந்தது!

''கொஞ்சம் கூப்பிட்டா தேவலை''

''மொதல்ல உக்காருங்க. கூப்பிடறேன்''

அச்சுதன் உட்காரவில்லை. இதற்குள் கிடைத்த
சில வினாடிகளில் சிவமதி அவளுடைய மார்பின்
வனப்பை அச்சுதனுக்கு உணர்த்தி விட்டாள். அச்சுதன்
முகத்தைத் திருப்பி நின்று கொண்டான். சிவமதி
சரியாக இல்லையென்று தோன்றியது. அதனால்
மெல்ல தன்னுடைய வீட்டை நோக்கித் திரும்பி நடந்து
விட்டான். உலகநாதன் ஒருக்களித்து படுத்திருந்த
திருக்கோலத்தில் இருந்தபடியே இதையெல்லாம் ஒரு
ஓரக்கண் விட்டுப் பார்த்துக்கொண்டுதான் இருந்தார்.
ஏதோ ஒரு நேரத்தில் சிவமதியை அவர் மனசில் இருந்து
தூக்கிப்போட்டு மிதித்து விட்டவர்தான். ஆனாலும்
அவள் வேறு ஆம்பளை யாரையாவது பார்த்தால்
தாங்க முடியாமல் போய் விடுகிறது அவருக்கு! பொறா
மையில் ரத்தம் சூடாகி விடுகிறது. கோபத்தில் மண்டை
கொதித்துப் போகிறது! அச்சுதன் அவனுடைய வீட்
டிற்கு நகர்ந்து சென்றுவிட்டது சிவமதிக்கு ஒரு மாதிரி



யாக இருந்தது. ஆனால் ஏமாற்றமாக இல்லை
அவளுக்கு. இப்போதுதானே 'முகூர்த்தக்கால்' நட்டிருக்
கிறாள்! முகூர்த்தத்திற்கு நாள் கிடக்கிறது இன்னும்!

அழகர்சாமி அச்சுதனை நோக்கி விரைந்தார். உலக
நாதனைப் பொறுத்தவரை இந்த அழகர்சாமி பயலுக்கு
என்ன இப்படி விவஸ்தை கெட்டுப்போய் விட்டது...!
நாய்க்குட்டி மாதிரி அச்சுதனின் பின்னால் ஓடிக்
கொண்டிருக்கிறானே... நேற்று வந்த இந்த மெட்ராஸ்
காரனுக்கும் அவனுக்கும் இடையில் பேசுவதற்கு
அப்படியென்னதான் சங்கதியோ...?!

அந்தச் சங்கதி என்னவென்று அடுத்த நிமிடங்
களில் தெரிந்துவிட்டது. பதினாறு ஏழைப் பிள்ளை
களுக்கு அச்சுதன் இலவசமாகக் கொடுப்பதற்காக
ஸ்லேட், பென்சில், புஸ்தகம், நோட்டுப் புஸ்தகம்
என்று அவனுடைய பணத்தில் வாங்கி வந்திருக்கிறான்.
சம்பந்தப்பட்ட ஏழைப் பிள்ளைகளை வரச் சொல்லி
அவற்றையெல்லாம் விநியோகம் பண்ணப் போகி
றான். அழகர்சாமி ஓடிப்போய் எல்லோரையும் வரச்
சொல்லி தகவல் கொடுத்துவிட்டு வர சம்பந்தப்பட்ட
வர்களும் சம்பந்தப்படாதவர்களும் என பெரிய
கூட்டமே அச்சுதனின் வீட்டு வாசலில் திரண்டு
விட்டது. உலகநாதனால் எழுந்து ஓடவும் முடிய
வில்லை. காலை ஆட்டிக் கொண்டு படுத்துக் கிடக்க
வும் முடியவில்லை.

ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசப் புஸ்தகங்களை
அச்சுதன் அன்புடன் வழங்கிய இந்த நிகழ்ச்சி ஒரு
விழா போலவே நடந்துவிட்டது. ஆளுக்கு ஆள்
அச்சுதனை வாய் வலிக்காமல் புகழ்ந்து தள்ளி
விட்டார்கள் தள்ளி! சிலர் விஷயம் தெரியாமல் மெனக்
கெட்டு உலகநாதனிடம் வேறு அச்சுதனைப் புகழ்ந்து
வைத்தார்கள். காரணம் - அவன் அவர் வீட்டுக்கு வந்

திருக்கும் விருந்தாளி...! புகழ்ச்சிகள் எல்லாவற்றையும் உலகநாதன் ஒரு மரக்கட்டை மாதிரி கேட்டுக் கொண்டிருந்தார். ஊர் ஜனங்களின் மத்தியில் பெரும் புகழ் பெற்றுவிட்ட உண்மையோடு அன்று நடந்த குறிப்பான இரண்டு விஷயங்களும் சேர்ந்து அவருடைய மன இயக்கத்தை ரேஸ் குதிரையின் வேகத்திற்கு முடுக்கி விட்டிருந்தன.

முதல் விஷயம் - அச்சுதனின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு மணிவாசகம் (நேற்று உலகநாதனுடன் மந்திரி அடைக்கலராஜை பார்க்கப் போன அதே மணிவாசகம்!) "நெசமாவே நீங்க வரப்போற தேர்தல்ல சுயேச்சையா நின்னாக்கூட ஜெயிச்சிடலாம் தம்பி..." என்று மைக் வைத்த மாதிரி சப்தமாக சொன்னது!

இரண்டாவது விஷயம் - கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கூடிக் கிடந்த மொத்த கூட்டமும் கலையப் போகிற நேரத்தில்; வீட்டுக் கொல்லையில் பூத்துக் கிடந்த பலவித பூக்களையும் சின்ன மாலையாக கோர்த்து எடுத்து வந்த சிவமதி அந்த மாலையை இலவசப் புஸ்தகம் வாங்கிய ஒரு பொம்பளைப் பிள்ளையின் கையில் கொடுத்து "மாமாவுக்கு போடுளா..." என்று சொல்லி அச்சுதனின் கழுத்தில் போட வைத்தது...

நிஜமாக சொன்னால் உலகநாதனின் மனவேகத்தின் பக்கத்தில் குதிரையின் வேகமெல்லாம் நிற்கக்கூட முடியாது! படுத்திருக்க முடியாமல் எழுந்து உட்கார்ந்து விட்டார் உலகநாதன்! சிவமதி அவரை பழிவாங்கி விட்டதாக சொந்தளித்துப் போனார். அவருடைய கண் எதிர்லேயே சிவமதி மெட்ராஸ்காரனுக்கு வ்லை வீசுகிறாள். உலகநாதனின் அப்போதைய விருப்பம் - அச்சுதன் அந்த வலையில் விழவேண்டும்! அதை காரணம் காட்டி அவனை ஊரைவிட்டு அடித்துத் துரத்திவிட



வேண்டும்! அவனுடைய மோட்டார் சைக்கிளையும் அடித்து நொறுக்கிவிட வேண்டும்! அதை வைத்துக் கொண்டு தானே அந்தப் பயலும் இத்தனை ஆட்டம் போடுகிறான்...!

- இந்த வேகமான மன இயக்கத்தில் உலகநாதன் விழுந்து புரண்டு கொண்டிருந்தபோது அவரின் காதுக்குள் அவரே ஏதோ பேசினாற் போன்ற குரல் கேட்டது. உலகநாதன் கொஞ்சம் பயந்து போனார். நிஜமா பிரமையா என்று தெரியவில்லை. மறுபடியும் காதிற்குள் குரல் கேட்கிறதா என்று காத்திருந்து பார்த்தார். குரல் எதுவும் கேட்காததில் மீண்டும் அவரின் மனம் துரிதகதியில் இயங்கத் தொடங்கிற்று. - அந்த இயக்கம் அச்சுதனை அடித்துத் துரத்தியதோடு சமாதானம் அடையவில்லை. மந்திரி அடைக்கலராஜின் மூஞ்சியில் ஆட்களை நியமித்து அக்னி திராவகத்தை வீசியது! பரமேஸ்வரி என்ற பாதகத்தியை என்ன செய்யலாம் என்று யோசித்தது. எந்த நேரத்தில் அவளுடைய கழுத்தில் தாலி கட்டினாரோ அந்த நிமிஷத்தில் இருந்து நிம்மதியெல்லாம் போய் விட்டதற்கு பரமேஸ்வரியின் கழுத்தை நெரித்துப் பழி தீர்க்கவும் உலகநாதனின் மனோவேகம் துடித்தது.

இந்த மனோவேகத்தின் ஊடே திண்ணையில் பிடித்து வைத்த பிள்ளையார் போல உலகநாதனுக்கு கிடைத்த ஞானோதயம் இது - ஒரு ஆம்பளை ரொம்ப அழகான பொம்பளையை கல்யாணம் செய்து கொண்டால் அதைப் போல முட்டாள்தனம் எதுவுமே கிடையாது...! ஆனால் உலகநாதனுக்கு நிஜமாகவே ஞானோதயம் ஏற்பட்டிருந்தால் 'ஒரு ஆம்பளை' என்பதை 'ஒரு வயசான ஆம்பளை'யென்று யோசித்திருப்பார்! பாவம்- அந்த ஞானோதயம் வருவதற்கு இன்னும் எத்தனை நாள் அவர் இந்தத் திண்ணையில் உட்கார்ந்திருக்க வேண்டுமோ...?!

# 25

பொழுது விடிந்து விட்டது தெரிந்த போதுதான் தான் ராத்திரி பூராவும் உறங்கவில்லை என்பது உலக நாதனுக்குத் தெரிந்தது. எப்பேற்பட்ட மன சங்கடத் திலும் இப்படி விடிய விடிய அவர் உறங்காமல் இருந் தது கிடையாது. மண்டைக்குள் உறக்கம் வருவதற் கான எந்த அறிகுறியும் இல்லாத ஒருவிதமான மரத்துப் போன வறட்சி கனமாக இருந்தது மற்றும் ஒரு நாள் பரமேஸ்வரி, அச்சுதன், அடைக்கலராஜ் போன்ற பிடிக் காத நபர்களின் ஞாபகங்களோடு தொடங்கி விட்டது! காப்பியை விழுங்கி விட்டு பேப்பர் பார்த்துக்கொண் டிருந்த போதுதான் போனில் அந்தச் செய்தி வந்து தொலைந்தது.

ராஜபாளையத்திற்குப் பக்கத்தில் இருக்கும் சத்திரப்பட்டி என்ற ஊரில் உலகநாதனின் சின்னம்மை யின் மகள் சங்கரியை கட்டிக் கொடுத்திருந்தது. அந்த சங்கரியின் கணவர் தளவாய் ராத்திரி படுத்தவர் காலை யில் கண் முழிக்க மறந்து போய்விட்டார்! கேள்விப் பட்டதும் உலகநாதனுக்கு ஒரே 'அச்சலாத்தி'யாகி விட்டது! உடனே அவர் சத்திரப்பட்டி போயாக வேண் டும். தளவாய் - வீட்டு மாப்பிள்ளை. அதுவும் ரொம் பவே வசதியாக இருக்கும் ஆசாமி வேறு. அதனால் போனோம் வந்தோம் என்றெல்லாம் இருந்து விட முடியாது. 'பாடி'யை இன்று ராததிரிக்குள் எடுத்து விட்டாலும்கூட பொழுது விடிந்து 'பாலு'க்கும் பிறகு தான் கிளம்பி வர முடியும். உலகநாதனுக்கு உதை இங்கேதான்!

பரமேஸ்வரியை கல்யாணம் செய்து கொண்ட பிறகு உலகநாதன் ஒரு ராத்திரிகூட வெளியே தங்கின



தில்லை. எங்கே போனாலும் ராத்திரிக்கு செந்துறை வந்து சேர்ந்து விடுவார். ஆனால் இன்று ராத்திரி அவர் சத்திரப்பட்டியில்தான் தங்கியாக வேண்டும். பரமேஸ் வரி இங்கே தனியாக இருப்பாள். இந்த சனியன் பிடித்த நேரம் பார்த்து அடுத்த வீட்டில் அழகான வயசுப் பையன்!

தன்னுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு சதி திட்டம் போட்டு நடப்பது போல இருந்தது உலகநாதனுக்கு! அப்படி இல்லாமலா இந்த நேரம் பார்த்து தளவாய் மண்டையைப் போட்டு வைப்பான்...?! உலகநாதன் எரிச்சலோடு தலையில் மூன்று நான்கு தடவை இரண்டு கைகளாலும் அறைந்து கொண்டார்; ஒரு விதத்தில் பார்த்தால் சாவுக்கு பரமேஸ்வரியையும் கூட்டிக் கொண்டு போவதுதான் நியாயம். இந்நேரம் காந்திமதி இருந்தால் சத்திரப்பட்டிக்கு அவள்தான் முதல் ஆளாக கிளம்புவாள். இப்போதைய சங்கடம் - வழக்கம் போல சின்னம்மையின் மாப்பிள்ளை வீட்டுக் காரர்கள் யாருமே பரமேஸ்வரியை இன்றுவரை பார்த் தது கிடையாது. இப்போது அவளை அழைத்துப் போனால் சாவு வீடு சாவு வீடாக இருக்காது! சின்னம்மையின் மகள் சங்கரியே ஒப்பாரி வைப்பதை நிறுத்திவிட்டு பரமேஸ்வரியை எப்படி இருக்கிறாள் என்று கண்களை உருட்டி உருட்டிப் பார்ப்பாள்... பரமேஸ்வரி உறங்கும்போது பெரிய கல்லை அவள் தலையில் போட்டு கொன்றே தீர்த்துவிட்டால் பிரச்னையே இல்லையென்ற வேகம் உலகநாதனின் உணர்வுகளில் மிக வேகமாக பரவியது. உள்ளுக்குள் இந்த உணர்வு வேகத்தில் உழன்று கிடந்தாலும் வெளிப் பார்வைக்கு நேர் எதிரான திக்பிரமையில் ஒரு மணி நேரத்திற்கும் மேல் உட்கார்ந்திருந்து விட்டு உலக நாதன் எழுந்து நின்றார். சத்திரப்பட்டிக்கு தான் மட்டும் பெருமாள் தலையில் பாரத்தைப் போட்டு

விட்டு போய் வருவதென்று தீர்மானித்தார். ஆனால் கிளம்புவதற்குள் பரமேஸ்வரியை ஏழு கோலம் பண்ணி விட்டார். "அந்த சட்டைய எடுளா... இந்த வேட்டியை எடுளா..." என்று ஒரு ஆட்டம். மோர் குடு கொஞ்சம். குடிக்கத் தண்ணி தா... என்று ஒரு குரங்காட்டம்.

—இப்படி எல்லா ஆட்டமும் காட்டிவிட்டு காலில் செருப்பை மாட்டிக் கொண்டபோது உலகநாதனின் உச்சந்தலை கொஞ்சம் ஜாஸ்தியாகவே கொதித்தது. உடம்பும் மனசும் ஆதாரப் பிடிப்பு இல்லாத ஊசலாட்டத்தில் இருப்பதாகத் தோன்றியது. சிறிது நேரம் வாசலில் நின்றுகொண்டு தெருவில் போவோர் வருவோரிடம் எல்லாம் தான் சத்திரப்பட்டி போகிற விஷயத்தை தணிந்த குரலில் சொல்லி வைத்தார். தெருவில் காலை வைக்கும் முன் அச்சுதனின் மோட்டார் சைக்கிளை வன்மத்தோடு ஒரு பார்வை பார்த்தார். அவரின் பார்வையில் அனல் சுட்டெரித்தது. ஏதாவது ஏடாகூடமாக நடந்தால் மோட்டார் சைக்கிளை தீ வைத்துக் கொளுத்திவிட்டுத்தான் அடுத்த ஜோலி என்ற மன ஆங்காரத்தோடு உலகநாதன் குடையைப் பிடித்தபடி வேகமாக நடந்தார்.

முந்தின நாள் போய் பார்த்துவிட்டு வந்திருந்த ஆழ்வார் திருநகரி ஆதிநாதன் கோயில் பற்றியும் ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ வைகுண்டநாதன் கோயில் பற்றியும் விரிவான குறிப்புகளை எழுதிமுடிந்த அச்சுதன் சற்று சோம்பல் முறித்தான். அவனுடைய மனதில் ஒரு கவலை ஏற்பட்டிருந்தது. குழந்தையின் கையில் மாலையை கொடுத்து அவனுடைய கழுத்தில் போட வைத்த சிவமதியின் அணுகலில் மறைந்திருந்த காமம் அவனை பயப்பட வைத்தது. பல நிமிஷங்களுக்கு அவன் கண்களை மூடியபடி அமர்ந்திருந்தான். அப்போது ஜன்னலுக்கு வெளியே "நடமாடித் தோகை விரிக்கின்ற மாமயில்காள்..." என்ற பரமேஸ்வரியின்



குரல் மிக மென்மையாகக் கேட்டது. சிவமதியால் கவலை கவிந்த மனம் சட்டென மாறுதலுற்று அச்சுதன் எழுந்து ஜன்னலுக்குப் போனான். எதிர் ஜன்னலில் பரமேஸ்வரியின் முகம்.

பரமேஸ்வரி சொன்னாள் "அஞ்சி நிமிஷம் நின்னு பாத்தேன். உங்க உருவமே தெரியலை. பாசுரம் சொன்னது அதனாலதான்."

"ஸார் இல்லையா?"

"ஒரு சாவு. அதுக்காக ராஜபாளையம் வரை போயிருக்காங்க. நாளைக்குத்தான் வருவாங்க..."

"அப்போ இன்னைக்கு ஈவினிங்கே நீங்க சொன்ன அந்த அழகான இடத்துக்குப் போகலாமா?"

"இப்பவே போகணும்னாகூட நான் ரெடி..."

"இன்னும் நான் குளிக்கவே இல்லை பரமேஸ்வரி; ஆத்துல போய் குளிச்சிட்டு வரலாம்னு கௌம்பிண்டே இருக்கேன்..."

"அப்ப இன்னும் காலைப் பலகாரமே சாப்பிடலையா நீங்க?"

"அதெல்லாம் ஆயிடுத்து. ரொட்டி ஜாம்..."

"நான் ஆப்பம் தரேன் - சாப்பிட்டுப் பாருங்களேன். இன்னைக்கி பாத்து ஆப்பம் ரொம்ப ஜோரா வந்திருக்கு. ஊருக்குப் போகணும்ங்கற எரிச்சல்ல அவங்க சாப்பிடாமலேயே போயிட்டாங்க..."

"நிஜத்தைச் சொல்றேனே - இதுவரைக்கும் நான் ஆப்பம் சாப்பிட்டதே இல்லை — அது சரி; ஆப்பத்தை எனக்கு எப்படி தருவீங்க பரமேஸ்வரி?"

"வாங்களேன் எங்க வீட்டுக்கு. ஜெயில் வார்டன் தான் இல்லையே...!'

"யாராவது பாத்தா ஏதாவது நெனைக்க மாட்டாங்களா?"

"யாரும் எதுவும் நெனைக்க மாட்டாங்க. எல்லாருமே உலகநாதனாயென்ன?"

"வம்பே வேண்டாம் பரமேஸ்வரி. இந்த நிமிஷம் நமக்குள்ளே இருக்குற ஃப்ரண்ட்ஷிப் ரொம்ப இனிமையா இருக்கு. அதுக்கு எந்தத் தடங்கலும் வந்திடக் கூடாது..."

"நான் பரிமாறி நீங்க சாப்பிடறதை பாக்கணும் எனக்கு..."

"சாப்பிடாமலா போயிடப் போறேன்..."

"இப்பவே சாப்பிட்டா தேவலையே"

"ஐடியா ஒண்ணு சொல்றேன். நீள இடுக்கி இருக்கா உங்ககிட்டே?"

"இருக்கு..."

"ஒரு தட்டுல ஆப்பங்களை வச்சு தட்டை இடுக்கியால பிடிச்சுண்டு இப்படியா நீட்டுங்க. நானும் என்னோட இடுக்கியால கேர்ஃபுல்லா தட்டை பிடிச்சு அப்படியே வாங்கிக்கறேன்..."

"கரெக்ட்டா எட்டுமா?"

"அச்சுதனுக்கு கை ரொம்ப ரொம்ப நீளம்..."

"அப்ப இருங்க... உங்க ஐடியா மாதிரியே தந்திடறேன்."

பரமேஸ்வரி இடுக்கியால் ஆப்பத்தட்டை ரொம்ப ஜாக்கிரதையாக பிடித்துக் கொண்டு அச்சுதனை நோக்கி நீட்டினாள். அச்சுதனும் கவனத்துடன் ஒரு கிடுக்கியால் ஆப்பத்தட்டை ஆர்வத்துடன் பெற்றுக் கொண்டான். இருவருக்குமே இந்த அனுபவம் பரவசமாக இருந்தது.



"இப்போதான் ரொட்டி சாப்பிட்டிருக்கேன். ஆப்பத்தை ஆத்துல போய் குளிச்சிட்டு வந்து சாப்பிட்டுக்கறேன்."

"எப்ப சாப்பிட்டாலும் இந்த ஜன்னல்கிட்ட நின்னு நான் பார்க்கும்படிதான் சாப்பிடணும். சரியா?"

"எப்படி இதுக்கெல்லாம் நன்றி சொல்லப் போறேனோ?"

"குயிலை எப்படியாவது நந்தவனத்தில் கொண்டு போய் விட்டுட்டா - இந்த ஜென்மத்துக்கு அது போதும்..."

அப்போது வீட்டு வாசலில் "அக்கா" என்று ஒரு பெண் கூப்பிடும் குரல் கேட்டது.

"யாரோ என்னைக் கூப்பிடுறாங்க அச்சுதா. நீங்க போய் ஆத்துல குளிச்சிட்டு வாங்க. பிறகு பேசுவோம்..."

பரமேஸ்வரியின் முகம் ஜன்னலில் இருந்து மறைந்து விட்டது. அச்சுதன் பெரிய பூக்கள் போட்ட பெர்முடா கால்சட்டையும் டி ஷர்ட்டும் அணிந்து கொண்டான். அழகான அயல்நாட்டு டர்க்கி டவலை தோளில் போட்டவாறு ஆற்றுக்கு அவன் போவதை வீட்டு வாசலில் நின்று தன்னைத் தேடி வந்த கோமதி என்ற அடுத்த தெரு பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்த பரமேஸ்வரி பார்த்தாள். அவளின் இளம் உணர்வுகள் சற்று படபடத்தன.

"அண்ணாச்சி ரொம்ப தூரம் போறாஹளா அக்கா. பையும் கையுமா போறாஹளே?" - அந்தக் கோமதி கேட்டாள்.

''அவங்க சித்தி மருமகன் ராஜபாளையத்துக்குப் பக்கத்ல செத்திட்டாங்க. அதனால நாளைக்கு பாலுக்குப் பிறகுதான் வருவாங்க...''

''அப்ப குளிக்க போலாமாக்கா... ஆத்துல தண்ணி அநியாயத்துக்குப் போவுதாம்... பரமேஸ்வரியின் மனக்குயில் சிறகுகளை சிலிர்த்துக் கொண்டது. அவள் நினைத்தே பார்த்திராத சந்தர்ப்பம் இது! உடனே சரியென்று சொல்லி விட்டாள்.

''இன்னும் யார் யாரெல்லாம் வர்ராங்கன்னு கேட்டு கூட்டிட்டு வா கோமதி. பத்தே நிமிஷத்ல நான் தயாராயிடறேன்...''

அடுத்த பதினைந்தாவது நிமிடம் எட்டு பொம்பளைப் பிள்ளைகளின் கூட்டம் கூச்சலும் கும்மாளமுமாக ஆற்றுப் படித்துறையை நோக்கி ஓடியது. பொம்பளைப் பிள்ளைகள் ஆற்றை நோக்கி ஓடிக் கொண்டிருக்க பரமேஸ்வரி மனதில் ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கும் அச்சுதனை நோக்கி விரைந்து கொண்டிருந்தாள். அவளுடைய உணர்வுகளில் இளமைப் பெருக்கு கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. தூரத்தில் இருந்தே பரமேஸ்வரியின் கண்கள் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த சில ஆண்களின் மத்தியில் அச்சுதனை அவசரமாக பார்த்தன. ஒரு நிமிடம் நீருக்குள் நீந்தி தலையை உயர்த்திய அச்சுதனின் செழுமையான தோள்களின் ஈரம் சூரிய ஒளியில் அவனின் முழு இளமையையும் மெருகூட்டிக் காட்டியது. ஆற்றை நோக்கி வந்து கொண்டிருந்த பெண்களில் பரமேஸ்வரியைப் பார்த்துவிட்ட அச்சுதனின் மனதில் சிறிதாக நாணம் தோன்றியது. அதேபோல் பரமேஸ்வரியும் அச்சுதனின் ரோமம் படிந்த ஈரமார்பை அவளுடைய வாழ்க்கையின் முதல் மையலுடன் வெட்கத்துடன் கவனித்தாள்.



''அய்! மெட்ராஸ் அண்ணாச்சி! குளிக்கிறாஹ...'' என்று ஒருத்தி கூவினாள்.

''வாங்க - நாம கொஞ்சம் தள்ளிப் போயிடலாம்'' பரமேஸ்வரி சொன்னாள்.

''இல்லை இல்லை - நீங்கள்ளாம் இப்படியே குளிக்கலாம். நான் குளிச்சாச்சு. இதோ எழுந்திடப் போறேன்'' - அச்சுதன் இப்படிச் சொன்னானே தவிர உடனே அவன் தண்ணீரை விட்டு எழுந்து விடவில்லை. பரமேஸ்வரி ஆற்றில் குளிக்கிற சுதந்திரத்தையும் சந்தோஷத்தையும் பார்க்க வேண்டும் போல இருந்தது அவனுக்கு...

பெண்கள் கூட்டம் முப்பதடி தூரம் தள்ளிப் போய் தான் ஆற்றில் இறங்கியது. பரமேஸ்வரி மட்டும் உடனே நீரில் இறங்கி விடவில்லை. சிவந்த படியில் உட்கார்ந்து கால்களை ஆற்று நீரில் விட்டபடி ஜடையை பிரித்துவிட்டுக் கொண்டிருந்தாள்.

''மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்...''

திருப்பாவையின் இந்த முதல் பாசுரத்தை அச்சுதன் பரமேஸ்வரியைத் தவிர வேறு எந்தப் பெண்ணுக்கும் தெரியாத மறைமுகப் பொருளுடன் பாடிக் கொண்டே கரையேறினான். அந்தக்கணம் தான் நந்தவனம் வந்து சேர்ந்துவிட்ட குயிலாகவே தோன்றியது பரமேஸ்வரிக்கு. அந்தக் குதூகலத்தோடே ஆற்றில் இறங்கினாள். கரையேறிவிட்ட அச்சுதன் தான் குளிப்பதை கவனித்துக் கொண்டிருப்பான் என்ற சின்ன வெட்கத்துடனேயே பரமேஸ்வரி தண்ணீருக்குள் மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்தாள். அப்போது எப்படி நடந்ததென்பதே தெரியாமல் படித்துறை ஓரத்தை விட்டு கொஞ்ச ஆழத்திற்குப் போய்விட்ட கோமதியை

ஆற்றின் வேகம் விருட்டென தன்னுள் இழுத்துக் கொண்டது. நிமிஷத்தில் எல்லாம் அபாயமாகிவிட பெண்கள் பெரிய குரலில் அலறினார்கள். அச்சுதன் யோசிக்கவே இல்லை. சிறிது தூரம் கரையில் ஆற்றின் திசையிலேயே ஓடி தண்ணீரில் பாய்ந்தான். நீர்பரப்பில் சிக்கலான நீர்தாவரம் போல் விரிந்து சென்று கொண்டிருந்த கோமதியின் கூந்தலை அச்சுதன் விரைந்து இறுக பற்றிக் கொண்டான். மூழ்கி மூழ்கி தத்தளித்த கோமதியை இழுத்தபடியே ஒரு சில நிமிடங்களில் படித்துறையையும் சேர்ந்து விட்டான்.

உடனே மளமளவென்று அத்தனை பேரும் கரையேறி விட்டார்கள். அத்தனை பேரின் முகத்திலும் பயம் உறைந்து கிடந்தது. சிறிதளவு நீரை குடித்திருந்தாலும் பயத்தின் கடுமையில் கோமதி விறைத்துப் போய் கிடந்தாள். அச்சுதன் அவளின் உடம்பை குப்புறப் புரட்டி முதுகை பலமாக கைகளால் அழுத்தி அழுத்தி மசாஜ் செய்ததில் கோமதியின் மூக்கு வழியாகவும் வாய் வழியாகவும் தண்ணீர் வெளியேறி வழிந்தது. பெண்கள் கோமதியின் ஈர உடைகளை தளர்த்தி விட்டார்கள். கோமதியின் மூச்சு சீராகியது. சில நிமிடங்கள் தாமதமாகிப் போயிருந்தால்கூட விபரீதமாகப் போயிருக்கும் என்பதை உணர்ந்திருந்த பெண்களின் கண்களில் இன்னும் நடுக்கம் தேங்கிக் கிடந்தது.

பரமேஸ்வரியை தவிர எல்லோரும் மாற்றி மாற்றி அச்சுதனுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தார்கள். பரமேஸ்வரி மொத்த மௌனத்துடன் அச்சுதனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளின் மொத்த மனசும் அச்சுதனின் மேல் வீழ்ந்திருந்தது. அச்சுதனும் புரிந்து கொண்டவனாக மௌனமாகவே பரமேஸ்வரியின் மொத்த மனசையும் அவளின் மொத்த உணர்வுகளால் பெற்றுக் கொண்டிருந்தான்.........

# 26

குடையைப் பிடித்தபடி சத்திரபட்டி போவதற்காக உலகநாதன் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் பஸ் ஸ்டாண்ட் வரை உடம்பால் போய் சேர்ந்து விட்டாரே தவிர அவரின் மனசு பூராவும் செந்துறை வீட்டிலேயே விழுந்து கிடந்தது. பரமேஸ்வரியும் அச்சுதனும் ஜன்னல்களின் வழியாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருப்பது போலவே அவருடைய கண்ணில் தெரிந்துகொண்டிருந்தது. 'சத்திரப்பட்டிக்கு போகாதே உலகநாதா'யென்று மனம் அவரைப் போட்டு உலுக்கி எடுத்தது. மீசையை தடவிவிட்டுக் கொண்டே பஸ் ஸ்டாப்பில் நின்றார். பரமேஸ்வரிக்கும் அச்சுதனுக்கும் இடையே உடலுறவு நிகழ்வது போலக்கூட மனசில் காட்சி தெரிந்து உலகநாதனை கதிகலங்க வைத்தது. சாவு வீட்டுக்குப் போவதில் இருந்து அவருடைய உடல் பின்வாங்கப் பார்த்தது.

ரத்தக் கொதிப்பு ரொம்ப ஜாஸ்தியாகி விட்டதால் டாக்டர் அவரை வெளியூர் செல்ல வேண்டாம் என்று எச்சரித்திருப்பதால், உடனே கிளம்பி வர தோதுப்படவில்லையென்று சத்திரபட்டிக்கு போன் பண்ணிச் சொல்லிவிட்டு, வேறு சில ஏற்பாடுகள் செய்து சாவகாசமாகப் போய் துக்கம் கேட்டுவிட்டு வரலாம் என்ற தீர்மானத்திற்கு வந்த பிறகுதான் உலகநாதனுக்கு மூச்சு வந்தது.

அப்பாடாயென்று மறுபடியும் வந்த இரண்டு கிலோமீட்டர் நீள வண்டிப் பாதையில் செந்துறையை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டார். ஆனால் நடக்க ஆரம்பித்து விட்டாரே தவிர நடக்க நடக்க உலகநாத

ளின் மனம் நடக்கவும் கொஞ்சம் பயந்தது. திரும்பிப் போய் நிற்கும்போது நிஜமாகவே வீட்டில் பார்க்கக் கூடாத காட்சி எதையாவது பார்க்க வேண்டி வந்து விட்டால்? உலகநாதனின் மண்டைக்குள் பயம் குப் ரென்று ஓங்கி உயர்ந்தது. அவரால் முன்னாடியும் நடக்க முடியவில்லை. பின்னாடியும் நடக்க முடிய வில்லை. சில நிமிஷங்கள் ஸ்தம்பித்துப் போய் நின்றார். அவருக்குள் ஆவேசம் முறுக்கேறியது. ஆவேசத் தோடும் அச்சத்தோடும் நடந்தார். ரொம்ப நேரம் நடந்து வீடு போய் சேர்ந்தபோது அது பூட்டிக் கிடந்தது.

உலகநாதன் அச்சுதனின் மோட்டார் சைக்கிளை யும் ஒரு வன்மப் பார்வை பார்த்துக் கொண்டார். கோபத்துடன் வீட்டுத் திண்ணையில் ஏறி நின்றார். கறுப்புப் பூனைப்படையை சேர்ந்தவர் மாதிரி உலக நாதன் சுற்றிலும் அவருடைய பார்வையை சுழலவிட்ட போது அவரின் பார்வை ஸ்தம்பித்தது. ஏழெட்டுப் பொம்பளைப் பிள்ளைகளுடன் அவரின் அழகான பெண்டாட்டி ஆற்றில் குளித்த ஈர தோற்றத்தில் அவசர மாக வந்து கொண்டிருந்தாள். கொஞ்சம் தள்ளி குளித்த தோற்றத்தில் அச்சுதன் வந்து கொண்டிருந் தான். உலகநாதனின் உச்சிமண்டை கொதிநீர் போல தகித்தது. உடம்பே வெடவெடவென்று ஆடியது. கீழே விழுந்து வைத்துவிடக் கூடாது என்ற உறுதியில் உலக நாதன் திண்ணையில் இறுக்கமாக நின்று கொண்டிருந் தார்.

வீட்டுத் திண்ணையில் உலகநாதனின் அந்த நெடிய உருவத்தைப் பார்த்த மாத்திரத்தில் பரமேஸ்வரி யின் முதுகுத் தண்டில் ஜிலீர் என்றது. நனைந்த உள்ளா கள் உடம்பை இறுக்கிக் கொண்டிருந்தாலும் குப் பென்று வியர்த்து விட்டது. வாழ்க்கை அசம்பாவித எல்லை ஒன்றை தொடப்போவது தெரிந்தது. ஆனா



லும் பரமேஸ்வரிக்குள் வீரக் குஞ்சு ஒன்றும் சிறகடிக்கத் தான் செய்தது. புகைந்து கொண்டிருக்கிற தாம்பத்ய வாழ்க்கையில் இப்படி ஏதாவது தீப்பொறி போல் வந்து விழுந்தால்தான் இரண்டில் ஒன்று எரிந்து சாம்ப லாகும். காலத்திற்குமா ஒருத்தி புகை மூட்டத்திற்குள் ளேயே அவிந்து போய் கிடப்பாள்?

இந்த மனச்சிலிர்ப்போடுதான் பரமேஸ்வரி கத வைத் திறந்து வீட்டிற்குள் போனாள். உலகநாதன் நின்ற இடத்தில் நின்றபடியே இருந்தார். அச்சுதனைப் பார்க்கப் பிடிக்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டார். அவரின் மனத்துக்குள் ஆக்ரோஷமும் அச்சமும் கர்ஜனை செய்தன. இரையை அடித்து வீழ்த்த மனச் சிங்கம் வாலை மெல்ல சுழற்றிக் கொண்டிருந்தது. அதே நேரம் உலகநாதனின் உடம்பு மன நிலைக்கு முரணாக ஒரு சின்னஞ்சிறு அசைவுகூட இல்லாமல் திண்ணையில் நின்றது. உடல் நிலையின் முரண் சில நிமிடங்களில் மனநிலையிலும் வநதது.

இப்போது உலகநாதன் வீட்டிற்குள் போய் எதிர் நோக்க வேண்டியது அவர் கட்டி காபந்து பண்ணி வைத்திருந்த பெண்டாட்டியை இல்லை. அவருடைய கட்டுப்பாட்டை ஊர்அறிய உடைத்துப் போட்டிருக்கும் இளம் பெண்ணை! - இந்த இடத்தில்தான் கிழ சிங்கத் தின் வால் ஆட கொஞ்சம் தயங்கியது! அல்லது பயந் தது! கட்டுப்பாடு உடைக்கப்பட்டிருப்பதே சிங்கத் திற்குத் தோல்வி இல்லையா? அதனால் சிங்கம் திண்ணையிலேயே நின்ற கோலத்தில் இருந்தது. இந்த அற்புதமான நேரம் பார்த்து சிவமதியின் தகப்பன் அழகர்சாமி ரொம்ப வேகமாக வந்து கேட்ட கேள்வி இது—

"சமாச்சாரம் ஒண்ணு கேள்விப்பட்டேன். எவ் வளவு தூரம் நெசம்னு தெரியல..."

''என்ன சமாச்சாரம்?'' உலகநாதன் எரிச்சலுடன் கேட்டார்.

''தேர்தல்ல நீங்க நிக்கறதுக்கு ஸீட்டு கேட்டு மந்திரி முடியாதுன்னு சொல்லிட்டாஹளாமே?''

கிழச்சிங்கம் வாங்கிய இந்த உதையில் நிஜமாகவே கர்ஜனை போன்ற குரலில் ''யாரு சொன்னது?'' என்றது. ஏனென்றால் மந்திரியை போய் பார்த்த விபரத்தை யாரிடமும் சொல்லக்கூடாது என்று சிங்கம் மணிவாசகத்திடம் ஆயிரம் தடவை சொல்லி மிரட்டி வைத்திருந்தது! மிரட்டி என்ன செய்ய? விஷயம் நடுத் தெருவில் சிதர் தேங்காய் மாதிரி உடைக்கப்படு கிறது...!

''மந்திரியோட பி.ஏ.தான் வந்து நம்ம தொகுதி பூரா சொல்லிட்டுப் போனமாதிரி தெரியுது!''

''ஏன் சொல்ல மாட்டான்... அடைக்கலராஜே மகா புளுகன். அவனோட பி.ஏ. அவனைவிட அண்டப் புளுகன் போல...! திருப்பி இந்தப் பக்கம் அந்தப் பய வந்தா சொல்லி வை அழகர்சாமி - மூஞ்சி முட்டிக்கும் பக்கத்ல வந்திரும்னு!''

உலகநாதன் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவருடைய கவனத்தைத் திருப்புவது போல தெரு பூராவும் ஜனங்கள் திரள ஆரம்பித்தார்கள். ஆற்றில் மூழ்கி இறந்து போக இருந்த கோமதியை அச்சுதன் காப்பாற்றி கரை சேர்த்தான் என்ற செய்தி பரவித்தான் கூட்டம் உணர்வு வேகத்துடன் திரண்டு வந்து கொண்டிருக்கிறது என்ற செய்தி உலகநாதனின் காதில் விழுந்தது. சிங்கத்திற்கும் கூட பட்ட காலில்தான் படுமோ என்னவோ? சிங்கம் பார்த்துக்கொண்டே யிருந்தது.

அச்சுதனை பாராட்டவும் வணங்கவும் ஏழை தச்சுத் தொழிலாளி ராமையாவின் தலைமையில்



கூட்டம் முண்டியடித்துக் கொண்டிருந்தது. தச்சு வேலையில் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் நான்கு மகள்களோடும் ஒரே ஒரு மகனோடும் கால் வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வசதி கிடையாத வறுமையில் இருக்கும் ராமையாவிற்கு அச்சுதன் அவருடைய மகள் கோமதியை ஆற்று வெள்ளத்தில் இருந்து காப்பாற்றி கரை சேர்த்தது சந்தோஷம்தான். ஆனால் அந்த நிமிஷம் அது கழிவிரக்கமாகி விட ராமையா மனம் உடைந்து போய் புலம்பினார்.

''ஏன் சாமி - இந்தப் பொட்டக் கழுதைய காப்பாத்தினீங்க... ஆத்துல அது தண்ணியோட தண்ணியா போகட்டும்னு விட்டிருக்கலாம்ல... என்ன பண்ணப் போகுது பொழச்சிக் கெடந்து... வயித்துக்குச் சோறு போட முடியாத நான் என்னைக்கி அதுக்குக் கல்யாணமெல்லாம் செஞ்சி பாப்பேன்... எப்ப என் புள்ள புருசன்கூட போறத பாப்பேன்... சொல்லுங்க சாமி; ஏன் இந்தப் புள்ளைய போட்டு காப்பாத்தினீங்க...?''

ராமையாவின் இந்த அழுகையைப் பார்த்து உலகநாதனைத் தவிர மற்ற எல்லாருமே கலங்கிப் போனார்கள். உலகநாதனுக்கு மட்டும்தான் இதெல்லாம் அச்சுதன் எழுதித் தயாரித்த நாடகமாகத் தெரிந்தது. மூஞ்சியைத் திருப்பிக் கொண்டு வீட்டிற்குள் போக நினைத்த போது உள்ளிருந்து உடை மாற்றிய தோற்றத்தில் பரமேஸ்வரி உலகநாதனின் எதிரில் வந்து நின்றாள். இருவரின் பார்வையும் ஒரு நூனியத்தில் சந்தித்துக் கொண்டன. உலகநாதனுக்குள் ஒரு விலங்கு உடலை சிலிர்த்துக் கொண்டது.

''மதிய சாப்பாட்டுக்கு என்ன சமைக்கட்டும்?'' பரமேஸ்வரி பயப்படாமல் உலகநாதனின் கண்களைப் பார்த்துக்கொண்டே கேட்டாள். சட்டென உலகநாதனின் மன வேகம் அச்சுதனிடம் இருந்து பெயர்ந்து பரமேஸ்வரியின் மேல் குவிந்தது.

"உள்ளே போ - சொல்றேன் வந்து" என்றார்.

வீட்டிற்குள் திரும்பிச் சென்ற பரமேஸ்வரியை பின் தொடர்ந்து உள்ளே போனவர் அடுத்த வினாடியே கதவை சாத்தித் தாளிட்டார். மனசோடு உடம்பும் சூடாகிக் கொண்டது. "நில்லுளா..." என்றார். "என்ன சமைக்கணும்னா கேக்க நீ...செத்த மூதி! நான் சொல்லியிருக்கிறதை மீறி கண்ட பயலும் பாக்கற மாதிரி ஆத்துல பொரண்டுக்கிட்டு வந்திட்டு என் மானம் மரியாதை எல்லாத்தையும் காத்துல விட்டெறிஞ்சிட்டு-எவ்வளவு தைரியம் இருந்தா என்னை வந்து கேப்ப நீ - என்ன சமைக்கட்டும்னு..."

—என்று கொந்தளிப்புடன் கேட்டுக்கொண்டே உலகநாதன் எட்டி பரமேஸ்வரியின் பின்புற தலை முடியை கொத்தாக பிடித்தார். "எத்தனை நாள் கள்ள வழக்கம்ளா...? புருசன் ஊர் எல்லை தாண்டிட்டான்னதும் ஆத்துல கூத்தடிக்க கௌம்பியாச்சோ? குளிச்சதும் இல்லாம ஈரச்சேலையோட காட்டிட்டு வேற வர்ர! எந்தக் காலத்லளா ஒலகநாதன் பெண்டாட்டி ஆத்துல குளிச்சிருக்கா... எந்தக் காலத்ல? இன்னைக்கி ஆத்துக்குப் போனவ நாளைக்கி எங்கே போவியோ... சொல்லுளா... சொல்லு. போவியா என் வார்த்தைய மீறி...போவியா என் சொல்லை மீறி..."என்று கேட்டுக் கேட்டு உலகநாதன் உலுக்கிய உலுக்கலில் பரமேஸ்வரி தடுமாறி கீழே விழுந்தாள். வேட்டியை டப்பா கட்டுக் கட்டிக்கொண்டார். பரமேஸ்வரியை தூக்கி நிறுத்தி மாற்றி மாற்றி அவளுடைய கன்னங்களில் அறைந்தார். அவளின் தலையைப் பிடித்து சுவரில் முட்ட வைத்தார். அப்படியும் மனவேகம் தணியவில்லை. "அழகு ராணின்னு திமிர்ளா ஒனக்கு... அந்தத் திமிர்தான் போகச் சொல்லியிருக்கு... நீ போன நேரம் பாத்து எப்படிளா அவனும் வந்தான்? வரச் சொன்



ளியா? சொல்லு நெசத்தை... இல்லை; பேதியிலதான் போவ..."

இந்த இடத்தில் பரமேஸ்வரி உலகநாதனின் பிடியில் இருந்து திமிறி விட்டாள்.

"அடிக்காதீங்க என்னை. அடிநாடெல்லாம் பட முடியாது என்னால. யாரும் யாரையம் வரச் சொல்லலை. சந்தேகம் இருந்தா கோமதிகிட்ட போய் கேட்டுத் தெரிஞ்சிக்கோங்க. பெண்டாட்டி என்கிறதுக்காக அடி உதைங்கிற புது வழக்கமெல்லாம் வேண்டாம்...

"என் பெண்டாட்டி என் பெண்டாட்டியா மட்டும் தான் இருக்கணும். இல்லேன்னா அடி உதைதான்..."

"பெண்டாட்டி என்கிறதுக்காக அடிமையா இருக்க முடியாது என்னால"

"நான் இல்லாத நேரம் ஆத்துக்குப் போவேன்னு சொல்ற?"

"ஏன் - உங்க முதல் பெண்டாட்டி ஆத்துல போய் குளிச்சதே இல்லையோ?"

வன்முறையின் வேகத்தில் இருந்த உலகநாதனால் உடனே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. எதிர்பாராத கேள்வியை சந்தித்துவிட்ட மலைப்பு அவரின் மேட்டு விழிகளில் புடைத்துத் தெரிந்தது. ஏதோ ஒரு பதில் உணர்வுகளில் ஓடியதே தவிர வார்த்தைகளில் வெளிப்படவில்லை.

"பதில் சொல்லுங்க. உங்க முதல் பெண்டாட்டி ஆத்துல குளிச்சிருக்காங்களா இல்லையா?" - பரமேஸ்வரி திருப்பியும் கேட்டாள்.

"ஒனக்கு பதில் சொல்ற நிலைமையில இல்லை நான்" உலகநாதன் சின்ன பயத்துடன் சொன்னார்.

"தன் நிலைமை இதான் இங்கே. உங்க முதல் சம்சாரம் குளிக்கலாம் ஆத்துல. ஆனா நான் குளிச்சிடக் கூடாது. அவங்களை கூட்டிக்கிட்டு வருஷா வருஷம் குற்றாலம் போவீங்க. டெல்லி போவீங்க. பம்பாய் போவீங்க... என்னை மட்டும் வீட்டு வாசல் படிதாண்ட விடமாட்டீங்க... அப்படியென்ன அவங்களுக்கு ஒரு நியாயம், எனக்கு ஒரு நியாயம். வேளா வேளைக்கு உங்களுக்குச் சோறு வடிச்சிப் போட்டுக்கிட்டு நாலு சுவத்துக்குள்ளயே வேலைக்காரியாட்டம் கெடக்கணும். இல்லேன்னா மாட்டை அடிக்கிற மாதிரி போட்டு அடிப்பீங்க. நல்லா அடிங்கய்யா. அடிச்சி கொன்னு போட்டாச்சின்னா தட்டுக் கெட்டுப் போக வீட்ல எவளும் இருக்க மாட்டா. நீங்களும் நிம்மதியா இருக்கலாம். கடைசியா என் கேள்வி இதான்— எந்த விஷயத்திலும் என்னை உங்க முதல் சம்சாரத்தை நடத்தின மாதிரி நடத்த மாட்டீங்க... என் சமையல் மாத்திரம் அந்த முதல் சம்சாரத்தோட சமையலாட்டம் தேவாமிர்தமா இருக்கணும்! பூமி தாங்காது இந்த அந்யாயத்தை......''

என்று ஒரு கத்து கத்திவிட்டு பரமேஸ்வரி விடுவிடுயென்று சமையல் அறைக்குள் போய்விட்டாள். நிஜமாக அவளுக்கு அப்பாடா என்று இருந்தது. ஏதோ ஒரு முடிவிற்கான ஆரம்பம் தொடங்கியாகி விட்டது. இதை கொஞ்சமும் எதிர்பார்க்காத உலகநாதன் எதற்குள்ளோ மூழ்கிப் போனவராக நின்றார். அவரையும் மீறி ஒரு குழப்பம் நடந்திருப்பது சிறிது புரிந்தது. - அப்போது பார்த்து காதுகளுக்குள் ஒலித்த மணியோசை வேறு அவரை மிரள வைத்தது. தோற்றுப் போன பிரமையும் மனசை அச்சுறுத்தியது. பரமேஸ்வரியை அவர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் பார்த்தார். பதிலுக்கு அவள் உலகநாதனை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விட்டாள். குற்றவாளிக் கூண்டில்



நிறுத்தப்பட்டதே தண்டனையாகத் தெரிந்து ஒரு பக்கம் உலகநாதனை கோபமூட்டியது.

குழப்பம்; பயம்; கோபம் - என்ற உணர்வுக் கலவையில் நூதனமான அமைதியில் உலகநாதன் அமிழ்ந்து போயிருந்தார். அவருடைய மனம் காந்திமதியை நினைத்துப் பார்த்தது. காந்திமதி இல்லாத தனிமையை மீண்டும் கோபத்துடன் எண்ணிப் பார்த்தார். என்ன செய்வதென்று தெரியாத வெறுமையில் வீட்டிற்குள்ளேயே நடந்து கொண்டிருந்தார். அந்த வெறுமை உணர்வுடனேயே அந்த இரண்டு மணி வெயிலில் இயல்புக்கு மாறாக குளியல் அறைக்குள் போனவர் காலம் இழந்த மனநிலையில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் குளித்துக் கொண்டிருந்தார். - இது பரமேஸ்வரியை பதட்டப்படுத்தி விட்டது. ஆனாலும் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டாள். உலகநாதனின் எப்பேற்பட்ட நகர்வுக்கும் ஈடு கொடுக்க உள்ளூர தன்னை அவள் தயார்படுத்திக் கொண்டாள். உலகநாதன் அணு அணுவாக மனச் சிதைவிற்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் சீர்குலைவு அவளுடைய அறிவுக்குப் புலப்படவில்லை.

அதனால் உலகநாதன் இயல்புக்கு மாறாக மதிய வெயிலில் ஒரு மணி நேரம் குளித்துக் கொண்டிருந்ததின் மனப் பின்னணி தெரியாமல் போனது போலவே; அன்று சாயந்தரம் அதே உலகநாதன் அவரின் இயல்புக்கு எல்லா விதத்திலும் மாறாக; ஏழை ராமையாவின் கூரை வீட்டுத் தரையில் உட்கார்ந்து கொண்டு அச்சுதனால் காப்பாற்றப்பட்ட கோமதியுடன் ரொம்ப இதமாக பேசிக் கொண்டிருந்ததின் உள்மனப் பிளவையும் பரமேஸ்வரிக்குத் தெரியாததுதான். பரமேஸ்வரிக்கென்ன - இது யாருக்குமே தெரியாதுதான்......

# 27

குழப்பமான மன நிலையின் மறுபக்கம் குழப்பமே இல்லாத முரண்பாட்டுத் தன்மையுடன் உலகநாதன் கோமதியுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார். செந்துறை ஜனமே மூக்கின் மேல் விரலை வைத்து விட்டது. எந்தத் தெருப் பக்கம் போவதைக்கூட அந்தஸ்து குறைவானதாக எண்ணி வைத்திருந்தாரோ - அந்தத் தெருவில் இருந்த ராமையாவின் வீட்டிற்குள்ளேயே புகுந்துவிட்டிருந்தார் உலகநாதன் - அந்தஸ்தை நினைத்தே பார்க்காமல் ஊரில் இல்லாத பாசாங்கு எல்லாம் செய்து கோமதியுடன் பேசிப் பார்த்ததில் அவருக்கு ஒரு உண்மை தெரிந்துவிட்டது. பரமேஸ்வரியை ஆற்றுக்குக் குளிக்கக் கூப்பிட்டது கோமதிதான். மற்றபடி பரமேஸ்வரி ஆற்றில் குளிப்பது தெரிந்து அச்சுதன் ஆற்றுப்பக்கம் போகவில்லை. அவன் ஆற்றில் குளிப்பது தெரிந்து பரமேஸ்வரியும் ஆற்றுக்குப் போகவில்லை. ஆனால் இந்த உண்மை உலகநாதனுக்குப் பிடிக்கவில்லை! உண்மையில் அச்சுதனுக்கும் பரமேஸ்வரிக்கும் இடையே ஏதாவது ஏடாகூடமாக இருக்க வேண்டும்! அதை வைத்துக்கொண்டு இருவரையும் அவர் ஏடாகூடமாக ஏதாவது செய்துவிட வேண்டும். இந்த வன்மமான உணர்வில் அச்சுதனும் பரமேஸ்வரியும் உடலுறவு கொள்வது போன்ற கற்பனையை மனதில் ஒரே ஒரு நிமிஷம் உலகநாதன் கொண்டு வந்து பார்த்தார். ஆக்ரோஷம் அதிகப்பட இந்த ஒரு நிமிட பார்வையே போதுமானதாக இருந்தது அவருக்கு...!

இந்த ஆக்ரோஷத்திற்கு நேர் மாறான வேறொரு கபடமான செயலிலும் அதே நேரம் உலகநாதன்



இயங்கிக் கொண்டிருந்தார். கோமதியை அச்சுதன் காப்பாற்றியது அவள் செய்த புண்ணியம் என்றார். அச்சுதன் செந்துறைக்கே இளையபெருமாள் மாதிரியென்று புகழ்ந்தார். கோமதி நேரில் போய் கட்டாயம் அச்சுதனுக்கு நன்றி சொல்லிவிட்டு வருவதுதான் மரியாதையென்று சொல்லி அவளை கல்மிஷத்துடன் ஏவிவிட்டார். உலகநாதனின் உள்மனம் - அவருடைய புகழ்ச்சியால் கோமதி அச்சுதன் மேல் காதலாகிவிட வேண்டும்! அந்த வம்பில் மாட்ட வைத்து அச்சுதனை கேவலப்படுத்திவிட வேண்டும்! அதில் உலகநாதனுக்கு தலைக்குனிவு எதுவும் ஏற்பட வழி கிடையாது! பரமேஸ்வரியுடன் அச்சுதனுக்கு ஏதாவது ஏற்பட்டு அதில் அச்சுதனை விரட்டியடித்தால் - அதில் உலகநாதனின் குடும்பப் பெயர் நாறிப் போக வழி ஜாஸ்தியாக இருக்கிறது!

அதனால் கோமதியின் மூலம் அச்சுதனை விரட்டுவதுதான் உலகநாதனுக்குச் சரியாக இருக்கும்! சாவில் இருந்து தன்னைக் காப்பாற்றியவன் மேல் காதல் கொள்ளும் பெண்களை சின்ன வயதில் உலகநாதன் ஏழெட்டு தமிழ் சினிமாக்களில் பார்த்திருக்கிறார்! கோமதியின் முன்னால் உட்கார்ந்து உலகநாதன் திருட்டுத்தனமாக அவருடைய மனதிற்குள் வரைந்து கொண்டிருந்த இந்த தமிழ் சினிமாவின் காதல் கதைக்கு நிறைய ஒற்றுமை கொண்ட மற்றொரு கதை அவருடைய வீட்டு சமையல் அறையின் ஜன்னல் அருகே யாருக்கும் தெரியாமல் படமாகிக் கொண்டிருந்தது!

''அய்யோ! என்னங்க பரமேஸ்வரி; உங்களோட ரெண்டு கன்னமும் இவ்வளவு மோசமா வீங்கிப் போயிருக்கு...? மை காட்! இப்படியா போட்டு அடிச்சார்?'' - அச்சுதன் அதிர்ந்து போய் கேட்டான்.

''அவங்க சொல்லை மீறி அவங்களுக்குத் தெரியாம ஆத்துல குளிச்சதுக்கு ஒரு கன்னத்ல அடி. நீங்க

பாக்குற மாதிரி குளிச்சதுக்கு இன்னொரு கன்னத்ல அடி...'' - பரமேஸ்வரி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''உலகநாதன் வெரி வெரி காம்ப்ளிகேட்டட் அண்ட் காம்ப்ளெக்ஸ் பர்ஸன்...''

''தயவு செஞ்சி தமிழ்ல்ல சொல்லுங்க''

''உங்களை ரொம்ப நாளைக்கு இங்கே விட்டு வைத்திருக்கக் கூடாதும்மா... சரியில்லை அவர்...''

''இன்னைக்கு அவங்க முகமே ரொம்ப வேற மாதிரி தான் இருந்திச்சி... தப்புப் பண்ணிட்ட சின்னபிள்ளை கணக்கா கொஞ்ச நேரம் முழிச்சி முழிச்சிப் பாத்திட்டு இருந்தார்...''

''சொன்னபடி நாளைக்குக் காலையில அந்த நாவல்பழ மரத்தடிக்கு வந்திடுங்க பரமேஸ்வரி. பேசி முடிவு பண்ணிடலாம்...''

''நாளைக்கு வேண்டவே வேண்டாம். இந்த மூஞ்சி வீக்கத்தோடு வாசலுக்குப் போகக்கூட விடமாட்டாங்க... யாராவது கேட்டா என்ன சொல்றது...''

''எனக்கு ஆராய்ச்சியில புத்தியே போக மாட்டேங்கறது. எப்படி உங்களை இந்த ஜெயில்ல இருந்து மீட்டுக் கொண்டு போகப் போறேனோ என்ற யோசனையிலேயேதான் மனசு பூராவும் இருக்கு. அதுமட்டுமில்லை; என் முதல் ஆசை உங்களை நிறைய படிக்க வைக்கணும்...''

''அது ஒண்ணு போதும் - இந்த ஜென்மத்துக்கும்''

''எனக்கு யாரையாவது ரொம்பப் பிடிச்சுப் போயிடுத்துன்னா அவங்களை எக்கச்சக்கம் படிக்க வைக்கணும் போல இருக்கும்''

''அந்த அளவுக்கா பிடிச்சிப் போயிருச்சி பரமேஸ்வரியை!''



''ஏன் பிடிக்கக்கூடாதா?''

''ஆச்சர்யந்தான்...''

''பிடிக்காம போயிருந்தாத்தான் எனக்கு ஆச்சர்யம்''

''நெஜமாவே பரமேஸ்வரிக்கு ஆச்சர்யந்தான் இதெல்லாம்...''

''பரமேஸ்வரிக்கு இன்னும் பெரிய ஆச்சர்யமெல்லாம் இருக்கு''

''தாங்குவாளா பரமேஸ்வரி?''

''இப்பவே சொல்லணுமா அதையும்?''

''அந்த சந்தோஷத்தையும் இப்பவே குடுத்திட வேண்டியதுதானே...''

''ஐ ஃபெல் இன் லவ் வித் பரமேஸ்வரி...''

அச்சுதன் சொன்னது ஜிலிர் என்று புரிந்தாலும் தமிழ்... தமிழ்ல்ல சொல்லுங்க'' என்ற பரமேஸ்வரியின் குரல் ஒரு மாதிரியாக பெருக்கெடுத்தது.

''இதுக்கு மொழியே தேவை கிடையாதும்மா... ஐ அட்மைர் யூ வெரி மச்...ஸோ - ஐ லவ்யூ வெரி மச்...''

''எனக்கு சொல்றதுக்கு வார்த்தையே தெரியலை''

''வார்த்தை தேவை கிடையாது பரமேஸ்வரி... மனசு தெரிஞ்சா போதும். பரமேஸ்வரியோட மனசு அவங்களோட கண்ல தெரியுதே...''

''நெஜம்மாவே இதெல்லாம் நெஜந்தானே அச்சுதா?''

''நிஜமாவே நிஜம்தான்''

''மனசு நாளைக்குப் பயந்து போயிடாதே?''

'''உங்க மனசு பயப்படுமா?''

'மலையே அசைஞ்சாலும் இனிமே பயப்பட மாட்டேன்...''

''வெரிகுட்! மறுபடியும் அவர்கிட்ட உதை வாங்குகிற மாதிரி எதுவும் செய்திடாம ஜாக்கிரதையா இருங்க... நான் பொறுமையா உக்காந்து யோசனை பண்றேன். என்னைக்கு முடியறதோ - அன்னைக்கு நாவற்பழ மரத்தடியில மீட் பண்ணுவோம். கொஞ்ச நேரத்ல நான் கிளம்பி திருநெல்வேலி போறேன்... அன்னைக்கு கோயில்ல உங்களை போட்டோ எடுத்தேனே—அந்த பிரிண்ட்டை வாங்கிட்டு வரப் போறேன்.''

''யார் கண்ணிலும் பட்டுடக் கூடாது''

''படவே படாது''

''கடைசி வரைக்கும் நம்மளோட நட்பை யாருமே தெரிஞ்சிடக் கூடாது. தெரிஞ்சா - அவ்ளவுதான். நம்ம உயிர் நம்மதில்லை!''

''ரொம்ப கவனமா இருப்பேன். போதுமா?''

இதை அச்சுதன் பரமேஸ்வரியிடம் சொல்லிக் கொண்டிருந்ததற்கு சற்று முன்புதான் உலகநாதன் கபடமான பேச்சை புரிந்துகொள்ளத் தெரியாத கோமதியிடம் பேசிவிட்டு தன் வீட்டுக்குப் போய் பரமேஸ்வரியின் மூஞ்சியைப் பார்க்கப் பயந்தும்; பார்க்கப் பிடிக்காமலும் வேதபாடசாலை வரைக்கும் ஒரு நடை போய்விட்டு வரலாம் என்ற நினைப்பில் அந்தப் பக்கமாக நடந்துவிட்டார். உடனே கோமதிக்கு 'மெட்ராஸ் அண்ணாச்சி' அச்சுதனைப் பார்த்து ஒரு நன்றி வார்த்தை சொல்லிவிட்டு வரலாம் போல இருந்தது. உலகநாதனின் கபடம் கோமதியின்



அறிவில் துளிக்கூட படியவில்லை. அவளுக்கு நிஜமாகவே அண்ணன் போலத்தான் தெரிந்தான். அவளுடைய ஒரே தம்பி பழனியப்பனை துணைக்குக் கூட்டிக் கொண்டு அச்சுதனின் வீட்டுக்கு ஒரே ஓட்டமாக ஓடினாள். அப்போது அவளுடைய தம்பி நிஜமாகவே பழனியாண்டி போல ஒரே ஒரு கோவணம் மட்டும் தான் கட்டியிருந்தான். கோமதி அவனுடன் போய் அச்சுதன் வீட்டு வாசலில் நின்று ''மெட்ராஸ் அண்ணாச்சி''யென்று கூப்பிட்ட குரல் அவளுக்கே கேட்டிருக்குமா என்பது சந்தேகம்தான். தம்பியை கூப்பிடச் சொன்னாள். அவனுடைய குரல் அதற்குமேல்! அதனால் கோமதி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளின் 'ஹாரனை' ஒரு அழுத்து அழுத்தினாள். ஜன்னல் வழியாக பரமேஸ்வரியுடன் பேசிக் கொண்டிருந்த அச்சுதன் உடனே வேகமாக வாசலுக்கு வந்தான். கோமதி கோவணம் கட்டிய பையனுடன் மோட்டார் சைக்கிளின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்: அழுகை வர வர அடக்கிக் கொண்டு வார்த்தைக்கு வார்த்தை அண்ணாச்சி அண்ணாச்சி யென்று சொல்லி அச்சுதனுக்கு அவள் வாய் நிறைய நன்றியை தெரிவித்துக் கொண்டிருந்த போது - வேத பாடசாலைப் பக்கம் போன உலகநாதன் ஏதோ ஒரு நினைப்பில் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவருடைய முறம் போன்ற காதுகளில் கோமதியின் ஒவ்வொரு வார்த்தையும் விழுந்து கொண்டிருந்தது. அவர் போடப் பார்த்த கள்ளக் கணக்குக்கும் நடந்து கொண்டிருக்கிற நிஜ கணக்குக்கும் எட்டு ஏணி வைத்தால்கூட எட்டாது!

உலகநாதனின் மனம் மீண்டும் வேகமாகி விட்டது. வேண்டும் என்றே துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு அவருடைய வீட்டுத் திண்ணையில் ஏறி உட்கார்ந்தார். வீட்டிற்குள் போக ஒருவித பயமாக

இருந்தது அவருக்கு! அச்சுதன் "ஏண்டா பையா இப்படி கோவணத்தோட வந்திருக்கே?" என்று கோமதியின் தம்பியை கேட்டுக் கொண்டிருந்தது உலகநாதனின் காதுகளில் துல்லியமாக விழுந்தது. அச்சுதன் கேட்ட கேள்வி சாதாரண கேள்விதான். அதற்கு கோமதி சொன்ன பதில் அச்சுதனுக்கு சாதாரணமானதில்லை. கோமதியின் தம்பிக்கு இருப்பது ஒரே ஒரு சட்டையும் ஒரே ஒரு கால்சட்டையும்தான். இரண்டையும் துவைத்துப் போட்டிருக்கிறார்கள். அவை இன்னும் ஈரமாக இருப்பதால் கோவணத்தில் வந்து விட்டான் தம்பி!

வறுமையில் கிடந்த கோமதியின் குடும்பத்தில் ரொம்ப இயல்பான விஷயம் இது. ஏற்கனவே போட்டிருந்த திட்டப்படி அன்று சாயந்தரம் திருநெல்வேலி போன அச்சுதன் கோமதியின் தம்பிக்கு இரண்டு சட்டைகளும் இரண்டு கால்சட்டைகளும் வாங்கி வந்து கொடுத்ததும் அவனுடைய குணத்திற்கு இயல்பான விஷயம்தான். சென்னையிலும் இப்படி எத்தனையோ ஏழைகளுக்கு உதவி செய்திருப்பவன்தான். ஆனால் சின்ன ஊரான செந்துறையில்தான் இயல்பான மனிதாபிமானம் அரிய விஷயமாக அதிகமாகவே புகழப்பட்டது. அப்படி அவனை செந்துறை கிராமத்தால் புகழப்பட புகழப்பட உலகநாதனின் மனவேகமும் உச்சத்திற்கு ஏறியது. ஒரு வன்ம பல்சக்கரம் அவருள் சுழன்று கொண்டே இருந்தது. தெரிந்தோ தெரியாமலோ உலகநாதன் பரமேஸ்வரியிடம் தோற்றுப் போய் விட்டார்! அந்தத் தோல்வியை எப்படியாவது அச்சுதனிடம் ஈடுகட்டி விட வேண்டும் என்று உலகநாதன் மனதால் துடிக்கவே செய்தார். அவனுடைய புகழ் மேலும் மேலும் ஜாஸ்தியாகிக் கொண்டு போவதை அவரால் ஒன்றும் செய்ய முடியாதென்று தோன்றியது. அச்சுதனை என்ன செய்யலாம் என்று விடாமல்



யோசித்தார். என்ன செய்து அவனை உடனே ஊரை விட்டு ஓடச்செய்யலாம் என்று நினைத்துப் பார்த்தார்.

கூலிக்குக் கொலை செய்யும் குண்டர்களில் யாராவது ஏற்பாடு செய்து, அச்சுதனை படுகாயப்படுத்தினால் கூட போதும்! பயந்து போய் ஊரை விட்டு ஓடிப்போய் விடுவான்! ஆனால் காயப்படுத்திய குண்டர்களில் எவனாவது ஒருத்தன் போலீசில் மாட்டினால் கூட போதும் - ஏவி விட்டவர் உலகநாதன் தான் என்ற உண்மை வெளிவந்து விடும். அது முதலுக்கே மோசம்! அப்புறம் அவருக்கு ஜாமீன் தர கூலி தந்தால் கூட ஆள் கிடைக்காது! உலகநாதன் வேறு அரை நிஜார் போட்டுக்கொண்டு எண்ணிய கம்பியையே எண்ணிக் கொண்டிருக்கணும்! கம்பி எண்ணிக் கொண்டு உலகநாதனால் ஒருநாள் கூட இருக்க முடியாது! அதனால் கூலிப்படை விஷயம் வேலைக்கு ஆகாது!

தனி ஆளாக தான் மட்டும் நின்று எப்படி அச்சுதனை ஊரைவிட்டு பயந்து ஓட வைக்கலாம் என்று உலகநாதன் மண்டையைப் போட்டு குடைந்த குடைச்சலில் அவருடைய உச்சந்தலை கொதித்தது. மனம் எப்படியோ தடுமாறியது. மனமும் உடம்பும் வேறு வேறாகி விட்டாற்போல ஊசலாடியதில் ஒருவித அச்சமும் உலகநாதனின் மேட்டு விழிகளில் புடைத்துக் கொண்டது. அப்போது தெருவில் போய்க்கொண்டிருந்த ஒருவன் பீடி பற்ற வைத்துக்கொண்ட காட்சி உலகநாதனின் மனப்புகை மூட்டத்தில் ஒரு தீப்பொறியாக தெறித்தது. வாசலில் நின்ற அச்சுதனின் மோட்டார் சைக்கிளின் மேல் அவருடைய மொத்த மன வேகமும் பாய்ந்து குவிந்தது. அச்சுதனின் இந்த வண்டிக்கு முதலில் ஒரு மரண அடி கொடுத்தால் என்ன?

- இதற்குக் கொடுக்கிற அடியிலேயே கதிகலங்கி ஓட்டம் பிடிக்க வேண்டும் அச்சுதன்...

உலகநாதனின் அழிவு வெறிக்கு வழி கிடைத்து விட்டது. ஊரே உறங்கிக் கொண்டிருக்கும் ஒரு நடுச் சாமத்தில் பரமேஸ்வரிக்குக்கூட தெரியாமல் சப்தமே இல்லாமல் எழுந்து போய் அச்சுதனின் மோட்டார் சைக்கிளுக்கு தீ வைத்து விட்டால் என்ன? உலகநாதனின் மனம் வன்முறையில் புடைத்து விண் விண் என்று தெறித்தது. குரூரமான மகிழ்ச்சி அவரின் கண்களில் உடனே கசியவும் தொடங்கிவிட்டது. தீ வைத்தது யார் என்ற ரகசியமும் ஒருத்தருக்கும் தெரியப் போவதில்லை. அச்சுதனும் அதற்குப் பிறகு துணிச்சலாக செந்துறையில் இருக்கப் போவதில்லை. அவன் ஓடிப் போய்விட்டால் அந்த சிறுக்கி முண்டை சிவமதிக்கும் கள்ள ஓட்டுப் போட ஆள் இல்லை! அப்புறம் ஒரு நாள் சாவகாசமாக பரமேஸ்வரியையும் தீ வைத்துக் கொளுத்திவிட்டு, அவள்தான் தற்கொலை செய்து கொண்டாள் என்று கதை கட்டி விட்டால் முடிந்தது கதை...

பிறகு உலகநாதனை கேட்பதற்கு ஆள் கிடையாது. கால்மேல் கால் போட்டுக்கொண்டு உலகநாதன் நிஜ பண்ணையார் மாதிரியே இருக்கலாம்! தேவைப்பட்டால் அப்போது அழகர்சாமியை கேட்டு 'கொணட்டி' சிவமதியை தனக்கு சமைத்துப் போடுகிற சமையல்காரியாக வைத்துக் கெர்ள்ளலாம் - சம்பளம் கொடுத்துத்தான்! தேவைப்பட்டால் 'கொணட்டி'யை 'அதற்கும்' சேர்த்தே வைத்துக்கொள்ளலாம்!

உலகநாதன் எல்லாவற்றுக்குமே தயாராகிக் கொண்டிருந்தார்.........

# 28

காலையில் இருந்தே உலகநாதன் கூண்டுக்குள் புதிதாக அடைக்கப்பட்ட வனவிலங்கு போல வீட்டில் அலைந்து கொண்டிருந்ததை பரமேஸ்வரியும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். மனதுள் தீர்மானித்திருந்த வன்முறை அவருடைய கண்களில் இப்போதே வந்து இறங்கியிருந்ததில், காணுகிற காட்சிக்கும் பார்க்கிற தோரணைக்கும் ஒருங்கிணைப்பு இல்லாமல் பிளவு பட்ட கதியிலேயே உலகநாதனின் எல்லா செயல்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ராத்திரி சாப்பாட்டின் போது குழம்பு ஊற்றிச் சாப்பிட மறந்து சாப்பாட்டை மோரில் அவர் ஆரம்பித்துக் கொண்டதை பரமேஸ்வரி மௌனமான அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

படுக்கையில் நீண்ட கனத்த ஈட்டி மாதிரி ஒட்டாமல் படுத்துக் கொண்டிருந்த உலகநாதன் கடிகாரத்தில் மணி அடித்த போதெல்லாம் அதிர்வுடன் பக்கத்துக் கட்டிலில் படுத்திருக்கும் பரமேஸ்வரியை தலையை லேசாக உயர்த்தி நோட்டம் விட்டார். அவருடைய இந்த அத்தனை ஓய்வின்மையையும் உணர்ந்தபடி பரமேஸ்வரியும் உறங்காமல் வெறுமே கண்களை மூடியபடி கிடந்தாள். உலகநாதனின் ஓய்வின்மை அவளுக்குக் கவலையையும் பயத்தையும் ஏற்படுத்தியது.

கடிகாரத்தில் இரண்டு மணி அடித்த ஒரு சில நிமிடங்களில் உலகநாதன் சின்ன அரவம்கூட ஏற்படுத்தாமல் படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்தார். பரமேஸ்வரியை பார்த்தார். நன்றாக உறங்குபவள்

போல தெரிந்தாள். மெல்ல கட்டிலைவிட்டு இறங்கிய உலகநாதன் ஓசையில்லாமல் நடந்து சமையல் அறைக்குப் போனார். தீப்பெட்டியை தேடி எடுத்துக் கொண்டார். மார்பு சற்று வேகமாக துடித்தது அவருக்கு. பயத்தில் திரும்பிப் பார்த்தபடியே பூனை போல நடந்து வாசல் கதவை அடைந்தார். உடம்பில் வியர்வை பெருகி வழிந்தது. ரொம்ப கவனமாக இழை இழையாக வாசல் கதவைத் திறந்தார். மனித நடமாட்டமே இல்லாமல் தெரு வழக்கத்திற்கு மாறான அகலத்தில் காட்சி அளித்தது. எல்லா வீடுகளும் இருளில் கரைந்து தெரிந்தன.

உலகநாதன் தன் வீட்டின் உட்புறத்தை மறுபடியும் ஒரு தடவை திரும்பிப் பார்த்துக்கொண்டபின் தெருவில் இறங்கினார். அச்சுதனின் மோட்டார் சைக்கிள் கம்பீரமாக நின்றது. உலகநாதனுக்குள் இருந்த வன விலங்கு வாலை சுழற்றியபடியே அதை நோக்கி நகர்ந்தது. வண்டியை சுக்கல் சுக்கலாக உடைத்து நொறுக்க வேண்டும் போல இருந்தது. ஆனால் அதற்கு சாத்தியம் கிடையாது. உலகநாதன் 'பெட்ரோல் டேங்க்'கின் வட்ட மூடியை நீக்கினார். குப்பென்று பெட்ரோல் நெடி நாசியைத் தாக்கியது. உலகநாதனின் விரல்கள் நடுங்கின. யாருக்கும் தெரியாமல் ஒரு கர்ம காரியம் செய்வதாக தோன்றியது அவருக்கு... அப்போது பார்த்து காதுக்குள் ஏதேதோ பேச்சுக் குரல் குழப்பமாகவும் அதிர்வாகவும் ஒலித்ததில் உணர்வுச் சிதறலுக்கு உட்பட்டு உலகநாதன் தீக்குச்சியை உரசி பளீரென அதை பெட்ரோல் டேங்கிற்குள் நழுவ விட்டார்.

அந்த வினாடியே செந்தீ குபீரென்று மேல் நோக்கி எழுந்தது. மிரண்டு விட்ட உலகநாதன் ஓடிப்போய் வீட்டுக்குள் நுழைந்து அவசரமாக கதவைப் பூட்டிக் கொண்டார். மூச்சு வாங்கியது அவருக்கு. படுக்கையை விட்டு எழப் பயந்து கண்களை மூடியபடியே படுத்



திருந்த பரமேஸ்வரி நடக்கக் கூடாத ஏதோ நடந்து கொண்டிருக்கிறது என்ற நடுக்கத்தில் கூர்மையாக இருந்தாள். மீண்டும் ஓசையில்லாமல் நடந்து வந்து உலகநாதன் படுத்துக்கொண்டு விட்டார். அவருடைய வனவிலங்கு நெஞ்சுக்குள் கொக்கரித்தது. ரொம்ப திருப்தியுடன் உலகநாதன் கண்களை மூடிக் கொண்டார். ஆனால் அவரிடம் இருந்து வந்த மெலிதான பெட்ரோல் நெடி பரமேஸ்வரியை சிறிது கலவரப்படுத்தியது. உலகநாதன் என்ன செய்துவிட்டு வந்திருக்கிறார் என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. திடீரென வெளியில் இருந்து கனத்த பெட்ரோல் வாசனையும் அனல் கலந்த காற்றும் வந்ததில் ஏதோ பயங்கரம் நடந்திருப்பதை பரமேஸ்வரியால் உணர முடிந்தாலும் எழுந்து போய் பார்க்க தைரியம் வரவில்லை அவளுக்கு. அநியாயமாக உறங்குவது மாதிரி இருக்க வேண்டியிருந்தது அவள்.

இதற்குள் வெளியில் யாரோ உரத்த குரலில் கூக்குரலிடுவது கேட்டது. நான்காவது வீட்டுத் தைலாவின் மகன் சிறுநீர் கழிக்க அவனுடைய வீட்டுக் கதவைத் திறந்து வந்தவன் மோட்டார் சைக்கிளை பெருந் தீ சூழ்ந்திருப்பதைப் பார்த்து "அய்யோ தீ; அய்யோ தீ" என்று கத்தினான். ஒரு சில நிமிடங்களில் எல்லா வீட்டுக் கதவுகளும் திறக்கப்பட்டு விட்டன. சப்தமும் கூச்சலுமாகக் கேட்டது. கட்டுப்படுத்த முடியாமல் பரமேஸ்வரி எழுந்து நின்றுவிட்டாள். அப்போதுதான் சப்தம் கேட்டு எழுந்து கொண்டவர் மாதிரி உலகநாதனும் "என்ன, என்ன - என்ன ஆச்சி?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து நின்றார். ஒன்றும் தெரியாதவர் போல வெளியில் ஓடியவரின் பின்னால் பரமேஸ்வரியும் ஓடினாள்.

எரிந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளைச் சுற்றி பெரிய கூட்டமே திரண்டு விட்டிருந்தது. நெருப்

பின் சிவந்த வெளிச்சம் எல்லோரின் முகங்களிலும் கோரமாக பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அச்சுதன் விக்கித்துப் போய் நின்றாள். உண்மையைப் புரிந்து கொண்டு விட்டதாலேயே பரமேஸ்வரி உறைந்து போயிருந்தாள். இவ்வளவு கொடிய குற்றத்தை உலகநாதனிடம் எதிர்பார்த்திராததால் அவளுடைய மனம் அதிர்ந்து வெலவெலத்துப் போயிருந்தது. கண்ணால் பார்க்கவில்லையே தவிர இந்த பயங்கர செயலை செய்திருப்பவர் உலகநாதன்தான் என்பதில் பரமேஸ்வரிக்கு சந்தேகமே இல்லை. ஆனாலும் இந்த விஷயத்தில் இந்த நிமிஷத்தில் என்ன செய்ய வேண்டும் என்றும் தெரியவில்லை அவளுக்கு. உலகநாதன்தான் தீ வைத்தார் என்று ஒரு நிமிஷத்தில் சொல்லிவிடலாம். ஆனால் கண்ணால் பார்க்காத ஒரே காரணத்தால் அதை நிரூபிக்க முடியாது அவளால். சாட்சி இல்லாத நிலையில் உலகநாதன் தப்பித்தும் விடுவார்.

அதுவும் இல்லாமல் பரமேஸ்வரி பழிவாங்க வேண்டியது தீ வைத்த உலகநாதன் என்ற பயங்கரவாதியை இல்லை. உலகநாதன் என்ற வயோதிகக் கணவனைத்தான் பழி வாங்கியாக வேண்டும் அவள். அவளுக்கும் அச்சுதனுக்கும் இடையே பனிப்பந்து போல மலர்ந்திருக்கும் காதல் தக்க தருணத்தில் ஊர் அறிய வெளிப்படுவதுதான் உலகநாதனுக்கான பொருத்தமான தண்டனையாக விளங்கும். அதனால் பரமேஸ்வரி எல்லா உணர்ச்சிகளையும் இறுக்கிக் கொண்டு மௌனமாக நின்றாள்.

சுற்றி நின்ற எல்லாரும் தீ வைத்தது யார் என்று தெரியவில்லையே என்று அங்கலாய்த்துக் கொண்டும் தீ வைத்தவனை வசைமாரி பொழிந்து கொண்டும் இருந்தார்கள். திட்டுக்கள் உலகநாதனுக்கு ஒரு வெற்றி குதூகலத்தை மனதுள் ஏற்படுத்தினாலும் கலைந்து கிடந்த நீண்ட கூந்தலை அள்ளி முடிந்தபடி சிவமதி



சரமாரியாக திருநெல்வேலி மாவட்ட கெட்ட வார்த்தைகளை அள்ளி அள்ளி வீசியதில் படுகாயப்பட்டு விட்டார்! அவருக்குள் இருக்கும் வனவிலங்கு சிவமதியையும் தீயிட்டு கொளுத்த வாலைச் சுழற்றியது! நிஜத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டுதான் இப்படி கெட்ட வார்த்தைகளை இதுதான் சாக்கென்று நினைத்து அள்ளிக் கொட்டுகிறாளோயென்ற சந்தேகம் கூட உலகநாதனுக்கு வந்தது!

ஆனால் அடுத்த ஏழெட்டு நிமிடங்களில் அவருக்குப் புரிந்து விட்டது. சிவமதியின் இந்தக் கெட்ட வார்த்தையின் சாமியாட்ட நோக்கம் பூராவும் அச்சுதனை வலைபோட்டுப் பிடிக்கத்தான் என்பதை உலகநாதன் மோப்பம் பிடித்து விட்டார்! எல்லாம் அவருடைய நேரம்! அவர் எது செய்தாலும் அதில் அவருக்குப் பிடிக்காத ஒரு எதிர்விளைவு நிகழ்ந்து விடுகிறது! மிதிபட்ட சிறுத்தையாக உலகநாதன் பார்த்துக் கொண்டே இருந்தார். தீயை அணைக்கிற பணியில் விழுந்து விழுந்து ஈடுபட்டதில் சிவமதிக்கு சில தீக்காயங்கள் கூட ஏற்பட்டன. அவளுக்கு இதெல்லாம் விழுப் புண்கள்...! இதையெல்லாம் பார்த்து அச்சுதன் ஒரே ஒரு நாளாவது சிவமதியின் உடம்பை ஏற்றுக் கொண்டால் போதும். சிவமதியின் கட்டை எளிதாக வேகும்!

எல்லோருமாக சேர்ந்து நெருப்பை அணைத்து விட்டாலும் மோட்டார் சைக்கிள் முக்கால்வாசிக்கு மேல் எரிந்து நாசமாகி விட்டது. மறுநாளே அவசரமாக ஊர் பஞ்சாயத்துக் கூட்டம் செந்துறையில் கூட்டப்பட்டுவிட்டது. இப்படியொரு குற்றம் அந்த ஊர் எல்லைக்குள் இதுவரை நடந்தது கிடையாது. அதனாலே ஊரே மிகவும் பதட்டமடைந்திருந்தது. குற்றவாளி யார் என்பதை யாராலும் ஊகிக்கவே முடியவில்லை. அதனால் ஆள் ஆளுக்கு குற்றவாளிக்கு சாபம் கொடுத்துத் தள்ளிக் கொண்டிருந்தார்கள். உலக

நாதன் எந்த உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் மௌனமாகவே ஊர் கூட்டத்தில் உட்கார்ந்திருந்தார். ஏதோ ஒரு வெறியில் தீ வைத்துவிட்டாரே தவிர கண்டு பிடித்து விடுவார்களோ; மாட்டிக்கொண்டு விடுவேமோ யென்று மனசுக்குள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார். அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தார். தள்ளி உட்கார்ந்திருந்த அச்சுதனையும் அடிக்கடி கள்ளப் பார்வை பார்த்தார். அச்சுதனுக்கு உலகநாதன் மேல் சந்தேகம் வரத்தான் செய்தது ஆனாலும் சந்தேகத்தை அவனே நிராகரித்து விட்டான். உலகநாதன் ஒரு மனமுதிர்ச்சியற்ற மிக கடினமான ஆனாதிக்கக் கிழவராகத்தான் தெரிந்தாரே தவிர தீ வைக்கிற அளவிற்கு பயங்கர மனிதராகத் தெரியவில்லை. அதே நேரம் தீ வைக்கிற அளவிற்கு அவன் மேல் பகைமை காட்ட கிராமத்தில் வேறு யார் இருக்கவும் சாத்தியம் இருப்பதாகவும் தெரியவில்லை. பகைமை காட்ட காரணமும் இல்லை. பிறகு?

எந்த முடிவிற்கும் வர முடியாமல் ஊர் பஞ்சாயத்து கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டபோது அச்சுதன் சுருக்கமாக அவனுடைய தீர்மானத்தைச் சொல்லிவிட்டான். இந்த ஆபத்தான சூழ்நிலையில் தொடர்ந்து செந்துறையில் தங்கியிருப்பதைப் பற்றி யோசிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக அவன் கூறியதை ஊர் ஜனம் ஏற்றுக்கொள்ள ஒட்டு மொத்தமாக மறுத்துவிட்டது. அச்சுதனுக்கு நடந்துவிட்ட அநியாயத்திற்கு ஜனம் அவனிடம் மன்னிப்பும் கேட்டது. குற்றவாளியை எப்படியும் கண்டு பிடித்தே தீர்வோம் என்று உறுதி சொன்னது. ஆராய்ச்சி முடிகின்றவரை கிராமத்தில் இருந்துவிட்டு சந்தோஷமான மன நிறைவுடன் தான் கிளம்பிச் செல்ல வேண்டும் என்றும் ஊர் ஜனம் ஒட்டு மொத்தமாக அச்சுதனுக்கு வேண்டுகோள் விடுத்தது.

உலகநாதனுக்கு ஊர் பஞ்சாயத்து அலுப்பாக இருந்தது. 'போறேன்னு சொல்றவனை போய் தொலைய



விடுங்கலே...' என்று மனதிற்குள் முணங்க நினைத்தவர் கட்டுப்பாடு இழந்து கொஞ்சம் உரக்க சொல்லி விட்டார்.

"அண்ணாச்சி என்னவோ சொல்றியளே..." என்று இரண்டு மூன்று பேர் கேட்டதும் உலகநாதன் ஏதோ கலைந்தவர்போல முழித்தார். பயந்தார். திரும்பிப் பார்த்தார். ஏதோ ஒன்று ஞாபகத்திற்கு வந்துவிட்டது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சட்டென எழுந்து நின்றார். "பேசவே தடுமாறுது எனக்கு! ஏன்னா - என் வீட்டுக்கு வந்திருக்கிற பையனுக்கு இப்படி ஒரு அநியாயம் நடந்திருக்கு. இதுக்கும் மேல வேற ஒரு கொடுமை இவனுக்கு நடந்து போயிருச்சின்னா எனக்குத்தான் அசிங்கம்! தர்மராசனுக்கு நாந்தான் பதில் சொல்லியாகணும்! அதான் சொல்றேன் — போயிடலாம்னு தம்பி மனசுக்குப் பட்டதுன்னா — போக விட்டுருவோம்! ஏதோ தலைக்கு வந்தது தலைப்பாகையோட போயிருச்சின்னு நெனைச்சி நம்மளும் பெருமூச்சு விடலாம்..."

உலகநாதன் இதை திக்கி திணறி சொல்லி முடித்த போது தாங்க முடியாத கோபம் வந்தது சிவமதிக்குத் தான்! வரிந்து கட்டிக் கொண்டு வந்து விட்டாள்.

"பெரிய வீட்டு அண்ணாச்சி சொல்லுறதை ஏத்துக்க முடியாது" என்றாள். இதற்கு சிவமதி உலக நாதனின் கன்னத்தில் அறைந்திருக்கலாம்! உலகநாதனின் வால் மனதில் ஆடியது அவருடைய வார்த்தைக்கு எதிர்வார்த்தை அவர் பார்க்கப் பிறந்த சிறுக்கியிடம் இருந்தே வருகிறது.

"தீ வச்ச சிறுக்கி மவனை யாருன்னு கண்டு பிடிக்காம மெட்ராஸ்காரங்களை கிராமத்தை விட்டுப் போக விடவே கூடாது! அவுஹளுக்கு செய்யிற பாவம் அது! நாமதான் அவுஹளுக்கு பாதுகாப்புத் தரணும். பத்திரமாவும் பாத்துக்கணும்..."

உலகநாதன் சிவமதியை ஒரு நாயைப் பார்ப்பது போல பார்த்தார். அவரின் வன்முறை பசி அடுத்த இரையை கேட்டது' உகலநாதன் எதிர்ப்பே இல்லாமல் வாழ்ந்தவர்! இப்போது எதிர்படும் எல்லாமே அவருள் எதிர்ப்புணர்வை கிளறிவிட்டன! எதிர்ப்பை நோக்கி மிகுதியாக உணர்வு வேகப்பட்டவரின் உடம்பு எங்கேயோ கட்டுப்பாட்டை தவறவிட உலகநாதனின் உடல் யாருமே எதிர்பாராமல் தடுமாறி தரையில் சாய்ந்தது.

உடனே கூட்டம் கலகலத்து விட்டது. மூன்று பேர் சேர்ந்து உலகநாதனை அலாக்காக தூக்கிக் கொண்டு அவருடைய வீட்டிற்கு ஓடினார்கள். அன்றைய நாள் முறைப்படி டாக்டர் செந்துறை வந்திருந்ததால் நல்ல வேளையாகி விட்டது. டாக்டர் உடனே உலகநாதனின் வீட்டுக்கு விரைந்தார். அவசரமாக ஒரு ஊசியை போட்டார். பதினைந்து நிமிடம் கழித்து உலகநாதன் கண் விழித்தார். ரத்தக் கொதிப்பு அவருக்கு இருநூறை தாண்டியிருந்தது. டாக்டர் வழக்கமான மாத்திரைகளைத் தராமல் அதிக வீரியமுள்ள புதிய மாத்திரைகளை கொடுத்தார். தூக்கத்திற்கும் அதிக வீரியமுள்ள மாத்திரைகள் தந்தார், மனப்பதட்டத்தை தணிக்கவும் சில மருந்துகள் தந்தார். நாளை மறுநாள் வந்து பார்ப்பதாக கூறிவிட்டு டாக்டர் கிளம்பியபோது பரமேஸ்வரி வாசல்வரை அவரைப் பின் தொடர்ந்தாள். டாக்டர் அவளைக் கேட்டார்.

''டெய்லி ரத்தக் கொதிப்புக்கான மாத்திரைகளை அய்யா சாப்பிடுகிறாரா?''

''எனக்குத் தெரிஞ்சி எந்த மாத்திரையும் அவங்க சாப்பிடற மாதிரி தெரியலையே'' பரமேஸ்வரி சொன்னாள்.

''டெய்லி அவர் பிரஷர் மாத்திரை சாப்பிட்டே ஆகணுமே...''



''எப்ப இருந்து அவங்களை டெய்லி மாத்திரை சாப்பிடச் சொல்லியிருக்கீங்க?''

''ஏம்மா—தெரியாதா உனக்கு?''

''தெரியாதுங்க டாக்டர்''

டாக்டர் சிறிது குழம்பினார் ''நாலைஞ்சி வருஷமாவே அய்யாவுக்கு ரத்தக் கொதிப்பு இருக்கும்மா... அப்ப இருந்தே நான் எழுதிக் குடுத்த மாத்திரைகளை சாப்பிட்டு வரார். எந்தக் காரணத்தைக் கொண்டும் மாத்திரை சாப்பிடறதை நிறுத்திடக் கூடாது. நிறுத்தினா ஆபத்து... கவனிச்சிக்குங்க...''

எல்லோரும் கலைந்து போனார்கள். உலகநாதனுக்கு தலையைக்கூட உயர்த்த முடியாமல் இருந்ததால் பேசாமல் படுத்துக் கிடந்தார். பரமேஸ்வரிக்கு உலகநாதனைப் பார்க்கவே அருவறுப்பாக இருந்தது. பயங்கரவாதியாகவே திரிந்துவிட்ட அவரின் அருகில் நடமாடக்கூட பயமாக இருந்தது அவளுக்கு. மனதால் அச்சுதனுடன் ஏற்பட்டிருக்கும் இணைப்பு நிரந்தர உறவுப் பிணைப்பாக எப்போது எப்படி வாழ்வில் அமையும் என்று பரமேஸ்வரியின் மனம் கலங்கியது. உலகநாதனுடன் இந்த வீட்டிற்குள்ளிருக்கும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாக இருக்கும் அவலத்தை நினைத்து கண்கள் கண்ணீரை உகுத்தன. பரமேஸ்வரியைப் பொறுத்த வரையில் அற்றது அற்றதாகிவிட வேண்டும். எல்லாமே அற்றுப் போய்விட்ட வயோதிகன் ஒருத்தனுக்கு சமைத்துப் போட்டுக் கொண்டு, அவனுடைய தீய குற்றத்தை நெஞ்சில் போட்டு சுமந்து கொண்டு... 'யம்மா — இதுக்கு மேல என்னால முடியாதும்மா. அச்சுதா! என்னை சீக்கிரமா கரை சேர்த்திடு. இல்லேன்னா என்னைக் காப்பாத்தவே முடியாம போயிடும்ய்யா... என்னைக் கூட்டிட்டு போயிடு உடனே... இல்லே—நானே இல்லாம போயிடுவேன்...'

# 29

வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்று டாக்டர் சொல்லியிருந்தது உலகநாதனுக்கு ரொம்ப வசதியாக இருந்தது. பேசாமல் படுத்தே கிடந்தார். யாரைப் பார்க்கவும் பயமாக இருந்தது அவருக்கு. மனம் இயங்கிய வேகத்திற்கு தனிமையே ஏற்றதாக இருந்தது. ஆனால் யாராவது வந்து வந்து உடல் நலம் விசாரித்ததில் உலகநாதனின் தனிமை தொந்தரவுக்கு உள்ளாகிக் கொண்டிருந்தது. அது மட்டுமில்லை; யாருக்கும் தெரியாமல் அவர்தான் தீ வைத்தவர் என்ற உண்மை தெரியாமல் அவரிடமே அதைப்பற்றி ஒவ்வொருத்தரும் அங்கலாய்ப்புடன் பேசியதைக் கேட்டு கேட்டு உலகநாதனுக்கு ஆக்ரோஷம்தான் ஜாஸ்தியானது. மற்றொரு குற்றத்திற்காக அவரின் மனம் அலை பாய்ந்தது. அல்லது அத்தனையையும் விட்டு விட்டு காந்திமதியிடம் போய் சேர்ந்துவிட வேண்டும். இன்னொரு குற்றம் செய்வதைவிட அதுதான் முழுமையான நிவாரணமாக இருக்கும் என்று தோன்றியது உலகநாதனுக்கு.

அத்தனை உயர்ந்த ரத்தக் கொதிப்பிலும் உலகநாதன் விருட்டென்று ஆவேசம் கொண்டு எழுந்து உட்கார்ந்தார். நிஜமாகவே பரமேஸ்வரியை இளம் விதவையாக்க அவரின் விபரீத மனம் ஆசைப்பட்டது! அதுதான் அவளுக்கு ஏற்ற ஒரே ஒரு பாடமாக இருக்கும்! உலகநாதனுக்குக்கூட அதுதான் பாடம். பரமேஸ்வரியிடம் அச்சுதனிடம் சிவமதியிடம் என வரிசையாக அவர் தோற்றுப் போயிருந்தார்! அச்சுதனை ஊரைவிட்டு விரட்டப் பார்த்தால் அதிலும் தோல்விதான். அச்சுதனுக்கு அனுதாபப்பட்டு பல



வீடுகளில் இருந்து சாப்பாடு போவதாகவும் செய்திகள் வந்தபோது உலகநாதனின் தோல்வி மனப்பான்மையும் ஜாஸ்தியாகியது. ஆத்திரமும் ஜாஸ்தியாகியது. அதுவும் ஒரு அமாவாசை சாப்பாடு சிவமதியின் வீட்டில் இருந்தே போயிற்றாம்! உலகநாதனின் உச்சந்தலை அடுப்பாக சுட்டது. ஊர் பஞ்சாயத்து கூட்டம் மீண்டும் கூடி மோட்டார் சைக்கிளுக்கு தீ வைத்த குற்றத்தை போலீஸில் போய் புகார் செய்வதைப் பற்றி யோசித்ததாக தெரிய வந்தபோது உலகநாதன் அப்படியே 'உக்கி' போய்விட்டார்! எந்தத் தூக்க மாத்திரையும் வேலை செய்யவில்லை அவருக்கு. எல்லாவற்றையும் நோக்கி சீறிக் கிளம்ப உலகநாதனின் ஒரு பகக மனம் பீறிட்டாலும் அவரின் மற்றொரு பக்க மனம் எல்லாவற்றில் இருந்தும் தனிமைப்பட உள் வாங்கியும் கொண்டது. இந்த மனப் பிளவையின் குழப்பத்தில் உலகநாதன் மூழ்கிக் கிடந்தபோது பரமேஸ்வரியும் பெரிய குழப்பத்தில் இருந்தாள்.

தீவைத்த குற்றம் ஊர் ஜனங்களால் காவல் துறைக்குக் கொண்டு போகப்பட்டால் என்ன நடக்கும் என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. உலகநாதன் கைது செய்யப்பட்டால் அதைவிட கொடிய காட்சி வேறு எதுவும் இருக்காதென்று பரமேஸ்வரிக்குத் தோன்றியது. அச்சுதனும் அதிர்ச்சியிலும் வேதனையிலும் இருந்ததால் ஊர் ஜனங்களுடன் எங்காவது மரத்தடியில் மௌனமாக உட்கார்ந்திருந்தான். அவனுடைய மனதின் ஒரு மூலையில் உலகநாதனைப் பற்றித்தான் சந்தேகம் இருந்தது. ஆனால் ஊரில் யாருக்குமே அந்தச் சந்தேகம் இல்லாததால் அச்சுதனால் அவனுடைய சந்தேகத்தை காட்டிக்கொள்ள முடியவில்லை. ஊர் பூராவும் பதட்டம் நிலவிக் கொண்டிருந்ததால் உடனே பரமேஸ்வரியை மலைச்சரிவில் நாவல் மரத்தின் கீழ் சந்திக்கவும் தயக்கமாக இருந்தது.

ஆனால் ஊர் ஜனம் போலீஸில் புகார் செய்துவிடலாம் என்ற ஒட்டு மொத்த அபிப்பிராயத்திற்கு வந்தபோது புகார் செய்வதற்கு முன் ஒரு தடவை பரமேஸ்வரியை தனியாகப் பார்த்துப் பேசிவிடுவது அவசியமாகத் தெரிந்தது அச்சுதனுக்கு. ஜன்னல் வழியாக பரமேஸ் வரியிடம் சைகைகளாலும் தணிந்த குரலாலும் நாவல் மரத்தடியில் சந்திக்கும் நேரத்தைத் தீர்மானம் செய்து கொண்டான்.

எரிந்து நாசமாகிப் போன மோட்டார் சைக்கிளை அலங்கோலமாக நிற்பதைப் பார்த்துக் கொண்டே அச்சுதன் குறித்த நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன் பாகவே மெதுவாக மலைச்சரிவை நோக்கி நடந்தான். பரமேஸ்வரி சரியான நேரத்தில் கிளம்பினாள். வீரிய மான மாத்திரைகள் சாப்பிட்டு வருவதின் இறுக்கத்தில் உலகநாதன் படுக்கையில் சுருண்டு படுத்திருந்தார். இந்தச் சில நாட்களில் அவர் இளைத்திருப்பது தெரிந் தது. பரமேஸ்வரி அவருடைய முகத்தைப் பார்க்கா மலேயே ''கோயிலுக்குப் போயிட்டு வரேன்'' என்று சொல்லிவிட்டு வாசலில் இறங்கினாள். அவள் கிளம்பி போனது உலகநாதனுக்கும் சிறிது சுதந்திரமாக இருந்தது.

மலைச்சரிவில் பரமேஸ்வரி குறிப்பிட்ட இடத்தை அடையாளம் தெரிந்து சென்றடைந்த அச்சுதன் அங்கு சூழ்ந்திருந்த அழகையும் அருளையும் பார்த்ததில் பதட்டம் வடிந்து மனம் லேசானான். ஆங்காங்கு குயில் களின் சப்தம் ஒலித்துக் கொண்டிருந்தது. எங்கும் ஏகாந்தத்தின் மென்மையான நிசப்தம். தாவரங்களின் குளுமை... பரமேஸ்வரியை சந்திக்க செந்துறையில் இதற்கு மேல் சிறந்த இடம் எதுவும் இருக்கமுடியாது.

ஒற்றையடிப் பாதையின் தூரத்து இடதுபுற திருப் பத்தில் பரமேஸ்வரியின் உருவம் தெரிந்தது. எங்கு



வந்து சேர வேண்டுமோ அங்கு வந்து சேர்ந்துவிட்ட உணர்வுப் பெருக்கில் பரமேஸ்வரி சில நிமிடங்கள் தூரத்திலேயே நின்று விட்டாள். கொஞ்சமும் எதிர் பாராமல் வாழ்க்கையில் தனக்குக் கிடைத்திருக்கும் பெண்ணை அச்சுதன் பார்த்துக்கொண்டே இருந்தான். அவனையும் அறியாமல் அச்சுதனின் கைகள் பரமேஸ் வரியை நோக்கி நீண்டன. அடுத்த நிமிடம் பரமேஸ்வரி அச்சுதனின் கைகளுக்குள்ளும் அச்சுதன் பரமேஸ்வரி யின் கைகளுக்குள்ளும் பத்திரமாக இருந்தார்கள். உலகநாதனின் வயோதிகக் கெடுபிடிகளால் துவண்டு கருகிப் போயிருந்த பரமேஸ்வரியின் மிருதுவான மன துக்கு அச்சுதனின் இளம் அணைப்பு மழைச்சாரலின் இதத்தைத் தந்தது.

''நான் நந்தவனத்துக்கு வந்து சேர்ந்திட்டேன் தானே?'' பரமேஸ்வரி கரகரத்த குரலில் கேட்டாள்.

''இன்னுமா சந்தேகம் பரமேஸ்வரிக்கு?''

''சந்தேகமில்லை. தாங்க முடியாத பரவசம்...''

''இந்த அழகான நிமிஷங்களுக்கு முன்னாடி நமக்கு இந்த மோட்டார் சைக்கிள் சம்பவம் தேவையா பர மேஸ்வரி?'' அச்சுதன் சிறு கலக்கத்துடன் கேட்டான்.

''இது நல்லதுக்காகக்கூட இருக்கலாமே''

''ஆனா நடந்திருக்கும் விஷயம் நல்லது இல்லை யேம்மா. என் அருமையான பைக் போச்சே'' அதை என்னால தாங்க முடியலை டார்லிங்...''

அச்சுதன் 'டார்லிங்' என்று சொன்னதில் சொக்கிப் போன பரமேஸ்வரி அவனுடைய மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''எனக்கு ஒரு சந்தேகம் வந்திருக்கு. நமக்குள்ள ஏற்பட்டிருக்கும் உறவை யாரோ சென்ஸ் பண்ணித்

தான்—ஒரு எச்சரிக்கை மாதிரி மோட்டார் சைக்கிளுக்கு தீ வச்சிருக்காங்களோன்னு தோணுது. அதனால பயமா யிருக்குக் கொஞ்சம்'' அச்சுதன் சொன்னான்.

''அதுக்கு சான்ஸே இல்லை. ஏன்னா—அந்த சந்தேகம் வந்திருந்தா அல்லது அதைக் கண்டுபிடிச் சிருந்தா—தீ முதல்ல எனக்குத்தான் வைக்கப்பட் டிருக்கும்''

''அதெப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க?''

பரமேஸ்வரி மிகவும் இரக்கப்படத்தக்க விதத்தில் அச்சுதனைப் பார்த்தாள்.

''சொல்லவும் பயமாயிருக்கு. சொல்லாமலும் இருக்க முடியலை...'' சொல்லும்போதே அவளின் கண் கள் கலங்கி விட்டன.

''பரமேஸ்வரி''

''இப்பவே எனக்கு உங்ககூட ஓடிப் போயிடணும் போல இருக்கு. ஒவ்வொரு நிமிஷமும் நரகமா இருக்கு இங்கே...''

''ஸாரி பரமேஸ்வரி. இன்னும் நான் பிளானே பண்ணலை. எப்போ எப்படி உங்களை அழைச் சிட்டுப் போறதுன்னு முதல்ல நான் எனக்குள்ள ஒரு வரைபடம் வரைஞ்சிக்கணும். நம்ம விஷயம் தீ வைக் கிற மாதிரியான அவசரமா அழிக்கிற விஷயமில்லை. அழகான உறவை கட்டுமானம் செய்கிற ஆக்கப் பூர்வ மான விஷயம் இது. அதனால நாம் காலத்தல பெய்யற மழையா இருக்கறது ரொம்ப ரொம்ப முக்கியம். அவ சரப்பட்டு காலம் தவறிய மழையா ஆயிடக் கூடாது.''

''ரொம்ப அழகான உதாரணம் சொன்னீங்க. ஆனா வீட்ல அவங்களைப் பார்க்கிற ஒவ்வொரு நிமிஷமும் நான் அவசரத்தில் தவிக்கிறேன்''



''ஏன்—புதுசா ஏதாவது பிரச்னையை கிளப்பியிருக் காரா?'' சொல்லுங்க பரமேஸ்வரி.''

''சொல்லாமலே தெரிஞ்சிக்க முடியலையா உங்க ளால?''—பரமேஸ்வரியின் கண்கள் ஏதோ ஒரு ரகசி யத்தைச் சொல்லின.

அச்சுதனின் புருவங்கள் நெரிந்தன. பரமேஸ்வரி யின் முகத்தைக் கையில் ஏந்தியவாறு கேட்டான் ''என்ன சொல்றீங்க பரமேஸ்வரி?''

''உங்களோட மோட்டார் சைக்கிளுக்கு தீ வச்சது அவங்கதான்!''

தன் சந்தேகம் ஊர்ஜிதம் ஆகிவிட்ட கடுமையில் அச்சுதன் கண்களை மூடிக் கொண்டான். அவனுடைய இளம் உடல் சற்றே குலுங்கியது. உணர்வுகள் வேக மாக பதட்டமடைந்தன. வார்த்தையே வரவில்லை அவனுக்கு.

''பயமாயிருக்கா அச்சுதனுக்கு?'' கேட்கும் போதே பரமேஸ்வரியின் குரல் தேம்பியது.

''பயமாயில்லையம்மா... ரொம்பப் பதட்டமா யிடுத்து. விடக்கூடாது அவரை. விடவே கூடாது. சொல்லுங்க. எப்படி எப்போ தெரியும் உங்களுக்கு. ஏன் உடனே சொல்லலை இதை...?''

பரமேஸ்வரி நடந்ததை விவரித்தாள்.

''ஆனா அவர் தீ வைத்த காட்சியை நீங்க பாக் கலை?''

''பாக்கலை. ஆனா சந்தேகமே இல்லாம தீ வச்சது அவங்கதான். திரும்பி வந்து அவங்க படுத்துக்கிட்ட போது பெட்ரோல் வாசனை அடிச்சது.''

''இதைமட்டும் நீங்க போலீஸ்ல சொன்னா போதும் பரமேஸ்வரி.''

''தயவு செஞ்சி என்னை மன்னிச்சிடுங்க. உங்களைத் தவிர வேற யார்கிட்டேயும் இதைச் சொல்லப் பிடிக்கலை எனக்கு... அதுவும் போலீஸ்காரங்ககிட்ட என்னால சொல்லவே முடியாது''

''போலீஸ்ல புகார் பண்ணிடலாம்னு பஞ்சாயத்துல முடிவு பண்ணியிருக்காங்கம்மா.''

''அதுவே வேண்டாம்னு படுது எனக்கு. அவங்களை அது இன்னும் ரொம்ப சிக்கல் பண்ணிடும்...''

''நமக்கு சிக்கல் வராதும்மா... போலீஸ் உலகநாதனை அரெஸ்ட் பண்ணிட்டா - நிதானமா அழகா நாம் நம்மோட வரைபடத்தை ஒண்ணா உக்காந்தே வரையலாம்...''

''போலீஸ் வேண்டாம் அச்சுதா. வரைபடத்தை ரகசியமா அவசரமா வரைவோம்''

''பரமேஸ்வரி செல்லத்தை புரிஞ்சிக்க முடியலையே.''

''உலகநாதன் என்ற மனுசனை தண்டிக்க பிடிக்கலைய்யா எனக்கு. அந்த வயோதிக புருஷனைத்தான் தண்டிக்கணும் எனக்கு.''

''இப்பேற்பட்ட மனுஷி எனக்குக் கிடைச்சது என்னோட அதிர்ஷ்டம்தான்.''

''இந்த அச்சுதன் கிடைக்க நான் மட்டும் அதிர்ஷ்டசாலி இல்லையா?''

''போலீஸ்ல போய் ஜஸ்ட் ஒரே ஒரு புகார் மட்டும் குடுத்திடுவோம் - ப்ளீஸ்''

''அதுதான் ஊர் முடிவுன்னா - நடக்கட்டும். ஆனா மறந்துகூட அவங்க மேல ஒரு சந்தேகம் இருக்கறதா போலீஸ்ல மூச்சு விட்டுடாதீங்க. போலீஸ்ல குடுக்கிற புகாரே அந்த மனுசரை மானசீகமா கைது பண்ணிடும்!



அது போதும் நமக்கு. பைக் போனா போகட்டும், ஏதோ திருஷ்டி கழிஞ்சதுன்னு நெனைச்சிப்போம். என்கிட்ட பணம் இல்லை. இருந்தா புதுசா உங்களுக்கு நான் வாங்கித் தந்திடுவேன் பைக்!''

''ஓ! திஸ் இஸ் பரமேஸ்வரி. எனக்கு தோணலையே இது. மூடிப்போன கதவையே பாத்திண்டு இருந்துட்டேன். நாளைக்கே புது பைக் வாங்கிடறேன். திருநெல்வேலியில 'நெல்லை மோட்டார்ஸ்'னு ஒரு கம்பெனி இருக்கு. அதன் முதலாளி என் அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவர். அப்பாவுக்கு போன் பண்ணிச் சொல்லிட்டு புது ஹீரோ ஹோண்டா வாங்கிடப் போறேன். அந்த நெல்லை மோட்டார்ஸ்தான் ஹீரோ ஹோண்டாவுக்கு டீலர்.''

''பழைய பைக் பத்தி அப்பாகிட்ட என்ன சொல்வீங்க?''

''உண்மையை இப்பச் சொல்லக்கூடாது. நேரா கிளம்பி வந்திடுவார்.''

''நேரமாகுது. கிளம்பட்டுமா?''

''இன்னொரு சந்தோஷமான மேட்டர் இருக்கு பரமேஸ்வரி. அதையும் பார்த்து ஷேர் பண்ணிக்காம போனா எப்படி?''

''என்ன சந்தோஷமான மேட்டர்?''

''சிறிது தள்ளி ஒரு கல்லின் மேல் வைத்திருந்த பெரிய ஃபைலை அச்சுதன் எடுத்து அதற்குள் பெரியதாக ப்ளோ-அப் செய்து லேமினேட் பண்ணப்பட்ட பரமேஸ்வரியின் வண்ணப் போட்டோக்களை எடுத்து அவளிடம் ஆசையுடன் காட்டினான்.

போட்டோக்களைப் பார்த்த பரமேஸ்வரியின் கண்கள் மயில் தோகையென விரிந்து விட்டன. மகிழ்ச்சியில் அவளின் மனம் விம்மியது. போட்டோ

வில் தெரிந்த அவளுடைய அழகு அவளையே சொக்க வைத்தது.

"பரமேஸ்வரியோட வாழ்க்கை கலர் ஃபுல்லா மாறிடப் போறது என்கிறதுக்கு இந்த போட்டோஸ் தான் முதல் அடையாளம்னு சொல்லலாமா?"

"தாராளமா சொல்லலாம். கைதியா இருக்கும் போதே இவ்வளவு அழகா இருக்கேன்னா - ஆச்சர்யந் தான்."

"இது அழகான கண்ணால; வெறும் அழகான மூக்கால வந்த அழகு இல்லை - பரமேஸ்வரி. உங்களோட ஒரு பக்கத்ல இருக்குற அழகான இன்னொசென்ஸ்; இன்னொரு பக்கத்ல இருக்குறதே தெரியாம அடக்கமா இருக்கிற இண்டெலிஜென்ஸ் - இந்த ரெண்டும் அற்புதமா கலந்த மென்மையான கலவைதான் - உங்களோட அழகா தெரியறது பரமேஸ்வரி. நான் அட்மைர் பண்றது இந்த அழகான கலவையைத்தான். என்னோட ஆராய்ச்சி இந்த ஊர்ல முடியப் போறதோ இல்லையோ - என்னோட வேற ஒரு மானசீக தேடல் முடிஞ்சுப் போயிடுத்து. இந்த ஒரே ஒரு காரணத்துக்காகவே நாம் உலகநாதனோட பெயரை போலீஸ்ல குறிப்பிட வேண்டாம். ஆனா ஒண்ணு பரமேஸ்வரி; இந்த வன்முறை அவரோட மனநலத்துக்கு நல்லது கிடையாது. வெறும் காம்ப்ளெக்ஸால மட்டும் இவ்வளவு கோரமான மூர்க்கத்தனத்துக்கு ஆளாகிறது ரொம்ப அப் நார்மலான விஷயம். யோசிச்சுப் பார்த்தா பைக்குக்கு அவர் தீ வச்சது குற்றம் கிடையாது. அது ஒருவிதமான மெண்ட்டல் டிஸ்ஆர்டர். உலகநாதனோட மனம் கட்டுடைந்து போன நிலைமைக்கு உள்ளாகியிருக்கு பரமேஸ்வரி. கிட்டத்தட்ட ஒரு மனநோயாளி என்கிற லெவல்லுக்கு வந்திட்டார். ரொம்ப ஜாக்கிரதையா இருங்க..."



"நீங்க சொல்லும் போதுதான் தெரியுது அச்சுதன். அவங்க முன்னே மாதிரி இல்லை. எதுக்கும் பயப்படாதவங்க - எதுக்கோ பயந்த மாதிரியே இருக்காங்க. பார்வையெல்லாம் கூட ரொம்ப குழம்பித் தெரியுது."

"என்னோட புது பைக் வரும்போது பாருங்க - இன்னும் மோசமான காம்ப்ளெக்ஸ்க்கு உந்தப்படுவார். அதுக்கும் தீ வைக்கணும்னு அவரோட மனசுல வெறி வரும். தீ வைக்க ஒரு பக்கம் பயமாவும் இருக்கும். பயம் ஜெயிச்சிட்டா தீ வைக்க மாட்டார். வெறி ஜெயிச்சிட்டா தீ வச்சிடுவார்..."

"பயமாயிருக்கு அச்சுதா"

"பயப்படாதே கண்ணம்மா. ஒரு மிகப் புது சிருஷ்டிக்கு பழைய ஒண்ணு அழிவுபட்டே ஆகணும். சிருஷ்டியின் இந்த விதியை மாத்தவே முடியாது... - இந்த விதியை நம்பி தைரியமாயிருந்தா போதும்..."

"விதிவிலக்கா எதுவும் நடந்திடாதே?"

"நடக்காது..."

"என் செல்லம் சொல்றதுக்காக விதியை நம்பறேன்."

"செல்லம்னு என்னைச் சொன்ன ஒரே காரணத்துக்காகவே இந்த அச்சுதன் பரமேஸ்வரியின் விதியையே மாற்றி எழுதுவான்."

"வார்த்தையே போதும்டா செல்லம். என் விதியும் வாழ்க்கையும் உன் கையில்தான்"

அச்சுதன் உறுதியுடன் கைகளை விரித்துக் காட்ட பரமேஸ்வரி அவனுடைய கைகளுக்குள் அவளை இழைத்துக் கொண்டாள்......

# 30

வீரியமுள்ள மாத்திரைகள் கொடுக்க ஆரம்பித்து ஐந்து நாட்களாகியும் உலகநாதனின் ரத்தக் கொதிப்பு குறையாமலேயே இருந்ததில் டாக்டர் கவலையாகிவிட்டார். இன்னும் மூன்று நாட்களில் ரத்தக் கொதிப்பு தொடர்ந்து இப்படியே இருந்தால் உலகநாதனை திருநெல்வேலியில் ஆஸ்பத்திரியில்தான் சேர்க்க வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போனார். செத்தாலும் சாவேனே ஒழிய ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆக மாட்டேன் என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டு உலகநாதன் படுக்கையில் இழுத்துப் போர்த்திக் கொண்டார். ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆனால் அவரை கவனித்துக்கொள்ள பரமேஸ்வரி சவத்தையும் கூட்டிக் கொண்டு போக வேண்டும்! இருக்கிற வம்பில் அந்தப் புது வம்பையுமா துட்டு கொடுத்து வாங்க வேண்டும்?! உலகநாதன் தீர்மானம் செய்துவிட்டார். எவ்வளவு சீக்கிரம் காந்திமதியிடம் போய் சேர்ந்துவிட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் போய் சேர்ந்துவிட வேண்டும்... உயிரைக்கூட சுமந்து கொண்டிருக்க முடியவில்லை அவரால்...

படுக்கையில் சுருண்டு கிடந்த உலகநாதனின் காதுகளுக்குப் புதிய செய்தி வந்து சேர்ந்தது. மோட்டார் சைக்கிளுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்யப்பட்டு விட்டது. மணிவாசகம் வந்து இதைச் சொன்னதும் சுருண்டு கிடந்த உலகநாதன் நிமிர்ந்து உட்கார்ந்தார். குற்றவாளியை போலீஸார் கண்டுபிடித்து விடக்கூடிய சாத்தியம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை அவருக்கு. இருந்தாலும் குற்றவாளிக்கு உரிய பீதி உலகநாதனின் மன



துக்குள் உயர் அழுத்த பின்னோட்டம் போல பெரும் அதிர்வுடன் ஓடிக் கொண்டிருந்தது. சிந்தனையும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் நகர மறுத்தது. ஏதோ ஒரு பொறிக்குள் சிக்கி விட்டாற் போலவே இருந்தது. குளிக்கும் அறைக்குள் உலகநாதன் அழுதுகூடப் பார்த்து விட்டார். பொறி திறக்கவே இல்லை. படுக்கையில் படுத்துக்கிடந்து என்ன கண்டோம் என்ற சுயயில் இரக்கத்தில் எழுந்து வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்தார். 'அப்பாடா' என்று இருந்தது. உடம்பில் வெளிக் காற்று பட்டதுமே சுகமாக இருந்தது. விசாரணைக்கு வருகிற போலீஸ் தன்னை விசாரித்தால் தான் என்ன சொல்ல வேண்டும் என்றுகூட உலகநாதன் மனதில் கொஞ்சம் கஷ்டப்பட்டு யோசனை செய்து வைத்து விடடார். பரமேஸ்வரியை பழிவாங்க அவளை விதவையாக்க வேண்டும் என்பதற்காக தான் ஒன்றும் சாக வேண்டியதில்லை என்ற மனமாற்றத்தில் உலகநாதன் கொஞ்சம் நிமிர்ந்தும் உட்கார்ந்தார். எரிந்து போன அச்சுதனின் மோட்டார் சைக்கிளை குற்ற உணர்ச்சியே இல்லாமல் ரசித்துப் பார்த்தார். அப்போது தூரத்தில் வேறொரு மோட்டார் சைக்கிளின் சப்தம் கேட்டு உலகநாதன் சுவாரஸ்யமே இல்லாமல் திரும்பிப் பார்த்தார். அவரின் பார்வை ஸ்தம்பித்தது. அச்சுதன் கம்பீரமாக புத்தம் புதிய ஹீரோ ஹோண்டாவில் மிகக் குறைந்த வேகத்தில் வந்து கொண்டிருந்தான். பின்னால் ஆரவாரக் கூச்சலுடன் சின்னப் பையன்கள் வேறு ஓடி வந்து கொண்டிருந்தார்கள். நிசப்தம் கலைந்து கிராமமே குதூகலத்தில் திளைத்தது. சும்மா இருப்பாளா சிவமதி? புது மோட்டார் சைக்கிளுக்கு கற்பூர ஆரத்தியே எடுத்து விட்டாள்! பரமேஸ்வரி கூட உலகநாதனின் முதுகுக்குப் பின்னால் வந்து நின்று முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் புதிய மோட்டார் சைக்கிளைப் பார்த்துப் பார்த்து ரசித்தாள். உலகநாதன் அச்சுதன் இப்படி

யொரு புத்தம் புது மோட்டார் சைக்கிளில் வந்து இறங்குவான் என்பதை எதிர் பார்க்காததால் கொஞ் சம் சூடு தணிந்து போயிருந்த அவருடைய உச்சந் தலை மறுபடியும் தகிக்க ஆரம்பித்து விட்டது. யாரோ ஒருத்தர் தேங்காய் கொண்டு வந்து புது மோட்டார் சைக்கிளுக்கு திருஷ்டி சுற்றி 'சிதர் தேங்கா' வேறு போட்டார். உலகநாதனின் மனம் வேகமாக கட் டுடையத் தொடங்கிவிட்டது. கோபப் பொறி கண் களில் தெரிய அச்சுதனைப் பார்த்து கேட்டார்.

''இப்ப என்னத்துக்காக நீ இப்படி குடுகுடுன்னு ஓடிப்போய் புதுசா ஒரு பைக்கை வாங்கிட்டு வந்தி ருக்கே?''

''ஸாரி சார்; பைக் இல்லாம என்னால இருக்க முடியாது...'' என்றான்.

''இதுவும் தீ பத்தி எரிஞ்சா அப்பவும் புதுசு வாங்கு வியா?''

''எரியும் போது பாக்கலாம் அதை''

''எரியுது எரியாம போவுது. அதைப்பத்தி எனக்கு ஒண்ணுமில்லை. அநியாயத்துக்கு ஊரோட நிம்மதி போவுது. உன் நிம்மதி என் நிம்மதி எல்லாம் போவுது. எனக்கு ஏறின ரத்தக் கொதிப்பு இன்னும் இறங்கலை. அதுக்குள்ள புதுசு வாங்கிட்டு வந்து நிக்கே நீ... இது ஒண்ணும் நல்லா படலை...!''

''உங்க அக்கறைக்கு நன்றி! புது பைக்குக்கு எது வும் வராது என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. அதுவும் இல்லாம போலீஸ்லேயும் சொல்லியாச்சு. கண்டிப்பா குற்றவாளியை கண்டுபிடிச்சிடறதா சொல்லியிருக்காங்க...!'' அச்சுதன் இதை வேண்டும் என்றே உரத்த குரலில் சொன்னான். உலகநாதனுக்கு அச்சுதன் தன்னை மிரட்டிப் பார்ப்பது போலிருந்தது!



உடனே கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது அவ ருக்கு.

''எங்க ஊரு போலீஸ்காரனைப் பத்தி என்கிட்டே சொல்ற நீ! எழுதி வச்சுக்க - காந்தி படம் போட்ட ரூபா நோட்டுல! போலீஸ்காரன் வந்து எரிஞ்சு போன உன் பைக்கை சனீஸ்வரனை சுத்தற மாதிரி நாலு சுத்து சுத்திட்டு பிரியாணி வாங்கித் திங்க உன்கிட்டேயே துட்டும் வாங்கிட்டு அவன் பாட்டுக்குப் போய் சேரு வான்! தீ வச்சவனை கண்டுபிடிக்கவே போறதில்லை எவனும்...''

''அவங்க வர கொஞ்சம் முன்னே பின்னே ஆகும். ஆனா கண்டிப்பா வரத்தான் போறாங்க. நாயை வேற அழைச்சிட்டு வரப் போறாங்க! மோப்பம் பிடிச்சே கண்டுபிடிக்கப் போறது அது!''

நாய் வரப்போகிறது என்று கேள்விப்பட்டதும் உலகநாதன் திடுக்கிட்டுப் போனார்! அவரின் மேட்டு விழிகள் கொஞ்சம் நிலை குத்தின. அவருடைய மனக் கண் நாயின் பக்கம் தலையைத் திருப்பியது! ஒரே வினாடியில் வேற்றுமையாகி விட்ட உலகநாதனின் பார்வையை கவனித்தபடியே அச்சுதன் புதிய மோட் டார் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டான். அப்போது கொஞ்சம்கூட எதிர்பாராமல் கையில் சின்ன சூட்கேஸு டன் தர்மராஜன் வந்து கொண்டிருந்தார். 'அட - நம்ம தர்மராசன்!' என்று நண்பனை வரவேற்கிற மனநிலை யில் உலகநாதனும் இல்லை. 'அடடே - நம்ம அங்கிள்!' என்று உற்சாகத்துடன் தர்மராஜனை வரவேற்கிற நிலையில் அச்சுதனும் இல்லை. இதை உணர்ந்து கொண்டேதான் தர்மராஜன் சூட்கேஸை உலகநாதன் வீட்டுத் திண்ணையில் வைத்தார்.

''என்ன அங்கிள் - ஒரு வரி எழுதியிருந்தீங்கன்னா திருநெல்வேலிக்கு வந்து நான் உங்களை பிக்-அப் பண்ணியிருப்பேனே...'' அச்சுதன் கேட்டான்.

''இல்லை அச்சுதா; மணிமுத்தார்ல அவசரமா வேலை ஒன்னு வந்திருச்சி. எப்ப அது முடியும்னு தெரியாததால ஒனக்குத் தெரியப்படுத்தலை. இன்னைக்கிக் காலையில வேலை முடிஞ்சி போச்சி. தின்னவேலியில ரெண்டு பேரை பார்க்க வேண்டி வேற இருந்திச்சி. அவங்களையும் பாத்திட்டு அப்படியே கிளம்பி வரேன்...''

உலகநாதனுக்கு வேண்டாத விருந்தாளியாக வந்து நின்ற தர்மராஜனை பார்க்கவே பிடிக்கவில்லை! அவரால் வந்த வினைதானே எல்லாம்! ''வா தர்மராசு! ஊருக்கு வர இப்பத்தான் ஒனக்கு வழி தெரிஞ்சதா?'' - என்று வெறும் உதட்டளவில் விசாரித்தார்.

''என்ன உலகநாதா - எப்படியிருக்கே? என்ன - பாக்கறதுக்கு ஆளே என்னவோ போல இருக்கியே?''

''ஏன் - கிறுக்கனைப் போல இருக்கேனா?'' உலகநாதன் இடக்காக கேட்டார்!

''ஒடம்பு எதுவும் சரியில்லையா ஒனக்கு?''

''வயசானவனுக்கு என்ன வரும்? ரத்தக் கொதிப்பு தான். தலையை தூக்க முடியாம கெடக்கேன்''

அச்சுதன் குறுக்கிட்டான். ''நீங்க ஸார்கிட்டே பேசிண்டு இருங்க அங்கிள் - நான் உங்களை அப்புறமா பாக்கறேன்''

''உன் ஆராய்ச்சி எல்லாம் எவ்வளவு தூரத்ல இருக்கு அச்சுதா?'' தர்மராஜன் கேட்டார்.

''அவன் எங்கே தர்மராசா ஆராய்ச்சி பண்றான்? அதைத் தவிர மத்த எல்லாம் செய்யறான்!'' அச்சுதனை முந்திக்கொண்டு உலகநாதன் சொன்னார். அவருடைய உணர்வுகள் அவிழ்ந்து கொட்டுவதற்குத் தயாராக இருந்தன.



''என்ன அச்சுதா - உலகநாதன் என்னவோ சொல்றான்?'' தர்மராஜன் நிஜமான அக்கறையுடன் கேட்டார்.

''பின்னே - ஆராய்ச்சி பண்ற அமைதியான சூழ்நிலையா இருக்கு இந்த ஊர்ல?'' அச்சுதன் திருப்பிக் கேட்டான்.

''என்ன நீ இப்படிச் சொல்றே?''

''அங்கே பாருங்களேன் நீங்களே - என் ஹீரோ ஹோண்டாவை.''

தர்மராஜன் அந்தத் திசையில் பார்த்தார். புத்தம் புதிய மோட்டார் சைக்கிளும்; எரிந்து நாசமாகிப் போன மோட்டார் சைக்கிளும் அருகருகே நிற்பதைப் பார்த்ததும் தர்மராஜன் திடுக்கிட்டுப் போனார்.

''என்னது - ஒரு பைக் தீயில எரிஞ்ச மாதிரி இருக்கு?'' தர்மராஜன் உலகநாதனைப் பார்த்து கேட்டார்.

''என்னை கேட்டா?'' உலகநாதன் விருட்டென்று எதிர் கேள்வி கேட்டார்.

''என் பைக்குக்கு யாரோ தீ வச்சிட்டாங்க அங்கிள். இப்பத்தான் புது பைக் வாங்கிண்டு வந்தேன்''

''என்னய்யா அநியாயமா இருக்கு. உன் பைக்குக்கு போய் எவன் தீ வச்சான். ஒண்ணும் புரியலையே எனக்கு...''

''போலீஸ்ல கம்ப்ளையண்ட் குடுத்தாச்சி அங்கிள். சீக்கிரமே குற்றவாளி யார்னு தெரிஞ்சிடும். தெரிஞ்ச அப்புறம்தான் ஆராய்ச்சியில எனக்குக் கவனம் போகும். ஒகே அங்கிள். நீங்க பேசிண்டு இருங்க. நான் உங்களை அப்பறம் பாக்கறேன்'' என்று சொல்லிவிட்டு அச்சுதன் வேகமாக நடந்து விட்டான். அவன் போகிற திசையைப் பார்த்து உலகநாதன் தன்வயம்

இல்லாமல் காறித் துப்பினார். தர்மராஜனின் கவனத்தில் இது பதியவில்லை. அவருடைய அதிர்ந்த பார்வை எரிந்துபோன மோட்டார் சைக்கிளின் மேலேயே இருந்தது.

''வா தர்மராசு—வீட்டுக்குள்ள போலாம்''—எழுந்தபடியே உலகநாதன் கூப்பிட்டதும் தர்மராஜன் தூட்கேஸை எடுத்துக் கொண்டு குழம்பிய மனதுடன் வீட்டுக்குள் போனார். சொந்த ஊருக்கு வந்த இனிமை அவருள் கலைத்துவிட்டது.

''உன் ஒய்ஃப் இருக்காளா இல்லையா?'' தர்மராஜன் கேட்டார்.

''இருக்கா இருக்கா. அவ எங்கே போவா? எதுவும் வேணுமா ஒனக்கு?''

''குடிக்க தண்ணி வேணும்''

பெரிதாக குரல் கொடுத்து பரமேஸ்வரியை தண்ணீர் கொண்டு வரச் சொன்ன உலகநாதன் வீட்டிற்குள் வந்ததும் வராததுமாக தர்மராஜன் தன் பெண்டாட்டியைப் பார்ப்பதற்கு ஆசைப்படுவதாக நினைத்து எரிச்சல் அடைந்தார்!

அச்சுதனை செந்துறைக்கு அனுப்பி வைத்தவர் என்ற ரகசிய நன்றி கண்களில் தெரிய பரமேஸ்வரி தர்மராஜனுக்குக் குடிப்பதற்கு தண்ணீர் கொண்டு வந்தாள். தர்மராஜன் தண்ணீரை வாங்கிக் குடித்தாரே தவிர பரமேஸ்வரியை கவனித்துப் பார்க்கிற மன நிலையில் இல்லை அவர். அவருடைய மனம் பூராவும் எரிந்துபோன மோட்டார் சைக்கிளின் மேலேயே இருந்தது.

''வந்ததும் வராததுமா எழவு மாதிரியான நியூஸை கேக்கறேன்'' என்றார்.

''அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?''



''உன் வீட்டுக்குத்தானே அனுப்பினேன். அவனுக்கு எது வந்தாலும் நீதானே பொறுப்பு?''

''தர்மராசு—இந்தப் பேச்சு என்கிட்ட பேசாத! அவன் யாரோ நான் யாரோ...!''

''அதுக்கு ஏன் இப்படி கோவப்படற?''

''அவ்வளவு தூரத்துக்கு நான் கோவமா இருக்கேன்.''

''அச்சுதன் மேலயா?''

''அந்தப் பொடியன் மேல எனக்கென்னய்யா கோவம்! எனக்கு வேற ஒரு விஷயமா கோவம். என்னன்னு கேக்காத! அது என் சொந்த சமாச்சாரம்!''

''உன் சொந்த சமாச்சாரம் எதையும் கேக்கலை. பைக் எரிஞ்ச சமாச்சாரத்தைத்தான் கேக்குறேன். எப்படி ஒரு நல்ல பையனோட வண்டிக்கு—அதுவும் நம்ம ஊரில் இப்படி நடக்கலாம்?''

''எனக்கு ரெண்டு விஷயம் மனசில படுது தர்மராசா. சொல்லட்டா?''

''சொல்லு.''

''நான் சொல்லுறதை யார் கிட்டேயும் நீ வாயைத் திறக்கக் கூடாது. சரியா?''

''முதல்ல நீ சொல்லு'' பரமேஸ்வரி சமையலறையில் கூர்மையாக நின்றாள்.

''என்னோட முதல் பாயிண்ட்—உங்க அச்சுதனுக்கு மெட்ராஸ்ல எவனோ பெரிய எதிரி இருக்கான்! மெட்ராஸ்லேயே தீ வச்சிக் கொளுத்திடலாம்னு நெனைச்சிட்டு இருந்திருப்பான்! எதனாலேயோ முடியாம போயிருக்கணும்! நட்ட நடு ராத்திரியில இங்க வந்து காதும் காதும் வச்ச மாதிரி தீயை வச்சிட்டு ஓடியே போயிட்டான்!'' பாவம் உலகநாதன். இதைச்

சொல்லி முடிப்பதற்குள் வாய் குழறி வியர்த்து விட்டது!

"சான்ஸே கிடையாது உலகநாதா! அச்சுதனை எதிரியா நினைக்க யாராலேயும் முடியாது. அதுவும் இப்படி தீ வைக்கிற அளவுக்கு — அவனுக்கு எதிரின்னு ஒருத்தனும் இருக்க மாட்டான்"—தர்மராஜன் ஆவேசத்துடன் மறுத்தார்.

"கிறுக்கா! அவனோட வண்டி எரிஞ்சிருக்கா இல்லையா?"

"அதனால பெரிய எதிரி இருக்கான்னு அர்த்தமா?"

"எதிரி இல்லாம கிறுக்கனா தீ வைப்பான்? என்னோட ரெண்டாவது பாயிண்ட் நாலைஞ்சி நாளைக்கு முந்தியோ இல்லை ஒரு வாரத்துக்கு முந்தியோ இந்தப் பையன் ஆத்துல முங்கி சாகப்பாத்த நம்ம ராமையா ஆசாரியோட மக ஒருத்தியை காப்பாத்தினான்னு ஊரெல்லாம் ஒரே பேச்சு! ஒரே குதி! ஊரெல்லாம் எம்.ஜி.ஆர். மாதிரிதான் ஒரே ஆட்டம் பாட்டம்! என் கேக்குற! என்னோட பாயிண்ட் என்னன்னா-ராமையா மகளை இவன் காப்பாத்தின அன்னைக்கு ராத்திரியோ இல்லை - அடுத்த நாள் ராத்திரியோதான் பைக் தீ பிடிச்சி எரிஞ்சது..."

"எதையாது உளறாதே! ராமையா மகளை அச்சுதன் காப்பாத்தினதுக்கும் அவன் பைக் எரிஞ்சி போனதுக்கும் என்ன சம்மந்தம் இருக்க முடியும்?"

உலகநாதனுக்கு கோபம் வரப் பார்த்தது. கட்டுப்படுத்திக்கொண்டு சொன்னார்.

"என்னமோ இருக்கு தர்மராசு! அதை பெருமாள் தான் கண்டுபிடிச்சி சொல்லணும்!" பல நிமிடங்களுக்கு தர்மராஜன் தீவிர யோசனையில் இருந்தார். உலகநாதன் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி உட்காரவே முடியாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார். இதற்கு மேல்



தர்மராஜனுடன் பேசிக் கொண்டிருக்க பயமாக இருந்தது அவருக்கு. அதனால் கண்களை மூடிக்கொண்டு தூங்குவது போல இருந்தார்.

தர்மராஜன் எழுந்து விட்டார் "உலகநாதா! எப்பவும் போல எனக்கு இப்பவும் உன் வீட்லதான் சாப்பாடு. நான் போய் அச்சுதனைப் பார்த்து பேசிட்டு வரேன்..."

"விடிய விடிய வேணுமானாலும் பேசிட்டு வா! ஆனா நான் சொன்ன பாயிண்ட்ஸை மட்டும் அவன் கிட்ட இப்போதைக்கு சொல்ல வேண்டாம்!"

"சொல்லலைய்யா..." தர்மராஜன் கொஞ்சம் எரிச்சலுடன் சொன்னார். அந்த எரிச்சல் உலகநாதனின் கொந்தளித்த மன நிலையில் ஊசியாக இறங்கியது. என் பெண்டாட்டியை பாக்குறதுக்கு இத்தனை நாள் வராதவன் இன்னைக்கி பெட்டியை தூக்கிட்டு ஓடி வந்திருக்கான்! என்று முணங்கிக் கொண்ட உலகநாதன் ஏதோ ஒரு சந்தேகம் வந்து அவரது வலதுகை மணிக்கட்டில் 'பல்ஸ்' பார்த்துக் கொண்டிருந்தார்...!

தர்மராஜன் வேகமாக அச்சுதன் வீட்டுப் படிகளில் ஏறினார்... அவருக்கு ஒரு உண்மையை புரிந்து கொள்ள முடிந்திருந்தது. உலகநாதனுக்கு அச்சுதனிடம் ஏதோ பிரச்னை இருக்கிறது. ஆனால் உடனே அதைப்பற்றி சிந்தித்துப் பார்க்கிற பொறுமை தர்மராஜனுக்கு இல்லை. அச்சுதன் வீட்டுப் படிகளில் ஏறிய வேகத்தில்கூட அவரின் பொறுமையின்மை தெரிந்தது. மேல் படியில் ஏறியதும் தர்மராஜன் நிமிர்ந்து பார்த்தார் வீட்டுக் கதவு சாத்தி இருந்தது. கதவைத் தட்டி 'அச்சுதா' என்று கூப்பிட்டார். தட்டிய வேகத்தில் வெறுமே சாத்தி வைக்கப்பட்டிருந்த கதவு லேசாக திறந்து கொண்டது. தர்மராஜன் கதவை நன்றாக திறந்து கொண்டு வீட்டுக்குள் சென்றார். உள்ளே அச்சுதன் இல்லை...

# 31

தர்மராஜன் வீட்டிற்குள் சில வினாடிகள் வெறுமே நின்று கொண்டிருந்தார். உடனே திரும்பிவிடும் எண்ணத்தில் பக்கத்தில்தான் அச்சுதன் எங்கேயாவது போயிருக்க வேண்டும் என்ற அனுமானத்தில் அவர் அச்சுதனின் உபயோகத்தில் இருக்கும் அறைக்கு நகர்ந்து சென்று பார்த்தார். கொஞ்சமாகத்தான் பொருட்கள் இருந்தன. ஆயினும் ஒவ்வொன்றும் ஒழுங்காகவும் கச்சிதமாகவும் இடம் பெற்றிருந்தன. சின்ன மேஜையின் மேல் மூன்று நிறங்களில் மூன்று ஃபைல்கள் இருந்தன. ஆராய்ச்சி சம்பந்தமானவைதானே என்ற நினைப்பில் தர்மராஜன் மேலாக இருந்த ஃபைலை கையில் எடுக்காமல் வெறுமே திறந்து பார்த்தார். வண்ண மலர் கொத்துப்போல பரமேஸ்வரியின் பெரிதாக்கப்பட்ட புகைப்படம் பளபளப்புடன் தெரிந்தது. பார்த்த உடனே அது உலகநாதனின் மனைவி என்பதை தர்மராஜனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. சில நிமிடங்களுக்குப் பிறகுதான் அவருக்கு அது புலப்பட்டது. உடனே தர்மராஜன் திகைத்து விட்டார். அச்சுதனிடம் எதற்காக எப்படி உலகநாதனுடைய மனைவியின் போட்டோ? அதுவும் இவ்வளவு பெரிய அளவில்? அதுவும் இல்லாமல் நான்குவித போட்டோக்கள்...?

தர்மராஜன் ஃபைலை மூடி வைத்து விட்டார். திறக்கக் கூடாத எதையோ திறந்து எதையோ பார்த்து விட்ட சஞ்சலமும் கவலையும் ஏற்பட்டு விட்டன. விசனத்துடன் அச்சுதனுக்காக காத்திருந்தார். ஏழெட்டு நிமிடங்கள் கழித்து அச்சுதன் வந்தான்.

"எங்கே போயிட்டே கதவைக்கூட பூட்டாம?" தர்மராஜன் வெடுக்கென்று கேட்டார்.



"இதோ - வேதபாடசாலை வரைக்கும் போயிட்டு வரேன் அங்கிள்..."

"அச்சுதா, நான் கேக்குற கேள்விக்கு ஒண்ணையும் மறைக்காம பதில் சொல்லு."

"கேளுங்க அங்கிள் - நீங்க என்ன கேட்டாலும் எதையும் ஒளிக்காம பதில் சொல்றேன்."

"வாட் இஸ் திஸ்?"

அச்சுதன் இதை எதிர்பார்க்கவே இல்லை. தர்மராஜன் அவனுடைய ஃபைலைத் திறந்து பரமேஸ்வரியின் போட்டோவை காட்டி கேட்டார்.

அச்சுதன் கொஞ்சம் திகைத்துப் போய்விட்டானே தவிர பயந்து விடவில்லை. எப்படி விளக்குவது என்று தயங்கினானே ஒழிய தலை குனியவில்லை.

"சொல்லு அச்சுதா! இதெல்லாம் உலகநாதனோட வொய்ஃப் போட்டோதானே?"

"யெஸ் அங்கிள்..."

"அவளோட போட்டோஸ் உன்கிட்ட ஏன் இருக்குன்னு தெரிஞ்சிக்கலாமா?"

"இப்பவே தெரிஞ்சிக்கணுமா அங்கிள்?"

"இந்த நிமிஷமே தெரிஞ்சாகணும் எனக்கு... இவ்வளவு பெரிசா என்லார்ஜ் பண்ணப்பட்டு அவளோட போட்டோஸ் உன்கிட்ட இருக்கறதுல விபரீதமான காரணம் ஏதாவது இருக்குமோன்னு பயமாயிருக்கு எனக்கு..."

அச்சுதன் பெருமூச்சுடன் சொன்னான் "இந்த போட்டோவை நான் எடுத்தப்ப இருந்த காரணம் வேற அங்கிள். ஆனா இப்போ போட்டோவை பத்திரமா வச்சிண்டு இருக்கேனே - இதுக்கான காரணம்

வேற... ஆனா என்னோட காரணம் ஒருவேளை விபரீதமானதா படலாம். விளக்கங்களை அடிப்படை விஷயங்களோடு சொல்றேன். நீங்களும் அதை அடிப்படை நிலையிலேயே தயவு செய்து ரெகக்னைஸ் பண்ணிக்கோங்க. சுருக்கமா சொன்னா - எல்லா காரணங்களுக்கும் உந்துதலா இருந்தது மிஸ்டர் உலகநாதனோட விபரீதமான கேரக்டர்தான். இந்த நிமிஷம் எல்லா விஷயங்களையும் உங்ககிட்ட சொல்லிவிடலாம் என்கிற மனோ நிலையில் நான் இல்லாவிட்டாலும்கூட - நீங்க கேட்டுட்டதால எல்லாத்தையும் சொல்லிடறேன். ஆனா - இங்கேயிருந்து நாம் பேச வேண்டாம். வாங்க - படித்துறைப் பக்கம் போய் உட்கார்ந்து எந்தக் குறுக்கீடும் இல்லாம பேசுவோம்...''

—இந்த உரையாடலை தன் வீட்டு சமையலறை ஜன்னல் அருகே நின்று உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த பரமேஸ்வரியின் நெஞ்சில் பரவசமும் பயமும் மாறி மாறி சிலிர்த்துக் கொண்டன. கண்களை மூடி கேசவபெருமாளை வேண்டியபடி நின்றாள். வீட்டுக் கதவைப் பூட்டிச் சாவியை எடுத்துக்கொண்டு அச்சுதன் தர்மராஜனுடன் வாசலில் இறங்கியபோது உலகநாதன் அவருடைய வீட்டுத் திண்ணையில் நெடுமரம் போல நின்று கொண்டிருந்தார். படுத்துக் கிடக்கவோ உட்கார்ந்திருக்கவோகூட அவரால் முடியவில்லை. அவருடைய உணர்வுகளை மாயச்சுழல் ஒன்று அச்சுதனுக்கு எதிராகவே சுழல வைத்தது. அந்த மாயச்சுழலில் உலகநாதனுக்கு அவ்வப்போது தலையே நிலை கொள்ளாமல் ஆடியது. அடுத்த வீட்டிற்குள் தர்மராஜனும் அச்சுதனும் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்களோ ஏது பேசிக்கொண்டிருக்கிறார்களோ என்ற அளவற்ற தவிப்பில் திண்ணையில் அவர் நின்று கொண்டிருந்தபோதுதான் இருவரும் படித்துறைக்குப்



போவதற்காக தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினார்கள்.

படித்துறைக்குச் சென்று கொண்டிருந்த அச்சுதனின் எதிரில் வந்த ராமையா மகள் கோமதி தயங்கி நின்று அச்சுதனைக் கும்பிட்டாள்.

''என்னம்மா - இந்நேரத்ல எங்கே கிளம்பிட்டே?'' அச்சுதன் விசாரித்தான்.

''கோயிலுக்குப் போறேன் அண்ணாச்சி. ஒங்க புது மோட்டார் சைக்கிள் பாத்தேன். பாக்கவே அழகா இருக்கு அண்ணாச்சி...''

''வர்ரயா, ஒரு நாள் உன்னை பின்னாடி உட்கார வைத்து ஒரு ரவுண்ட் சுத்திக் காட்றேன்''

''அதுல எல்லாம் எனக்கு உக்கார தெரியாது அண்ணாச்சி... கீழ விழுந்து வச்சிருவேன்.''

''கோயில்ல சாமிகிட்ட புது பைக்குக்கும் யாரும் நீ வச்சிடக் கூடாதுன்னு வேண்டுதல் பண்ணிக்கறயா?''

''ஆயிரம் தடவை வேணுமானாலும் பண்ணிக்கறேன் அண்ணாச்சி...''

கோமதி சிறிது நகர்ந்ததும் தர்மராஜன் அச்சுதனிடம் கேட்டார் ''யார் இது?''

அச்சுதன் இதற்குப் பதில் சொல்வதற்கு முன் தெருவில் குறுக்கிட்ட நாலைந்து பேர்களுக்கு அவர்களின் ஒவ்வொரு விதமான விசாரிப்புகளுக்கும் பதில் சொல்ல நின்றதில் செந்துறையில் அச்சுதன் மரியாதைக்கு உரியவனாக உயர்ந்திருப்பது தெரிந்து தர்மராஜனுக்கு சிறிது ஆறுதலாக இருந்தது. அதே நேரம் கோமதி அச்சுதனை வார்த்தைக்கு வார்த்தை அண்ணாச்சியென்று சொல்லி பயபக்தியுடன் பதில் சொன்னது உலகநாதனின் ஆக்ரோஷத்தை ஜாஸ்தியாக்கியது.

''என்ன கேட்டீங்க அங்கிள்?''

''பேசிட்டுப் போன பொம்பளைப் பிள்ளை யாருன்னு கேட்டேன்.''

''இங்கே தச்சு வேலை பாக்குறாரே - ராமையான்னு...''

''ஆமா''

''அவரோட மகள். கொஞ்ச நாள் முன்னாடி இவளை ஆத்துல இருந்து நான் காப்பாத்தினேன் அங்கிள். அதனால இவளுக்கு நான் பக்திக்கு உரிய ஒரு காட்ஃபாதர்!''

''ஒரு நிமிஷம் சிந்தனைவயப்பட்ட தர்மராஜன் பின் அச்சுதனிடம் சொன்னார் :

''உலகநாதன் என்கிட்ட ஒரு விஷயம் சொன்னான். உன் பைக் தீ பிடிச்சி எரிஞ்சி போனதுக்கும் ராமையா மகளை நீ காப்பாத்தினதுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கு என்கிறது உலகநாதனோட அபிப்பிராயம்...''

''ஏன் அதை அவர் ஊர் கூட்டத்தில் சொல்லலையாம்?''

''அதை விடு. அவனோட அந்த அபிப்பிராயத்துக்கு உன்னோட பதில் என்ன?''

''என்ன சம்பந்தம்னு அவரை சொல்லச் சொல்லுங்க. அப்போ நான் பதில் சொல்றேன்.''

''எனக்கு நீ பதில் சொல்லு.''

''இன்னும் வேற ஏதாவது அபிப்பிராயம் சொல்லியிருக்காரா?''

''மெட்ராஸ்ல இருக்குற உன்னோட எதிரிதான் யாரோ இங்கே வந்து தீ வச்சிட்டுப் போயிருக்கலாமாம்...''



அச்சுதன் பெரிதாகவே சிரித்தான். ''வெரிகுட்! வெளியில் வர முடியாம இருக்கிறதாலேயே வேற வழியில் தப்பிச்சி ஓடப் பார்க்கிறார்! பாவம். வெளியில நல்லபடியா வந்திட்டா அவருக்குத்தான் நல்லது. வர முடியலைன்னா வெடிச்சுக்கிட்டு வரப் போறவரும் அவர்தான். ஆனா அந்த வெடிப்பு ஒரு நாசமா இருக்கும் அங்கிள். சிம்பிளா உங்களுக்குச் சொல்றேன்- என் பைக் தீ வைக்கப்பட்ட சம்பவத்தை உலகநாதன் டோட்டலாவே உங்களுக்கு மிஸ்லீட் பண்ணப் பாக்கறார். அவர் சொன்ன ரெண்டு அபிப்பிராயமுமே வடிகட்டின பொய்! இப்படி பொய் சொல்லி ஏன் உங்களை உலகநாதன் மிஸ்லீட் பண்றார்னு தெரியுதா அங்கிள் உங்களுக்கு?''

''உன்னை ஏனோ அவனுக்குப் பிடிக்கலை''

''அதுவும் ஒரு காரணம். இன்னொரு காரணம்-என் பைக்குக்கு தீ வைத்ததே அந்த ஆள்தான் அங்கிள்...''

தர்மராஜர் அதிர்ந்து போனார். அவரால் நம்பவே முடியவில்லை. உலகநாதன் ஏதோ ஒரு மனக்குழப்பத்தில் இருப்பதை உணர்ந்திருந்தார். ஆனால் அந்தக் குழப்பத்திற்குள் இப்படி ஒரு நீசத்தனமான குற்றம் ஒளிந்திருக்கிறது என்பது தர்மராஜனுக்கு நம்ப முடியாததாகவே இருந்தது. அவர் அறிய உலகநாதன் ஆணாதிக்க மனோபாவத்தில் சற்று இறுகிப்போன கறார் பேர் வழியே தவிர விரோத குற்றம் எதிலும் ஈடுபட்டவர் கிடையாது. அப்படிப்பட்ட ஆள் இன்று ஒரு பயங்கர குற்றம் செய்திருக்கிறாரென்றால்...?

''உலகநாதன்தான் பைக்குக்கு தீ வச்சான்னு எப்படிச் சொல்றே? நீயே பாத்தியா அவன் தீ வச்சதை...?''

''நானும் பாக்கலை. ஊர்லேயும் வேற யாரும் பார்க்கலை... அவர் தீ வச்சதைப் பார்த்த ஒரே ஜீவன் - பர

மேஸ்வரிதான். ஏழெட்டு நாள் கழிச்சி அவங்க என்
கிட்ட சொன்ன போதுதான் எனக்கே தெரியும்...''

''வேற யாருக்கும் தெரியாதா இது?''

''தெரியாது''

''ஏன்?''

''வேற யார்கிட்டேயும் இதைச் சொல்றதுக்கு
விருப்பமில்லை பரமேஸ்வரிக்கு.''

''தெரிஞ்ச உண்மையை சொல்ல வேண்டாமா?''

''உலகநாதன் என்கிற மனிதனை தண்டிக்க பர
மேஸ்வரி விரும்பலை அங்கிள்.''

''இது நம்பற மாதிரி இல்லைன்னு சொல்ல வரலை
நான். ஆனா எங்கேயோ ஒரு 'லாஜிக்கல் கேப்' இருக்
கிற மாதிரி தெரியுது. ஆனா அச்சுதா - நடந்த விஷயங்
கள் அத்தனையையும் சொல்லிடு என்கிட்ட. உலக
நாதன் தீ வச்சான் என்கிறதை உன்கிட்ட மட்டும்
வந்து அவன் மனைவி சொல்லுற அளவுக்கு உனக்கும்
அவளுக்கும் அப்படியென்ன பெரிய ரிலேஸன்ஷிப் -
அதுவும் இவ்வளவு குறைஞ்ச நாள் அனுபவத்ல?''

''யெஸ் அங்கிள்; இந்த வெரி ஷார்ட் பீரியட்ல
எனக்கும் பரமேஸ்வரிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும்
உறவு நிஜமாவே ஒரு ரிமார்க்கபிள் ரிலேஸன்ஷிப்தான்.
ஆனா - எங்களோட இந்த உறவு பத்தி இங்கே யாருக்
குமே தெரியாது.''

''இல்லை. நான் சொல்றேன். உலகநாதனுக்கு
லேசா ஏதோ சந்தேகம் இருக்கு. அந்த சந்தேகத்தில்
தான் உனக்கு ஒரு எச்சரிக்கையா இருக்கட்டும் என்கிற
துக்காகத்தான் பைக்குக்கு தீ வச்சிருக்கார்...''

''இல்லை அங்கிள். யூ ஆர் ராங்... நிஜமா அந்த
சந்தேகம் உலகநாதனுக்கு வந்திருந்தா பரமேஸ்வரி
யைத்தான் தீ வைத்துக் கொளுத்தியிருப்பார்.''



தர்மராஜன் திகைத்துப் போய் அச்சுதனைப் பார்த்
தார். அவனுடைய கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன.
அச்சுதன் தொடர்ந்து சொன்னான்: ''பைக்குக்கு தீ
வைத்தாரே - இந்த உலகநாதனை உங்களுக்குத் தெரி
யாது அங்கிள். ஏன்னா - தீ வைத்த இந்த உலகநாதன்
பரமேஸ்வரியை கல்யாணம் பண்ணிண்டதுக்கு அப்
புறமான உலகநாதன்... உங்களுக்குத் தெரிஞ்ச உலக
நாதனோ பரமேஸ்வரியை கல்யாணம் பண்ணிக்கிற
துக்கு முற்பட்டவர். உங்களுக்குத் தெரியாத உலக
நாதனைப் பத்தின 'கம்ப்ளீட் பிக்ச்சரை' இப்ப நான்
தரேன்... இதுல நீங்க புரிஞ்சிக்கலாம் - எனக்கும் பர
மேஸ்வரிக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் எதிர்பாராத
உறவின் காரணங்களை...''

அப்போது தர்மராஜன் குறுக்கிட்டுச் சொன்னார்:
''காரணத்ல உண்மை இருக்கலாம் அச்சுதா. வேற வழி
இல்லாததாகவும் இருக்கலாம். அதுக்காக மட்டும் உன்
காரணங்களை நான் அங்கீகரிப்பேன்னு எதிர்பார்த்
திடாதே நீ... ஏதோ ஒரு விதத்தில் எனக்கு சில ரிசர்வே
ஸன்ஸ் உண்டு. சோஷியல் வேல்யூஸ் உண்டு... சமூக
மரபுகளுக்கு அப்பாற்பட்ட நடப்புகள் எதையும் என்
னால ஏத்துக்க முடியாது...''

அச்சுதன் வறண்ட சிரிப்புடன் சொன்னான்
''என்ன அங்கிள் - வழக்கைக் கேட்டுத் தெரிஞ்சுக்கற
துக்கு முன்னாடியே உங்க தீர்ப்பை வாசிக்கிறீங்
களே...''

''நான் என்னோட சட்ட நுட்பங்களை சொன்
னேன். நீ உன் வழக்கைச் சொல்லலாம்...''

''சொல்றேன் அங்கிள். ஆனா என் வழக்கு மன
நுட்பங்கள் என்ற யதார்த்தமான நிஜங்கள் பற்றியது.
உங்களோட சட்ட நுட்பங்களோ கருத்து இயல் என்ற
கற்பனை இழைகளில் தோற்றப்படுத்தப்படும் வெறும்

உருவகம். ஆனா என் உறவோ நிஜங்களோடு தானே தவிர கருத்தியல் உருவங்களோடு கிடையாது. ஸோ - நான் பார்க்க நேரிட்ட மன நுட்பங்கள் அத்தனையையும் இப்போ உங்க முன்னாடி வைக்கிறேன். அதை எந்த அபிப்பிராய குறுக்கீடும் இல்லாம - ஜஸ்ட்! பாருங்க நீங்க...''

தர்மராஜன் முரண்பாடான முகபாவனையோடு இறுக்கத்துடன் உட்கார்ந்திருக்க அச்சுதனும் கண்களை மூடி தியானத்தில் இருப்பது போல சில நிமிடங்கள் அமைதியாக இருந்தான்... அப்போது படித்துறையில் லேசாக இருள் கவியத் தொடங்கி இருந்தது. குயிலோசைகள் அடங்கத் தொடங்கியிருந்தன. செறிவான ஒரு திரைக்கதை போல அவனுள் உருவாகிப் போயிருந்த உலகநாதனைப் பற்றிய எல்லா உண்மைகளையும் அச்சுதன் தர்மராஜனுக்கு விவரிக்கத் தொடங்கினான்.

''பரமேஸ்வரியை கல்யாணம் செய்திண்ட அப்புறம் உலகநாதன் எப்படி இருந்தார் என்கிற விஷயத்தோடு முதல் மனைவி இறந்து பரமேஸ்வரியை கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முன்னாடி அவர் எப்படி இருந்தார் என்கிறதையும் சேர்த்தே சொல்றேன் அங்கிள். அவரோட மனச்சிக்கல் முதல் மனைவியின் இறப்பில்தான் ஆரம்பம் ஆச்சு. ஒருவிதமான அதீத உன்மன இயக்கம் உலகநாதனின் மனநிலையில் அப்போதான் இயங்க ஆரம்பித்தது. ரொம்பவும் வயசான காலம் வரைக்கும் துணையா இருந்து நல்ல விதமா முதல் மனைவி கவனிச்சுப்பாங்கன்னு அசாத்திய நம்பிக்கையில இருந்த அவருக்கு, திடீர்னு அவரோட ஐம்பதாவது வயசில மனைவி இறந்து போனதைத் தாங்கவே முடியலை. மனசே உடைஞ்சு போயிடுத்து உலகநாதனுக்கு. மனசு உடையறதுல சிக்கல் எதுவும் கிடையாது அங்கிள். ஆனா உலகநாதன் மனசு



ரொம்ப உடைஞ்சு போன மாதிரி சதா காட்டிக்கவும் ஆசைப்பட்டார். அதே நேரம் காட்டிக்க பிடிக்காதவராகவும் இருந்தார்! சுய இரக்கம் ஏற்பட்டபோது மனம் உடைஞ்சதைக் காட்டிக் கொண்டார். அது பிடிக்காத நேரத்ல சுய தனிமையில அவர் பாட்டுக்கு இருந்தார். சமையல்காரர்களை வைத்து திருப்தியா எப்போதும் போல சாப்பிடவும் செய்தார். சமையல்காரன் சாப்பாட்டை சாப்பிட வந்து விட்டதேயென்று விசனப்பட்டுக் கொண்டும் இருந்தார். அந்த விசனம் வரும்போது இந்த நிலைக்கு அவரை ஆளாக்கிட்டு போய் விட்டாளே என்று இறந்துபோன மனைவியின் மேல் உலகநாதன் ஆத்திரப்படவும் செய்தார்.

ஆனா - எந்த தனிமையிலும் ஆத்திரத்திலும் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம் என்ற நினைப்பு மட்டும் வரலை அவருக்கு. சுய தனிமையில்; சுய இரக்கத்தில் அவருக்கே தெரியாத அவல மனச்சுகம் ஒண்ணு அவருக்குள் இருந்தது அங்கிள்... அதனால வயசான காலத்ல மனைவியை இழந்தவர் என்ற அனுபவத்தையும் சம்பவத்தையும் மாற்றி அமைக்க உலகநாதன் விருப்பப்படலை. இந்த நேரத்தில்தான் தேர்தல் வந்தது. பணவசதி உள்ளவர். பெயர் எதுவும் கெட்டுப் போகாதவர் என்ற ஹோதாவில் ஆளுங்கட்சி சார்பில் இந்தத் தொகுதியில் நிற்க வலிய ஒரு வாய்ப்பு வந்தது அவருக்கு.

ஆனா அந்த வாய்ப்பை கன்வே பண்ண வந்தவங்க அவங்களை அறியாம ஒரு தப்புப் பண்ணிட்டாங்க. தனியாவே கிடந்து பொழுதும் போகாம வீட்டுலேயே அடைஞ்சு கிடக்கறதுக்கு தேர்தல்ல நின்னு சுறுசுறுப்பா ஊருக்காவது நாலு நல்ல காரியம் உலகநாதன் செய்யலாமேன்னு அவங்க சொல்லிட்டதுல ஹர்ட் ஆயிட்டார் உலகநாதன். அவருக்கு சுயஇரக்கம் வேண்டியிருந்ததே தவிர மத்தவங்களோட இரக்கம்

தேவைப்படலை! கோவம் வந்திடும் உடனே. அன்னிக்கும் அவருக்கு கோவம் வந்துடுத்து. தேர்தல்ல நிக்கச் சொல்லி வந்தவங்க எல்லாரையும் எதுவும் பேசாம கோவத்தில விரட்டியடிச்சிட்டார். அப்போதான் அவரோட ஒரு உறவுக்கார லேடி வந்து ஒரு ஆறுதலுக்காக சொன்ன வார்த்தைக்காக அப்படியா விரட்டியடிக்கிறதுன்னு சமாதானம் பண்ற மாதிரி கேட்டாங்க. அப்போதான் உலகநாதனின் வாயில் இருந்து அவருக்கே தெரியாமல் அந்த வார்த்தை வந்து விட்டது... நிஜமாகவே ஆறுதல் சொல்பவர்களாக இருந்தால் இன்னொரு கல்யாணம் செய்து கொண்டு உலகநாதன் நிம்மதியாக இருக்கலாமே என்று வந்தவர்கள் ஆறுதல் சொல்லி இருந்தால் அது நியாயமாம்! அங்கிள்; உலகநாதனின் வாழ்க்கை ஓட்டம் இந்த இடத்தில்தான் திடீரென்று இன்னொரு கல்யாணத்தை நோக்கித் திரும்பியது......

—அச்சுதன் சொல்லிக் கொண்டிருந்ததை நிறுத்தினான். தர்மராஜன் அவனையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்......

## 32

அச்சுதன் தொடர்ந்து சொல்லத் தொடங்கினான். "ஆற்றாமையான கோபதாபங்களில் வெடித்து, சில குற்ற உணர்வுகளிலும் ஆசாபாசங்களில் சிக்கியும் உலகநாதன் இறுதியில் இன்னொரு கல்யாணத்தைப் பண்ணிக்கொள்ளலாம் என்ற தீர்மானத்திற்கு வந்து சேர்ந்தார். அந்தத் தீர்மானத்திற்கு வருகிறவரை அவரின் மனதிற்குள் ஓடிய உள்மன எண்ண ஓட்டத்தை ஒரு 'எண்ட்லெஸ் ஸ்டீரீம் ஆஃப் இண்ட்ரோ



வர்ஸன்'னு சொல்லலாம். ஒரு தினுசான மாய நதிக்குள் உலகநாதன் அவரோட 'மனக்காலை' விட்டுட்டார்! தனக்கு ஒரு பெண் துணை வேணும் என்கிற ஆர்வத்தைவிட இளம்பெண் ஒருத்தி மனைவியா வரணும் என்கிற சபலத்துக்கு தெரியாத்தனமா ஆளாயிட்டார். ஆனா இளம் மனைவி ரொம்ப அழகானவளா இருக்கணும்னு நெனைக்கலை அவர். அழகான பரமேஸ்வரி மனைவியா கிடைச்சது உலகநாதனுக்கு இனிய விபத்து. பின்னாடி அதுதான் மோசமான விபத்தாயிடுத்து!

ரொம்ப ஆசைப்பட்டு பரமேஸ்வரியை கல்யாணம் பண்ணினார். அழகான இளம் மனைவியோடு சந்தோஷமாகவும் பெருமையாகவும் வாழப் போறோம்னு நிறைய கற்பனை பண்ணினார். ஆனா அவரால் பரமேஸ்வரிகூட சந்தோஷமா வாழ முடியலை. கல்யாணத்தன்னிக்கே பிரச்னை வந்துடுத்து..."

"கொஞ்சம் இரு அச்சுதா" - தர்மராஜன் குறுக்கிட்டார். "ஒரு விஷயத்தை க்ளியர் பண்ணு. அழகான, அதுவும் வயசுக் குறைச்சலான பெண், பார்த்தாலே 'பெட்டர் இண்டிவிஜ்யுல்'னு தெரியற பரமேஸ்வரி உலகநாதனை ஏன் கல்யாணம் பண்ணிக்க முன் வந்தா?"

"உலகநாதனைப் பத்திச் சொன்னாலே போதும்னு நெனைச்சேன்... ஆல்ரைட்; சுருக்கமா பரமேஸ்வரி உலகநாதனை கல்யாணம் பண்ணிண்டதைப்பத்தியும் சொல்லிடறேன்... பரமேஸ்வரியின் இயல்பான ஆர்வங்களுக்கும் ரசனைகளுக்கும் ஏற்ற வாழ்வுக்கு பணம் இருக்கிற கணவர் வேணும் என்கிற ஒரு எண்ணம் அவங்ககிட்ட இருந்தது அங்கிள். ஆனா அவங்களோட ஏழ்மையின் சூழலில் பண வசதி உள்ள கணவன் வர்ரதுக்கு சாத்தியமே இல்லாம போயிடுத்து. அதனால்

ரெண்டாம் தாரமா கொஞ்சம் வயசானவருக்கு வாழ்க்கைப்படவும் பரமேஸ்வரி தயாரா இருந்தாங்க.

ரெண்டாம் தாரமா வாழ்க்கைப் படற இடத்துல முதல் தாரத்தின் குழந்தைகள் இருந்து அந்தக் குழந்தைகளுக்கு 'இன்ஸ்டண்ட் மதரா' ஆயிடறதுக்கெல்லாம் விரும்பலை பரமேஸ்வரி. வறுமையில் இருந்து உடனடியா அவங்களுக்கு வேண்டியிருந்த சுதந்திரத்தில் உடனடியா பொறுப்பு எதையும் சுமக்க தயாரா இல்லை அவங்க.

உலகநாதன்கிட்ட அவங்களுக்கு இப்படிப்பட்ட உடனடி பொறுப்பு எதுவும் குறுக்கே இல்லை. ஆனா வயசைப்பத்தி கொஞ்சம் யோசனை பண்ணினாங்க. யோசனை செய்ததில் வயசு அவங்களுக்குத் தடையா இல்லை. சுதந்திர தாகத்தோடும் சந்தோஷ எதிர்பார்ப்புகளோடும் யாரோட கட்டாயமும் இல்லாம பரமேஸ்வரி உலகநாதனை கல்யாணம் பண்ணிண்டாங்க. போதுமா அங்கிள்—பரமேஸ்வரியைப்பத்தி சொன்னது?''

''போதும்...''

''உலகநாதனைப் பொறுத்தவரைக்கும் பிரச்னை கல்யாணத்தன்னிக்கே ஆரம்பம் ஆயிடுத்து. தாலி கட்டின கொஞ்ச நேரத்ல அவர் ரொம்ப ஆசையா தன் பேரன்கிட்ட பரமேஸ்வரியைக் காட்டி 'இதான் உன் சின்னப் பாட்டி'ன்னு சொல்லியிருக்கார். உடனே அந்தப் பேரன் ''போ தாத்தா; இதுவா சின்னப் பாட்டி; இது சின்ன அக்கா'னு சொல்லிட்டான்! ஒரு மாதிரி ஆயிட்டார் உலகநாதன்...'' என்று ஆரம்பித்து திருநெல்வேலியில் பையன்கள் பரமேஸ்வரியை பின் தொடர்ந்து வந்தது, குற்றாலத்தில் இளைஞர்கள் பரமேஸ்வரியை சைட் அடித்தது, நாங்குநேரி அத்தை உலகநாதனும் பரமேஸ்வரியும் பார்ப்பதற்கு தகப்பன்-மகள்போல இருப்பதாக சொல்லிச் சிரித்தது—போன்ற



சம்பவங்கள் எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னான்.

''சுருக்கமா சொன்னா—அந்த நாங்குநேரி அத்தை அடிச்ச கமெண்ட்ல உலகநாதன் கண்ணீர் விட்டுத்தான் அழலை! பரமேஸ்வரியை கல்யாணம் பண்ணிண்ட பெருமையும் சந்தோஷமும் அவருக்குள் சுக்கல் சுக்கலா உடைஞ்சி போயிடுத்து அங்கிள். பரமேஸ்வரியை எங்கேயுமே அழைச்சிட்டுப் போறதில்லை என்கிற முடிவுக்கு வந்துட்டார் அவர். பரமேஸ்வரி இளம் மனைவியா அவருக்கு இருந்தா போதும் மத்தவங்களுக்கு அவங்க இளம் பெண்ணா தெரியக்கூடாதுன்னும் முடிவு பண்ணினார். இதனால் பரமேஸ்வரியின் இயல்பான ஆர்வங்களையும் ரசனைகளையும் கூட இளமையின் தன்மைகளா பார்த்து அவை எல்லாவற்றையும் உலகநாதன் தடை பண்ணினார். அன்றாட வாழ்க்கையின் எல்லா கோணத்திலும் பரமேஸ்வரியின் இளமை வெளிப்பட்டுவிடாதபடி அவங்களை இயக்கினார். அதற்கும் மேல் பலபடிகள் போய் எந்த நிலையிலும் பரமேஸ்வரி இளைஞன் எவனுடைய பார்வையிலும் பட்டுவிடாமல் பார்த்துக்கொண்டார். அதே போல் பரமேஸ்வரியின் பார்வையில் எந்த இளைஞனும் படாமல் திட்டமும் வகுத்துக் கொண்டார். இதன் அளவுகடந்த நடை முறையாக பரமேஸ்வரி கோயிலைத் தவிர தனியாக வேறு எங்கும் போய் வருவதற்கு தடை போட்டுவிட்டார். இப்படி பரமேஸ்வரியோட வாழ்க்கையை எவ்வளவு குறுகலா குறுக்கிவிட முடியுமோ அவ்வளவு குறுக்கி விட்டார்...

முதலில் ஒரு தீவில் தனிமைப் படுத்தப்பட்ட மாதிரி தான் இருந்தது பரமேஸ்வரிக்கு. பிறகு தீவு வாழ்க்கை சிறை வாழ்க்கையா ஆயிடுத்து அவங்களுக்கு. கல்யாணத்துக்கு முன்னாடி ஏழ்மை என்ற சிறைக்குள் இருந்த பரமேஸ்வரியின் வாழ்க்கை கல்யாணத்துக்குப் பிறகு

உலகநாதனோட முதுமைச் சிறைக்கு ட்ரான்ஸ்ஃபெர் ஆயிடுத்து! ஆனா பரமேஸ்வரிக்கு தேவைப்பட்டது ட்ரான்ஸ்ஃபெர் இல்லை! சுதந்திரம்!

அதுவும் சிறைவாசம் கடுமையாக கடுமையாக சுதந்திர வேட்கையும் அவங்களுக்கு அதிகமாயிடுத்து. இந்தக் கட்டத்தில்தான் அங்கிள் அச்சுதன் என்கிற அர்பன் யூத்தோட எண்ட்ரி — செந்துறைக்கு! அதுவும் அந்தப் பட்டணத்து இளைஞன் உலகநாதனோட வீட்டுக்கே வந்து சேர்ந்துட்டான்! உலகநாதன் எப்படித் தாங்குவார் இதை?

அழகான இளைஞன் என்ற ஒரே காரணத்துக்காகவே பார்த்த உடனே என்னை விஷமா வெறுத்திட்டார் அவர். நான் பாட்டுப் பாடினா கோவப்பட்டார். பைக்ல போய் வந்தா எரிச்சல்பட்டார். ஊர்ல நான் ஃபேமஸ் ஆனா பொறாமைப்பட்டார். நான் என்ன செய்தாலும் ஆத்திரப்பட்டார். அந்த அளவுக்கு இளமைகிட்ட உலகநாதனுக்கு காம்ப்ளெக்ஸ் அங்கிள். அந்த காம்ப்ளெக்ஸ்ல இருந்து அவரால வெளியில வரவே முடியலை. அந்த சிக்கலின் ஒரு உச்ச கணத்தில், நட்ட நடுநிசியில் என் பைக்குக்கு தீ வச்சிட்டார் அவர்...''

இப்போது தர்மராஜன் குறுக்கிட்டார். ''உலகநாதனோட காம்ப்ளெக்ஸ்ல திடீர்னு இப்படி வன்முறை எற்பட்டதுக்கு பர்ட்டிகுலரா வேற காரணம் எதுவும் கிடையாதா?''

''காரணம் இருக்கு. சம்பவம் என்கிற ரீதியில அது குறிப்பிட்ட காரணம் மாதிரி தெரியலாம். ஆனா அது ஒரு நீண்ட தொடர்ச்சியின் மற்றொரு கனுதான்...''

''சுருக்கமா அதைச் சொல்லிடேன்''

''எந்தக் காரணத்தைக் கொண்டு பரமேஸ்வரி ஆத்துல குளிச்சிடக் கூடாதுன்னு உலகநாதன் தடை உத்தரவு போட்டிருந்தார். ஆனா பரமேஸ்வரி உலகநாதன் எங்கேயாவது வெளியூர் போயிருக்கிறபோதெல்லாம் ஊர் பெண்களோடு சேர்ந்து ஆத்துல குளிச்சிருக்காங்க. ஊர்காரங்க யாரும் இதை அவர் காதுக்குக் கொண்டு போகலை. ஏன்னா - உலகநாதன் பரமேஸ்வரியை எப்படி அடிமை மாதிரி வச்சிருந்தார்னு ஊர்ல எல்லாருக்குமே தெரிஞ்ச விஷயம். அதனால எல்லாருக்குமே பரமேஸ்வரி மேல அனுதாபம் உண்டு. எல்லா விஷயத்திலும் ஒரு சர்வாதிகாரி மாதிரி பரமேஸ்வரிகிட்ட நடந்து வந்திருக்கும் உலகநாதன் அவர் இல்லாத ஒரு நாள் பரமேஸ்வரி ஆத்துல குளிச்சது தெரிஞ்சா சும்மா இருப்பாரா? அப்படி குளிச்ச பரமேஸ்வரியை. அவர் விஷமா வெறுத்த அச்சுதனும் அதே நேரம் ஆத்துல குளிச்சிண்டே பாத்தான்னு வேற தெரிஞ்சா தாங்க முடியுமா அவரால?''



அச்சுதன் அந்த சம்பவத்தை சுருக்கமாக சொல்லி விட்டுத் தொடர்ந்தான்.

''அந்த சம்பவத்லதான் உலகநாதன் கொந்தளிச்சுப் போயிட்டார். பரமேஸ்வரியை அன்னைக்கி வீட்டுக் கதவைப் பூட்டி வச்சிண்டு மாட்டை அடிக்கிற மாதிரி அடிச்சி விளாசிட்டார். பரமேஸ்வரியை குளிக்கும் போது பாத்துட்ட அவருக்குப் பிடிக்காத இளைஞன் அச்சுதனையும் அடிச்சி உதைக்கணுமே! ஆனா யென்ன-அச்சுதனை அடிச்சு உதைக்க முடியாது! அதனால அவனோட பைக்குக்குத் தீ வசசிட்டார்! உலகநாதன் வைத்த அந்தத் தீ இளமைக்கு எதிர்த்து வைக்கப்பட்ட தீ! படிப்படியா இளமையை அழிக்கத் துடிக்கிற பயங்கரவாதியா ஆயிட்டார் உலகநாதன். அதீதமா எதிர்க்கவும் அழிக்கவும் துடிக்கிறது ஒருவகையான மனநோயும்கூட. உலகநாதன் அப்படிப்பட்ட மோசமான மனோவியாதிக்கு ஆளாயிட்டார் அங்கிள். அந்த மனநோயாளிகிட்டே இருந்தும்தான் பரமேஸ்வரியை காப்பாற்றி ஆகணும்...''

பல நிமிடங்கள் கழித்து தர்மராஜன் கனத்த பெரு
மூச்சுடன் சொன்னார்: ''உன்னை இந்த ஊருக்கு நான்
அனுப்பியிருக்கக் கூடாது. தப்புப் பண்ணிட்டேன்.''

''கிடையாது அங்கிள். இங்கே நான் வந்ததாலே
தான் பரமேஸ்வரி என்கிற அருமையான மனுஷியை
என்னால சந்திக்க முடிஞ்சது. அருமையான உறவும்
அந்த மனுஷிகூட ஏற்பட முடிஞ்சது...''

''அச்சுதா! நீ சொன்னபடி உலகநாதன் அந்தப்
பொண்ணை அடிமையா நடத்தியிருக்கலாம். ஆனா
இந்த நாள் வரைக்கும் அவள் அவனோட பெண்
டாட்டிதான்! அந்தக் கோட்டைத் தாண்டி அவள் இன்
னொரு இளைஞனிடம் எப்படிப்பட்ட உறவை ஏற்
படுத்திக் கொண்டாலும் - அது ஏத்துக்கக் கூடிய
தில்லை. மூதல்ல அவளுக்கும் உலகநாதனுக்கும் இடை
யில் இருக்கிற கணவன் - மனைவி என்கிற கமிட்
மெண்ட் முடிவுக்கு வரணும்''

''கமிட்மெண்ட்னு சொன்னீங்களே - அது கரெக்ட்
தான் அங்கிள். பரமேஸ்வரிக்கும் உலகநாதனுக்கும்
இடையில் இருப்பது வெறும் கன்வென்ஸனல் கமிட்
மெண்ட்தான். ரிலேஸன்ஷிப்பே கிடையாது அவங்
களுக்குள்ளே... உறவு இருந்தாத்தான் கணவன்
மனைவி. உறவே அற்றுப் போனதால பரமேஸ்வரியும்
உலகநாதனும் மனைவி கணவன் கிடையாது. அப்படிப்
பார்க்கும்போது எனக்கு ஏற்பட்ட உறவு பரமேஸ்வரி
என்கிற தனி மனுஷிகிட்டேதானே தவிர உலகநாத
னோட மனைவிகிட்டே கிடையாது!'' அச்சுதன் ஒரு
வித ஆக்ரோஷத்துடன் சொன்னான். சில நிமிடங்கள்
நிதானித்துவிட்டுத் தொடர்ந்தான்.

''...பார்த்த சில நிமிடங்களிலேயே பரமேஸ்வரியை
எப்படி ஒரு 'பெட்டர் இண்டிவிஜ்யல்'னு உங்களால
சொல்ல முடிஞ்சதோ - என்னாலேயும் அதை அவங்



களைப் பாத்த உடனேயே உணர முடிஞ்சது. பரமேஸ்
வரிகிட்ட நான் பார்த்த முக்கியமான அம்சம் - நிதான
மான இண்டெலிஜென்ஸ். பொதுவா இண்டெலி
ஜெண்ட் பர்சன்கிட்ட ஒருவித இண்டெலெக்சுவல்
பர்சனாலிட்டியும் 'பில்ட்-அப்' ஆகும். பரமேஸ்வரி
கிட்டே துளிக்கூட அது 'பில்ட்-அப்'பே ஆகலை.
அபூர்வமான இன்னோசென்ஸும் அவங்களுக்குள்ளே
ஆள் அரவமற்ற வனாந்திரத்தில் இருக்கிற ஏரிநீர் போல
துல்லியமா இருந்தது. இப்படி இண்டெலிஜென்ஸும்
இன்னோசென்ஸும் மென்மையா இயல்பா கலந்
திருந்த அழகான அரிதான் கலவைதான் - பரமேஸ்வரி.
இந்தக் கலவையை உணர்ந்து பார்க்க முடிஞ்ச அப்
புறம்தான் அங்கிள் ஐ ஃபெல் இன் லவ் வித் ஹர்.
ஆனா - நான் இப்படி காதல் வயப்படறதுக்கு முன்னா
டியே பரமேஸ்வரிகிட்டே இருந்து எதிர்பார்க்கவே
செய்யாத ஒரு 'அப்பீலிங் வாய்ஸ்' கேட்டது.

நான் மெட்ராஸ் திரும்பிப் போகிறப்ப யாருக்கும்
தெரியாம அவங்களையும் மெட்ராஸ் அழைச்சிட்டு
போயிடச் சொன்னாங்க. அழைச்சிண்டு போய் என்
னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லலை அங்கிள்.
ஏதாவது அனாதைகள் விடுதியில சேர்த்துவிடச் சொல்
லித்தான் என்கிட்ட அழுதாங்க. அந்த S. O. S. அழைப்
பில்தான் அங்கிள் எங்க உறவே ஆரம்பமாச்சு...
அவங்க இஷ்டப்படி மெட்ராஸ்ல ஒரு புகலிடம்
பார்த்து கண்டிப்பா சேர்த்து விடறதாத்தான் நான்
முதல்ல அவங்களுக்கு உறுதிமொழி கொடுத்தேன்.
அதுக்குப் பிறகுதான் கொஞ்சம் கொஞ்சமா ஹரியோ
தயம் மாதிரி பரமேஸ்வரியோட கிளாஸிக்கல் பர்சனா
லிட்டி தெரிய தெரியத்தான் அவங்க இருக்க வேண்
டிய இடம் அனாதைகள் இல்லம் கிடையாது என்கிற
எண்ணத்துக்கு வந்தேன்.

பரமேஸ்வரி அடிமையாகவும் அனாதையாகவும் இருக்காமல் என்னோட அருமையான துணையா இருக்கணும் என்கிறதை நானும் தீர்மானம் பண்ணிண்டாச்சு. பரமேஸ்வரியும் அதை ஏத்துண்டாச்சு. ஆனா - அதை எப்போ எப்படி நடத்தறது என்கிறதை முழு வரைபடமா இன்னும் எதையும் நான் தயாரிச்சிடலை. ஆனா தயாரிக்க ஆரம்பிச்சாச்சு! உலகநாதன் ஒரு பயங்கரவாதியா மனநோயாளியா வெடிக்க ஆரம்பிச்சிருக்கார். அதனால - இப்போ நாங்க அவசரமா முடிவு எடுத்தாக வேண்டிய கட்டத்ல இருக்கோம். இந்த நேரத்ல எதிர்பாராம நீங்க வந்திருக்கீங்க. அதனால உங்ககிட்டே இத்தனையையும் சொல்ல வேண்டியதாயிடுத்து. ஒரு பயங்கரவாதிகிட்ட இருந்து பரமேஸ்வரியை மீட்டு என்னோடு இணைத்துக் கொள்கிற தர்ம சபதத்தில் இருந்து நான் பின்வாங்கறதாவே இல்லை அங்கிள்... சரியான நேரத்ல ஒண்ணா கிளம்பிடப் போறோம். ஒண்ணா வாழவும் போறோம். அப்போ பாருங்க நீங்க - என் கூட வாழற வொழ்க்கையில பரமேஸ்வரி எப்படி பரிபூர்ணமா நிறைஞ்சு வழியப் போறாங்கன்னு......''

அச்சுதன் சட்டென பேச்சை நிறுத்திக் கொண்டான். மௌனமாகி விட்டான். தர்மராஜனும் பல நிமிடங்களுக்கு மௌனமாகவே இருந்தார். அச்சுதனின் நீண்ட விளக்கத்திற்குப் பிறகும் அவர் திருப்தி அடையவில்லை.

''ஏதாவது சொல்லுங்க அங்கிள்'' என்று அச்சுதன் தர்மராஜனின் மௌனத்தைக் கலைத்தான்.

''சொல்றதுக்கு ஒண்ணும் இல்லை அச்சுதா. நாலு நாள் இருந்திட்டுப் போலாம்னு வந்தேன். ஆனா - நாளைக்குக் காலையிலேயே கிளம்பறேன். ஐ'ம் நாட் ஹேப்பி அச்சுதா. ஒண்ணு மட்டும் சொல்றேன், முதல்ல அந்தப் பொண்ணை டைவர்ஸ் பண்ணச் சொல்லு. டைவர்ஸ் பண்ணாத வரைக்கும் அவ உலக



நாதனோட பெண்டாட்டிதான். டைவர்ஸ் ஆகாத ஒருத்தியை கூட்டிட்டு போயிடறது என்கிறது - ஒருத்தனோட பெண்டாட்டியை இழுத்திட்டு ஓடறதுதான். நீ ஆயிரம் சொல்லலாம் - இண்டெலிஜென்ஸ்; லவ்; ரிலேஸன்ஷிப்னு... அதெல்லாம் சமூக அமைப்பில் எடுபடவே படாது. எதுக்கும் சில மரபுகள் இருக்கு. சட்டரீதியான நியதிகள் இருக்கு. சட்டங்களுக்கு உட்பட்ட வாழ்க்கை வாழறதுக்குத்தான் நமக்கு உரிமை தரப்பட்டிருக்கு. அதனால சொல்றேன் - முதல்ல சட்டப்படி என்ன செய்யணுமோ அதை செய்துக்கணும்...''

''ஒரு கிராமத்துப் பெண்ணான பரமேஸ்வரிக்கு கோர்ட்டுக்கு போறதுக்கும் வழக்கு நடத்தறதுக்கும் வழி கிடையாது அங்கிள். கேஸ் போட்டாத்தான் உலகநாதன் சும்மாயிருப்பாரா? வெறும் காம்ப்ளெக்ஸாலேயே ஒருத்தனோட பைக்குக்கு தீ வைத்தவர் அவர்...''

''வெறும் காம்ப்ளெக்ஸாலேயே தீ வைத்தவன் கூட்டிட்டு ஓடினா மட்டும் சும்மா பாத்துக்கிட்டு இருப்பானோ?''

அச்சுதன் கொஞ்சம் திகைத்துப் போய் பார்த்தான்.

''உலகநாதன் அவன் மனைவியை நடத்தின விதம் பூராவுமே தப்பாக இருக்கலாம். அதை நான் மறுக்கலை... ஆனா...''

''ஒன் மினிட் அங்கிள். பரமேஸ்வரியின் தன்மைகள், ஆர்வங்கள் எல்லாத்தையும் நிராகரித்து மறுத்து பரமேஸ்வரியை வேதனைகளுக்கு ஆளாக்கினாரே உலகநாதன் - அதுல ஏதாவது சட்ட விரோதம்னு சொல்ற மாதிரி இருக்கா? அந்த சம்பவங்கள் எதிலும் சட்ட விரோதம்னு எதுவும் கிடையாது. அதனால ஒவ்வொண்ணையும் சட்டத்துக்கு உட்பட்டது சட்டத்துக்கு விரோதமானதுன்னு முத்திரை எதையும் குத்திண்டு இருக்க முடியாது. சட்டந்தான் நீதின்னு

நினைக்கக் கூடாது அங்கிள். நாம் சொல்றது - கோர்ட் ஆஃப் லா தான். கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸ் கிடையாது! உலகநாதன் பரமேஸ்வரிக்கு இழைத்ததெல்லாம் அநீதி. அதனால நீதி கேட்டு அவங்க கோர்ட்டுக்குப் போறது சாத்தியமே கிடையாது... பரிவே இல்லாம ஒருத்தியின் இயல்புகளையும் ஆர்வங்களையும் நசுக்கும் போது - நசுங்கறது ஒருத்தியின் மனசு மட்டுமில்லை. உறவும் தான் சிதைஞ்சு போறது. உறவு அற்றுப் போயிடறப்பவே ஒரு அடையாளமா சொல்லப்பட்ட மனைவி என்ற நிலையும் அற்றுப் போயிடறது அங்கிள். அந்த தார்மீக ரீதியில பார்த்தா பரமேஸ்வரி உலகநாதனுக்கு மனைவியே இல்லை! அதனால் நான் காதல் வயப்பட்டதும் உலகதாதனோட மனைவி மேல் இல்லை! அதேபோல அச்சுதன் மேல் காதல் வயப்பட்டதும் அந்த உலகதாதனோட மனைவி இல்லை! இது லீகல் ஃபேக்ட்டா இல்லாம இருக்கலாம். ஆனா இது மாரல் பேக்ட் அங்கிள்...! சமூக மரபு பற்றியோ சட்டம் பற்றியோ பேசற யாருக்கும் நான் சொல்ற பதில் இதான்......

இதைச் சொன்னதும் அச்சுதன் விடுவிடென்று நடந்து விடலாமா என்று நினைத்தான். ஆனால் மரியாதை கருதி பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

# 33

தர்மராஜனும் அச்சுதனும் நீண்ட நேரம் பேசாமலேயே உட்கார்ந்திருந்தார்கள்.

இறுதியாக தர்மராஜன் கேட்டார் "உன்னை நான் தான் உலகநாதன்கிட்ட அனுப்பி வச்சேன். என் பேச்சைக் கேட்டுத்தான் உன்னை அவன் பக்கத்து வீட்ல



தங்கவும் விட்டான். நாளைக்கு நீ அவன் பெண்டாட்டியை கூட்டிட்டுப் போனது தெரிஞ்சதும் உலகநாதன் முதல்ல என்னை வந்துதான் கேப்பான். என்னை அவன் கேக்கும்போது அவனுக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்? பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கா இல்லையா?"

"அப்படி ஒரு பொறுப்பு உங்களுக்கு இருக்கிறதா நெனைச்சீங்கன்னா - என் பைக்குக்கு அவர் தீ வைத்தாரே - அதை கேக்க வேண்டிய பொறுப்பும் உங்களுக்கு இருக்கா அங்கிள்..."

இதைக் கேட்டதும் தர்மராஜனின் உணர்வுகள் பதட்டமடைந்து விட்டன. "ஸாரி; உனக்கும் அந்தப் பெண்ணுக்கும் இருக்கிற தொடர்பைத் தெரிஞ்ச பிறகு எந்த மூஞ்சியை வச்சிக்கிட்டு போய் உலகநாதனை நான் கேக்க முடியும்னு நெனைக்கிறே...?"

அப்போது சற்று பின்னால் ஏதோ அரவம் கேட்டாற்போல இருந்தது. காற்றில் ஏற்பட்ட சலசலப்பாவென்று சுற்றுப்புறத்தை தர்மராஜனும் அச்சுதனும் ஊன்றி கவனித்தபோது, அவர்களின் பார்வையில் படாமல் மரங்களின் நடுவே கவிந்திருந்த இருளில் ஒரு உருவம் வேகமாக நடந்து சாலையை நோக்கிக் கடந்து விட்டது.

தர்மராஜன் தொடர்ந்து சொன்னார்: "பொழுது விடிஞ்சதும் கிளம்பறேன் நான்... நீயும் அந்தப் பெண்ணும் சேர்ந்து எடுத்திருக்கிற ஓடிப்போகிற தீர்மானம்- மாத்த முடியாத இறுதித் தீர்மானம்னா - நான் உன்னை சந்திக்கிற கடைசி சந்திப்பு இதான்..."

"இதான் உங்களோட தீர்ப்புன்னா - வேதனையோட அதை ஏத்துக்கறேன் அங்கிள்..." அச்சுதன் துக்கத்துடன் சொன்னான்.

தர்மராஜன் எழுந்து வேகமாக நடந்து விட்டார். கவிந்து கிடந்த இருளில் ஒளித்தெறிகளாக புரண்டோடிக் கொண்டிருந்த ஆற்று நீரைப் பார்த்தபடி அச்சுதன் நின்று கொண்டிருந்தான். அவனுடைய மனதில் பல்வேறு எண்ணங்கள் புரண்டோடிக் கொண்டிருந்தன. பரமேஸ்வரியும் அவனும் ஒருவருக்கு ஒருவர் என்று இணைகிற பகிரங்க சம்பவத்திற்கு முன் எல்லாமே கடுமையான அனுபவமாக இருக்குமோ என்ற பதட்டம் அவனுள் ஏற்பட்டது. இந்தப் பதட்டத்தில் இரவெல்லாம் தூக்கம் வரவில்லை அவனுக்கு. தர்மராஜனும் உலகநாதனின் வீட்டில் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு கிடந்தார். குழப்பமும் விசனமும் அவரைப் போட்டு அலைக்கழித்தன. உலகநாதனைப் பற்றி சொல்லவே வேண்டாம். அச்சுதனுடன் ரொம்ப நேரம் பேசிவிட்டு வந்த தர்மராஜனின் முகத்தைப் பார்த்து உலகநாதன் பயந்து போனார்.

தர்மராஜன் சரியாக பேசவில்லை. நன்றாக சாப்பிடவில்லை. காலையில் எழுந்ததும் கிளம்பப் போவதாக வேறு சொல்லி தர்மராஜன் படுத்துக் கொண்டது உலகநாதனுக்கு பெரிய சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. அவருக்கு எதிராக ஏதோ நடப்பது போன்ற பீதியை ஊட்டியது. உறக்கம் வராமல் அரைமணி நேரத்திற்கு ஒரு முறை எழுந்து போய் தண்ணீர் குடித்தார். தண்ணீர் குடித்தபோது தம்ளரைப் பிடிக்க முடியாமல் அவருடைய கை விரல்கள் நடுங்கின.

பரமேஸ்வரியும் குழப்பத்தில்தான் படுத்திருந்தாள். தர்மராஜனுக்கும் அச்சுதனுக்கும் இடையில் ஏதோ நடந்திருப்பதை அவளால் உணர முடிந்தது. எது நடந்தாலும் நன்மையாக இருக்கட்டும் என்ற பிரார்த்தனையோடு உறங்க அவள் முயன்று கொண்டிருந்தபோது சிவமதி அவளுடைய வீட்டில் உறங்குவதற்கு விருப்பப்படாமல் விழித்தவாறு கிடந்தாள். அச்சுதனை நோக்கி



புள்ளி புள்ளியாக அவளுடைய உடலை நகர்த்திக் கொண்டிருந்த அவளின் வேட்கை தகர்க்கப்பட்டிருந்தது. சூரியன் மறைகிற நேரம் பெருமாள் கோயிலுக்குப் போய்விட்டு படித்துறையை ஒட்டிய அடர்ந்த மரங்களின் வழியாக வீடு திரும்ப நினைத்தாள். சில நேரங்களில் அந்த வழியில் சிவமதி வருவதற்கு காரணம் ஒன்று உண்டு. அவ்வழியில் ஒரு இடத்தில் வழுவழுவென்று செண்பக மரம் ஒன்று வளர்ந்து நெடிதாய் நிற்கும். சிவமதிக்கு அந்த மரத்தின் மேல் ஒரு காதல் உண்டு. அந்த மரத்தை இரண்டு கைகளாலும் சிறிது நேரம் தழுவிக் கொண்டிருந்தபின் நகர்ந்து செல்வது அவளுக்கு வழக்கம். அன்றும் அப்படி நடந்துகொண்டபின் சிறிது தூரம் நடந்ததுமே துல்லியமாகக் கேட்ட அச்சுதனின் குரலை அறிந்து அப்படியே சப்தம் எழாதபடி நகர்ந்து பேச்சு நன்றாகக் காதில் விழும்படி பெரிய மரத்தின் பின்னால் நின்று அவள் கவனித்த போதுதான் அச்சுதனும் தர்மராஜனும் பேசிய பேச்சு முழுவதையும் கேட்டு விட்டாள். மோட்டார் சைக்கிளுக்கு உலகநாதன்தான் தீ வைத்தார் என்ற விஷயமும், அச்சுதனுக்கும் பரமேஸ்வரிக்கும் இடையில் காதல் ஏற்பட்டிருக்கிறது என்ற விஷயமும் சிவமதியை அதிர வைத்துவிட்டன. இரண்டுமே அவள் எதிர்பார்க்காதவை. அதுவும் அச்சுதனும் பரமேஸ்வரியும் ஒரு நாள் ஓடிப்போகும் திட்டத்தில் இருப்பது சிவமதியை பலமாக தாக்கிவிட்டது. ஒரு நாளாவது அச்சுதனுடன் படுக்கை பகிர வேண்டும் என்ற அவளின் மோகத்திற்குக்கிடைத்த ஏமாற்றம்தான் சிவமதியை கிழித்தெடுத்தது. ஊர் அறிய அவளுடைய வாழ்வின் பொருள்களில் எந்த மாற்றமும் வராமல் போனால் போகட்டும். ஆனால் ரகசியமான ஒரு வடிகாலுக்குத் துடித்துக் கிடக்கும் உணர்வுகளுக்கு தண்ணீர் பாயக்கூட வழியில்லை என்ற ஏமாற்றம் சிவமதியை கண் கலங்க வைத்தது. பின் அவளைக் கோபப்படுத்தியது. சிறிது நேரம் கழித்து அவளின் மனதில்

வெறியே மூண்டது. காய்ச்சல் வந்தால்போல உடம்
பெல்லாம் சுட்டது. ஆடவனே இருக்க முடியாத
வாழ்க்கை வடிவம் சிவமதியை சினமூட்டியது. படுத்
திருக்க முடியாமல் எழுந்து உட்கார்ந்தாள். அவளு
டைய வாழ்வில் அவள் மட்டும்தான் இருந்தாள்.
வீட்டில் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.
இவர்கள் யாருக்கும் தெரியாத பயங்கர ரகசியங்கள்
இப்போது சிவமதிக்குத் தெரியும். சிவமதி நினைத்தால்
யாரை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். தீ
வைத்த உலகநாதனை மாட்ட வைத்து அவரைப் பழி
தீர்த்துக் கொள்ளலாம். அல்லது ஏற்கனவே அவ
ளுக்கு அளவற்ற பொறாமை இருக்கிற அந்தப் பரமேஸ்
வரிக்கு அச்சுதனிடம் இருக்கிற தொடர்பையும் திட்டத்
தையும் வெளிப்படுத்தி அவர்கள் இருவரையுமே
பூண்டோடு ஒழித்துக் கட்டலாம்! தேவைப்பட்டால்
இரண்டு ரகசியங்களையுமே தேங்காய் உடைப்பது
போல உடைத்தெறிந்து நாசம் பண்ணிவிடலாம்!
இதில் எதை எப்படிச் செய்யலாம் என்ற யோசனை
யில் சிவமதி விடிய விடிய உறங்காமல் கிடந்தாள்.

சொன்னது போலவே காலையில் எழுந்ததுமே
தர்மராஜன் ஏதோ ஒரு சாக்கைச் சொல்லி கிளம்பி
விட்டார். யாருடைய பேச்சும் அருகாமையும் இல்லா
மல் இருந்தால் போதும் என்ற மனத் தொந்தரவில்
இருந்த உலகநாதனுக்கு தர்மராஜன் கிளம்பிப்போனது
நிம்மதியாக இருந்தது. பார்க்கிற யாருக்கும் வேற்றுமை
யாகத் தெரிய வேண்டாம் என்பதற்காக தர்மராஜன்
அச்சுதனைப் பார்த்து மெல்லிய குரலில் குட்-பை
சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்து விட்டார். அச்சுத
னும் ஒரு மரியாதைக்காக சிறிது தூரம் தர்மராஜனுடன்
நடந்துவிட்டுத் திரும்பி வந்தான். வீட்டுத் திண்ணை
யில் நின்றவாறு எல்லாவற்றையும் சிவமதி கவனித்துக்
கொண்டிருந்தா[illegible] அமைதியாக இருந்து



பரமேஸ்வரியை வீழ்த்தியிருக்கிறான் அச்சுதன்... அச்
சுதனுக்கு பரமேஸ்வரி கிடைத்திருப்பது பெரிய விஷய
மில்லை சிவமதிக்கு. அந்த அழகு ராணிக்குப் போய்
இவன் கிடைத்திருக்கிறானே! அதைத் தாங்க முடிய
வில்லை சிவமதியால். சும்மாவே அவள் மேல் சிவ
மதிக்குள் அணையாத பொறாமைத் தீ உண்டு. பரமேஸ்
வரியை கட்டிக்கொள்ள முடிவு செய்துதானே உலக
நாதன் சிவமதியை அவருடைய மனதில் இருந்து தூக்கி
எறிந்தார்... அந்த ஆத்திரம் சிவமதியின் மன ஆழத்தில்
கனத்த திமிங்கலம் மாதிரி அலைந்து கிடக்கிறது.
இப்போது பரமேஸ்வரி அச்சுதன் காதல் விஷயம் வேறு
சேர்ந்து திமிங்கலத்தை உசுப்பி விடுகிறது! திமிங்கலம்
வாலைச் சுழற்றினால் என்ன நடக்கும்? ஊர் கட்டுப்
பாட்டு விதிகளின்படி அச்சுதன் உடனே ஊரைவிட்டு
வெளியேற்றப் படுவான். பரமேஸ்வரியின் மேல் என்ன
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பொறுப்பை
பஞ்சாயத்து உலகநாதனிடம் விட்டுவிடும். உலக
நாதன் அவளை உதைத்து சித்ரவதை செய்வாரோ-
இல்லை அம்பாசமுத்திரத்திற்கு அடித்து விரட்டி பர
மேஸ்வரியை வாழாவெட்டியா ஆக்குவாரோ — அது
அவருடைய இஷ்டம். ஆனால் சித்ரவதை பரமேஸ்
வரிக்கு மட்டுமில்லை. உலகநாதனுக்கும்தான். ஆசைப்
பட்டு கட்டிய சின்ன வயசுக்காரி ஒரு சின்ன வயசுப்
பையனுடன் ஓடிப்போகிற அளவிற்கு தொடர்பு வைத்
திருந்தாள் என்ற மானக்கேடு ஒன்று போதுமே உலக
நாதனின் ஆயுசுக்கும்... நினைக்க நினைக்க சிவமதிக்கு
இரண்டு புஜங்களையும் தட்டிக்கொள்ள வேண்டும்
போல இருந்தது. ஒரே ஒரு கராத்தே அடியில் மூன்று
எதிரிகளை அடித்து வீழ்த்த அவளுடைய மன ஆழத்து
திமிங்கலம் நீர் மட்டத்தை நோக்கி வேகமாக எழும்ப
தலையை கொஞ்சம் உயர்த்தியது!

-அப்போது யாரும் எதிர்பார்க்காத சம்பவம் செந்
துறையில் நடந்து விட்டது. அச்சுதனின் பைக் எரிக்

கப்பட்ட புகார் விஷயமாக அந்தப் பகுதிக்கான காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் கான்ஸ்டபிள் ஒருத்தருடன் பைக்கில் வந்து இறங்கினார். உலகநாதன் உட்பட பலபேரிடம் எந்த சிரத்தையும் இல்லாத ஒரு விசாரணையை நடத்திவிட்டு சப் இன்ஸ்பெக்டர் அரைமணி நேரத்தில் வந்த வேகத்தில் கிளம்பிவிட்டார். கிளம்பிச் செல்வதற்கு ஒரு நிமிடத்திற்கு முன் உலகநாதனின் எதிரில் திரண்டிருந்த சிலரிடம் சப் இன்ஸ்பெக்டர் "எனக்கு ரெண்டு மூணு பேர் மேல சந்தேகம் இருக்கு. அவனுங்களா வந்து நாலு நாளைக்குள்ள சரணடைஞ்சிட்டா அடி உதை இல்லாம தப்பிக்கலாம். அப்படி வரலே - என்கிட்ட அடி வாங்கித் தின்ன முடியாது! முட்டிக்கு முட்டி பின்னிருவேன் பின்னி!" என்று ஒரு எச்சரிக்கை கொடுத்துவிட்டுப் போனதில் உலகநாதனின் முதுகுத் தண்டு வெடவெடத்து வியர்த்துக் கொட்டி விட்டது! அவருக்குள் ஊசலாட்டம் ஆடிக் கொண்டிருந்த பிடிமானம் முழுவதுமாக அறுந்து விழுந்து விடுவது போல அதிர்ந்து ஆடியது. கூட்டத்தோடு கூட்டமாக சிவமதியும் திண்ணையோரம் வந்து நின்று ஆர்வத்துடன் உலகநாதனின் முகத்தைக் கவனித்துப் பார்த்தாள். அவளுடைய பார்வைகூட அந்த நிமிஷம் உலகநாதனை பயப்பட வைத்ததால் சிவமதியைப் பார்க்கப் பயந்து உலகநாதன் முகத்தைச் சட்டென வேறுபக்கம் திருப்பிக் கொண்டார். சிவமதிக்கு அது பெரிய தப்பாகப் போய்விட்டது. உலகநாதன் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டார் என்று தோன்றிவிட்டது அவளுக்கு. அவ்வளவுதான் - அவளுள் திமிங்கலம் குலுங்கியது. பைக்குக்கு தீ வைத்துவிட்டு ஒன்றும் தெரியாதவர் மாதிரி உலகநாதன் உட்கார்ந்திருப்பதாக நினைத்து சிவமதியின் மனம் ஆவேசப்பட்டது. ஊர் பேருக்குத் தெரியாமல் பைக்குக்கு தீ வைத்தது மாதிரி அவளுடைய மனசுக்கு தீ வைத்தவரும் உலகநாதன் தானே என்ற ஆத்திரம் பொங்கியது அவளுக்குள்.



உண்மையில் உலகநாதன்தான் குற்றவாளி. அவர்தான் சிவமதியின் எதிரி. அச்சுதனோ பரமேஸ்வரியோ எதிரிகள் இல்லை. யோசித்துப் பார்த்தால் பரமேஸ்வரி அச்சுதனுடன் ஓடிப்போவதுதான் நியாயம்!

பரமேஸ்வரியின் காதல் ஓட்டத்திற்கு அட்சதை போட்டு வாழ்த்துவதுதான் நீதியே தவிர அவர்கள் ஓட முடியாமல் முடக்குவது அநீதி. தனிப்பட்ட முறையில் அச்சுதனிடமோ பரமேஸ்வரியிடமோ சிவமதிக்கு எந்தப் பகையும் கிடையாது. ஆனால் உலகநாதனிடம் அடங்காத பகை உண்டு அவளுக்கு. சிவமதி தண்டிக்க வேண்டியது அழகான சின்னஞ் சிறுசுகளை இல்லை. கோரமான கிழவனைத்தான்! சின்னஞ் சிறுசுகளாவது எங்கேயாவது போய் நல்லபடியாக இருக்கட்டும்......

என்ன செய்யலாம் ஏது செய்யலாம் என்று சிவமதி ஒரு நாள் பூராவும் கிறுக்குப் பிடித்தவள் போல யோசனை பண்ணிக்கொண்டே கிடந்தபின் அவளுக்கு வழி தெரிந்தது. வேம்புலி அம்மன் கோயிலுக்குப் போய்விட்டு வந்து காரியத்தில் இறங்கினாள். தீய சக்தியை துவம்சம் பண்ண அந்த அம்மனின் அருள் வேண்டும்.

வேத பாடசாலைக்கு நேர் தென்கிழக்கே ஆற்றோரம் இருந்த பெரிய அரசமரத்தின் கீழ் அவசரமாக ஊர் பஞ்சாயத்துக் கூட்டம் நாளை நடக்கப் போகிற செய்தி செந்துறை ஜனங்களுக்கு பரபரப்பான செய்தி இல்லை. ஆனால் அவசர கூட்டத்தில் அச்சுதனின் மோட்டார் சைக்கிளுக்கு யார் தீ வைத்தார்கள் என்ற உண்மை தெரிவிக்கப்பட இருப்பதாக அறிவித்திருந்ததில்தான் ஊர் ஜனங்கள் பரபரப்பாகி விட்டார்கள். உண்மையை தெரியப்படுத்தப் போவது யார் என்ற விஷயம்கூட பஞ்சாயத்துத் தலைவருக்கும் சிவமதியின் தகப்பன் அழகர்சாமிக்கும்தான் தெரியும். அவர்களுக்

கும் கூட சிவமதி யாரை குற்றவாளியாக தெரிவிக்கப் போகிறாள் என்பது தெரியாது உண்மையை ஊர் கூட்டத்தில் மட்டும்தான் சொல்வதாக சிவமதி கண்டிப் பாக சொல்லிவிட்டாள். உண்மையை அறிவிக்கிற சம்பவத்தை பெரிய நாடகக் காட்சி போல் பரபரப் பானதாக காட்ட அவளுடைய மனசு ஆசைப்பட்டது. ஆனால் சிவமதி ஒன்றை மட்டும் பஞ்சாயத்துத் தலை வரிடம் உறுதியாக சொல்லி இருந்தாள். உண்மையைக் கூறிய பிறகு அவளுக்கு ஏதாவது ஆபத்து வந்தாலும் வரலாம். அதனால் தேவையான பாதுகாப்பு நடவடிக் கைகளை பஞ்சாயத்துக்காரர்கள்தான் சிவமதிக்கு ஏற் படுத்தித் தரவேண்டும். அதற்கு தான் பொறுப்பு என்று பஞ்சாயத்துத் தலைவர் அவளுக்கு வாக்குக் கொடுத் தார்.

—இந்தச் செய்திகள் எல்லாம் வேறு பரவி செந் துறையில் பெரிய பதட்டத்தையே ஏற்படுத்தி இருந் தது. ஆள் ஆளுக்கு எதை எதையோ பேசிக் கொண் டிருந்தார்கள். ஊர் கூட்டத்தில் உண்மையை தெரி விக்கப் போவது யார் என்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை. உண்மை நிஜமாகவே வெளிப்படுமா னால் என்ன நடக்கும் என்பதை அச்சுதனாலும் கற்பனை செய்ய இயலவில்லை. பரமேஸ்வரியும் சமையல் அறை ஜன்னல் வழியாக பரபரப்பையும் சந்தோஷத்தையும் ஜாடையிலேயே அச்சுதனுக்கு உணர்த்திக் கொண்டிருந்தாள். அவளுடைய முயற்சி யும் பங்கும் இல்லாமலேயே உண்மை வெளியாகப் போகிற பரவசம் பரமேஸ்வரிக்குள் படபடத்துக் கொண்டிருந்தது. தண்டனை பெற்று உலகநாதன் ஜெயிலுக்குப் போய்விட்டால் பரமேஸ்வரிக்கு அச்சுத னுடன் தப்பி ஓடுவது ரொம்ப சுலபமானதாக இருக் கும். அந்த சுதந்திர ஓட்டத்திற்காக பரமேஸ்வரியின் உணர்வுகள் வேகமாக தயாராகிக் கொண்டிருந்தன.



ஆனால் உலகநாதன்தான் ஊசலாட்டத்தின் கடைசி இழைகளில் தொங்கிக் கொண்டிருந்தார். உண்மை நிஜ மாகவே யாருக்காவது தெரியுமா? அவரால் நம்பவும் முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. அவர் தீ வைத்ததை பரமேஸ்வரி உட்பட யாருமே பார்க்கவில்லை என்பதுதான் அவருடைய நம்பிக்கை. ஆனாலும் யாரோ எதற்கோ புரளியைக் கிளப்பி விடு கிறார்கள் என்கிற மாதிரி நினைக்கிற ஸ்திரமான மன நிலையில் உலகநாதனின் மனம் இல்லை. ராத்திரி யோடு ராத்திரியாக எங்கேயாவது ஓடிப்போய் விட லாமா என்று யோசித்தார். ஓடும் போது யாராவது பார்த்து விட்டால்? ஓடிப் போனால் கூட எங்கு ஓடிப் போவது? ஓடிப்போய் சாப்பாட்டுக்கு என்ன செய் வது? ஒரு வேளை சாப்பாடு இல்லாமல் இருக்க முடி யாது அவரால்!

ராத்திரியில் தூக்குப் போட்டுக்கொண்டு செத்து விடலாமா என்ற எண்ணமும் உலகநாதனின் மனதிற் குள் ஓடிக் கொண்டே இருந்தது. அதற்கும் பயமாக இருந்தது. மாற்றி மாற்றி மனதிற்குள் ஏற்பட்ட குழப் பத்தின் கனம் தாங்காமல் உச்சந்தலை கொதித்தது. ஒரு விளிம்பில் நிற்கிற தனிமை மனதை நடுங்க வைத்துக்கொண்டே இருந்தது. மரண தண்டனை நிறைவேற்றப் படப் போவதற்கு முந்தின நாள் இரவு பூராவும் ஒரு சிறைக்கைதி எப்படிப்பட்ட மனநிலை யில் இருப்பானோ அதே மனநிலையில் உலகநாதனும் கிடந்தார். ராத்திரி பூராவும் வயிற்றுப் போக்கு வேறு ஏற்பட்டு உலகநாதனால் எந்த விதத்திலுமே அவனைச் சமாளித்துக் கொள்ள முடியவில்லை. பொழுது விடியவே கூடாதென்று பதட்டப்பட்டார். நடக்கிற காரியமா அது? பொழுது விடிந்து விட்டது - என்றைக் கும் போல......

# 34

ஒரு நாளும் இல்லாத அதிசயமாக அன்று காலையில் உலகநாதன் பரமேஸ்வரியிடம் ரொம்ப ரொம்பப் பிரியமாக பேசினார்! வார்த்தைக்கு வார்த்தை 'ஈஸ்வரி தாயி!' என்று அன்பு ஒழுக கூப்பிட்டுக் கொண்டிருந்தார்! உடம்பு ரொம்ப ஒரு மாதிரியாக இருப்பதாக சொல்லி குளிக்காமல் இருந்தார். வயிறு சரியில்லையென்று சொல்லி சாப்பிடாமலும் இருந்தார். அவரைப் பார்க்க பரமேஸ்வரிக்கே பரிதாபமாக இருந்தது. ஆனால் இதற்கு மேல் அவளால் எதுவும் செய்ய முடியாது. உலகநாதன் கடைசி நேரத்தில் சங்கரா சங்கராயென்று கத்துகிறார்! என்ன கத்தினாலும் பிரயோஜனமில்லை...!

காலை மணி எட்டரை ஆகும்போது மணிவாசகம் உலகநாதனைத் தேடி வந்து விட்டார்.

''என்னங்க அண்ணாச்சி... என்னமோ பேயறைஞ்ச மாதிரி இருக்கீங்க... கூட்டத்துக்கு வல்லையா நீங்க?'' என்று கேட்டார்.

''ரெண்டு வீடுகூட என்னால தாண்டி நடக்க முடியாது மணிவாசகம். தலையைப் போட்டு சுத்துது. நான் வரலை. என் சம்சாரத்தைத்தான் அனுப்பறேன்'' என்றார் உலகநாதன்.

பரமேஸ்வரிக்கு உலகநாதனின் குற்ற மனப்பான்மையின் பயத்தையும் பின்வாங்கலையும் கண்கூடாக பார்க்க முடிந்தது. இதற்கு முன் ஒருமுறைகூட பரமேஸ்வரியை அவர் ஊர் கூட்டம் எதற்கும் போ என்று சொன்னதும் இல்லை. வாயென்று கூட்டிக்கொண்டு



போனதும் இல்லை. பரமேஸ்வரியாக சில கூட்டங்களுக்கு தன்னிச்சையான ஆர்வத்துடன் போய் வேடிக்கை பார்த்ததுண்டு. இன்று உலகநாதன் கிளம்பாமல் அவளை மட்டும் அனுப்பியது சில விநாடிகள் பரமேஸ்வரிக்கு விகற்பமாகப் பட்டாலும், அவளுள் இருந்த பரவசப் பெருக்கில் அதற்குமேல் ஆழமாக எதையும் நினைத்துப் பார்க்காமல் கூட்டத்திற்குக் கிளம்ப அவசர அவசரமாக தயாராகி விட்டாள். அவள் கிளம்பிய போது படுக்கையில் சுருண்டு கிடந்த உலகநாதன் சொன்னார்: ''கூட்டம் முடியும் வரை இருந்து என்ன பேசினாங்க ஏது பேசினாங்கன்னு வந்து வெவரமா சொல்லு தாயி. எனக்கு ஒடம்புக்கு ரொம்ப முடியலைன்னு வேதகிரி அண்ணாச்சி கிட்ட சொல் விடு...''

பரமேஸ்வரி படிகளில் இறங்கியது தெரிந்ததும் உலகநாதன் விருட்டென்று எழுந்து உட்கார்ந்தார். யாரும் அற்ற தனிமை கிடைத்துவிட்டது அவருக்கு. பயம் குழப்பம் எல்லாம் அவருள் இருந்து முழுவதுமாகக் கலைந்து போயிருந்தது. யாருமே இல்லாத சூழ்நிலையில் இயங்கப் போகிற தீவிரநிலை மட்டும்தான் உலகநாதனின் மனதில் நிமிர்கோடாய் நின்றது. கடிகாரத்தில் மணியை கவனித்துவிட்டு இன்னும் சிறிது நேரம் ஆகட்டும் என்ற எண்ணத்தில் கைகளை பின்னால் கட்டியபடி காந்திமதியின் படத்தை நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்தபடி சில நிமிடங்கள் நின்றார். பத்து மணி ஆனதும் கிளம்பலாம் என்ற எண்ணத்தில் ஜன்னல் வழியாக தெருவையே பார்த்துக் கொண்டிருந்தார். பஞ்சாயத்துக் கூட்டம் பத்து மணிக்கு என்றுதான் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒன்பது மணிக்கே அரசமரத்தின் கீழ் கூட்டம் திரண்டு கிடந்தது. எல்லாரும் எல்லாரையும் சந்தேக பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அச்சுதனும் பொழுது விடிந்ததும் பெரு

மாள் கோயிலுக்குப் போய்விட்டு சீக்கிரமாகவே அரச மரத்தடிக்கு வந்து சேர்ந்து விட்டான். உலகநாதன் கூட்டத்திற்கு வருகிற அறிகுறி தெரிகிறதா என்று அச்சுதன் சாலையையே பார்த்துக் கொண்டிருந்தான். பரமேஸ்வரிதான் தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்தாள். யாரும் அறியாமல் அவளும் அச்சுதனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சரியாக ஒன்பதே முக்கால் மணிக்கு சிவமதி அவளுடைய அப்பாவுடன் வீட்டில் இருந்து தீக்குளியில் இறங்கப் போகிற மாதிரியான பக்தி போதையுடன் கிளம்பி ஓடுகிற வேகத்தில் நடக்கத் தொடங்கினாள். திறந்து கிடந்த உலகநாதனின் வீட்டை ஓரக் கண்ணால் நோட்டம் விட்டுக்கொண்டே அவள் கடந்து போனதை உலகநாதன் ஜன்னல் வழியாக இரையை கவனிக்கும் வனவிலங்கு போல பார்த்துக் கொண்டிருந்தார். அடுத்த சில நிமிடங்களில் தெருவில் நடமாட்டமே இல்லாமல் வெறிச்சோடி விட்டது. உலகநாதன் மெதுவாக வாசலுக்கு நகர்ந்து போய் தெருவை எச்சரிக்கை உணர்வுடன் கவனித்தார். தெருவே காலியாகத்தான் கிடந்தது. யாருடைய வீட்டிற்குள்ளேயும் கூட நடமாட்டம் இருப்பதாக தெரியவில்லை. "ஊர் சவம் எல்லாம் போயாச்சி போல கூட்டத்துக்கு..." என்று உலகநாதன் வெறுப்புடன் நினைத்துக் கொண்டார். எந்த சவத்தின் கண்ணிலும் தான் படப்போவதில்லை என்பது நிச்சயமானது அவருக்கு. வீட்டுக் கதவை வெறுமே சாத்தினார். விடுவிடென்று தெருவில் இறங்கி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே படித்துறையை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்தார். பின் படித்துறையை ஒட்டிய அடர்ந்த மரங்களின் ஊடேயே பதைபதைப்புடன் ஓடினார்.

நேரம் பார்த்துக் கொண்டிருந்தது போல! அடையாளம் கண்டுவிட்ட ஒரு காக்கை விடாமல் கத்தியவாறு அவரின் தலைக்கு மேல் சுற்றிச் சுற்றிப் பறந்து உலகநாதனின் கோபத்தை அதிகமாக்கியது. தலையில் துண்டைப் போட்டுக்கொண்டபடி நடையை வேகமாக எட்டிப் போட்டார்.



ரொம்ப தூரம் நடந்த பிறகு பெரிய பெரிய மரங்களுக்கு அப்பால் அரச மரத்தடியும் கூடிக்கிடந்த ஊர் ஜனமும் உலகநாதனின் பார்வையில் பட்டது. இனி அவர் நிமிர்ந்த வாக்கிலேயே நடந்து கொண்டிருக்க முடியாது. யாருடைய கண்ணிலும் பட்டுவிடக் கூடாது உலகநாதன். அதனால் நன்றாகக் குனிந்து முழங்கால்களால் மண்டியிட்டபடி தவழ்ந்து நகர்ந்து கொண்டிருந்தார் அவர். பஞ்சாயத்துத் தலைவர் மாத்திரம் இன்னும் கூட்டத்திற்கு வந்தபாடில்லை. அதனால் அரச மரத்தடியில் பேச்சும் சப்தமுமாக இருந்தது. உலகநாதன் அங்குலம் அங்குலமாக நகர்ந்து கொண்டிருந்தார். கல்லும் மண்ணும் காய்ந்த குச்சிகளும் அவருடைய பாதங்களையும் முழங்கால்களையும் ரத்தமாக்கி இருந்தன. சட்டென பேச்சுச் சப்தங்கள் அடங்கிப் போனது. உலகநாதன் லேசாக தலையை மட்டும் உயர்த்திப் பார்த்தார். தலைவரும் துணைத் தலைவரும் வந்து உட்கார்ந்திருந்தார்கள். உலகநாதன் பெரிய தாழம்பூ புதரின் பின்னால் பதுங்கிக் கொண்டார். மூச்சு வாங்கியது அவருக்கு. வியர்வையில் உடம்பு தெப்பமாகி இருந்தது.

பஞ்சாயத்துத் தலைவரின் குரல் கணீரென்று கேட்டது. சில சம்பிரதாயமான வார்த்தைகளைப் பேசிவிட்டு "ஒலகநாத அண்ணாச்சி வல்லையா?" என்று தலைவர் கேட்பதும் பரமேஸ்வரி அதற்கு "ஒடம்பு சரியில்லை அவங்களுக்கு" என்று பதில் சொல்வதும் உலகநாதனின் காதுகளில் விழுந்தது.

''அச்சுதன் தம்பி...'' பஞ்சாயத்துத் தலைவர் குரலை உயர்த்திக் கூப்பிட்டார். தன்னைக் கூப்பிட்ட மாதிரி உலகநாதன் அவருடைய பெரிய மண்டையை உயர்த்திப் பார்த்தார். அச்சுதன் எழுந்து நின்று கொண்டிருந்தான்.

பின் தலைவர் ''அழகர்சாமி மக - சிவமதி...'' என்றார்.

கூட்டம் இதை எதிர்பார்க்காததால் சிவமதி எழுந்து நின்றதும் திகைத்து விட்டது. அச்சுதனும் திகைத்துப்போய் சிவமதியைப் பார்த்தான். அவளைப் பார்த்ததும் உலகநாதன் அநியாயத்திற்குக் குழம்பினார். உண்மையை தெரியப்படுத்தப்போவது அச்சுதனாக இருக்க முடியாதென்று நிச்சயமாகத் தெரிந்தது அவருக்கு. அப்படியானால் நிஜத்தை வெளியிடப் போவது கடைசியில் இந்த அறுதலி சிறுக்கியாயென்ற எண்ணம் தோன்றிய மாத்திரத்தில் உலகநாதனின் கண்கள் ரத்தச் சிவப்பாகின. கோபத்தை தாங்க முடியாமல் அவருடைய பெரிய மண்டை யானையின் மண்டையைப் போல அப்படியும் இப்படியுமாய் ஆடியது. மற்றொரு வன்முறையை பாய்ச்ச உலகநாதனின் உடம்பில் இருந்து ஒருவித அனல்வீச்சு கனலாகக் கனன்று கொண்டிருந்தது.

பஞ்சாயத்து விசாரணை நேரிடையாகவே தொடங்கி விட்டது. ஊர் சட்டத்திற்கு ஏற்ப வேம்புலி அம்மன் பெயரில் சூடம் அணைத்து, தான் சொல்லப் போவதெல்லாம் உண்மையென்று சத்தியம் பண்ணி விட்டு சிவமதி கொடுத்த சுருக்கமான வாக்குமூலம் இது- ''அன்னைக்கி நட்ட நடு ராத்திரியில வீட்டுக்குள்ள ரொம்ப புழுங்கிப் புழுங்கி வேக்காடா இருந்துச்சி. கொஞ்ச நேரம் வெளித் திண்ணையில காத்தோட்டமா படுத்துக் கெடந்திட்டு வந்து படுத்துக்கலாம்னு வாசல்



கதவைத் தெறந்தேன். கதவைத் தெறந்தவ அப்படியே மலைச்சிப் போய் நின்னுட்டேன். உலகநாத அண்ணாச்சி மெட்ராஸ்காரங்க பைக்குக்குப் பக்கத்ல நின்னுட்டு இருந்தாங்க... இந்த நேரத்ல எதுக்கு நிக்குறாங்கன்னு எனக்கு ஒரு மாதிரியா சந்தேகம் வந்திருச்சி. நல்லா ஒளிஞ்சி நின்னுக்கிட்டுப் பாத்தேன். உலகநாத அண்ணாச்சி திடுதிப்னு பைக்குல தீயை வச்சிட்டு வீட்டுக்குள்ள ஓடியே போயிட்டாங்க... நான் நடுங்கிப் போயிட்டேன் நடுங்கி. நானும் சத்தமில்லாம வீட்டுக்குள்ள போய் கண்ணை மூடிப் படுத்துக்கிட்டேன்.''

''இதை நீ ஒங்க வீட்ல யார் கிட்டேயும் சொல்லலையா?'' தலைவர் கேட்டார்.

''சொல்லலை.''

''இவ்வளவு பெரிய விசயத்தை எதனால நீ வீட்ல சொல்லலை?''

''எங்க வீட்ல யார்கிட்ட சொன்னாலும் அடுத்த நிமிசமே அது ஊருபூரா பரவிடும்... அந்தப் பயத்ல தான் சொல்லலை...''

''பரவினா என்ன? நெசத்தைத்தானே சொல்றே?''

''நெசத்தைத்தான் சொல்றேன். இருந்தாலும் நான் பாத்ததுக்கு வேற சாட்சியமே கிடையாதே. அதனால நிரூபிக்க முடியாம போய் எனக்கு வில்லங்கம் எதுவும் வந்திட்டா?''

''பெறகு எந்த தைரியத்ல இத்தனை நாள் கழிச்சி திடீர்னு சொல்றதுன்னு முடிவு செஞ்சே?''

''சாட்சி இல்லாட்டியும் போவது. மனசாட்சி இருக்கே எனக்கு. அதான் தைரியமா சொல்லலாம் முடிவு செஞ்சேன். பொய் பேசலை நான். அணணாச்சி தான் தீ வச்சாங்க...''

"நாளைக்கி போலீஸ்ல கேட்டா பயப்படாம சொல்லுவியா?"

"தாராளமா சொல்றேன்..."

கூட்டம் மூச்சுவிட மறந்துபோய் சிவமதி சொல்வதை கேட்டுக்கொண்டிருந்தது. இந்த உண்மையை யாருமே எதிர்பாராததால் திகைப்பில் உறைந்து போயிருந்தார்கள். பரமேஸ்வரி கண்களை மூடியவாறு ஒரு வித விம்மலுடன் இருந்தாள். நேராக ஓடிப்போய் பெருமாள் சந்நதியில் விழவேண்டும் போல இருந்தது. அச்சுதன் திருப்தியை முகத்தில் காட்டிக்கொண்டு விடாமல் கவனமாக நின்று கொண்டிருந்தான். அவனுடைய பங்கோ பரமேஸ்வரியின் பங்கோ இல்லாமலேயே வேறொரு திசையில் இருந்து உண்மை மிக எளிதாக தெரியப்படுத்தப்பட்டு விட்டது. ஏற்கனவே அளவு கடந்த மன வேகத்தில் இருந்த உலகநாதன் இந்தத் திசைமாற்றத்தில் இன்னும் பலத்த புயல் வேகத்திற்கு ஆளாகி பயங்கரமாக கொந்தளிப்பதற்கு சாத்தியம் உண்டு. அப்படியே அவர் கொந்தளித்தாலும்கூட அவரின் கொந்தளிப்பு சிவமதியை நோக்கித்தான் திரும்பும் அச்சுதனுக்கோ பரமேஸ்வரிக்கோ இதில் அபாயம் இல்லை. இருந்தாலும்கூட இப்போது இருக்கிற சூழ்நிலையில் உலகநாதன் சிவமதியின் மேலும் நேரிடையான தாக்குதல் எதையும் காட்டிவிட முடியாது. சிக்கல்கள் களைந்துவிட்ட புத்துணர்வுடன் அச்சுதன் பரமேஸ்வரியை பார்த்தான். கூட்டத்தினரின் மொத்த பார்வையும் பரமேஸ்வரியின் மேலேயே பதிந்திருந்ததால் அச்சுதன் அவளைப் பார்த்த பார்வையின் தனித்தன்மையை யாரும் காணவில்லை ஆனால் சிவமதிக்கு மட்டும் அச்சுதனின் பார்வையின் பொருள் தெரிந்து ஒரு நிமிஷம் அவளைப் பொரும வைத்தது. வழி இல்லாமல் சிவமதி மனசைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.



தொடர்ந்து பஞ்சாயத்துக்காரர்களும் வேறு சில பெரியவர்களும் சிவமதியை மாற்றி மாற்றி குறுக்கு விசாரணை செய்து கொண்டிருந்தபோது உலகநாதன் தாழம்பூப் புதரில் இருந்து கிளம்பிவிடத் தயாராகி விட்டார். இனிதான் தப்ப முடியாதென்ற உண்மை அவருடைய நீர்த்துப் போயிருந்த மனநிலைக்கும் தெரிந்தது. கடைசியில் அவருக்கு எமன் இந்த அறுதலி நாய்! ஒரு காலத்தில் எந்த நிமிஷமும் அவருக்கு முந்தாணி விரிக்கத் தயாராக இருந்த சிறுக்கி மகள்தான் இப்போது முந்தாணியை இழுத்துச் செருகியிருக்கிறாள்!

இனியும் தாமதம் செய்யக் கூடாது. ஓட்டம் பிடிக்க வேண்டியதுதான். எப்படியும் இன்னும் அரைமணியில் அவரைக் கூப்பிட வீட்டுக்கு ஆட்கள் வந்து விடுவார்கள். யோசித்துப் பார்க்கத் தெரியாமல் உலகநாதன் தப்புப் பண்ணிவிட்டார். சிங்கம்போல ஊர் கூட்டத்திற்கு அவரும் போயிருக்க வேண்டும். இத்தனை நாள் கழித்து ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு சிவமதி தன் மேல் அபாண்டமாக பழி சுமத்துகிறாள் என்று துண்டை போட்டுத் தாண்டியிருக்க வேண்டும் அவர். உலகநாதன் அநியாயமாக அந்த வாய்ப்பை இழந்து விட்டார். மனம் இருக்கிற நிலையில் இனி எதுவும் செய்ய முடியாது அவரால் - ஊரை விட்டே ஓட்டம் பிடிப்பதைத் தவிர...

திருப்பி மரங்கள் அடர்ந்த அதே பகுதியின் வழியாகவே உலகநாதன் வேகமாக ஓடினார். திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே ஓடினார். உடம்பைவிட அவரின் மனம் பயங்கர வேகத்தில் பாய்ந்தோடியது. சில நிமிடங்களில் உலகநாதன் அவருடைய தெருவை அடைந்துவிட்டார். தெரு இன்னமும் உயிரற்றுப் போய் கிடந்தது. இந்தத் தெருவையும் வீட்டையும் ஊர்காரர்

களின் கண் பார்வையை விட்டும் ஓடிப் போய் விடுவது தான் முடிவானது 'குற்றவாளியாக யார் முன்னால் நிற்பதும் முடியவே முடியாத காரியம். பூர்வீக வீட்டையும் உருண்டு விளையாடி உருவான தெருவையும் உலகநாதன் பார்த்தார். ஒருவிதமான அச்சுறுத்தல் போல அச்சுதனின் புதிய மோட்டார் சைக்கிள் நின்று கொண்டிருந்தது. எரிந்துபோன பழைய பைக்கும் பக்கத்தில் நின்றது. இதற்கு நெருப்பு வைக்கப் போய் தானே உலகநாதன் குற்றவாளியாக நேர்ந்தது. ஊருக்கும் தண்டனைக்கும் அவமானத்துக்கும் பயந்து தானே கண் மறைவாக ஓடித் தொலைய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக நேர்ந்தது? உலகநாதன் அச்சுதனின் புதிய மோட்டார் சைக்கிளின் மேல் காறித் துப்பினார். எட்டி அதை ஒரு உதை உதைத்தார் இந்த உதையெல்லாம் போதவில்லை அவருக்கு' தொலைந்து போய்விடும் முன் இன்னொரு குற்றத்தையும் செய்து விட அவரின் மனம் பரபரத்தது. சிவந்த மேட்டு விழிகளால் புதிய மோட்டார் சைக்கிளைப் பார்த்தார் அவருடைய உணர்வுகள் கொக்கரித்தன. சூழ்நிலை அவரின் அடுத்த குற்றத்திற்கு துணையாக இருந்தது. விரைந்து போய் வீட்டுக் கதவை காலால் உதைத்துத் திறந்தார். உதைக்கப்பட்ட வேகத்தில் கதவு சுவரில் போய் ஒசையுடன் மோதி ஆடியது. உக்ரத்துடன் ஊஞ்சலையும் ஒரு கையால் பற்றி குலுக்கித் தள்ளினார். நுழைந்த வேகத்தில் புதிய மோட்டார் சைக்கிளை நோக்கி உலகநாதன் கையில் ஒரு தீப்பெட்டியுடன் நெருங்கினார். அப்போது வெகு தூரத்தில் ஏழெட்டு பேர் அவருடைய வீட்டை நோக்கித்தான் கிளம்பி வருவது போல் தெரிந்தது. உலகநாதன் பெட்ரோல் டேங்க்கின் மூடியைக் கழற்றி வீசி எறிந்தார். சில நொடிகள் வெறியுடன் பைக்கை வெறித்துப் பார்த்துவிட்டு உலகநாதன் அதற்கும் தீ வைத்தார். அடுத்த கணம் குபீரென்று செந்தீ உயர்ந்து எரிந்தது.



வன்ம களிப்பு பிரகாசித்த கண்களுடன் நிமிர்ந்து பார்த்தார். நெருப்பைப் பார்த்துவிட்ட தூரத்து மனிதர்கள் வேகமாக ஓடிவர ஆரம்பித்து பெரும் கூச்சலும் போட ஆரம்பித்தார்கள். வேட்டியை தூக்கி மடித்துக் கட்டிய உலகநாதன் அவரின் வீட்டிற்குள் பாய்ந்தோடி கதவைப் படாரென்று சாத்தி தாளிட்டுக் கொண்டார்...

# 35

உலகநாதன் இரண்டொரு கணங்கள் பூட்டிய கதவின் மேல் சாய்ந்தபடியே நின்றார். மலங்க மலங்க விழித்தார். பின் வேகமாகச் சென்று கொல்லைப்புற கதவைத் திறந்து பின்புறமாக ஓடலானார். பின்னால் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடினார். மனித நடமாட்டம் இல்லாத கற்களும் முட்களும் சிதறிக் கிடந்த வனாந்திரப் பகுதியில் அவரால் ஓடவும் முடியவில்லை. விழுந்து வாரி ஓடினார். எங்கே ஓடுகிறோம்; எந்தத் திசையில் ஓடுகிறோம் என்ற சிந்தனையே இல்லாமல் ஓடினார். ஒரு பெரிய மனித கூட்டம் அவரை துரத்திக் கொண்டு வருகிற மாதிரியான பீதியிலும் அவசரத்திலும் ஓடினார். கடும் மனச்சிதைவிற்கு உள்ளாகிவிட்ட உலகநாதனின் இந்த ஓட்டம் மதுரை கோரிப்பாளையம் பகுதியில் கனரக வாகனம் ஒன்றால் மோதப்பட்டதில்தான் முடிவிற்கு வந்தது.

ரத்தக்களரியான பொட்டலமாகத்தான் உலகநாதனின் உடல் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது. அபாய கட்டத்தைத் தாண்டிய பிறகு அவரின் உடல் தனியார் மருததுவ மனைக்கு மாற்றப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக காயங்களும்

எலும்புச் சேதங்களும் குணமான பிறகுதான் மருத்துவ
நிபுணர்களுக்கு உலகநாதனின் மனச் சிதைவு தெரிய
வந்தது. மனச்சிதைவின் இசிவுதான் அவரை நம்ப
முடியாத வன்முறைக் குற்றத்திற்குச் சரிய வைத்திருக்
கிறது என்ற உண்மையை மருத்துவ கண்டு பிடிப்புகள்
எடுத்துச் சொன்னதும் உலகநாதனின் மகள்களும்
நெருங்கிய உறவினர்களும் கலங்கி விக்கித்துப் போனார்
கள். இவ்வளவு கோரமான சரிவை உலகநாதனிடம்
யாரும் கற்பனைகூட செய்து பார்க்காததால் எல்
லோருமே பேச்சற்றுப் போய் விட்டார்கள்.

உலகநாதனின் மனச்சிதைவிற்கான சிகிச்சைகள்
வேதனையானதாகவும் சவாலானதாகவும் இருந்தது.
விரைவில் உடல் நலம் பெற்றுவிட்டாலும் பாதிக்
கிணறு தாண்டிய மன நோயாளியாகத்தான் உலக
நாதன் செந்துறைக்கு அழைத்து வரப்பட்டார். முதல்
சில மாதங்கள் மகள்கள்தான் மாற்றி மாற்றி செந்துறை
யில் இருந்து அழுது அழுது அவரைப் பார்த்துக்
கொண்டார்கள். ஆனாலும் அவரைக் கவனித்துப்
பராமரிப்பது அத்தனை எளிதாக இல்லை மகள்
களுக்கு. உலகநாதன் ஒரு நிமிஷம் ஒரு இடத்தில் இருக்
காமல் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார். வெளி
உலகம்தான் அவருக்கு சுதந்திரமாக இருந்தது. வீடு
சிறை மாதிரி பிடிக்காத ஆஸ்பத்திரி மாதிரி தெரிந்தது.
சில மாதங்கள் உலகநாதனை அவரின் உறவினர்கள்
வந்து மாறி மாறி தங்கி கவனித்தார்கள். பிறகு சில நண்
பர்கள் தாங்களாக முன் வந்து உலகநாதனை சிரமப்
பட்டு பராமரித்துப் பார்த்தார்கள். ஆனால் நாட்பட
நாட்பட யாராலும் தாக்குப் பிடிக்க முடியாமல் போய்
விட்டது. கடைசியில் இந்த மாதிரி கடும் மனச் சிதை
விற்கு உள்ளாகும் மன நோயாளி அவர்களின் குடும்பத்
தினர்கள் எப்படி அலுப்பும் எரிச்சலும் ஏற்பட்டு
நோயாளியை தாட்சண்யம் இல்லாமல் உதாசீனப்



படுத்துவார்களோ - அதே உதாசீனத்திற்கு உலகநாத
னும் ஆளாகிவிட்டார். வீட்டில் வைத்து அவரை சமா
ளிப்பதே பிரச்னையானபோது குற்றாலத்தில் இருக்கும்
சித்த வைத்திய முறையில் சிகிச்சைகள் செய்யும் மன
நல மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்க்கப்பட்டு
விட்டார் உலகநாதன்.

ஒரு சமயம் குற்றாலம் போய் அவரைப் பார்க்கச்
சென்ற அவருடைய மகள்கள் - சிகிச்சைகளின் ஒரு
பகுதியாக பிரதான அருவியில் குளிப்பதற்காக அழைத்
துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த மற்ற மன
நோயாளிகளின் வரிசையில் வெறித்த பார்வையோடு
உலகநாதனும் நடந்து கொண்டிருந்ததைப் பார்த்து
நெஞ்சே வெடித்துப்போவது போல அழுதார்கள்...
இந்தக் கோணத்தில் உலகநாதனின் குற்றால கோலத்
தைப் பார்க்க மனிதர்கள் வருவது அபூர்வமாகி
விட்டது.

ஆனால் மகள்கள் என்ற உலகநாதனின் குடும்பத்
தினருக்கு வேறொரு மனிதாபிமான மரபை தயக்கம்
காட்டாமல் முன் நின்று ஒரு காரியத்தை முழு மன
துடன் செய்து முடித்தார்கள். ஏழ்மை என்ற ஒரே
காரணத்தில் உலகநாதனுக்கு மனைவியாக கழுத்தை
நீட்டி எல்லா அவமதிப்பையும் அடிமைத் தனத்தையும்
அவரிடம் அனுபவித்த பரமேஸ்வரியின் கால் விலங்கு
போல அவளில் கிடந்த தாலிக்கொடியை தொடர்ந்து
சுமந்து கொண்டிருக்க விரும்பாத பட்சத்தில் அதை
கழற்றிக் கொள்ளுகிற சுதந்திரத்தை உலகநாதனின்
பெண்களே பரமேஸ்வரிக்கு அளித்தபோது ஒரே ஒரு
தடவை அவளின் கண்கள் மூடித் திறந்தன. அதற்கு
மேல் அவளிடம் இருந்து சொல் வடிவத்தில் எந்த
அபிப்பிராயமும் வெளிப்படவில்லை.

பரமேஸ்வரிக்கு உலகநாதன் என்ற பாதாளச்
சிறையில் இருந்து சுதந்திர வானத்தில் அச்சுதனுடன்

சேர்ந்து பறக்க உணர்வுகள் உள்ளூர பொங்கிக் கொண்டுதான் இருந்தன. துடைக்க முடியாத அவமானத்திலும் தப்பிக்க முடியாத தண்டனையிலும் உலகநாதன் மாட்டிக்கொள்ளுகிற வினாடியே செந்துறையைவிட்டு அச்சுதனுடன் பறந்துவிட இறக்கைகளை பரமேஸ்வரி சிலிர்த்துத் தயாராக இருந்தது உண்மைதான். ஆனால் கடும் மனச்சிதைவுக்கு ஆளாகி, கோர விபத்துக்கும் உள்ளாகி - கடைசியில் தீராத மன நோயாளியாய் குற்றாலத்தில் வேறொருவித கைதிபோல இருக்கும் நிலைமைக்கு உலகநாதன் சீரழிந்துவிட்டபோது பரமேஸ்வரியின் மென்மையான மனிதநேயம் அலறிவிட்டது. இந்தக் கதி ஏற்பட்டதற்குக் காரணம் உலகநாதன்தான். அவருள் இப்படி ஒரு மாய கானல் நாடகத்தை எழுதி அதிலேயே ஒரு கதாபாத்திரமாகவும் மாறிக் கிடந்தது அவர்தான். உலகநாதனின் இந்த மாய நாடகத்தில் பரமேஸ்வரி நிஜத்தில் எந்தக் கதாபாத்திரத்தையும் ஏற்றுக்கொண்டதில்லை என்றாலும்கூட உலகநாதன் அவளை கதாபாத்திரமாகத்தானே பார்த்தார். போர்த்தப்பட்ட அந்த மாயத் தோற்றமே பரமேஸ்வரிக்கு குற்ற உணர்ச்சியைத் தந்தது. கண்ணீர் விடவும் வைத்தது.

சிறையில் இருந்து தப்ப வேண்டும் என்றுதான் தவித்தாளே தவிர சிறைச்சாலையே இப்படி தவிடு பொடியாகிவிட வேண்டும் என்று அவள் நினைத்ததே கிடையாது. இப்போதும் மற்றொரு கணிதபடி பரமேஸ்வரிக்கு சுதந்திரம் கிடைத்துத்தான் விட்டது. ஆனால் அவளுடைய இறக்கைகள் பறப்பதற்காக விரியவில்லை. இனம் விளங்காத பயம் மனசைப் போட்டு அழுத்திக் கொண்டிருந்தது. அச்சுதனுடன் ஓடிவிட மனதில் ஏற்படுத்திககொண்டிருந்த தயார் நிலை பரமேஸ்வரிக்குள் வடிந்து வற்றிப் போய்விட்டது. எந்தத் தீர்மானத்திற்கும் அவளால் வர முடியவில்லை.



உறைந்துபோன ஜடமாக படித்துறையிலேயே அமர்ந்திருந்தாள். பரமேஸ்வரியின் இந்த இறுக்கமான பேச்சே அற்ற பேதலிப்பை உலகநாதனின் மகள்களால் தாங்கவே முடியவில்லை. சொற்களால் எவ்வளவு அசைத்தும் அசைந்து கொடுக்காத பாறையாக இருந்த பரமேஸ்வரியின் மௌனத்தை சம்மதமாக நினைத்து உலகநாதனின் மகள்கள் வேகமாக காரியங்களில் இறங்கினார்கள்.

செந்துறை ஊர் சமூகத்தில் நடைமுறை ஒன்று உண்டு. அந்த ஊர் கல்யாணமான ஒரு ஆண் குணப்படுத்த முடியாத மனச்சிதைவுக்கு ஆளாகிவிட்டால் அவனுடைய மனைவி விரும்பினால் அவனின் மனைவி என்ற ஸ்தானத்தில் இருந்து அவளை விடுவித்துக் கொள்ளலாம். அதேபோல கல்யாணமான ஒருத்திக்கு அதேபோல் மனச்சிதைவு ஏற்பட்டாலும் அவளுடைய கணவன் அவளை மனைவி என்ற ஸ்தானத்தில் இருந்து அப்புறப்படுத்திவிடலாம். செந்துறையில் இது காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகிற ஒரு நடைமுறை.

உலகநாதனின் பெண்கள் இந்த நடைமுறையைத்தான் பரமேஸ்வரிக்கும் வார்த்தைகளில் அவள் சம்மதத்தைத் தெரிவிக்காத நிலைமையிலும் செயல்படுத்திக்கொடுத்தார்கள். அப்போதும் பரமேஸ்வரி பேசாமல் கண்களை மூடித் திறந்தாள். அவள் சந்தோஷமும் படவில்லை. வேதனையுடன் தலை குனியவும் இல்லை. எல்லோருக்கும் மௌனமாக வணக்கம் தெரிவித்துவிட்டு பரமேஸ்வரி அம்பாசமுத்திரத்தில் இருக்கும் அம்மா வீடு போய் சேர்ந்தாள். எதிர்காலத்திற்குத் தேவையான பொருளாதார பாதுகாப்பு எல்லாவற்றையும் அவளுக்குச் செய்துகொடுத்துவிட்டுத்தான் உலகநாதனின் பெண்களும் ஊர் திரும்பினார்கள்.

செந்துறையில் நடந்து விட்ட இந்த களேபரங்
களின் மத்தியில் ஆராய்ச்சியையும் தொடர முடியாமல்,
பரமேஸ்வரியையும் அழைத்துச் சென்றுவிடும் இயல்
பான நிலைமையும் கிடைக்காமல் அச்சுதன் சென்
னைக்குச் செல்ல வேண்டியதாகி விட்டது. பரமேஸ்வரி
இல்லாமல் அவனால் போகவும் முடியவில்லை. செந்
துறையில் தங்கவும் வழியில்லை. அதற்கும் மேல்
இரண்டாவது மோட்டார் சைக்கிளையும் ஓடுகிற போக்
கில் உலகநாதன் தீ வைத்துவிட்டு ஓடியதின் பின்னால்
ஏதோ மர்மம் இருப்பதாகவும், அந்த மர்மத்தோடு
அச்சுதனுக்கு என்னவோ சம்பந்தம் இருந்தாலும்
இருக்கலாம் என்றும் செந்துறையின் பெரியவர்கள்
சிலரின் மத்தியில் அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டிருந்த
தால் - அச்சுதனும் அதை உணர்ந்து விட்டதால் - அவர்
களுடன் அவனுக்கு இருந்த இயல்பான உறவில் ஒரு
வித செயற்கைத் தன்மை வந்துவிட்டது. அதே நேரம்
மர்மம் குறித்து வெளிப்படையான விசாரணை எதை
யும் நடத்துவதற்கு விதிமுறை எதுவும் இல்லாததால்
ஊர் பெரியவர்கள் வெளிப்படையாக எதையும் பேச
முடியாதவர்களாக இருந்தார்கள். சிவமதி நினைத்திருந்
தால் அச்சுதனுக்கும் பரமேஸ்வரிக்கும் தொடர்பு இருப்
பதாக ஊர் கூட்டத்தில் சொல்லியிருக்க முடியும்.
ஆனால் அதைச் சொன்னால் வேறு சிக்கல்கள் ஏற்
பட்டுவிட வழி இருந்தது. அதனால் வாயை மூடிக்
கொண்டு இருந்துவிட்டாள். ஆனால் என்றாவது ஒரு
நாள் அச்சுதனும் பரமேஸ்வரியும் ஓசையே இல்லாமல்
இணைந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை மட்டும்
சிவமதிக்கு இருந்தது. அச்சுதனும் அந்த நம்பிக்கை
யோடுதான் சென்னையில் இருந்து பரமேஸ்வரிக்குக்
கடிதங்கள் எழுதி எழுதி காத்துக் கொண்டிருந்தான்.
ஆனால் அவனுடைய கடிதம் எதற்கும் பரமேஸ்வரி
யிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. காலம் கனி
யட்டும் என்று அச்சுதனும் சென்னையில் காத்திருந்



தான். உணரவும் புரியவும் முடியாத நிலையில் உலக
நாதன் இருந்தாலும்கூட காலம் முதலில் அவருக்குக்
கனிந்தது.

பல நாட்கள் கழித்து ஒருநாள் சிவமதி அவளுடைய
அப்பா அழகர்சாமியுடன் ஒருவித கழிவிரக்கத்தோடு
குற்றாலத்தில் மனநல சித்த வைத்திய மையத்தில் பத்
தோடு பதினோராவது மனநோயாளியாக இருக்கும்
உலகநாதனைப் பார்த்து வரப் போனாள். அவள்
போன நேரம் - மனநோயாளிகள் பிரதான அருவியில்
குளிக்கிற நேரம். முன்னும் பின்னும் கண்காணிப்பாளர்
கள் 'விசில்' ஊதிக் கொண்டு வர வரிசையாக சென்று
கொண்டிருந்த நோயாளிகளுடன் உலகநாதனும்
சூனியம் நிலைகுத்திய பார்வையோடு நடந்து போன
தோற்றம் சிவமதியின் மனதை சம்மட்டியாய் தாக்கி
விட்டது. ஒரு காலத்தில் கம்பீர ஆணழகனாகத்
தோற்றமளித்த மனிதர் பஞ்சப் பராரியாக அழிந்து
போயிருந்தார். சிவமதி குற்றாலநாதர் கோயிலின்
பிராகாரத்தில் உட்கார்ந்து கண்ணீர் விட்டாள். தான்
பெரிய தப்புப்பண்ணிவிட்டதாக சிவமதியால் நினைக்க
முடியவில்லை. இந்தக் கொடிய நிலையில் உலகநாத
னுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமாயென்றுதான்
தவித்தாள். ஏதாவது செய்தால் தேவலையேயென்று
நினைத்தாள். ஆனால் என்ன செய்வதென்று தெரிய
வில்லை. சரியாக சாப்பிடாமலும்; சரியாக உறங்கா
மலும் ஏழெட்டு நாள் சிவமதி மனதைப் போட்டு
குழப்பிப் பார்த்தாள். பால் கொதித்து விருவிருவென்று
பொங்குவது போல ஒரு எண்ணம் சிவமதியின் மனதில்
பொங்கி வழிந்தது.

—அடுத்த பதினைந்தாவது நாள். உலகநாதனின்
மகள்கள் உட்பட பெரியவர்களும் ஊர்காரர்களும்
செந்துறையின் அரசமரத்தடியில் கூடியபோதுதான்
சிவமதி அவளின் தீர்மானத்தை வெளியிட்டாள். உலக

நாதன் குற்றால மனநல வைத்திய மையத்தில் அனாதை
போல இருக்க வேண்டியதில்லை. செந்துறை வீட்
டுக்கே அவரை அழைத்து வந்துவிடலாம். உலகநாதன்
அவருடைய ஊரில் அவருடைய வீட்டில், அவருடைய
மனிதர்களின் மத்தியிலேயே வாழ்ந்து வரட்டும். வேளா
வேளைக்கு அவருக்கு சமையல் செய்து சாப்பாடு
போட்டு, மறக்காமல் அவருக்கான மாத்திரை மருந்து
களை பார்த்துப் பார்த்து கொடுத்து; ஒரு குழந்தையை
கவனித்துக் கொள்வதுபோல தான் பார்த்துக் கொள்வ
தாகவும், அதற்காக தனக்கு எந்தப் பொருளோ சன்
மானமோ வேண்டாம் என்றும், வாழ்நாள் பூராவும்
மனச் சிதைவில் இருந்து உலகநாதன் நலம் பெறாமலே
போனாலும்கூட கடைசிவரை அவரை தான் பாது
காத்து வருவதில் இருந்து பின்வாங்க மாட்டேன்
என்றும் சிவமதி கூட்டத்தில் தெரிவித்தாள். இதற்காக
மனைவி என்ற ஸ்தானமோ சொத்து சுகங்களில்
உரிமையோ தனக்கு வேண்டவே வேண்டாம் என்றாள்.

கூடியிருந்த ஊர் ஜனம் முழுவதுமே கண்கலங்கி
விட்டார்கள். உலகநாதனின் மகள்கள் சிவமதியின்
கைகளைப் பிடித்துக்கொண்டு நன்றிக் கண்ணீர் விட்
டார்கள். யாரைப் பார்த்தாலும் பயந்த, எதைக் கண்
டாலும் ஓடத் தயாராகத் தெரிந்த உலகநாதனை
அவரின் மகள்கள் சிவமதியிடம் பலவிதத்திலும் பேசிப்
பார்த்தபின் ஒப்படைத்தார்கள். குழந்தை ஒன்றைப்
பெற்றுக்கொள்வது போலத்தான் சிவமதி உலக
நாதனைப் பெற்றுக் கொண்டாள். அதே நேரம் உலக
நாதனின் மகள்கள் தங்களுடைய அப்பாவின் புது
மனைவி என்ற அடையாளத்தோடு மட்டும்தான்
சிவமதியையும் தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியும்
என்று ஒற்றைக் காலில் நின்றார்கள். வேறு வழி இல்
லாமல் சிவமதியும் அதற்கு சம்மதம் சொன்னாள். குறிப்
பிட்ட சிலரின் முன்னிலையில் என்ன காரியம் செய்கி



றோம் என்ற பிரக்ஞை இல்லாமலேயே உலகநாதன்
சிவமதியின் கழுத்தில புதிய தாலிக்கொடியை கொஞ்சம்
பயந்தபடியே அணிவித்தார். சொன்னபடியே உலக
நாதனை சிவமதி கண்ணும் கருத்துமாக கவனித்துக்
கொண்டாள். மூன்று ஆள் சாப்பாட்டை ஒரே ஆளாக
சாப்பிடும் உலகநாதனுக்கு அவள் வகை வகையாக
சமைத்துப் போட்டாள். ஒருவேளை கூட தவறாமல்
அவருக்கு மருந்துகளையும் மாத்திரைகளையும்
கொடுத்து வந்தாள். மாதம் ஒரு தடவை மதுரைக்கு
அழைத்துப் போய் மனோதத்துவ டாக்டரிடம் உலக
நாதனை காட்டி விட்டு வந்தாள். எல்லா விதத்திலும்
உலகநாதன் சிவமதிக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்
டார். சிவமதி அவரை உட்காரச் சொன்னால் உட்கார்ந்
தார். நிற்கச் சொன்னால் நின்றார். எப்போதாவது
முரண்டு பிடித்து நாக்கைத் துருத்திக்கொண்டு வன்
முறையைக் காட்ட உலகநாதன் முயன்றபோது சிவமதி
தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியை சரக்கென்று
உரசி எரியவிட்டுக் காட்டுவாள். உடனே உலகநாதன்
மிரண்டு அடங்கிப் போய்விடுவார். மற்றபடி சிவமதிக்கு
உலகநாதனால் எந்தத் தொந்தரவும் இல்லை. ஒரு
பள்ளிக்கூடத்துப் பையனை கண்டிப்புடன் நடத்து
வது போலத்தான் உலகநாதனை நடத்தி வந்தாள்.
அதே நேரம் இரவுகளில் இச்சைக்கு உரிய ஆசை
நாயகனாகவும் அவரை சிவமதி பயன்படுத்திக் கொண்
டாள். இத்தனைக்கும் அவளுக்குள் இருந்த உடலுறவுக்
கான துடிப்பின் வேகத்திற்கும் உலகநாதனின் அதற்
கான உடல் திறனுக்கும் எத்தனை ஏணி வைத்தாலும்
எட்டாதுதான்! இருந்தாலும் ஒன்றும் இல்லாததற்கு
இந்த ஊமைப் பிள்ளை போதும் என்ற திருப்தி சிவ
மதிக்கு...!

உலகநாதனின் மனம் சிதைந்த வாழ்க்கை இப்படி
சிவமதியால் நூதனமாக பராமரிக்கப்படுகிற செய்தி

கொஞ்ச நாள் கழித்துத்தான் அம்பாசமுத்திரத்தில் இருக்கும் பரமேஸ்வரிக்குத் தெரிய வந்தது. அதற்குப் பிறகுதான் மிகப் பெரிய பெருமூச்சு பரமேஸ்வரியிடம் இருந்து வெளிப்பட்டது. நடுக்கடலில் நகராத படகாகக் கிடந்த வாழ்க்கையில் கரை தெரிந்தது. அவளின் மனக்கண்ணில் அச்சுதனின் நெடிய உயரம் தெரிந்தது. காதல் அலைகள் புத்துணர்வுடன் புரண்டு எழ; இரண்டு கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் சரம் சரமாக வழிய - பரமேஸ்வரி ரொம்ப ரத்னச் சுருக்கமாக அச்சுதனுக்கு எழுதிய கடிதம் இது—

...என் ஆருயிர் செல்லம் அச்சுதனுக்கு! திரு. உலகநாதனுக்கும் சிவமதியின் கருணையால் ஒரு வழி கிடைத்துவிட்டது. இப்போதுதான் நான் நிஜமான சுதந்திரம் கிடைத்திருப்பதாய் நினைக்கிறேன். உடனே வந்து என்னை அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு நிமிஷமும் உங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் - உங்களுடைய ஆண்டாள்; பரமேஸ்வரி...

○

முற்றும்

CONNEMARA PUBLIC LIBRARY MADRAS-600 008. 19 JAN 2001

5 JUN 2008